பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்



4

வ.ஜோதி M

வர்த்தமானன் பதிப்பகம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(மூலமும் உரையும்)
நான்காம் தொகுதி

உரையாசிரியர்:

வ. ஜோதி, M.A.

வர்த்தமானன் பதிப்பகம்
141, உஸ்மான் சாலை,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ்,
தி. நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 8257995

முதலாம் பதிப்பு : 1991

இரண்டாம் பதிப்பு : 1998

ஐந்து தொகுதிகள்

விலை : ரூ. 500.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17

அச்சிட்டோர் :- அருணா ஆப்செட் சென்னை - 7.

☎ :6420221.

2|3

பதிப்புரை

இந்த நான்காம் தொகுதியில் 38 முதல் 56 வரையிலான படலங்கள் இடம் பெற்றுள்ளன. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம், கீரனைக் கரையேற்றிய படலம், கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் ஆகிய மூன்று படலங்களும் சிந்திக்கத் தக்க படலங்களாகும். குறுந் தொகையில் வரும் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடலின் தொடர்புடையன இம் மூன்று படலங்களும்! தமது புலமைப் பெருமிதம் தோன்ற நக்கீரர், இறைவருடன் வாதாடும் பான்மை நினைந்து நினைந்து மகிழத்தக்கதாகும்.

தலைவியின் நலம் பாராட்டும் பாடல் ஒன்று எத்தகை கற்பனையைத் தூண்டி விட்டிருக்கிறது என்பதை எண்ணுந்தோறும் வியப்பு மேலிடுகிறது. இந்த அருமையான சிந்தனையைத் தூண்டும் கதைப் பகுதியைக் கண்டு களிப்பீராக!

–பதிப்பகத்தார்

பொருளடக்கம்

திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

(தொடர்ச்சி)

நான்காம் தொகுதி

38. உலவாக்கோட்டை அருளிய படலம்

1908. மின்பனிக்கதிர் வேணிவானவன் மீனவன்தனை மானவேல்
முன்பனிக்க வலந்திரித்து முடுக்கிநேரி யடுக்கலான்
பின்பனிக்கம லத்தடத்திற விட்டவாறிது பெருமைசால்
அன்பனுக்குல வாதகோட்டை அளித்தவாறு கிளத்துவாம்.

வேறு

1909. பொடியார்க்கு மேனிப் புனிதர்க்குப் புனித வேற்றுக்
கொடியார்க்கு வேதக் குடுமிக்கிணை யான கூடற்
படியார்க்குஞ் சீர்த்திப் பதியேருழ வோருள் நல்லான்
அடியார்க்கு நல்லா னறத்திற்கும் புகழ்க்கும் நல்லான்.

1910. அனையா னறத்திற் கருள்போன்றவ ளான்ற கற்பின்
மனையாள் மரபின் வழுவாத தருமசீலை
எனையாரு நன்கு் மதிக்க இருக்கு நீராள்
தனையாள் பதிக்குக் கதிக்குத்தனிச் சார்பு போல்வாள்.

38. உலவாக்கோட்டை அருளிய படலம்

1908. குளிர்ச்சி மிக்க சந்திரனை அணிந்த மின் போலும் சடையுடைய சோமசுந்தரக் கடவுள் பாண்டியன் பொருட்டு வேற்படையினைச் சுழற்றி நேரிமலையுடைய பாண்டியனை நடுங்குமாறு செய்து, துரத்திப், பின்னர் குளிர்ந்த தாமரைகளையுடைய அகழியில் விழுந்து இறக்கச் செய்த திருவிளையாடல் இது. அடியார்க்கு நல்லான் என்ப வனுக்கு குறையாத அரிசிக் கோட்டையினை அளித்தருளிய திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

அடியார்க்கு நல்லான் இயல்பு

1909. திருவெண்ணீறு அணிந்த திருமேனியையும், இடபக் கொடியையும் கொண்ட சோமசுந்தரக் கடவுளின் மறை முடிக்கு இணையாகப் புவி முழுவதும் நிறைந்த கீர்த்தியையுடைய மதுரைப் பதியிலே, வேளாளர் குலத்திலே 'அடியார்க்கு நல்லான்' எனப் பெயர் பெற்ற ஒருவன் இருந்தான். அவன் அறத்திற்கும் அதனாலாய புகழுக்கும் நல்லானாய் உள்ளான்.

1910. அவன் செய்யும் அறத்திற்கு அருள் போன்றவ ளாகிய கற்பினையுடைய மனைவி 'தரும சீலை' என்பவள் ஆவாள். அவள் தன் மரபிற்குரிய ஒழுக்கத்தினின்று சிறிதும் தவறாதவள். தன் கணவனேயன்றிப் பிறரும் நன்கு மதிக்கும் மனையறம் புரியும் தன்மையள். கணவன் வீடுபேறு அடைவதற்கு ஏற்ற தனித்துணை போன்றவள்.

1911. பல்லே ருழவின் தொழில்பூண்டு பயன்கள் கொள்வான்
வில்லே ருழவன் கடன்கொண்டு மிகுந்த வெல்லாம்
இல்லே ருழத்தி மடைச்செல்வ மியற்றி யேந்த
அல்லேறு கண்ட னடியாரை யருத்து நீரான்.

1912. தொகைமாண்ட தொண்டர் சுவையாறு தழீஇய நான்கு
வகைமாண்ட மாறு படுமுண்டி மறுத்த ருந்த
நகைமாண்ட அன்பின் தலையாயவ னல்க நல்கப்
பகைமாண்ட செல்வ மணற்கேணியிற் பல்கு நாளின்.

1913. இந்நீர வாய வளங்குன்றினும் இன்மை கூறாத்
தன்னீர்மை குன்றா னெனுந்தன்மை பிறர்க்குத் தேற்ற
நன்னீர் வயலின் விளைவஃகி நலிவு செய்ய
மின்னீர வேணி மதுரேசர் விலக்கி னாரே.

1914. குன்றா விருத்திக் கடன்கொண்டுகொண் டன்பர் பூசை
நன்றா நடாத்தத் தொடுத்தான்கடன் தானுங் கிட்டா
தொன்றாலுங் கொண்ட விரதத்துக் குறுதி யின்றி
நின்றான் உடம்பை யொறுக்கின்ற நியமம் பூண்டான்.

1911. அடியார்க்கு நல்லான் பல ஏர்களைக் கொண்டு உழவுத் தொழில் புரிந்து அதனால் வரும் ஊதியத்திலே அரசர்க்கு தன் கடமையாகக் கொண்டு செலுத்த வேண்டிய ஆறிலொரு பங்கைச் செலுத்தி எஞ்சிய பொருளனைத்தை யும் கறுத்த திருமிடற்றினையுடைய சிவபெருமானின் அடியார்களுக்குத் திருவமுது படைப்பதில் செலவிடுவா னாயினான்.

1912. அளவற்ற அடியார்கள், அடியார்க்கு நல்லான் மெய்யன்போடு அளிக்கும் அறுசுவை பொருந்திய நால்வகை உண்டியைப் போதும் போதும் என்று சொல்லு மளவு விருப்புடன் உண்டு செல்வர். மணற்கேணியைத் தோண்டுந்தோறும் ஊற்று நீர் பெருகுவது போல அடியார்க்கு நல்லானின் செல்வமும் மேன்மேலும் பெருகிற்று.

அடியார்க்கு நல்லான் வறுமையால் வாடுதல்

1913. அடியார்க்கு நல்லான் தன் பெரும் செல்வம் குறைந்தாலும், தன் வறுமையைக் கூறாமையாகிய இனிய பண்பிலிருந்து சிறிதும் குறையமாட்டான் என்னும் தன்மையை, அஃதுணராத பிறருக்கு உணர்த்தும் பொருட்டு ஒளிவீசும் தன்மையுடைய சடையுடைய சோமசுந்தரக் கடவுள் அவனுடைய நீர் வளம் மிக்க வயல்களில் விளைவு குன்றும்படி செய்தார்.

1914. விளைவு குன்றியதைக் கண்டும் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அவ் வேளாளன் வட்டிக்கும் வட்டி கொடுக்கும் கடன் வாங்கி அடியார்க்கு அன்னம் அளித்தலைச் செவ்வனே நடத்தத் தொடங்கினான். பின்பு அக்கடனும் கிடைக்காமல், தான்கொண்ட கொள்கை யினை நிறைவேற்ற வலிமையில்லாமல் நின்ற அடியார்க்கு நல்லான் செய்வதொன்றும் அறியாது தனது உடலை உணவின்றி இருத்தலால் வருத்தும் கடப்பாட்டினை மேற்கொண்டான்.

1915. கொடுப்பார் அவரே விளைவுங்கடன் கோளு மாற்றித்
தடுப்பா ரெனின்மற் றதையாவர் தடுக்க வல்லார்
அடுப்பார் விழுமங் களைவாரடி யார்க்கு நல்லூண்
மடுப்பா னியமந் தடைபட்டு வருந்து கின்றான்.

1916. விண்ணாறு சூடும் விடையான்றமர்க் கூட்டி யன்றி
உண்ணாத வன்தன் றுயிர்க்குத்துணை யாய கற்பிற்
பண்ணார்மொழி தன்னொடும் பட்டினி விட்டு நெஞ்சம்
புண்ணாக ஆகம் பசித்தீயிற் புழுங்கப் பட்டான்.

1917. இறக்கும் முடம்பாற் பெறும்பேறினி யாவ தென்னா
அறக்குன் றனையான் மனையொடும் அடைந்திச்
செய்தி
நிறக்கின்ற செம்பொற் சிலையார்க்கு நிகழ்த்தி யாவி
துறக்கின் றதுவே துணிவென்று துணிந்து போனான்.

1918. ஐயன் றிருமுன்னர் அடைந்தடி தாழ்ந்து வானோர்
உய்யும் படிநஞ் சமுதுண்ட வொருவ உன்றன்
மெய்யன்பர் பூசைக் கிடையூறு விளைய வென்றன்
செய்யும் புலமும் விளைவின்றிச் சிதைந்த வென்னா.

1915. அடியார்களுக்குக் கொடுக்கின்ற இறையவரே நிலத்தின் விளைவையும் கடன் கோடலையும் மாற்றித் தடுப்பாராயின் அதனைத் தடுக்க வல்லவர் யார்? ஒருவருமில்லை. தம்மை அண்டியவர்களுக்குத் துன்பத்தைப் போக்கும் சிவபெருமானின் அடியார்களுக்கு நல்ல உணவினை அளிக்கும் அடியார்க்கு நல்லான், அந்நியமம் தடைப்பட்டு வருந்துகின்றனன்.

1916. ஆகாய கங்கையை அணிந்த இடபவூர்தியையுடைய சிவபெருமான் அடியார்கட்குத் திருவமுது செய்வித்தல்லாமல் உண்ணுதல் இல்லாத அடியார்க்கு நல்லான் தன்னுயிர்த் துணையாகிய கற்பினையும் இசை போலும் சொல்லையும் உடைய மனைவியோடும் பட்டினி கிடந்து கவலையினால் உள்ளம் புண்ணாக உடம்பு பசியென்னும் நெருப்பினால் வாட்டப் பெற்றான்.

இறைவனிடம் சென்று முறையிடல்

1917. புண்ணிய மலை போன்ற அடியார்க்கு நல்லான் "அழியும் இவ்வுடம்பினால் நமது விரதம் தடைப்பட்ட பின் நாம் அடையும் பயன் யாது?" என்று கருதி மனைவியோடும் சென்று இச்செய்தியைப் பொன் மலையை வில்லாக உடைய சோமசுந்தரக் கடவுளுக்கு விண்ணப்பம் செய்து விட்டு உயிரை விடுதலே முடிவு என்று கருதி மனம் துணிந்து சென்றனன்.

1918. தன் மனைவியுடன் சோமசுந்தரக் கடவுள் திருமுன்னர்ச் சென்று திருவடியில் விழுந்து வணங்கி, "தேவர்கள் உய்யுமாறு நஞ்சினை அமுதாக உண்டருளிய ஒப்பற்றவனே! உன்னுடைய மெய்யடியார்களின் வழிபாடு தடையுறும் வண்ணம் என்னுடைய நன்செய்யும் புன்செய்யும் விளைவு சுருங்கிவிட்டன.

1919. விடனல்கு சூலப் படையாய் கடன் வேறு காணேன்
கடனல்க வல்லார் தமைக்காட்டுதி காட்டி லாயேல்
மடனல்கு மிந்த வுடம்பின்சுமை மாற்று வேனென்று
உடனல்கு கற்புக் குரியாளொடும் வேண்டும் எல்லை.

1920. பஞ்சாதி வேதப் பொருள்சொன்ன பரமன் வாக்கொன்
றஞ்சாதி வேளாண் தலைவாவு ணகத்தில் இன்றோர்
செஞ்சாதி யாய செழுவாலரிக் கோட்டை யுய்த்தேம்
எஞ்சா திருக்கு மெடுக்குந்தொறு மென்று மாதோ.

1921. நீநாளுமா பூசித் ததில்வேண்டிய கொண்டு நித்தம்
ஆனாத வன்பர்க் கமுதூட்டி யெவர்க்கு மன்ன
தானாதி நானா தருமங்களுஞ் செய்தி வீடு
மேனாள் அளிக்கின் றனமென்று விசும்பிற் கூற.

1922. கேட்டின்ப மெய்திக் கிளர்விம்மித னாகி வேதப்
பாட்டின் பயனைப் பணிந்தில்லம் அடைந்து பண்டை
ஈட்டுந் தவப்பே றெனக்கண்டனன் தொண்டர்க்
கெந்தை
கூட்டுங் கதிபோ லுலவாமற் கொடுத்த கோட்டை.

1919. "நஞ்சினை உமிழும் சூலப்படையை உடைய பெருமானே! கடன் கொடுப்பார் வேறு ஒருவரையும் நான் அறிந்திலேன். ஆதலால் கடன் கொடுப்பவரைத் தேவரீர் காட்டியருள வேண்டும். இன்றேல் அறியாமை பொருந்திய இவ்வுடற் பொறையை இப்பொழுதே மாற்றி விடுவேன்," என்று தன்னுடன் உறையும் கற்புடைய மனைவியோடு குறையிரந்து வேண்டினான்.

அசரீரி

1920. அப்பொழுது பஞ்சாதி என்னும் உறுப்பினை யுடைய வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த பெருமானின் திருவாக்கு ஒன்று. "வேளாண்குடித் தலைவனே! நீ அஞ்சாதே. உன் வீட்டில் இன்று செந் நெல்லாகிய அரிசிக்கோட்டை ஒன்று சேர்த்துள்ளோம். அஃது எப்போதும் எடுக்க எடுக்கக் குறையாமலிருக்கும்.

1921. "நீ தினந்தோறும் வழிபட்டு அக்கோட்டையில் வேண்டுமளவு எடுத்துக்கொண்டு, சிவநேயம் குறையாத அடியார்களுக்கு அமுதளித்துப் பல்வேறு வகையான பிற தருமங்களையும் செய்யக் கடவை. முடிவில் வீடு பேறு தந்தருளுவோம்'' என்று ஆகாயத்தினின்றும் அசரீரி எழுந்தது.

உலவாக் கோட்டை பெறுதல்

1922. அவ்வசரீரியைக் கேட்டு மகிழ்ச்சியும் அதிசயமும் அடைந்த அடியார்க்கு நல்லான், வேதப் பனுவலின் பொருளாய் உள்ள சோமசுந்தரக் கடவுளைப் பன்முறையும் பணிந்து மனையை அடைந்தான். தான் முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனைக் கண்டாற்போல் அங்கே என்றும் குறையாத பேரின்பம் போல எடுக்கும் தோறும் குறையாதிருக்கக் கொடுத்தருளிய, அரிசிக் கோட்டையைக் கண்டு மகிழ்ந்தான்.

1923. வானாறு சூடி தருகோட்டையை வைகல் தோறும்
பூநாறு சாந்தம் புகையொண்சுடர் கொண்ட ருச்சித்
தானாத செவ்வி யடிசிற்கும் அதற்கு வேண்டும்
நானா கருவி விலைக்கும்மது நல்க வாங்கா.

1924. மின்னார் சடையான் தமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னாடர் தெய்வம் விருந்தொக்கல் செறிந்து நட்டோர்
முன்னாம் எவர்க்கும் முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான்.

வேறு

1925. அன்பன் னடியார்க் கினியான் நனிநா ளளந்தல்கித்
தன்பன் னியொடும் அயலார் சுற்றந் தமரோடும்
பின்பந் நிலையே யிமவான் மகளைப் பிரியாத
இன்பன் னுருவாய்ச் சிவமா நகர்சென் றிறைகொண்டான்.

உலவாக்கோட்டை யருளிய படலம் முற்றிற்று.

1923. கங்கையைத் தரித்த சோமசுந்தரக் கடவுள் அருளிய அரிசிக் கோட்டையை நாள்தோறும் மலர், சந்தனம், தூபம், தீபம் என்னும் இவற்றால் பூசை செய்து, பதம் நீங்காத அன்னத்தின் பொருட்டும் அதற்கு வேண்டிய கறிப் பொருள் முதலாய பல பொருள் பெறும் பொருட்டும் வேண்டிய அளவு அதனைக் கைக்கொண்டான்.

1924. மின் போன்ற சடையையுடைய சிவ பெருமானின் அடியார்களுக்கும், வேதத்தை ஆராய்ந்த அந்தணர்களுக்கும், தென்புலத்தவர்க்கும், தெய்வங்கட்கும், உறவினர்க்கும், விருந்தினர்க்கும், நட்பினர்க்கும் மேகம் போல் வரையாது கொடுத்து எஞ்ஞான்றும் வறுமை நோயின்றிக் குபேரன் போல் வாழ்ந்து வந்தான்.

1925. இவ்வாறு அன்பனாகிய அடியார்க்கு நல்லான் தன் மனைவியோடும், பக்கத்தில் உள்ள சுற்றத்தாரோடும், நண்பரோடும் நீண்ட நாட்கள் அறம் செய்து வாழ்ந்து வந்தான். பின்னர் அங்கிருந்தவாறே மலைமகளைப் பிரியாத இன்பவடிவினன் ஆகிய சிவபெருமான் உருவாகி (சிவசாரூப்பியம் பெற்று) பெருமை மிக்க சிவபுரம் எய்தினான்.

உலவாக் கோட்டை யருளிய படலம் முற்றிற்று

39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

1926. தாமநா றிதழி யார்தந் தமர்க்கன்பன் வறுமைப்
பட்டோன்
ஆமநா ளுலவாக் கோட்டை யருளிய முறையீ தையன்
தேமனாண் முல்லைத் தீந்தார்ச் சிறுதகை வணிகற்காக
மாமனாம் படிவங் கொண்டு வழக்குரை வண்ணஞ்
சொல்வாம்.

1927. கன்னிநான் மாடக் கூடற் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோன் அன்னான் தனபதி யென்னும்
பேரான்
மன்னினா னனையான் கற்பின் மடவரல் சுசீலை
யென்பாள்
பொன்னினாள் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவி
னன்னாள்.

1928. எனவிவர் தமக்கு மைந்தற் பேறின்றி யிரங்கு நாளிற்
தனபதி மருகன் றன்னைத் தகவுசான் மகவாக்
கொண்டு
மனமகிழ் சிறப்பா னல்க மனைவியும் தொழுது
வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலிவுற வளர்த்துக்
கொண்டாள்.

39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

1926. மணம் கமழும் கொன்றை மலர் மாலை யணிந்த இறைவன் தம்முடைய அடியார்க்கு நல்லான் வறுமையுடை யவனாகிய அந்நாள் உலவாக் கோட்டையருளிய திருவிளையாடல் இது. அப்பெருமான் தேன்மிக்க முல்லை மலரின் இனிய மாலையணிந்த இளம் பருவமுடைய வணிகனுக்காக மாமனாய் வடிவம் கொண்டு வழக்குரைத்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

தனபதி

1927. என்றும் அழியாத நான் மாடக்கூடல் என்னும் மதுரைப் பதியில் வணிகர் குலத்தில் குபேரன் போன்ற செல்வமுடைய தனபதி என்னும் பெயர் கொண்ட ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய கற்பிற் சிறந்த மனையாளின் பெயர் சுசீலை என்பதாகும். அவள் பொன் போன்ற தாமரை மலரில் வசிக்கும் புண்ணிய வடிவாகிய திருமகளைப் போன்ற அழகுடையவள்.

1928. அவர்கள் இருவரும் மகப் பேறின்றி வருத்த முறும் போது தனபதி தன் தங்கையின் மகனாகிய மருமகனையே தகுதி வாய்ந்த மகனாக ஏற்றுக்கொண்டு மனமகிழ்ந்து சிறப்போடு கொடுக்க மனைவியான சுசீலை தொழுது வணங்கி அவனை ஏற்றுக் கொண்டாள். அச்சிறு வனுக்கு அணியத்தக்க அணிகலன்கள் பல அணிவித்துப் பேணிப் பொலிவுற அன்போடு வளர்த்து வந்தாள்.

1929. தனபதி மகப்பே றற்றான் ஆயினுந் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினால் வருந்தி யீன்ற
தனையனை மகவாத் தந்த தங்கைமேற் றீராப் பூசல்
வினைவிளைத் தொழுக வோர்நா ளிளையளும் வெகுண்டு சொல்வாள்.

1930. பெருமிதம் உனக்கேன் பிள்ளைப் பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனா லன்றோ இருமையு மடைவா யென்னப்
பெரிதுநா ணடைந்து மேலைக் காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவே னென்னாத் தனபதி தவமேற் செல்வான்.

1931. தன்பெருஞ் செல்வம் எல்லா மருமகன் தனக்கே யாக்கி
அன்புகொண் மனைவி யோடு மருந்தவ நெறியிற் சென்றான்
பின்பவன் வரவு தாழ்ப்ப மருமகன் பெற்ற எல்லாம்
வன்பினால் வழக்குப் பேசி வெளவினார் தாய மாக்கள்.

1932. விளைநில னடிமை பைம்பூண் வெறுக்கைநன் பசுக்க ளேனை
வளனுமாற் றவர்கைக் கொள்ள வன்சிறை யிழந்த புட்போற்
றளர்வுறு மகனுந் தாயுஞ் சார்பிலாத் தம்ம னோர்க்கோர்
களைகணா யிருக்குங் கூடற் கடவுளே சரணம் என்னா.

தனபதி தங்கையுடன் பூசல் கொள்ளல்

1929. தனபதி மகப்பேறு அற்றான் ஆயினும், தன் தங்கை வருத்திப் பெற்ற பிள்ளையைத் தனக்குத் தந்த நன்றியைச் சிறிதும் பாராட்டாமல், தன் மனைவிமேல் வைத்த ஆசை மயக்கத்தினால் அத்தங்கையோடு நித்தமும் தீராச் சண்டையிட்டுக் கொண்டு வந்தான். ஒருநாள் தங்கையும் சினந்து கூறுவாளாயினாள்.

தவமேற் செல்லல்

1930. "மகப்பேறு அற்ற பாவியாகிய உனக்குப் பெருமிதம் (செருக்கு) எதற்கு? நீ, என் அருமைப் பிள்ளையினால் அல்லவா இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடைவாய்" என்றாள். தனபதி அம்மொழிகளைக் கேட்டுப் பெரிதும் வெட்கமடைந்து, "மறு பிறப்பிலேனும் மகப்பேற்றினைப் பெறுவதற்குரிய தவத்தினைச் செய்ய வேண்டும்" என்று எண்ணித் தவம் நோற்கச் செல்லத் தொடங்கினான்.

தாயத்தார் தனபதியின் செல்வத்தைக் கவர்தல்

1931. தனது பெரிய செல்வமனைத்தையும் மருமகனுக்கே உரிமையாக்கி, அன்புடைய தன் மனைவியோடும் அரிய தவநெறியில் சென்றான். பின்பு தவநெறியிற் சென்ற அத் தனபதியின் வருகை காலம் தாழ்ந்தமையால் அவனது மருமகன் அடைந்த செல்வம் அனைத்தையும் தாயத்தார்கள் வல்வழக்குறப் பேசிக் கவர்ந்து கொண்டனர்.

1932. விளைநிலங்கள், அடிமைகள், அணிகலன்கள், பொருள்கள், பசுக்கள், பிற வளங்கள் முதலானவற்றைத் தாயத்தார் கவர்ந்து கொள்ள வலிய சிறகுகளை இழந்த பறவை போலப் புதல்வனும் அவனைப் பெற்ற தாயும் தளர்வடைந்தனர். "சார்பில்லாதவர் எல்லோருக்கும் ஒரு பற்றுக் கோடாய் இருப்பவர் கூடல்பதியில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுள் ஆவார். அவரே நமக்குப் புகலிடம்" என்று கருதினாள்.

1933. வந்துவா னகடு போழ்ந்த மணிமுடி விமானக் கோயிற்
சுந்தர நாதன் பாதத் துணைதொழு திறைஞ்சி
யார்க்குந்
தந்தையு தாயு மாகுந் தம்பிரா னீரே யெங்கட்
கெந்தையும் யாயு மென்னா விரங்கிநின் றினைய
சொல்வாள்.

1934. என்மகன் றன்னை மைந்த னின்மையால் எவருங்
காணத்
தன்மக னாகக் கொண்டு தகுதியா லன்றே காணி
பொன்மனை பிறவு நல்கிப் போயினா னென்மு
னிப்பால்
வன்மையாற் றாயத் தார்க ளவையெலாம் வௌவிக்
கொண்டார்.

1935. ஒருத்திநா னொருத்திக் கிந்த வொருமகன் இவனுந்
தேருங்
கருத்திலாச் சிறியன் வேறு களைகணுங் காணே
னைய
அருத்திசா லறவோர் தேறு வருட்பெருங் கடலே
யெங்கும்
இருத்திநீ யறியாய் கொல்லோ வென்றுபார் படிய
வீழ்ந்தாள்.

1936. மாறுகொள் வழக்குத் தீர்க்க வல்லவர் அருளி னாலே
சீறுகொள் வடிவேற் கண்ணாள் சிறுதுயி லடைந்தாள
மெய்யில்
ஊறுகொள் கரணமைந்து முற்றறி கனவிற் கங்கை
யாறுகொள் சடையார் வேதச் செல்வரா யடுத்துச்
சொல்வார்.

தனபதியின் தங்கை இறைவனிடம் சென்று முறையிடல்

1933. விண்ணிழி உயர்ந்த விமானக் கோயிலில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று வணங்கி, "யார்க்கும் தந்தையும் தாயும் ஆகிய தம்பிரானே! தேவரீரே! அடியேங்களுக்கும் தாயம் தந்தையும் ஆவீர்" என்று வருந்தி நின்று இத்தன்மைகளாய்த் தன் குறைகளைக் கூறத் தொடங்கினாள்.

1934. "என் தமையன் தனக்கு மகப் பேறின்மையால் என் மகனை யாவரும் அறிய முறைப்படி தனக்குச் சுவீகாரப் புதல்வனாகக் கொண்டு, அப்பொழுதே விளைநிலம், செல்வம், மனை பிற பொருள்கள் யாவற்றையும் இவனுக்கே கொடுத்துவிட்டுத் தவத்திற்குப் போயினான். பங்காளிகள் அப்பொருளனைத்தையும் தங்கள் வலியினாலே கவர்ந்து கொண்டனர்.

1935. "ஐயனே! நானோ யாருமற்ற ஒருத்தி. ஒருத்தி யாகிய எனக்கு இவன் ஒரே புதல்வன். இவ்வொரு புதல்வனோ நன்மை தீமைகளை ஆராயும் கருத்து இல்லாத சிறுவன். அடியேங்களுக்கு ஒருபற்றுக்கோடும் இல்லை. அன்பு மிகுந்த அறவோர் தேறும் அருட்பெருங் கடலே! எங்கும் நிறைந்திருக்கும் நீர் இவற்றை அறியீரோ?" என்று விண்ணப்பம் செய்து நிலத்தின் மீது விழுந்து அழுதாள்.

1936. அப்போது மாறுபட்ட கொடிய வழக்கினைத் தீர்க்கவல்ல மதுரேசர் திருவருளாலே, சோர்ந்து விழுந்த தனபதியின் தங்கை சிறிதும் உறக்கம் கொண்டாள். உடலில் பொருந்திய ஐம்பொறிகளிலும் ஒடுங்கி நிற்கும் ஆன்மா வானது சூக்கும உடம்பினின்று அறியும் கனவில், கங்கை யாற்றை அணிந்த சடையினையுடைய இறைவர் ஓர் அந்தணராய் வந்து தோன்றினார்.

1937. புலர்ந்தபின் றாயத்தோரைப் புரவலன் ஆணை யாற்றால்
வலந்தரு மன்றத் தேற்றி மறித்தனை யிருத்தி யாம்போந்
தலந்தரு மறிவான் மூத்தோ ரனைவரு மிசைய வந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி என்றார்.

1938. வேரியங் குவளை யுண்கண் விழித்தனள் வியந்து கேட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந் துணையென்ப தறிந்தேன் என்னாக்
காரிருங் கயலுண் கண்ணாள் கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னோடுந் தெரிவைதன் மனையிற் சென்றாள்.

1939. சென்றவள் கங்கு லெல்லை தெரிந்தபின் எழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தனைசெய் தம்பொற்
குன்றவ னுரைத்த வாற்றால் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவ ரிருக்கை யெய்தி விளம்புவாள் பலருங் கேட்ப.

1940. அட்டில்வாய் நெருப்பி டேலோ ரடியிடே லறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று போகொட்டேன் பலருங் கேட்க
இட்டனன் அரச னாணை யறத்தவி சேறி யான்றோர்
ஒட்டிய படிகேட் டெங்க ளுரிப்பொருள் தந்து போமின்.

1937. "பொழுது விடிந்த பின்னர் தாயத்தார்களை நீ அரசன் ஆணையாலே தடுத்துத் தரும சபையின்கண் ஏற்றியிருப்பாயாக. யாம்வந்து அறிவில் சிறந்த பெரியோர்கள் அனைவரும் ஒப்பும் வண்ணம் அந்தப் பொய் வழக்கினைத் தீர்த்து உன் பொருள்களை மீட்டுத் தருவோம், நீ செல்க" என்றருளிச் செய்தார்.

1938. தேனையுடைய அழகிய குவளை மலரை வென்ற கண்கள் விழித்து, அதிசயித்து "கேட்டேன்! யாரும் இல்லார்க்குத் தெய்வம் துணை என்னும் பழமொழியை அறிந்தேன்," என்று கூறி, கரிய பெரிய மையுண்ட கயல் போலும் கண்களை யுடைய அம்மையின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்து இளமையான தனது மகனோடு அப்பெண் தன் வீட்டிற்குச் சென்றாள். இனிதே துயின்றாள்.

வணிகமாது தாயத்தார்களை நியாய சபைக்கு அழைத்தல்

1939. அங்ஙனம் சென்றவள் இரவு விடிந்தவுடன் எழுந்து வெள்ளியம்பலவாணனது திருக்கோயில் வாயிலை அடைந்து வணங்கி, அழகிய பொன் மலையை வில்லாக உடைய பெருமான் கூறியருளியவாறே கொடுமை மிக்க வழக்கினைத் தொடுத்து வென்ற ஞாதிகளின் இருப் பிடத்தை அடைந்து பலரும் கேட்பக் கூறுவாள்:

1940. "அடுப்பிலே நெருப்பிடாதீர்கள்! ஓர் அடியும் எடுத்து வையாதீர்கள்! அறநெறியால் அல்லாமல் பொய் வழக்கினால் வென்றுபோக விடேன். அனைவரும் கேட்க நன்றாக அரசன்மீது ஆணையிட்டேன். தருமசபைக்கு வந்து பெரியோர் ஆராய்ந்து கூறும் தீர்ப்பினைக் கேட்டு, எங்கள் உரிமைப் பொருளைக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்"

1941. என்றனண் மறித்த லோடு மிழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி யடித்தனர் மைந்த னோடுஞ்
சென்றனள் முறையோ வென்னா திருந்தறச் தவிசி
னோர்முன்
நின்றுரை யாடினாள் கேட் டறிந்தனர் நீதி நூலோர்.

1942. அறத்தவி சிருப்போ ரேவல் ஆடவ ரோடும் போந்து
மறித்தவைக் களத்திற் கூட்டி வந்தனள் வந்தவெல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி யம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே யென்னத் திருவுருக் கொண்டு
செல்வார்.

வேறு

1943. பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்ந்
தெரிகதிர் கவிழ்ப்பவா ளெறிக்கு மங்கதம்
அருவரைத் தோள்கிடந்து இமைப்ப வாகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே.

1944. முரலளி புறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்க ணேறெனப்
பெருமித நடைகொடு நடக்கும் பெற்றியார்.

1941. என்றுகூறி அவர்களைத் தடுத்தாள். அப்பொழுது மிக்க வலிமையுடைய தாயாதியர் அவளைத் தீய் சொற்கள் கூறி வைது நிலத்தில் தள்ளி அடித்தார்கள். அவள் தன் புதல்வனுடனே, "இதுமுறையோ! இது முறையோ!" என்று கூவிக்கொண்டு தருமசபையை அடைந்து சபையார்க்குத் தன் வழக்கினைக் கூறினாள். நீதி நூல் வல்ல மன்றத்தார் அதனைக் கேட்டு அறிந்தனர்.

இறைவர் தனபதியே போல் திருவுருவம் தாங்கி வருதல்

1942. அது கேட்ட நீதிநூல் வல்ல சபையார் தம் ஏவலர்களை விடுத்தனர். தனபதியின் தங்கை அவர்களோடு சென்று தாயத்தார்களை மறித்து நியாய சபைக்கு அவர்களைக் கூட்டி வந்தாள். அந்நிலையில் வெள்ளி மன்றுள் ஆடியவரும், உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவருமான சோம சுந்தரக் கடவுள் தாம் தவமேற் சென்ற தனபதியைப் போலத் திருவுருவம் தாங்கி அங்கு எழுந்தருளி வரலானார்.

1943. அங்குத் தனபதியைப் போல உருக்கொண்டு வந்தருளிய சிவபெருமானின் திருச்செவிகளில் அணிந்த, பெரிய விலையினையுடைய இரத்தினக் குண்டலங்கள் பிடரியில் ஒளிவீசவும், அரிய மலை போன்ற திருத்தோள் களில் வாகுவலயங்கள் ஒளிவீசவும் திருமார்பில் ஒளி பொருந்திய மணிக்கண்டிகை விளங்கிப் பின்னே வளைந்து கிடந்தது.

1944. ஒலிக்கின்ற வண்டுகள் மொய்த்துக் கிடக்கும் செந்தாமரை மலர் மலர்ந்தாற்போல் விளங்கும் நீலமணி யால் செய்த மோதிரங்களை அணிந்த திருக்கரத்தை வீசிக் கொண்டு கோப நோக்கினையுடைய சிங்கம் போலப் பெருமிதத்தோடு நடக்கும் நடையினையுடையவரானார்.

1945. வாடிய முளரிபோன் மாறிட் டாரிடத்
தூடியு மலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்து முட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை.

வேறு

1946. அரசனிங் கில்லை கொல்லோ ஆன்றவர் இல்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ கோதி னூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானு மில்லைகொ லுறுதி யான
தருமமெங் கொளித்த தேகொ லென்றறத் தவிசிற் சார்வார்.

1947. தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி விம்மிதம் எய்தி வெல்லும்
மனவலி யிழந்து பண்டு வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ள மச்ச நாணினால் விழுங்கப் பட்டார்.

1948. மாதுலர் ஆகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத்தங் கண்ட
மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானீர் அந்தோ வையவென் றழுது நைந்தார்.

1945. அப்போது அவரது முகம் தாயத்தாரை நோக்கும் போதெல்லாம் வாடிய மலரைப் போல் பிணக்கினைக் காட்டும். மைந்தனை நோக்கும் போதெல்லாம் அன்றலர்ந்த மலரைப்போல விளங்கும். இத்தகைய தோற்றத்துடன் இறைவர் நியாய மன்றினை அணுகினார். அவ்வாறு அணுகும்போதே,

1946. "இங்கு அரசன் இல்லையோ? அறிவால் முதிர்ந்த ஆன்றோர் இல்லையோ? ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த அரசனது செங்கோல் கொடுங் கோலாயிற்றே? வேத சிவாகமங்களை அருளிய கடவுளும் இல்லையோ? நிலை பெற்ற தருமமும் எங்குச் சென்று ஒளிந்ததோ?" என்று சொல்லி முறையிட்டுக் கொண்டு தருமசபையை அடைந்தார்.

1947. தனபதியின் வருகையினைப் பார்த்து வஞ்சனையுடைய பங்காளிகள் வருத்தமிக்க மனமுடையவரானார். வியப்பும் அடைந்தார். "வெல்வோம்" என்று எண்ணிய மன வலியையும் இழந்தார்கள். முன் பொய் வழக்கால் வென்ற தீச்செயலை நினைந்து நினைந்து அச்சமும் நாணமும் கொண்டு நின்றார்கள்.

வணிக மூர்த்தியாய் வந்த இறைவர் ஆறுதல் கூறுதல்

1948. மாமனாகி வந்த சிவபெருமான் தன் மருமகனைத் தமக்குப்பின் தோன்றிய தாது உலராத கூந்தலையுடைய தங்கையோடு தழுவி, தமது திருமிடற்றினின்றும் நீங்காத சாம வேதத்தினைப் பாடுபவர்போல் வாய்திறந்து, "ஐயகோ! நீங்கள் வறியவர்களானீர்களோ!" என்று புலம்பி வருந்தினார்.

(தாது - மகரந்தம் என்றும், புழுதி என்றும் பொருள் படும். இளம் விதவை என்ற பொருளிலும், புழுதி படிந்த கூந்தலையுடையவள் என்ற பொருளிலும், கையாண்டிருக்கலாம்).

1949. குடங்கையி னெடுங்க ணாளுங் குமரனும் வணிகர் தாளில்
தடங்கணீ ராட்ட வீழ்ந்தார் தடக்கையால் எடுத்துப் புல்லி
மடங்கலே றனையார் தாமு மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக் குமரனை நேர்ந்து நைவார்.

1950. ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டேன் அப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்னா.

1951. அனைவரும் இரங்க வாய்விட் டழுதவ ரிளையா டன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்
தினையன்மின் என்முன் வேறொன் றெண்ணன்மின் எண்ணா வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மி னென்னா.

1952. நட்பிடை வஞ்சஞ் செய்து நம்பினார்க் கூன்மா றாட்டத்
துட்படக் கவர்ந்து மேற்றோர்க் கிம்மியு முதவா ராயும்
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியுஞ் சிலர்போல் ஈட்டப்
பட்டதோ வறத்தா றீட்டு நம்பொருள்? படுமோ? வென்னா.

1949. அகன்ற நீண்ட கண்களையுடைய தங்கையும், அவள் புதல்வனும் வணிகராக வந்த இறைவனின் திருவடிகளில் விழுந்து தம் பெரிய கண்களின் கண்ணீரால் நீராட்டினார். சிங்க ஏற்றினை யொத்த அவ்வணிகரும் அவர்களைத் திருக்கரங்களால் எடுத்துத் தழுவித் தமது கண்ணீராகிய கடல் வெள்ளத்துள் மூழ்குவித்துப் பின்பு புதல்வனைப் பார்த்து வருந்துவராயினார்.

1950. "உன் மார்பிலே ஐம்படை என்னும் அணியைக் கண்டிலேன். காலின்கண் சிறிய சிலம்பினைக் கண்டிலேன். தோளில் தோளணியைக் கண்டிலேன். முகத்தில் அசையும் சுட்டியைக் கண்டிலேன். காதுகளில் ஒளிவீசும் குண்டலங்களைக் கண்டிலேன்., இப்போது அணிகலன்கள் நீங்கப்பெற்ற வெற்று உடம்பை மட்டும் காண்கிறேன். அப்பா! எத்தனை விலை பெறுமென்று கருதிக் குழந்தையின் அணிகளையும் கவர்ந்தனர்?" என்றார்.

1951. அவ்வணிகேசர் கண்டாரெல்லாம் மயங்கும்படி வாய்விட்டு அழுது தங்கையையும் புதல்வனையும் கண்ணீர் மாற்றி நீண்ட கையினால் முதுகினைத் தடவி, "வருந்தாதீர்கள்! என் முன்னே வேறொன்றினையும் நினையாதீர்கள்! 'நான் வருவேன்' என்று நினையாத வஞ்சகத் தாயத்தார்களின் வழக்குத் தோற்றுவிடும்! பாருங்கள்!" என்றார்.

1952. "நண்பர்களிடத்து வஞ்சனை புரிந்தும், நம்பி வைத்தவர் பொருளை அவர் உயிர் மயங்குமாறு கவர்ந்தும், இரப்பவர்களுக்கு இம்மியளவும் கொடாது உலோபம் செய்தும், வட்டிவரம்பின்றிச் சொல்லி அங்ஙனமே வட்டி வாங்கியும், சிலர் தேடுதல் போலத் தேடப்பட்டதோ? அன்று. அறவழியில் தேடப்பட்ட நமது பொருள் அழியுமா?" என்றார்.

1953. மங்கல மாடம் ஓங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிக ரேறே எம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடனாத் தீர்த்துத் தருகெனப் புலம்பி
யார்த்தார்.

1954. ஆவலித்து அழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு
நோக்கிக்
காவலன் செங்கோ னுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலைநா விட்டெம் வழக்கையு நமராய் வந்த
மேவலர் வழக்குந் தூக்கித் தெரிகென விதந்து
சொன்னார்.

1955. நரைமுது புலியன் னான்சொற் கேட்டலு நடுங்கிச்
சான்றோர்
இருவர்சொல் வழக்கு மேற்கொண் டநுவதித் திரண்டு
நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள் வலியரின் வேறு
சொல்வார்.

1956. தவலருஞ் சிறப்பி னான்ற தனபதி வணிகர் அல்லர்
இவரென வவையங் கேட்ப விருகையும் புடைத்து
நக்குக்
கவளமா னுரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர்
கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டங் காணிமற் றனைத்துங்
கூறும்.

1953. பின்பு மங்கலம் நிறைந்த மாடங்களையுடைய மதுரை நாயகனாகிய சோம சுந்தரக் கடவுளை நோக்கி சிவந்த திருக்கரங்களை திருமுடிமேல் குவித்து "மாணிக்கங்களை இலக்கணம் கூறித் தெளிவித்து வீற்றருளிய எமது வணிகர் குல சிங்கமே! எங்கள் வழக்கை இந்த அற மன்றத்தார் வாயிலாகத் தீர்த்து எமது பொருளைத் தருக" என்று புலம்பி முறையிட்டார்.

1954. இவ்வாறு அவலம் காட்டி அழுத பொய் வேடமுடைய வணிக மூர்த்தியாய் வந்த இறைவர், வஞ்சகர்களாகிய தாயத்தாரை வெகுண்டு நோக்கினார். "அரசனது செங்கோலாகிய நுண்ணிய நூலினால் கட்டிய அறமாகிய தட்டிலே உங்கள் நாவாகிய துலாக்கோலை இட்டு எமது வழக்கையும், எமது பங்காளிகளாய் வந்த இப்பகைவர்களின் வழக்கையும் சீர்தூக்கி நியாயம் வழங்குங்கள்" என்று தெளிவுடன் கூறியருளினார்.

தாயாதிகள் இவர் தனபதி அல்லர் எனல்

1955. நரைத்த முதிய புலியினைப் போன்ற வணிக மூர்த்தியின் சொல்லைக் கேட்ட சபையோர்கள் நடுங்கி இரு திறத்தார் கூறுகின்ற வழக்கினையும் சீர்தூக்கித் தடை விடைகளால் ஆராய்ந்து 'தாயத்தாரின் வழக்கு பொய் வழக்கு' என்று முடிவு கூறினர். தாயத்தார்கள் அதனைக் கேட்டு அச்சமுற்று வேறு வகையிலே தம் வழக்கைக் கூற முயன்றனர்.

1956. "இவர் கெடுதல் இல்லாத சிறப்பினால் நிறைந்த தனபதி வணிகர் அல்லர்," என்று கூறினர். அப்பொழுது கவள உணவினையுடைய யானைத் தோலைப் போர்த்திய இறைவராகிய தனபதி செட்டியார் இரு கைகளையும் ஒன்றோடொன்று தாக்கிச் சிரித்து, அவையில் உள்ளோர் கேட்குமாறு, அவரவர் குடிப்பெயரும், பட்டமும் காணியும் பிற அனைத்தையும் கூறினார்.

1957. தந்தைதாய் மாமன் மாமி தாயத்தார் அவரை யீன்றார்
மைந்தர்க ளுடன்பி றந்தார் மனைவியர் கிளைஞர்
மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை யாதிய அடையா
ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினான்
மொழிந்தான் முன்னோன்.

1958. அனையது கேட்ட ஆன்றோர் அனைவரு நோக்கி
யந்தத்
தனபதி வணிகர் தாமே யிவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்கிழுக் கடைத்த தீது
நனைவழி வேம்பன் றேரிற் றண்டிக்கு நம்மை
யென்னா.

1959. இல்லினுக் கேகி மீள்வன் யானென்றுங் குளத்திற் கேகி
ஒல்லையில் வருவேன் என்று மொவ்வொரு வார்த்தை
யிட்டு
வல்லெழு வனைய தோளா ரனைவரும் வன்கா றள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ் சிதைந்தன
ரொளித்துப் போனார்.

1960. அனையவர் போக நின்ற வறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாந் தத்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி யீந்தன ரீந்த வெல்லை
மனமொழி கடந்த நாயகர் மறைந்துதங் கோயில்
புக்கார்.

1957. அவரவருடைய தந்தையும் தாயும் மாமனும் மாமியும், தாயத்தாரும் அவர்களைப் பெற்றோரும், புதல்வர்களும், உடன் பிறந்தவரும், மனைவியரும் சுற்றத்தாருமாகிய இவர்களையும், மற்றும் அவர்களின் அளவிறந்த குணங்களும் செய்தொழிலும், முதலிய அடையாளங்களையும் முன்னுள்ளபடியே சிறிதும் தவறாது முறைப்படி முதல்வனாகிய வணிகர் மொழிந்தார்.

அவையோர் தனபதியே எனல்

1958. அதனைக் கேட்ட ஆன்றோர் அனைவரும், தாயாதிகளைப் பார்த்து, "இவர் அந்தத் தனபதி வணிகரே" என்று சொன்னார்கள். மன வலிமையுடைய தாயத்தார், "நம் வழக்குத் தோற்றது. இதனைத் தேன் வழியும் வேப்பம் பூ மாலையை அணிந்த பாண்டியன் அறிந்தால் நம்மைத் தண்டிப்பான்." என்று கருதினர்.

1959. எனவே, "நான் வீட்டிற்குப் போய் வருகிறேன்" என்றும், "நான் குளத்திற்குச் சென்று விரைவில் வருகிறேன்," என்றும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வார்த்தை கூறிவிட்டுப் பெருங்காற்றுத் தள்ளுதலால் சிதறியோடும் மேகங்களைப் போல், வலிய தூணை யொத்த தோளினையுடைய தாயத்தார் அனைவரும் ஒளித்துப் போயினர்.

வணிக மூர்த்தி மறைதல்

1960. அவ்வாறு அந்தத் தாயாதிகள் மறைந்தொழிய அங்கிருந்த அறம்கூறும் அவையிலுள்ளோர், "தனபதி வணிகர் முன் கொடுத்த பொருள் அனைத்தும் தத்துப் புத்திரனுக்கே உரியன" என்று தீர்ப்புக்கூறி அவர்களால் சாசனம் எழுதி வாங்கி வணிக மங்கையிடம் கொடுத்தனர். அவ்வாறு கொடுத்த அளவில் உள்ளத்தையும் உரையையும் கடந்த வணிகர் தமது திருவுருக் கரந்து திருக்கோயிலுட் புகுந்து அருளினார்.

1961. இம்மெனப் பலருங் காண மறைந்தவ ரிருந்தண் கூடற்
செம்மலென் றறிந்து நாய்கச் சிறுவனுக் குவகை
தூங்க
விம்மிதம் அடைந்து வேந்தன் வரிசைகள் வெறுப்ப
நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினான் கனகங்
கொண்டு.

வேறு

1962. பூத நாயகன் பூரண சுந்தரப் புத்தேள்
பாத சேகரன் வரகுண பாண்டியன் புயத்தில்
ஓத நீருல கின்பொறை சுமக்கவைத் தும்பர்
நாதர் சேவடித் தாமரை நகைநிழல் அடைந்தான்.

மாமனாக வந்து வழக்குரைத்த படலம் முற்றிற்று.

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்

1963. பண்கொண்ட வேதமுத லிடையீறு நாடரிய
பரன்மாம னாகியொரு வணிகன்
எண்கொண்ட காணிபொருள் கவர்ஞாதி
மாதுலரை யெதிரேறி வென்றபடி யிதுவாம்
தண்கொண்ட நேமிவர குணதேவன் எய்துபழி
தன்னைத் துடைத்தனைய மனவன்
கண்கொண்டு காணவுயர் சிவலோக மதுரை தனில்
வருவித்த காதையினி மொழிவாம்.

பாண்டியன் சிறுவனுக்கு வரிசை நல்கல்

1961. இதனைச் சுந்தரேச பாதசேகர பாண்டியன் கேள்விப்பட்டு, தனபதி உருவம் கொண்டு வந்து திடீரென்று அனைவரும் காண மறைந்தருளியவர் பெரிய தண்ணிய கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் என்று அறிந்து வியப்புற்றான். வணிக இளைஞனுக்கு மகிழ்வு மிக வரிசைகளைக் கொடுத்தான். வணிகராய் வந்த கையில் மானையுடைய இறைவருடைய திருக்கோயிலைப் பொன்னினாலே புதுப்பித்தான்.

1962. பூதநாயகனும் எங்கும் நிறைந்தோனுமாகிய சோமசுந்தரக் கடவுளுடைய திருவடியை முடியிற்கொண்ட சுந்தரேச பாதசேகர பாண்டியன், தன் மகனாகிய வரகுண பாண்டியனுக்குக் கடல் சூழ்ந்த இப்புவியின் முடியினைச் சூட்டி, தேவ தேவராகிய சிவபெருமான் திருவடித் தாமரையின் நிழலிற் கலந்தான்.

மாமனாக வந்து வழக்குரைத்த படலம் முற்றிற்று

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்

1963. இசையினைக் கொண்ட மறையினாலும் முதல் இடை, ஈறு நாடுதற்கரிய இறைவன், மாமனாக வந்து ஒரு வணிகச் சிறுவனது, மதிப்புடைய விளை நிலங்களையும் பிற பொருள்களையும், மன்றில் எதிர்வழக்காடி வென்ற திருவிளையாடல் இதுவாகும். சிறந்த அரசாட்சியையுடைய வரகுண பாண்டியனுக்கு அவன் கொலைப் பாவத்தினைப் போக்கி, தன் கண்களால் தரிசிக்க உயர்ந்த சிவலோகத்தை மதுரையில் தருவித்துக் காட்டிய திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

1964. இயமான னிந்திரவி யெரிவா னிலம்சலில மெறிகால்
எனும்பகுதி யிருநான்
மயமான சுந்தரனை மனம்வாய்மெய் யன்பினிறை
வழிபா டடைந்தவர குணனாய்ச்
சயவேளை வென்றவடி வினனீறில் வென்றிபெறு
சதவேள்வி யிந்திரனை நிகர்வோன்
இயன்மேனி கொண்டவொளி யினிலேழ் பகும்புரவி
யினன்றேசு வென்றவர குணனே.

1965. மறையாதி கலைபலவு மகமாதி பலவினையும் வழுவாது
நிறுவுதலின் மலர்மேல்
இறையாகி மலர்வனிதை பிரிவான திருமகளிர்
இகபோகம் விளையமுறை செயலாற்
கறையாழி வளைகளணி கரனாகி யிகல்செய்பொறி
கரணாதி பகைகளையு நெறியால்
அறைவாய்மை யுரையின்முழு துணர்வாலெவ்
வுயிருநிறை யரனாகி யுலகுமுறை செயுநாள்.

1966. வேட்டஞ்செய் காதலொரு நாட்டங்க வேகிவன
மேட்டெங்கு மாடவி யெரியா
நாட்டஞ்செய் காயுழுவை நீட்டுங்கை யானைமுக
நாட்டும்ப லேனமிவை முதலா
ஒட்டஞ்செய் தேரிாவி கோட்டின்க ணேறியிரு ளூட்டந்தி
மாலைவரு மளவாக்
கோட்டஞ்செய் வார்சிலையின் மாட்டம்பின் ஊறுயிர்
கூட்டுண்டு மாநகரில் வருவான்.

வரகுண பாண்டியன் தன்மை

1964. வரகுண பாண்டியன் ஞாயிறு, திங்கள், ஆன்மா நிலம், நீர், நெருப்பு, வளி, வான் என்னும் எண் பகுதியின் மயமாகிய சோமசுந்தரக் கடவுளை மனம் மொழி மெய்யென்னும் மூன்று கரணங்களினாலும் வழிபடும் சிறந்த நற்குணத்தையுடையவனாய் இருந்தான். அழகிற்கு இலக்கணம் என்று சொல்லப்படும் அளவிற்குப் பேரழகுடையவன். சூரியனைப் போன்ற மெய்யொளி யுடையவன். வெற்றி மிக்க மதவேளையும் வென்ற தோற்றமுடையவன். சிறப்படைந்த நூறு வேள்விகளைச் செய்த இந்திரனைப் போன்றவன்.

1965. வேதம் முதலிய பல கலைகளையும், வேள்வி முதலிய பல கருமங்களையும் நிலைபெறச் செய்தலால் தாமரை மலரில் உள்ள பிரம தேவனை ஒத்தவன். பூமா தேவியின் கூறாகிய அட்ட இலட்சியங்களால் இம்மை இன்பம் விளைய அரசு புரிவதால் குருதிக்கறையையுடைய திகிரிப்படையையும் சங்கினையும் ஏந்திய கரத்தையுடைய திருமாலைப் போன்றவன். மாறுபாட்டினைச் செய்யும் ஐம்பொறிகள், அந்தக்கரணங்கள் முதலிய பகையினை வெல்லும் ஒழுக்கத்தாலும், மெய்யுரையாலும் முற்றுமுணர் தலினாலும் எல்லாவுயிர்களிலும் நிறைந்த சிவபெருமா னைப் போலவும் விளங்கி உலகினைப் பாதுகாத்து வந்தான்.

வேட்டையாடச் செல்லல்

1966. ஒரு நாள் வரகுண பாண்டியன் வேட்டையாட உள்ளத்தில் எண்ணம் கொண்டான். உடனே புறப்பட்டுச் சென்று காடும் மலையுமான எவ்விடத்தும் விலங்குகளைத் தேடித் தீயினைக் கக்கும் கண்களையும் சினத்தையும் உடைய புலிகளையும் நீண்ட துதிக்கையினை நீட்டும் யானைகளையும், முகத்தை நிலத்தில் காட்டி உழுகின்ற பற்களையுடைய பன்றிகளையும் இவை முதலாகப் பிற விலங்குகளையும், விரைந்து செல்லும் தேரினையுடைய சூரியன் மேற்கு மலையில் ஏறுதலால் இருளை உண்டாக்கும் அந்திப் பொழுது வரும்வரை, வளைந்து நீண்ட வில்லிற்பூட்டிய கணைகளால் உயிர்களைக்கொன்று, மீண்டு தன் பெரிய நகரை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

1967. காலிற் கடும்புரவி மேலிற் கடிந்துவரு காலக்
கடந்தனிலொர் மறையோன்
மாலுற் றயர்ந்துமுகம் வேர்வைக் குறுந்திவலை வாரக்
கிடந்துவிழி துயில்வோன்
மேலக் கடும்புரவி கால்வைப்ப வந்தணனும் வீவுற்
றவிந்தனன தறியான்
கோலிற் செலும்பரியின் மீனத்த னுந்தனது கோயிற்
புகுந்தனன வளவே.

வேறு

1968. கனவட்டத் தடியிடறப் பொறிவிட்டுப் புலனவியக்
கரணத்துட் பொதி யுயிர்விட் டவனாகந்
தனையொக்கற் பனவரெடுத் தனர்கிட்டிக் குரிசில்
கடைத் தலையிட்டத் திறமொழியத்தமிழ்மாறன்
இனைவுற்றுப் பனவர்கையிற் கனகக்குப் பைகணிறை
வித் தெமதிக்குற் றவனையெடுத் தெரிமாலை
புனைவித்தக் கடன்முடிவித் தனன்மற்றப் பழிபடரிற்
புதையப்பற் றியதிடைவிட் டக லாதே.

வேறு

1969. பற்றிய பழிக்குந் தீர்வு பழமறைக் கிழவர் சொன்ன
பெற்றியி னைவே றுண்டி நதிக்கரைப் பெருநூற்
கேள்வி
முற்றிய மறையோர்க்கு் ஈந்து மூவராந் தாரு வேந்தைச்
சுற்றியுந் தூர்வை கொய்து சுரபிகள் சுவைக்க வீந்தும்.

1967. காற்றைப்போல் விரைந்து செல்லும் குதிரையில் அவன் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, அக்காட்டின் கண் வழியில் தூக்க மயக்கம் கொண்டு சோர்வடைந்து, முகத்தில் வியர்வைத் துளி ஒழுகத் தூங்கிக் கொண்டிருக்கும் ஓர் அந்தணன் மேல் அக்குதிரை, காலை வைத்து மிதித்து விட்டது. உடனே அவ்வந்தணன் இறந்து விட்டான். அதனை அறியாத வரகுணபாண்டியன் அம்பைப் போல் விரைந்து செல்லும் குதிரையோடு மீனக் கொடியை உயர்த்தி, தன் அரண்மனையை அடைந்தான், அப்பொழுதே,

பிரமகத்தி பற்றுதல்

1968. கனவட்டம் என்னும் குதிரையின் கால்பட்டு, பொறிகளை விடுத்துப் புலன்கள் அழிய கரணங்களுட் பொதிந்து உயிர் விட்ட அவ்வந்தணனது உடலை அவன் சுற்றத்தாராகிய அந்தணர்கள் கொண்டு வந்து பாண்டியனது கடைவாயிலில் போட்டு நிகழ்ந்ததைக் கூறினர். தமிழை வளர்க்கும் பாண்டியனாகிய அவ் வரகுணன் அதனைக் கேட்டு வருந்தி அம் மறையவர்களை அழைத்து அவர்கள் கையில் நிறைய பொற் குவியல்களை அளித்து, இறந்தவன் உடலை எடுத்துத் தகனம் செய்வித்து இறுதிக் கடன்களை முடிப்பித்தான். அக் கொலைப் பாவமானது அவன் துன்பத்தில் அழுந்துமாறு பிரம கத்தியாக வந்து அவனைச் சிறிதும் நீங்காது பற்றியது.

பிரமகத்தியைப் போக்கப் பரிகாரம் புரிதல்

1969. அங்ஙனம் தொடர்ந்த கொலைப் பாவத்திற்குக் கழுவாயாக, தொன்றுதொட்டுள்ள அந்தணர் கூறிய வண்ணமே ஐவகைப்பட்ட உணவினை ஆற்றங்கரையின் கண் வேதநூற் கேள்வி மிக்க அந்தணர்களுக்கு அளித்தான். மும்மூர்த்தியின் வடிவமாகிய அரசமரத்தை வலம் வந்தான். அருகம் புல்லைக் கொய்து பசுக்கள் உண்ணக் கொடுத்தான்.

1970. அகமரு டணத்தா லோம மாற்றியு மானைந் தாவின்
நகைமணிக் கோடு தோய்ந்த நளிர்புனல் குடித்துந் தான
வகைபல கொடுத்து நீங்கா வலியதா யிழுது பெய்த
புகையழ லெனமேல் இட்டுப் புலப்பட வளைந்த தன்றே.

வேறு

1971. ஏங்கும் பெருமூச் செறியுங்கை யெறியுங் குன்றின்
ஒங்குஞ் சிறுகு முடன்றார்த்திடு முன்னும் பின்னும்
பாங்குந் தொடருஞ் சிரிக்கும் பகுவாயை மெல்லும்
நீங்குங் குறுகும் பழிதாவென நேர்ந்து பற்றும்.

1972. மாசுண்ட தெய்வ மணிபோற்பணி வாயிற் பட்ட
தேசுண்ட தீந்தண் மதிபோலொளி தேம்பி வண்டு
மூசுண்ட தான முகமாவுண்ட வெள்ளில் போலக்
காசுண்ட பூணான் அறைபோய கருத்த னானான்.

1973. மறையோர்கள் பின்னும் பழிமேலிடு வண்ண நோக்கி
இறையோய் இதுநான் முகன்சென்னி யிறுத்த கூடல்
அறவே தியனைத் தினமாயிரத் தெண்காற் சூழல்
உறவே யொழிக்கப் படுமின்ன முரைப்பக் கேட்டி.

1974. ஆனா விரத நெறியாலிரண் டைந்து வைகல்
வானா டனையம் முறையால்வலஞ் செய்து வந்தா
யானா லதற்கு வழிகாட்டுமென் றையர் கூறப்
போனான் அரசன் புனிதன் றிருக் கோயில் புக்கான்.

1970. அகமருடண மந்திரத்தால் ஓமம் செய்தான். பஞ்ச கவ்வியத்தையும், பசுவின் அழகிய கொம்பில் தோய்ந்த குளிர்ந்த நீரினைப் பருகினான். பலவகையான தானங்களைச் செய்தான். அப்படியும் அப்பழி சிறிதும் நீங்காத வலியினை யுடையதாய், நெய் சொரிந்த புகை யினையுடைய நெருப்பைப் போல அவன் கண்ணுக்குப் புலனாகும்படி மேலோங்கி அவனைச் சூழ்ந்தது.

பிரமகத்தி துன்புறுத்தல்

1971. அப்பிரமகத்தி ஏங்கும், பெருமூச்சு விடும். கையோடு கைத்தட்டும். மலை போல் வளரும். அணுவாகச் சிறுகும். சினந்து ஆரவாரம் செய்யும். முன்னிலும் பின்னிலும் இருபக்கங்களிலும் தொடரும், சிரிக்கும். பிளந்த வாயை மெல்லும் விலகும். பின் நெருங்கும். ‘பழி தா’ என எதிர்ந்து வரகுணனைப் பிடிக்கும்.

1972. அப்போது வரகுண பாண்டியன் மாசுண்ட மாணிக்கம் போலவும், இராகு என்னும் பாம்பின் வாய்ப்பட்ட தண்மதியினைப் போலவும் ஒளியும், பொலிவும் குன்றினான். வண்டுகள் மொய்க்கும் மதநீர் ஒழுகும் யானையுண்ட விளாங்கனி போல் உள்ளீடில்லாத மனமுடையவனானான்.

1973. மீண்டும் கொலைப் பாவம் ஓங்கி வளரும் தன்மையை அந்தணர்கள் கண்டு, “மன்னா! பிரமனுடைய தலையைக் கிள்ளி கூடலில் வீற்றிருக்கும் அறவோனாகிய சோமசுந்தரக் கடவுளை நாள்தோறும் ஆயிரத்தெட்டு முறை வலம் வருவதால் இக்கொலைப் பாவம் நீங்கும்” என்று சொல்லி மேலும் சில சொல்லத் தொடங்கினர்.

1974. “நீங்காத விரத நெறியுடன் பத்து நாட்கள் சிவலோக நாயகனான சோமசுந்தரக் கடவுளை மேலே கூறியபடி வலம் செய்து வருவாயாயின் அக்கொலைப் பாவம் நீங்கும் நெறியைக் காட்டியருளும்” என்று அவ் வந்தணர்கள் சொல்ல, வரகுண பாண்டியன் இறைவனது திருக்கோயிலை அடைந்தான்.

1975. விழியா யிரத்தோன் பழிதீர்த்தனை வேதி யன்றன்
கழியாத மாபா தகந்தீர்த்தனை கௌவைக் கங்கைச்
சுழியா றலைக்குஞ் சடையாயெனைத் தொட்ட
லைக்கும்
பழியானது தீர்த் தருளென்று பணிந்து வீழ்ந்தான்.

1976. எண்ணும் படியும் முறையால்வளைந் தேத்த வையன்
விண்ணின் றியம்பு அரசேபரி மேத வேள்வி
நண்ணும் பயனோ ரடிவைப்பினி னண்ண வெம்மைப்
பண்ணும் வலத்தான் மகிழ்ந்தேம்பழி யஞ்சல் மன்னோ.

1977. பொன்னோடு முத்தங் கொழிக்குந்துறைப் பொன்னி
நாடன்
நின்னோ டமராற்ற நினைந்தெழு நீயு நேர்வாய்
அன்னோன் உனக்குப் புறகிட்டகன் றோடு நீயும்
பின்னோடி யெட்டிப் பிடிப்பாரில் துரத்து மெல்லை.

1978. எமையா மருச்சித் திருக்குந்தலத் தெய்து வாயால்
அமையாத வன்கட் பழியாற்றுது மென்னச் சேற்கண்
உமையாண் மணாளன் அருள்வாழ்த்தி யுரக னுச்சிச்
சுமையாறு தோளான் றொழுதாந்த னிருக்கை புக்கான்.

இறைவனை வேண்டுதல்

1975. "ஒலியுடைய அலைகள் சுழிக்கின்ற கங்கையாகிய ஆற்றைச் சடையில் உடையவனே! ஆயிரம் கண்களையுடைய இந்திரன் பழியை நீக்கியருளினீர்! ஒரு மறையவனுடைய நீங்காத மாபாதகத்தை நீக்கியருளினீர்! என்னைத் தொட்டும் வருத்தும் கொலைப் பழியினைத் தேவரீர் தீர்த்தருள வேண்டும்" என்று கூறி விழுந்து வணங்கினான்.

இறைவனின் அசரீரி

1976. பின்பு அந்தணர்கள் கூறியபடி ஆயிரத்தெட்டு முறை நெறிமுறைப்படி வலம் வந்து துதித்தான். அப்பொழுது இறைவன் வானில் இருந்து அசரீரியாகக் கூறியருளினான். "வேந்தனே! ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அசுவமேதயாக பலன் பிரதட்சிணம். அத்தகைய சிறப்புடைய பிரதட்சிணம் நாள் ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு செய்து வந்தாய். அதனால் நாம் மிக மகிழ்ந்தோம். இனி நீ அஞ்சாதே.

1977. "பொன்னையும் முத்தையும் ஒதுக்கும் நீர்த் துறைகளையுடைய காவிரி நாடனாகிய சோழன் உன்னோடு போர் புரியக் கருதி வருவான். நீயும் எதிர்ப்பாய். அவன் உனக்குப் புறங்காட்டி போர்க் களத்தினின்று நீங்கி ஓடுவான். நீயும் அவன் பின்னால் ஓடி எட்டிப் பிடிப்பவரைப் போல் துரத்தும் பொழுது,

1978. "நம்மை நாமே அருச்சித்திருக்கும் தலமாகிய திருவிடை மருதூரை அடைவாய். அங்குத் தணியாத கொடிய பழியைத் தணிவிப்போம்" என்று கூறியருளினார். சுமையினால் வருந்தும் அனந்தன் சுமையை இறக்குவதற்கு ஏதுவாகிய பெரிய தோள்களால் அரசாட்சி செய்து வரும் வரகுண பாண்டியன் அங்கயற்கண்ணம்மையின் மணாளனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளை வாழ்த்தித் தொழுது தனது இருப்பிடம் சென்றான்.

1979. ஆர்த்தார் முடியோன் சிலநாள் கழித் தாற்ற லேற்ற
போர்த்தாவு வேங்கைக் கொடித்தானை புடவிப்
போர்ப்பப்
பேர்த்தார் கலிவந் தெனப்பேரிய மார்ப்பக் கன்னிப்
பார்த்தாம வேல்மீ னவனாட்டிற் படர்ந்த வெல்லை.

1980. மிடைந்தேறு நேரிப் பொருப்பன்படை வேலை மேற்சென்
றடைந்தேறி மீனக் கொடியோனம ராட வாழி
கடைந்தேறு வெற்பிற் கலங்கிற்றெனக் கிள்ளி சேனை
உடைந்தேக வெந்நிட் டுடைந்தோடினன் உள்ளம்
வெள்கா.

1981. சுறவக் கொடியண் ணறுரந்துபின் பற்றிச் செல்வோன்
புறவக் கடிமுல் லையுந்தாமரைப் போதும் ஏந்தி
நறவக் கழிநெய் தலங்கானலின் ஞாங்கர் மொய்த்த
இறவப் புலவு கழுவீர்ந்துறைப் பொன்னி சேர்ந்தான்.

1982. பூசத் துறையிற் புகுந்தாடியப் பொன்னித் தென்சார்
வாசத் திடைமா மருதைப்பணி தற்கு வைகைத்
தேசத் தவன்கீழ்த் திசைவாயில் கடந்து செல்லப்
பாசத் தளையும் பழியும்புற நின்ற வன்றே.

பாண்டியன் சோழன் போர்

1979. சிலநாள் சென்ற பின், ஆத்தி மாலையைச் சூடிய சோழன் ஒருவன், போரின் கண் தாவுகின்ற புலிக் கொடியை உயர்த்திய தனது சேனையானது புவியை மறைத்துக் கடல் நிலை பெயர்ந்து வந்தாற்போன்று பெரிய முரசுகள் ஒலிக்க, கன்னி நாட்டினையுடைய வேப்ப மாலை யணிந்த வேற்படையையுடைய பாண்டியனது நாட்டின் மேல்வந்து வளைத்துக் கொண்டான்.

பாண்டியன் சோழனைத் துரத்துதல்

1980. நெருங்கி முன்னேறிய நேரிமலையுடைய சோழனது படையினைக் கண்ட மீனக் கொடியை உயர்த்திய பாண்டியன், தன் சேனையோடு எதிர்சென்று எதிர்த்தான். பாற்கடலைக் கடைய எழுந்த மந்தர மலை போலக் கலக்கப் போரிட்டான். அப்பொழுது சோழ னுடைய படைகள் நிலை கலங்கித் தோற்றோடின. சோழனும் உள்ளம் உடைந்து தோற்றுப் புறங்காட்டி ஓடினான்.

1981. மீனக் கொடியையுடைய வரகுண பாண்டியன் அங்ஙனம் ஓடிய சோழனை விடாது பின் தொடர்ந்து துரத்திச் சென்றான். பாண்டியன் சோழனைத் துரத்திக் கொண்டு சென்ற போது, தேன் சிந்தும் மணம் கமழும் முல்லை மலரையும் தாமரை மலரையும், ஏந்திக் கழி சூழ்ந்த நெய்தல் நிலத்துச் சோலையின் மருங்கில் இறால் மீனின் புலால் நாற்றத்தைப் போக்கும் குளிர்ந்த நீர்த்துறையை யுடைய காவிரியை அடைந்தான்.

திருவிடை மருதூர் சென்று வழிபடல்

1982. அவ்வாறு அடைந்த பாண்டிய நாட்டையுடைய வரகுண வேந்தன், 'பூசத்துறை' என்னும் அத்துறையில் புகுந்து நீராடி, அக்காவிரியின் தென்பக்கத்தில் மணம் மிக்க பெருமை பொருந்திய திருவிடைமருதூரில் எழுந்தருளிய மகாலிங்கப் பெருமானை வணங்கத் திருக்கோயிலினது கீழ்த்திசை வாயிலைக் கடந்து உள்ளே சென்றான். அப்போது அவனைத் தொடர்ந்து செல்ல இயலாத பாசத்தளையும் கொலைப் பழியும் புறத்தே நின்றுவிட்டன.

1983. சுருதிச் சுரும்பு புறஞ்சூழ்ந்து குழறத் தெய்வ
மருதிற் சிறந்த பெருந்தேனைக் கண்வாயங் காந்து
பருகிப் படிந்து தழல்வாய் வெண்ணெய்ப் பாவை
யொப்ப
உருகிச் செயலற் றுரையற்றுணர் வாகி நின்றான்.

வேறு

1984. நிராமய பரமா னந்த நிருத்தநான் மாடக் கூடற்
பராபர விமையா முக்கட் பகவ பார்ப்பதி மணாள
புராதன அகில நாத புண்ணிய மருத வாண
அராவணி சடையா என்றென்று அளவிலாத்
துதிகள் செய்தான்.

1985. சொற்பதங் கடந்த சோதி துதித்தடி பணிந்த வேந்தை
மற்பெருந் தோளாய் கீழை வாயிலிற் பிரமச் சாயை
நிற்பதந் நெறியாற் செல்லேல் நிழன்மதி யுரிஞ்சு மேலைப்
பொற்பெரு வாயி னீங்கிப் போதிநம் மதுரைக்
கென்றான்.

1986. வரகுண னதுகேட் டையன் மருதினை வளைந்து நீங்கற்
கருமையால் வாயி றோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து
வரைதுளைத் தன்ன மேலை வாயிலாற் போவா னன்ன
திருமணிக் கோபு ரந்தன் பெயரினாற் செய்து சின்னாள்.

1983. உள்ளே சென்ற பாண்டியன் வேதமாகிய வண்டுகள் புறத்தே சூழ்ந்து ஒலிக்கத் தெய்வத்தன்மை பொருந்திய 'இடைமருதிலே' பொருந்திய தேனைத் தன் கண்களாகிய வாயைத் திறந்து பருகி அதிலே தோய்ந்து அனல் வாய்ப்பட்ட வெண்ணெயாலான பாவை போல் உருகிச் செயலும் வாக்கும் அற்று உணர்ச்சி வடிவமாகி நெடு நேரம் நின்றான்.

1984. பின்பு, பிறவி நோயற்றவனே! பேரின்பத் திருக்கூத்தனே! நான் மாடக்கூடலில் வீற்றிருக்கும் பராபரனே! இமையாத மூன்று கண்ணுடைய பகவனே! பார்வதி மணாளனே! பழமையானவனே! எல்லாவற்றிற் கும் இறைவனே! மருதவாணனே! அரவணிச் சடையனே!" என்று மகாலிங்க மூர்த்தியைப் பலவாறாகத் துதித்தான்.

பிரமகத்தி கீழ்வாயிலில் தங்கி விடுதல்

1985. அப்போது சொற்பதங் கடந்த சோதி வடிவான இறைவன் துதித்து வணங்கி நின்ற வரகுண பாண்டியனை நோக்கி, "மற்போரில் வல்ல பெருந்தோளாய்! உன் பிரம கத்தி கீழை வாயிலிலேயே நிற்கின்றது. ஆதலால் நீ அவ்வழியில் போகாதே. ஒளிமிக்க சந்திரமண்டலத்தை உராய்கின்ற பொன்னாலான பெரிய மேலை வாயில் வழியாக நம் மதுரைப் பதிக்குச் செல்வாயாக" என்று கூறியருளினான்.

1986. வரகுண பாண்டியன் அதனைக் கேட்டு இறைவன் வீற்றிருக்கும் இடை மருதினை வலம் வந்து பிரிதலாற்றாமையால் வாயில்கள் தோறும் அடிக்கடி வீழ்ந்து வீழ்ந்து வணங்கி மேலை வாயில் வழியாகப் போவானாயினான். அப்போது அவன் சில நாள் அங்குத் தங்கி மேலை கோபுரத்தைத் தன் பெயரால் கட்டினான்.

1987. திருப்பணி பலவுஞ் செய்து தென்றிசை வழிக்கொண் டேகிச்
சுருப்பணி நெடுநாண் பூட்டுஞ் சுவைத்தண்டச் சிலையாற் காய்ந்த
மருப்பணி சடையான் கோயில் வழிதொறுந் தொழுது போற்றிப்
பொருப்பணி மாடக் கூடற் பொன்னகர் அடைந்தான் மன்னோ.

1988. தொடுபழி தொலைவித் தாண்ட சுந்தரத் தோன்றல் பாதக்
கடிமலர் அடைந்து நாளுங் கைதொழு துலக மெல்லாம்
வடுவறு செங்கோ லோச்சும் வரகுணன் அறவோர் நாவால்
அடுசுவை யமுத மன்ன வரன்புகழ் செவிம டுப்பான்.

1989. வேதமா கமம்பு ராண மிருதிகண் முதலா நூலும்
ஓதுவ துலகின் மிக்க துருத்திர வுலகம் என்னும்
போதம தகங்கொண் டந்தப் பொற்பதி காண வேண்டுங்
காதல்செல் வழியே யீசன் கங்குலிற் கோயி லெய்தா.

வேறு

1990. மாழை மான்மட நோக்கிதன் மணாளனை வணங்கிப்
பீழை யேழ்பவங் கடந்துநின் னடிநிழல் பெற்றோர்
சூழ நீசிவ புரத்தில்வீற் றிருப்பது தொழுதற்
கேழை யேற்கொரு கருத்துவந் தெய்தியது எந்தாய்.

1987. வேறு பல திருப்பணிகளையும் செய்து முடித்தான். அதன் பின் தென் திசை நோக்கிச் செல்லுங்கால், வண்டுகளின் வரிசையாகிய நெடிய நாண் பூட்டிய கரும்பு வில்லை யுடைய மதவேளை எரித்தருளிய, பன்றிக் கொம்பினை அணிந்த சடையையுடைய சிவ பெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலை, வழிதோறும் வணங்கித் துதித்து மலைவரிசை போல் ஓங்கிய மாடங்களையுடைய மதுரைத் திருநகரை அடைந்தான்.

1988. தன்னைவிடாது தொடர்ந்து பழியைப் போக்கிக் காத்தருளிய சோமசுந்தரக் கடவுளின் திருவடியாகிய மணம் மிக்க தாமரை மலரைச் சார்ந்து நாள்தோறும் வணங்கி வந்தான். உலகம் முழுவதும் நீதி தவறாது செங்கோலாச்சிக் கொண்டும் சுவை பொருந்திய அமுதத்தை யொத்த இறைவன் புகழை அறிஞர்களைக் கொண்டு கேட்டும் வாழ்ந்து வந்தான்.

சிவலோகம் காண விழைதல்

1989. ஒருநாள் வேதம், ஆகமம், புராணம், ஸ்மிருதிகள் முதலிய நூல்கள் அனைத்தும், உலகங்களில் மேம்பட்டது 'சிவலோகம்' என்று சொல்வதை மனத்தில் கொண்டு அந்த அழகிய சிவலோகத்தைக் காண ஆசை கொண்டு அன்று ராத்திரியில் (சிவராத்திரியிலே) திருக்கோயிலை அடைந்தான்.

1990. இளமையான மான்போலும் பார்வையை யுடைய மடப்பத்தையுடைய உமையம்மையின் நாயக னாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம் பெருமானே! துன்பத்தையுடைய எழுவகைப் பிறவியையும் கடந்து உன்னுடைய திருவடி நீழலைப் பெற்ற மெய்யன்பர்கள் சூழத் தேவரீர் சிவலோகத்தில் எழுந்தருளி யிருப்பதைத் தரிசித்து வணங்கிட அறிவற்ற அடியேன் ஆசை கொண்டேன்" என்று விண்ணப்பம் செய்தான்.

1991. என்ற காவலன் அன்பினுக் கெளியராய் வெள்ளி
மன்ற வாணரவ் வுலகையிவ் வுலகிடை வருவித்
தின்று காட்டுது மிவற்கெனத் திருவுளத் தெண்ணம்
ஒன்றி னாரஃ துணர்ந்ததா லுருத்திர வுலகம்.

1992. கோடி மாமதிக் கடவுளர் குரூஉச்சுடர் பரப்பி
நீடி யோரிடத் துதித்தென மின்மினி நிகர்த்து
வாடி வானிரு சுடரொளி மழுங்கவான் இழிந்து
தேடி னார்க்கரி யானுறை சிவபுரந் தோன்ற.

1993. ஆண்ட நாயகன் நந்தியை யழைத்தெமக் கன்பு
மாண்ட காதலான் வரகுண வழுதிநம் முலகங்
காண்டல் வேண்டினான் காட்டெனக் கருணையான் ஏவல்
பூண்ட வேத்திரப் படையினான் றொழுதனன் போந்தான்.

1994. வருதி யாலெனப் பணிந்தெழு வரகுணற் கொடுபோய்க்
கருதி யாயிரம் பெயருடைக் கடவுணான் முகத்தோன்
சுருதி யாதியீ றளப்பருஞ் சொயம்பிர காசப்
பரிதி யாள்சிவ புரமிது பாரெனப் பணித்தான்.

திருநந்தி தேவர் பாண்டியனுக்குச் சிவலோகம் காட்டல்

1991. என்று கூறி குறையிரந்த வரகுண பாண்டியன் அன்பிற்கு எளியவராகி வெள்ளியம்பலமுடைய சோம சுந்தரக் கடவுள், "நாம் இன்றைக்கு அச்சிவலோகத்தை இவ்வுலகத்தில் வருவித்து இவ்வன்பனுக்குக் காட்டுவோம்" என்று திருவுள்ளம் கொண்டருளினார். அச்சிவலோகம் சோமசுந்தரக் கடவுளின் திருவுள்ளத்தை உணர்ந்தது.

1992. திருமாலும், பிரம்மனும், தேடியும் காண முடியாதவரான அரிய இறைவன் தங்கியருளிய சிவலோக மானது, வானின் கண் உள்ள சூரிய சந்திரர்களின் சுடர்கள் மின்மினிப் பூச்சி போல் ஒளி மழுங்கக், கோடி சந்திரர்கள் குறைவின்றி ஒரே இடத்தில் உதித்தாற்போலப் பேரொளி பரப்பி விண்ணினின்றும் இறங்கித் தோன்றியது.

1993. எம்மை ஆண்டருளிய சோமசுந்தரக் கடவுள் திருநந்தி தேவரை அழைத்து, "நம் மெய்யன்பனாகிய வரகுண பாண்டியன் நமது உலகத்தைக் காண விரும்பினான். ஆதலின் அவனுக்குக் காட்டுக" என்று கூறியருளினார். அதைக் கேட்ட பிரம்புப் படையையுடைய திருநந்தி தேவர் வணங்கிச் சென்றார்.

1994. அங்ஙனம் புறத்து வந்த திருநந்தி தேவர் வரகுண பாண்டியனை நோக்கி, "வழுதி வருக" என்று அழைத்தார். அப்போது வரகுணன் அவரை வணங்கி எழுந்து பின் செல்லத் திருநந்தி தேவர், "வரகுணனே! ஆயிரம் பெயருடைய திருமாலும், பிரமனும் வேதம் முதலிய அளவைகளால் ஆராய்ந்து அறிய முடியாத பேரொளி யினையுடைய ஞான சூரியனாகிய சோமசுந்தரக் கடவுள் ஆண்டருளுகின்ற சிவலோகம் இதுவே. இதனைக் காண்பாயாக." எனப் பணித்தருளினார்.

1995. கருப்பு ரங்கமழ் துளர்பகுங் கால்களால் உதையுண்
டருப்பி னஞ்சிதைந் தாயிரப் பத்தியோ சனைபோய்
மருக்க மழ்ந்துநூ றாயிரம் வாலிதழ்க் கமலம்
இருக்கு மோடைகள் புடைதொறுந் தழுவிய யாறும்.

1996. வரம்பின் மாதரார் மதுரவாய் திறந்துதேன் வாக்கும்
நரம்பின் ஏழிசை யாழிசை நகைமலர்த் தருவின்
சுரும்பி னோரிசை நாரத தும்புரு இசைக்கும்
இரும்பு நீர்மெழு காக்கிய வின்னிசை யெங்கும்.

1997. அமுத வாவியும் பொன்மலர் அம்புயத் தடமுங்
குமுத வாயர மாதராங் குயிலினம் பயிலும்
நிமிர வாள்விடு மரகத நெடியபைங் காவுந்
திமிர மாசறக் கழுவிய தேவர்வாழ் பதமும்.

1998. அலங்கு பாற்கடல் போற்புறத் தமுதநீர் அகழும்
பொலஞ்செய் ஞாயில்சூழ் புரிசையும் பொன்செய்கோ
புரமும்
நலங்கொள் பூவியல் வீதியு நவமணி குயின்ற
துலங்கு மாளிகைப் பந்தியுஞ் சூளிகை நிரையும்.

1999. ஐம்பு லங்களும் வைகலும் விருந்ததா வருந்த
வெம்பு நால்வகை யுண்டியும் வீணையுஞ் சாந்துஞ்
செம்பொன் ஆரமு மாடலின் செல்வமுந் தெய்வப்
பைம்பொன் மேகலை யோவியப் பாவையொப் பாரும்.

சிவலோகக் காட்சிகள்

1995. கற்பூர மணம் கமழும் தென்றல் காற்றினால் மொத்துண்டு, அரும்புக் கூட்டங்கள் மலர்ந்த பதினாயிரம் யோசனை தூரம் சென்று மணம் வீசி, நூறாயிரம் இதழ்களைக் கொண்ட வெண்டாமரை மலர்கள் விளங்குகின்ற ஓடைகள் பக்கம் தோறும் பொருந்திய ஆறுகள் காணப்பட்டன.

1996. அளவற்ற தெய்வ மாதர்கள், இனிய வாயினைத் திறந்து, தேனைப் பொழிவது போல் பாடும் ஏழிசைகளும், யாழின் இசைகளும், மலர்களில் மொய்க்கும் வண்டுகளின் அழகிய இசைகளும், நாரதரும் தும்புருவும் பாடுகின்ற இனிய இசைகளும், இரும்பினை மெழுகுபோல் இளகும் தன்மையை உண்டாக்குவதாய் எல்லா இடங்களும் காணப்பட்டன.

1997. அமிழ்த மயமான நீரினையுடைய நடைக் கிணறுகளும் (வாவிகளும்), பொன் போன்ற தாமரை மலர்ந்த தடாகங்களும், செவ்வல்லி மலர் போன்ற வாயினையுடைய தேவ மகளிராகிய குயிற் கூட்டங்கள் விளையாடும், ஒளிவிடும் மரகதம் போன்ற பசிய பூஞ் சோலைகளும், இருளாகிய களங்கம் ஒழியுமாறு கழுவிய தேவர்கள் வாழ்கின்ற பதங்களும் காணப்பட்டன.

1998. ஒலிக்கின்ற பாற்கடல் போலப் புறத்தில் அமுதம் போன்ற நீரினையுடைய அகழியும், பொன்னாற் செய்த உறுப்புகள் அமைந்த திருமதிலும், பொற்கோபுரமும் நன்மை மிக்க பொலிவுடைய வீதிகளும், ஒன்பது மணிகளும் பதிக்கப்பட்ட மாளிகை வரிசைகளும், அவற்றின் நிலா முற்றங்களும் காணப்பட்டன.

1999. ஐம்புலன்களும் நாள்தோறும் விருந்தாக உண்ணுதற்கு அமைந்த நால்வகை உணவு வகைகளும் யாழிசையும், கலவைச் சாந்தும், சிவந்த பொன்மலையும், ஆடலாகிய செல்வமும், தெய்வத் தன்மை வாய்ந்த பசிய பொன்மேகலையணிந்த சித்திரப் பாவையை ஒத்த மகளிரும் காணப்பட்ட தன்மையுடையதாய் இருந்தன.

2000. படர்ந்த வார்சடை யுருத்திரர் பணைத்திறு மாந்த
வடங்கொள் பூண்முலை யுருத்திர மகளிரொ டமரும்
இடங்கொண் மாளிகைப் பந்தியும் இகல்விளை துன்பங்
கடந்த செல்வமுங் கவலையில் போகமுங் காட்டி.

2001. முண்ட காசனன் பதமிது மூவுல களந்த
தண்டு ழாயவன் புரமிது தனிமுதல் வடிவங்
கொண்டு வீறுசால் உருத்திரர் கோப்பதி யின்ன
எண்டி சாமுகங் காவல ருறைவிட மிவைகாண்.

2002. புலரு முன்புன லாடிநீ றாடிநம் புனிதன்
இலகு மாலயம் விளக்கிநந் தனப்பணி யியற்றி
மலர்கொய் தாய்ந்தனர் தொடுத்தரன் புகழ்செவி மடுத்திவ்
உலக வாணராய்ப் போகமுற் றுறைகுநர் இவர்காண்.

2003. தூய ராகியைஞ் சுத்திசெய் தகம்புறம் இரண்டின்
நேய ராய்விதி நெறியினான் முகமனீ ரெட்டாற்
காயம் வாய்மன வொருமையா லர்ச்சித்துக் கடவுள்
நாய னரரு குறைபத நண்ணினா ரிவர்காண்.

2000. விரிந்த நீண்ட சடையையுடைய உருத்திரர்கள், பருத்து இறுமாந்த, முத்து வடம் பூண்ட கொங்கையை யுடைய உருத்திர மகளிரோடு அமர்ந்திருக்கும் பெரிய இடமுடைய மாளிகை வரிசைகளும், பகையும் பிறரால் விளையும் துன்பமும் கடந்த செல்வமும், கவலையின்றித் துய்க்கும் போகங்களும் ஆகிய இவை அனைத்தையும் தனித் தனியே காண்பித்தார்.

2001. இத்தகைய காணுதற்கரிய காட்சிகளைக் கண்டு களிக்கும் வரகுண பாண்டியனை நந்தியெம் பெருமான் அழைத்துச் சென்று, "இது தாமரைத் தவிசினையுடைய நான்முகன் வாழும் பதம்" என்றும், இது "மூன்றுலகங்களை யும் அளந்த துழாய் மாலையையுடைய திருமாலின் பதி" என்றும், "இவை, ஒப்பற்ற முதற் கடவுளாகிய சிவபெருமான் திருவுருவத்தைப் பெற்ற, பெருமைமிக்க உருத்திரர்களின் சிறந்த நகரம்" என்றும் "எட்டுத் திக்குகளையும் காவல் செய்யும் திக்குபாலகர்களின் இருப்பிடங்கள் இவையாகும்" என்றும் காட்டினார்.

2002. பிறகு சிவனடியார் கூட்டத்தைக் கைப்பிரம்பி னால் சுட்டிக்காட்டி, "இவர்கள் சூரியன் உதிப்பதற்கு முன்னே, நீராடி திருவெண்ணீறு அணிந்து நம் இறைவனது திருக்கோயிலைத் திருவலகிடுதலும், திருமெழுக்கிடுதலும், திருநந்தவனப்பணி பணி புரிதலும், புட்பம் கொய்து திருமாலை கட்டிக் கொடுத்தலும், இறைவன் புகழைச் செவி நிரம்பக் கேட்டு இவ்வுலகத்தில் வாழ்பவராய்ப் போகம் துய்த்திருப்பார் இவர்" என்றார். (தாசமார்க்கத்தினர் ஆவர்.)

2003. "புனிதமுடையராய், உள்ளும் புறமும் அன்பு டையராய் ஆகம நெறியினால் பதினாறு வகை உபசாரத் தாலும் உடல் உரை உள்ளம் ஆகிய இம்மூன்றின் ஒருமைப் பாட்டுடன் எல்லாத் தேவர்கட்கும் இறைவனாகிய சிவபெருமான் அண்மையில் உறையும் பதத்தினை அடைந்தவர் இவர். (புத்திர மார்க்கத்தினர் ஆவார்.)

2004. கிளர்ந்த காலினால் அங்கியை நிமிர்த்துமேற் கிடைத்து
வளர்ந்த பிங்கலை யிடைநடு வழியுகு மதியின்
விளைந்த இன்னமு துண்டுநம் விடையவன் வடிவங்
குளந்த னிற்குறித் தவனுருக் கொண்டவ ரிவர்காண்.

2005. முக்க ணாயகன் பொருட்டென வேள் விகண் முடித்துத்
தொக்க வேதியர் இவர்புனற் சாலையித் தொடக்கத்
தக்க பேரறம் புகழ்பயன் தனைநன்கு மதிக்கும்
பொக்க மாறிய நிராசையாற் புரிந்தவ ரிவர்காண்.

2006. மறையி னாற்றினால் தந்திர மரபினான் மெய்யின்
நிறையு நீற்றினர் நிராமய னிருத்தனைந் தெழுத்தும்
அறையு நாவினர் பத்தராய் அரன்புகழ் கேட்கும்
முறையி னாலிவர் வினைவலி முருக்கினார் கண்டாய்.

2007. மறைக ளின்சத வுருத்திர மந்திர நவின்றோர்
நிறைகொள் கண்டிகை நீறணி நீரறியா ரேனுங்
குறிகு ணங்குலன் குறித்திடா தன்பரைச் சிவனென்
றறியு மன்பினாற் பிறவிவேரறுத்தவர் இவர்காண்.

2008. ஆனஞ் சாடிய பரஞ்சுட ரிறைசிவ ஞான
தானஞ் செய்தவர் தருப்பணஞ் செய்தவர் சாம
கானஞ் செய்தவற் காலயங் கண்டுதா பித்தோர்
ஊனஞ் சேர்பிறப் பறுத்துவா ழுத்தமர் இவர்காண்.

2004. "மேலெழுந்த பிராணவாயுவால் நெருப்பினை மேலே எழுப்பி, பிரமந்திரம் வரையில் கொண்டுபோய், அங்குள்ள சந்திரமண்டலத்தை இளகச் செய்து பிங்கலைக்கும் இடைகலைக்கும் நடுவிலுள்ள சுழிமுனை யின் வழியாக ஒழுகும் அமுதத்தை உண்டு சிவபெருமா னின் திருவுருவத்தினைப் புருவநடுவில் தியானித்துச் சிவ சாரூப்பிய பதத்தில் வாழும் (சகமார்க்கத்தினர்) தன்மை யுடையவர் இவர் ஆவார்.

2005. "முக்கண்ணுடைய சிவபெருமான் பொருட்டாக வேள்விகள் செய்து சிவபதமடைந்த அந்தணர்கள் இவர்கள். இவர்கள் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய பெரிய புண்ணியங்களைப் புகழும் பயனும் கருதாமல், பொய்யற்ற தன்மையால் நிராசையுடன் புரிந்தவர்.

2006. "இவர்கள் வேதமுறைப்படியும், சிவாகம முறைப்படியும் உடலில் நிறைந்த திருவெண்ணீற்றினை அணிந்தவரும் நோயற்றவனாகிய கூத்தப்பிரானது திருவைந் தெழுத்தை உச்சரிக்கின்ற நாவினையுடையவரும், அன்பராகிய சிவபெருமானின் திருப்புகழைக் கேட்டு வினையின் வலிமையினைப் போக்கியவரும் ஆவர்.

2007. "இவர்கள் வேதங்களில் உள்ள சத உருத்திர மந்திரத்தைக் கூறியவரும், நிறைந்த உருத்திராக்க மாலையும் திருவெண்ணீறும் அணிந்தவர் யாவராயினும் அவர்கள் பெயரையும் குணத்தையும் குலத்தையும் கருதாது சிவபெரு மானாகவே கருதிப் பிறப்பினை ஒழித்தவரும் ஆவர்.

2008. "பஞ்சகவ்வியமாகிய பரஞ்சோதியாகிய இறைவ னுடைய, சிவஞானத்தைத் தானம் செய்தவரும், சிவ தருப்பணம் செய்தவரும், சாமகானம் பாடும் சிவபெருமா னுக்குத் திருக்கோயில் எடுத்துப் பிரதிட்டை செய்தவருமாய்க் குற்றம் பொருந்திய பிறப்பினை ஒழித்த உத்தமர் ஆவர்.

2009. சிவனை யர்ச்சனை செய்பவர்க் கிசைவன செய்தோர்
அவனெ னக்குறித் தடியரைப் பூசைசெய் தாறு
சுவைய இன்னமு தருத்தினோர் தொண்டர்தம் பணியே
தவமெ னப்புரிந் துயர்ச்சியைச் சார்ந்தவர் இவர்காண்.

2010. ஆதி சுந்தரக் கடவுளுக் காலயம் பிறவும்
நீதி யாலருச் சனைபிற பணிகளு நிரப்பிப்
பூதி சாதன வழிநிலம் புரந்திவ ணடைந்த
கோதி லாதநின் குடிவழிக் கொற்றவர் இவர்காண்.

2011. என்று வேத்திரங் கொடுகுறித் தெம்மிறை நந்தி
கொன்றை வேணியன் அடியர்தங் குழாத்தினைத் தேற்றி
நின்று வீழ்ந்துவீழ்ந் தஞ்சலி முகிழ்ந்திட நெறியே
சென்று வானவர் நாயகன் றிருமுன்பு விடுத்தான்.

2012. மறைக ளாகமம் வடிவெடுத் திருபுடை வாழ்த்த
நறைகொள் யாழ்தழீஇத் தும்புரு நாரதர் பாட
அறைகொள் வண்டிமிர் கொம்பரி னரம்பையர் ஆடக்
குறைகொள் வானவர் பதங்கிடை யாதிறை கொள்ள.

2013. மதங்க விழ்க்குமால் வரைமுக மைந்தனுஞ் சூரன்
கதங்க விழ்த்தவேற் கந்தனுங் கருதலன் வேள்வி
விதங்க விழ்த்தவாள் வீரனும் வெயின்முடித் தார்தேன்
பதங்க வீழ்ப்பவீழ்ந் தேயின பணிவழி நிற்ப.

2009. "இவர்கள் சிவபூசை செய்தவருக்கு வேண்டும் காரியங்களை விரும்பிச் செய்தவரும், அடியார்களை அச்சிவ பெருமானே என்று கருதி அறுவகைச் சுவை பொருந்திய இனிய உணவை உண்பித்தவரும், அடியார் பணியைச் செய்தலே தவம் என்று கருதிச் செய்து மேன்மை அடைந்தவரும் ஆவர்.

2010. "முதல்வராகிய சோமசுந்தரக் கடவுளுக்குத் திருக்கோயிலிலும், பிற திருப்பணிகளும், அர்ச்சனைகளும் செய்து, திருநீறு முதலிய சிவசாதன நெறியினால் உலகினைக் காத்து, இங்கு வந்து சிவபதம் அடைந்த குற்றமில்லாத நின் அடியில் தோன்றிய மன்னர்கள் இவர் ஆவர்!"

2011. இவ்வாறு, எம் தலைவனாகிய நந்தியெம் பெருமான் பிரம்பினால் சுட்டிக் காட்டி, கொன்றை மாலை யணிந்த முடியையுடைய சிவபெருமானது அடியார் கூட்டத்தினரின் இயல்பினை முறைப்படியே தெரிவித்து வந்தார். பாண்டியன் ஒவ்வோரிடத்தும், நின்று பலமுறை விழுந்து வணங்கி கைகூப்பி வந்தான். முடிவில் நந்தியெம் பெருமான் பாண்டியனைச் சிவபெருமான் திருமுன்னர் அழைத்து வந்து விடுத்தான்.

2012. சிவபெருமான் திருமுன்பு வேதங்களும் சிவாக மங்களும் வடிவெடுத்து இரு பக்கங்களிலும் நின்று வாழ்த்தின. இனிய இசையமைந்த யாழினைத் தழுவித் தும்புருவும் நாரதரும் ஒருபால் நின்று இசை பாடினார். இசை பாடும் வண்டுகள் ஒலிக்கும் பூங்கொம்புகள் போலத் தேவ அரம்பையர் ஆடினர். குறையிரந்து வேண்ட வந்த தேவர்கள் சமயம் வாய்க்கப் பெறாது தூரத்தே காத்திருந்தனர்.

2013. மதம் சிந்தும் பெரிய மலைபோன்ற முகத்தை யுடைய விநாயகக் கடவுளும், சூரபன்மனது சினத்தை அறக் கெடுத்த வேற்படையையுடைய முருகப் பெருமானும் பகைவனாகிய தக்கன் வேள்வியினையழித்த வாட்படை யேந்திய வீரபத்திரக் கடவுளும், ஒளி முடிமாலைகள் தேனைச் சிந்தும்படி கீழே விழுந்து ஏவிய பணிகளைச் செய்து ஒருபால் நின்றனர்.

2014. தூங்கு தானையை ஒதுக்கிவாய் துணைக்கரம் பொத்தி
ஓங்கு மாலயன் றங்குறை யொதுங்கிநின் றுரைப்ப
வாங்கு வான்சிலை யிந்திரன் முதற்றிசை வாணர்
தாங்கள் தாம்புரி காரியக் குறைநின்று சாற்ற.

2015. எழுவி னோடுதெண் டேந்திவாய் மென்றெயி றதுக்கிக்
குழுமு பாரிடத் தலைவருங் கோடிகூற் றொதுங்கி
விழும மூழ்கிமெய் பனித்திட விதிர்க்குமுக் குடுமிக்
கழுமுள் ஏந்திய கணத்தவர் கடைதொறுங் காப்ப.

2016. சித்தர் வானவர் தானவர் சாரணர் திணிதோள்
வைத்த யாழிணர் கின்னரர் மாதவர் இயக்கர்
பைத்த பாரிடர் காருடர் பாதல வாணர்
சுத்த யோகியர் முதற்கணத் தொகையெலாம் பரவ.

2017. இனிவ ரும்பிறப் பறுத்தெமைக் காத்தியால் எனத்தங்
கனிவ ரும்பிய வன்பெழு கருணையா ரமுதைப்
பனிவ ருந்தடங் கண்களாற் பருகிமெய் பனிப்ப
முனிவர் சங்கர சிவசிவ எனமுறை முழங்க.

2018. வரந்த வாதன யாவர்க்கும் வரன்முறை வழங்கி
முருந்த வாநகை மலைக்கொடி முகிழ்நகை யரும்பத்
திருந்த வாயிரங் கதிர்விடு சிங்கமெல் லணைமேல்
இருந்த நாயகன் இருக்கைகண் டிறைஞ்சினா னிறைவன்.

2014. சிறந்த திருமாலும், நான்முகனும் தொங்குகின்ற முன்தானையை ஒதுக்கி, இரண்டு கைகளால் வாய்பொத்தி ஒருபுறம் ஒதுங்கி நின்று தத்தம் குறைகளைச் சொல்லி நின்றனர். வளைந்த வானவில்லையுடைய இந்திரன் முதல் அட்டதிக்கு பாலர்கள் தாங்கள் செய்து வரும் காரியக் குறைகளை நடுநடுங்கி விண்ணப்பஞ் செய்து நின்றனர்.

2015. வளை தடியையும் தண்டத்தையும் ஏந்தி வாயினை மென்று பற்களை அதுக்கிய பூதகணத் தலைவரும், அளவற்ற கூற்றுவர்களும் துன்பத்துள் மூழ்கி உடல் நடுங்க, முத்தலைச் சூலமேந்திய சிவகணத் தலைவர்கள் வாயில் தோறும் அவர்களைக் காவல் பூண்டு நின்றனர்.

2016. அமரர், சித்தர், அவுணர், சாரணர், வலிய தோளில் யாழினை வைத்த விஞ்சையர், கின்னரர், மாதவர், இயக்கர், பூதகணத் தலைவர், கருடர், நாகர், சுத்த யோகியர் ஆகிய கணத்தலைவரெல்லாம் ஒருபக்கம் துதித்து வணங்கி நின்றனர்.

2017. முனிவர்கள், "இனிவரும் எங்கள் பிறப்பினை ஒழித்து எங்களைக் காத்தருள்க" என்று வேண்டி, அருள் நிறைந்த சிவப் பேரமுதினைத் தங்கள் கண்களாகிய வாயால் பருகி மெய்சிலிர்க்க, "சங்கரா! சிவசிவ!" என முழங்கிக் கைகுவித்து வாழ்த்தி நின்றனர்.

இறைவனைக் காணல்

2018. அப்போது அனைவருக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ப, கெடாதனவாகிய வரங்களை அருளிச் செய்து, மயில் இறகின் அடியும் விரும்பும் பல் வரிசையினையுடைய, உமையம்மையார் புன்னகை செய்ய, அளவிறந்த ஒளியினைச் செய்யும் இரத்தின சிம்மாதனத்தின் மேல் எழுந்தருளியிருந்த சிவபெருமானை, வரகுண பாண்டியன் கண்டு வணங்கினான்.

2019. உரைக ளுந்தடு மாறமெய் உரோமமுஞ் சிலிர்ப்பக்
கரையி றந்தவின் னருட்பெருங் கடலிலன் பென்னுந்
திரை யிறந்தவா றீர்த்திட மிதந்துபோய்ச் செப்பின்
வரையி றந்தவா னந்தவார முதைவாய் மடுத்தான்.

2020. தன்பு லன்களுங் கரணமுந் தன்னவே யாக்கி
அன்பு டம்புகொண் டவனெதிர் அருட்சிவ லோகம்
பின்பு பண்டுபோன் மதுரையாப் பிராட்டியுந் தானும்
முன்பி ருந்தவா றிருந்தனன் சுந்தர மூர்த்தி.

2021. வேந்தர் சேகரன் வரகுணன் விண்ணிழி கோயில்
ஏந்தல் சேவடி யிறைஞ்சிநின் றிறையருட் பெருமை
ஆய்ந்த வாவுதன் னகம்புக வின்பமோ டன்பு
தோய்ந்து தாரையர் துளும்பநாக் குழறிடத் துதிப்பான்.

வேறு

2022. நாயினேன் தன்னை நடுக்கும் பழியகற்றித்
தாயினேர் ஆகித் தலையளித்தாய் தாள்சரணஞ்
சேயினேன் காணச் சிவலோகங் காட்டிப்பின்
கோயினேர் நின்றவருட் குன்றேநின் றாள்சரணம்.

2023. மாழாந்து செய்யும் வினைவழிபோய் வன்நரகிற்
றாழா தடியனேற் கன்புதந்தாய் தாள்சரணம்
ஏழாகி நான்கு வகையாய் எழுபிறப்பும்
பாழாக வென்னைப் பணிகொண்டாய் தாள் சரணம்.

2019. அப்போது சொற்கள் தடுமாற, மெய் உரோமஞ் சிலிர்ப்ப, திருவருளாகிய அருட்கடலின் கண், தனது அன்பாகிய அலை இல்லாத ஆறு இழுத்துச் செல்ல, அதில் மிதந்து சென்று சொல்லின் எல்லையைக் கடந்த பரமானந்தமாகிய திவ்விய அமிழ்தத்தை உண்டான்.

இறைவனைத் துதித்தல்

2020. தன் ஐம்புலன்களையும் அந்தக் கரணங்களையும் தன்னுடையவனவாகவே செய்து அன்பே வடிவமாகக் கொண்டு நின்ற வரகுண பாண்டியன் எதிரே அருள் வடிவமாகிய சிவலோகமானது பின்பு, முன் போல் மதுரையானது, சோமசுந்தரக் கடவுளும் உமாதேவியாரும் தாமும் முன்னிருந்தபடியே எழுந்தருளியிருந்தனர்.

2021. அரசர்களுக்கு அரசனாகிய வரகுண பாண்டியன் விண்ணினின்று இழிந்த இந்திர விமானத்தில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிகளைப் பணிந்து திருமுன் நிற்க, அப்போது இறைவனது திருவருட் பெருக்கம் தன்னுள் புகுந்த அளவில் பேரின்பத்திலும் அன்பிலும் மூழ்கி ஆனந்தக் கண்ணீர் ததும்ப நாக்குழறத் துதிக்கலானான்.

2022. "நாய் போன்ற அடியேனை வருத்தும் கொலைப் பாவத்தினின்றும், காப்பாற்றி தாய் போன்று தலையளி செய்து ஆட்கொண்டவனே! நின் திருவடிகட்கு வணக்கம்! சேய்மையில் உள்ள நானும் கண்டுகளிக்க சிவபுரத்தைக் காண்பித்தருளி, பின்னர் திருக்கோயிலில் என்னெதிரே நின்றருளிய கருணை மலையே! உன் திருவடிகட்கு வணக்கம்.

2023. மயங்கிச் செய்கின்ற வினை வழியே சென்று நரகில் ஆழாது அடியேனுக்கு அன்பினை அளித்தவனே! நின் திருவடிகட்கு வணக்கம். எழுவகைப்பட்டு நால்வகைத் தோற்றமாக வரும் பிறவிகள் அனைத்தும் பாழ்பட அடியேனைப் பணி கொண்டவனே! நின் திருவடிகட்கு வணக்கம்!

2024. வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கித்
திங்கட் குலக்களங்கந் தீர்த்தாய்நின் றாள்சரணம்
அங்கட் சிவபுரமுண் டன்புடையார்க் கென்பதையின்று
எங்கட்குக் காட்டி யிசைவித்தாய் தாள்சரணம்.

வேறு

2025. என்ன வேத்தியின் னருண்முகந் தீறிலா அன்பாற்
பின்னர் வேறுபல் பூசையும் பிறக்குவித் திருந்தான்
மன்ன ரேறடை யார்க்கொரு மடங்கலே றடல்வேல்
தென்னர் ஏறெனத் தோன்றிய வரகுண தேவன்.

2026. என்ற தென்மலை முனிவனை யிருடிக ணோக்கி
அன்று வாசவன் பழிகரி சாபமந் தணனைக்
கொன்று தாயொடுங் கூடிய கொடுவினை முதலாத்
துன்று பாவமு மதுரையில் தொலைத்தனன் அன்றோ.

2027. பரம னெண்குணன் பசுபதி வரகுணற் பற்றுமப்
பிரம வன்பழி யிடைமரு திடைவிட்டுப் பெயர
வரம ளித்தவா றென்னைகொல் வள்ளலே யிதனைத்
திரமு றப்புகல் எமக்கென முனிவர்கோன் செப்பும்.

2028. பூத நாயகன் சுந்தரன் புண்ணிய மூர்த்தி
யாத லாலன்ன தலத்துறை படியவர் அஞ்சிப்
பாதகஞ் செயா தொழுகுறூஉம் படிநினைந் தினைய
தீது றூஉம்பழி தனையிடை மருதினிற் றீர்த்தான்.

2024. "தீவினையுடைய என்னைக் கொடிய பழியிலிருந்து வேறுபடுத்திச் சந்திர குலத்திற்கு வந்த குற்றத்தைப் போக்கியவனே! நின் திருவடிகட்கு வணக்கம்! அன்புடையவர்களுக்கு அழகிய இடத்தையுடைய சிவலோகம் உண்டு என்று நூல் கூறுவதை இப்பொழுது அடியேனுக்குக் காட்டியருளியவனே! நின் திருவடிகட்கு வணக்கம்!"

2025. என்று பலவாறு, அரசர்களுள் ஆண் சிங்கம் போன்றவனும், பகைவர்களுக்கு இடியேறு போன்றவனும், வேற் படையை ஏந்திய பாண்டியர்களுள் ஏறு போன்றவனும் ஆன வரகுண பாண்டியன் துதித்தான். இனிய திருவருளை முகந்து கொண்டு, அன்பினால் சோமசுந்தரக் கடவுளுக்கு விசேட பூசை முதலியன செய்வித்துச் செங்கோலாச்சி வாழ்ந்து வந்தான்.

முனிவர்களின் ஐயம் தெளிவு படலம்

2026. என்று கூறியருளிய பொதிய மலையை உடைய அகத்திய முனிவனை முனிவர்கள் பார்த்து, "முன்பு சோமசுந்தரக் கடவுள் இந்திரன் பழியையும் வெள்ளை யானையினுடைய சாபத்தையும் மாபாதகம் செய்த அந்தணனுடைய பழியினையும் மதுரையிலேயே போக்கி யருளினார் அன்றோ?

2027. அங்ஙனம் தீர்த்தருளிய பரமனும், எட்டு குணங் களையும் உடைய சோமசுந்தரக் கடவுள், வரகுணனைப் பிடித்த பிரம்மகத்தியை மதுரையில் நீக்காது திருவிடை மருதூரிலே நீக்கியருளியமை என்னை? வள்ளலே! இதனை எங்களுக்கு ஐயம் தீரும் வண்ணம் கூறியருள வேண்டும்" என்று வேண்டினர். அகத்தியன் கூறத் தொடங்கினார்.

2028. "பூதநாயகரான சோமசுந்தரக் கடவுள் அற வடிவினன், ஆதலின், தமது மதுரைப் பதியில் வசிக்கும் அடியார்கள் பாதகம் செய்வதற்கு அஞ்சி நடக்க வேண்டியும், கெட்டுப் போகாது ஒழுக வேண்டியும் திருவுள்ளம் கொண்டு வரகுணனுடைய பழியினைத் திருவிடை மருதூரில் தீர்த்தருளினார்."

2029. என்ற கத்திய முனியிறை யிறைகொடுத் தியம்ப
நன்றெ னச்சிரம் பணித்து மெய்ஞ் ஞானவானந்தந்
துன்றி நற்றவர் சுந்தரச் சோதிசே வடிக்கீழ்
ஒன்று மற்புத ஆனந்த வுததியுட் குளித்தார்.

வேறு

2030. அன்னதனித் தொன்மதுரை யன்றுதொடுத் தின்றெல்லை
தன்னனைய தாயகில தலங்கள்சிகா மணியாகிப்
பொன்னகரின் வளஞ்சிறந்து பூவுலகிற் சிவலோகம்
என்னஇசை படப்பொலிந்தது ஏழிரண்டு புவனத்தும்.

வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் முற்றிற்று.

41. விறகு விற்ற படலம்

2031. நெடியவன் பிரமன் றேட நீண்டவன் றென்னற் கேழின்
முடியதாஞ் சிவலோ கத்தைக் காட்டிய முறையீ தையன்
படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகா ளாகி
அடிமையென் றடிமை கொண்ட அருட்டிறம் எடுத்துச் சொல்வாம்.

2032. மன்றலந் தெரியன் மார்பன் வரகுணன் செங்கோல் ஒச்சிப்
பொன்றலங் காவ லானிற் பொலியுநா ளேமநாதன்
என்றொரு விறல்யாழ்ப் பாணன் வடபுலத் திருந்தும் போந்து
வென்றிகொள் விருதினோடும் விஞ்சைசூழ் மதுரை சார்ந்தான்.

2029. என்று அகத்திய முனிவன் விடை கொடுத்தருளினார். நல்ல தவத்தினையுடைய முனிவர்கள் அப்பொழுது 'நன்று' என்று சிரமசைத்து, உண்மை அறிவு ஆனந்தத்தில் தோய்ந்து சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிக்கீழ்ப் பொருந்தும் பேரானந்தக் கடலில் மூழ்கி னார்கள்.

2030. அந்த ஒப்பற்ற மதுரைப்பதி அன்று முதல் இன்று வரையும் தனக்கு ஒப்பில்லாததாய், எல்லாத் தலங்கட்கும் ஒரு மணி முடியாய்த் தேவ உலகத்தினும் வளம் மிக்கதாய்ப் பதினான்கு உலகங்களினும் பூலோகம் என்று கூறப் புகழுடன் விளங்கியது.

வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம் முற்றிற்று.

41. விறகு விற்ற படலம்

2031. திருமாலும் பிரமனும் ஆகிய அவர்கட்குக் கிட்டாமல், வளர்ந்த சோமசுந்தரக் கடவுள் வரகுண பாண்டியனுக்கு ஏழுலகங்களுக்கும் முடியாய் உள்ள சிவலோகத்தைக் காட்டிய திருவிளையாடல் இதுவாகும். அவ்விறைவனே புவியின் மேல் விறகு சுமந்து விற்கும் ஆளாகி நடந்து பாணபத்திரனுக்கு அடிமையென்று கூறி அவனை கொண்டருளிய திருவருளின் திறத்தை எடுத்துக் கூறுவோம்.

ஏமநாதன் பாண்டியனால் சிறப்புப் பெறுதல்

2032. மணம் மிக்க அழகிய வேப்ப மலர்மாலையை அணிந்த வரகுண பாண்டியன், பொன்னுலகினைப் புரக்கும் தேவேந்திரனைப் போலச் சிறப்புடன் அரசு புரிந்து வரும் நாளில் 'ஏமநாதன்' என்னும் வெற்றியை யுடைய ஒரு யாழ்ப்பாணன் வடநாட்டினின்றும் வந்து வெற்றி விருதுகளோடு கல்வி மிக்க மதுரை நகரை அடைந்தான்.

2033. பூழியர் பெருமான் கோயில் புகுந்துவேத் தவையத்
தெய்திச்
சூழிமால் யானை யானைத் தொழுதுபல் புகழ்கொண்
டாடி
ஏழிசை மழலை வீணை யிடந்தழீஇச் சுருதி கூட்டி
வாழியின் னிசைத்தேன் மன்னன் அஞ்செவி வழியப்
பெய்தான்.

2034. முகையுடைந் தவிழ்ந்த மாலை முடித்தலை துளக்கித்
தூசு
பகலவிர் மணிப்பூ ணல்கிப் பல்லுணாக் கருவி நல்கி
அகன்மனை வேறு காட்டி யரசர்கோன் வரிசை செய்ய
இகலறு களிப்பி னோடு மிசைவல்லான் இல்லிற்
புக்கான்.

2035. மீனவன் வரிசை பெற்ற செருக்கினும் விருதி னானும்
மானமேல் கொண்டு தன்னோ டின்னிசை பாட வல்ல
தானயாழ்ப் புலவர் வேறிங் கில்லெனத் தருக்குஞ்
செய்தி
கோனறிந் துழையர்க் கூவிப் பத்திரற் கொணர்திர்
என்றான்.

2036. உழையரால் விடுக்கப் பட்ட பத்திர னுவரி வென்றோன்
கழல்பணிந் தருகு நிற்பக் கௌரியன் நோக்கிப் பாணி
பழகிசை வல்லா னோடும் பாடுதி கொல்லோ என்ன
மழலையாழ் இடந்தோ ளிட்ட பாணர்கோன் வணங்கிச்
சொல்வான்.

2033. அவன் பாண்டியர் தலைவனாகிய வரகுண பாண்டியனின் அரசவையை அடைந்து, வெற்றியுடைய பெரிய யானையையுடைய அவ்வரசனை வணங்கிப் பலவாறு புகழ்ந்து பாராட்டி, ஏழிசையுடைய மழலை போலும் இனிய யாழினை எடுத்து இடபால் தழுவிச் சுருதி கூட்டி இன்னிசையாகிய தேனை அரசனது அகஞ்செவி நிரம்பி வழியுமாறு பொழிந்தான்.

2034. முறுக்குடைந்து அவிழ்ந்த மாலையை அணிந்த முடியினையுடைய தலையினை அசைத்து மகிழ்ந்த மன்னர் மன்னனாகிய வரகுண பாண்டியன் ஏமநாதனுக்குப் பல ஆடைகளையும் அணிகலன்களையும் கொடுத்து, உணவிற்கு வேண்டிய பல பொருள்களையும் அளித்துத் தங்குவதற்கு ஒரு பெரிய வீடு காண்பித்துச் சிறப்பு செய்தான். இசையில் வல்ல ஏமநாதன் தனக்கு அமைந்த வீட்டிற்குச் சென்றான்.

ஏமநாதன் செருக்கைப் பாண்டியன் அறிதல்

2035. பாண்டியன் செய்த வரிசைகளைப் பெற்ற செருக்கினாலும், முன்பல அரசர்களிடம் பெற்ற விருதி னாலும் ஏமநாதன் பெருமை மிக்குத் தன்னோடு இனிய இசை பாடுவதற்கு வல்ல யாழ்ப்புலவர் இங்கு வேறு ஒருவரும் இல்லை என்று கருதி இறுமாப்புக் கொண்டான். இதனைப் பாண்டியன் அறிந்து ஏவலாளரை அழைத்து, "நமது பாணபத்திரனை அழைத்து வாருங்கள்" என்று ஏவினான்.

2036. அவ்வொற்றரால் அழைத்து வரப்பட்ட பாண பத்திரன் கடலை வென்ற பாண்டியன் அடிகளை வணங்கி, அருகில் நின்றான். அப்போது பாண்டியன் அப்பாண பத்திரனை நோக்கி, "நீ இசையில் வல்லவனாகிய ஏமநாத னோடும் பாடவல்லையோ?" என்று வினவினான், இனிய யாழை இடத் தோளில் இட்ட பாணர் தலைவன் வணங்கிக் கூறத் தொடங்கினான்.

2037. தென்னவர் பெரும யானுன் றிருவுள வலனுங் கூடல்
முன்னவன் அருளு மூட்டு முயற்சியான் முயன்று பாடி
அன்னவன் விருது வாங்கி யவனைவீ றழிப்ப
னென்றான்
மன்னவன் நாளைப் பாடு போகென வரைந்து
சொன்னான்.

2038. இற்கண்ணே யிசைவல் லான்போ யிருந்துழி
யனையான் பாங்கர்
கற்கும்பாண் மக்கண் மல்ல லாவணங் கவலை மன்றம்
பொற்குன்ற மனைய மாட மறுகெங்கும் போகிப்
போகிச்
சொற்குன்றா வகையாற் பாடித் திரிந்தனர் வீறு
தோன்ற.

2039. இவ்விசை கேட்டு நன்றென் றதிசயித் திசைவல்
லான்பால்
வவ்விசை மைந்தர் பாடும் வண்ணம் ஈதென்னை
கெட்டேன்
அவ்விசை வல்லான் பாடு முறைஎற்றோ அவனை
நாளைச்
செவ்விசை பாடி வெல்வ தெவனெனத் திவவுக்
கோலான்.

2040. மையணி மிடற்றி னானை மதுரைநா யகனை வந்தித்
தையனே யடியேற் கின்றுன் அருட்டுணை செய்யல்
வேண்டும்
மெய்யனே யென்று போற்றி வேண்டுகொண் டன்பு
தோய்ந்த
பொய்யறு மனத்தா னில்லம் புக்கினி திருந்தா
னிப்பால்

பாண்டியனும் பாணபத்திரனும்

2037. "பாண்டியர் பெருமானே! அடியேன் உனது திருவுள்ளக்கருத்தின் வலிமையும், கூடலில் வீற்றிருக்கும் முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளும் கூட்டும் முயற்சியால், நெறியே சென்று பாடி அந்த ஏம நாதன் விருதுகளை வாங்கி அவன் செருக்கினையும் ஒழிப்பேன்" என்று கூறினான். மன்னன், "நாளை வந்து அவனோடு பாடுக. இன்று போகக் கடவை." என்று காலம் வரையறுத்துக் கூறினான்.

2038. இசையில் வல்ல பாணபத்திரன் மன்னனை வணங்கித் தன் வீட்டிற்குச் சென்று இருந்தபொழுது, ஏம நாதனிடம் இசை கற்கின்ற மாணவர்கள் வளம்மிக்க கடை வீதி, பொன்மலையொத்த மாடங்களையுடைய வீதி, ஆகிய எவ்விடத்தும் சென்று சென்று மாத்திரை குன்றாவகையில் இசைபாடிக் கொண்டு வீறு தோன்றத் திரிந்து கொண்டிருந்தனர்.

2039. நரம்பின் கட்டமைந்த வீணையால் வல்ல பாண பத்திரன இந்த இசையினைக் கேட்டு, 'நன்று' என்று வியந்து, "ஏமநாதனிடம் இசைகற்கின்ற மாணவர் இசை பாடும் தன்மை இது; ஏமநாதன் பாடும் முறை எத்தன்மையதோ? நான் நாளைக்கு இசைபாடி வெல்வது எப்படி? ஆ! கெட்டேன்!" என்று கருதினான்.

இறைவனிடம் முறையிடல்

2040. வருத்தம் அடைந்த அவன் திருக்கோயிலை அடைந்தான். அங்கு எழுந்தருளி இருக்கும் கரிய அழகிய திருமிடற்றினையுடைய சோமசுந்தரக்கடவுளை வணங்கி, "ஐயனே! அடியேனுக்கு இப்பொழுது நினது திருவருளாகிய துணையை அளித்தல் வேண்டும். உண்மை வடிவான வனே!" என்று போற்றி வணங்கிக்கொண்டு அன்பில் மூழ்கிய பொய்யற்ற உள்ளமுடைய பாணபத்திரன் தன் இல்லத்தை அடைந்து கவலையின்றி இருந்தான்.

வேறு

2041. வருத்த னாகிவந் திரந்தவன் இசைப்பகை மாற்ற
விருத்த னாம்விற காளென விண்ணிழி விமானத்
தொருத்த னாரறி வாகிய வுண்மையா னந்தத்
திருத்த னார்தம திச்சையாற் றிருவுருக் கொள்வார்

2042. அழுக்கு மூழ்கிய சிதரசைத் தவிர்சடை யமுதம்
ஒழுக்கு வான்மதி வாங்கியே செருகிய தொப்ப
மழுக்கு கூனல்வெள் வாய்க்குயம் வலம்படச் செருகி
இழுக்கு தேய்செருப் பருமறை கடந்ததாள் ஏற்றி.

2043. பழைய தோர்பொல்லம் பொத்திய பத்தர்யாழ்க்
கோல்தோள்
உழைய தாகிவிட் டெருத்தலைத் தூசலா டியவொண்
குழைய காதினிற் களவிணர்க் குறியகாய் தூக்கித்
தழையும் வார்சிகை சரிந்திடச் சுமையடை தாங்கி.

2044. தறிந்த விந்தனந் தினந்தொறுந் தாங்கிநீள் பங்கி
பறிந்து தேய்ந்தழுந் தியதலை யுடையராய்ப் பரிந்து
மறிந்த கங்கையும் பங்குறை மங்கையுங் காணா
தெறிந்த விந்தனச் சுமைதிரு முடியின்மேல் ஏற்றி.

விறகாளாய் இறைவன் வருதல்

2041. பின்பு உண்மை அறிவு ஆனந்த வடிவாகிய வரும் விண்ணின்றி இழிந்த இந்திரவிமானத்தில் எழுந்தருளியவருமான ஒப்பற்ற சோமசுந்தரக் கடவுள், தன்னை வருத்தத்துடன் வந்தடைந்து குறையிரந்த பாணபத்திரனது இசையில் வல்ல பகைவனை ஓட்டத் திருவுள்ளம் கொண்டு வயது முதிர்ந்து இளைத்த விறகு ஆளைப் போலத் தமது இச்சையாலே திருமேனி கொள்வராயினார்.

2042. அப்போது இடையினில் அழுக்கு நிறைந்த கந்தையை உடுத்தி, வலப்புறத்தில் சடையிலிருந்து அமுதத்தினைப் பொழிகின்ற வெண் பிறையினைச் செருகியது போல, மழுங்கி வளைந்த வெள்ளிய கொடுவாளைச் செருகி வேத முடியைக் கடந்த திருவடிகளில் இழுத்துத் தேய்ந்த செருப்பினை மாட்டி,

2043. பழைய தைக்கப்பட்ட உறையில் இட்ட யாழைத் தண்டுடன் தோளில் தொங்க விட்டு, பிடரியில் அலைந்து ஊசலாடும் குண்டலமணிந்த திருச் செவிகளில் களாவின் சிறிய காயினைத் தொங்க விட்டுத் தழைத்து நீண்ட சிகை சரிந்திடச் சும்மாடு தாங்கி எழுந்தருளினார்.

2044. அப்பெருமானார் நாடோறும் முறியுண்ட விறகினைச் சுமந்து நீண்ட உரோமம் சுழியப்பட்டுத் தேய்ந்த பள்ளமாகிய தலையினையுடையவராய், முடியில் மடங்கிய கங்கையும், இடப்பாகத்தில் உறையும் உமையம்மையும், வெளியில் மற்றவரும், காணாமல், வெட்டிய விறகினைத் தலை மேல் ஏற்றிச் சுமப்பவரானார்.

2045. என்பு தோன்றியூன் இன்றியே யிளைத்தபாக் கையராய்
அன்பு தோன்றியே கண்டவ ரகங்கனிந் திரங்க
வன்பு தோன்றிய மனமொழி கடந்ததாண் மலர்பார்
முன்பு தோன்றிய தவத்தினான் முடிமிசைச் சூட.

2046. திருமு கத்துவேர் வரும்பவாய் குவிந்தொலி செய்ய
வருவர் கற்சுமை தாங்கிமேற் சார்த்துவர் மடுநீர்
பருகு வாரெடுப் பார்தலை வெம்மைவேர் பறிய
இருகை யாலடிக் கடியெடுத்து ஏந்தியூர் புகுவார்.

2047. நடந்து கொள்ளுநர்க் கறாவிலை பகர்ந்துநான் மாடம்
மிடைந்த வீதியுங் கவலையு முடுக்கரு மிடைந்து
தொடர்ந்த வேதமும் பிரமன்மால் சூழ்ச்சியும் பகலுங்
கடந்து போகியவ் விசைவலான் கடைத்தலைச்
செல்வார்.

2048. வரவு நேர்ந்தழைப் பவரென ஆம்பல்வாய் மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிர்த்
துணைவன்
பிரிவுக நோக்கினார் எனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகடல் நீந்த.

2015. எலும்புகள் வெளிப்பட்டுத் தசை சிறிதும் இன்றி இளைத்த உடம்பினைக் கொண்டவராய் வரலானார். பார்த்தவர்கள் அன்பு கொண்டு மனம் கனிந்து இரங்க, மனமொழி கடந்த திருவடிகளை நிலமகள் முன்னர் செய்த தவப் பயனால் முடியின் மிசை தாங்க வரலானார்.

2016. திருமுகத்தில் வேர்வை அரும்ப, திருவாய் குவித்துச் சோர்விற்குரிய ஒலி உண்டாக்க வரலானார். கல்லாகிய சுமைதாங்கியின் மேல், சுமையினைத் தாங்கலாற் றாதவர் போல் சார்த்துவார். மடுவில் உள்ள நீரைக் குடிப்பார். மீண்டும் சுமையினை எடுத்துத் திருமுடியில் வைப்பார். தலையில் விறகினைத் தங்குவதால் ஏற்படும் வெப்பத்தாலாகிய வேர்வை நீங்க இரு கைகளாலும் அடிக்கடி சுமையை மேலே எடுத்து ஏந்தி மதுரை நகருக்குள் புகுவாராயினார்.

விறகாளாகிய இறைவன் ஏமநாதன் தலைவாசலை அடைதல்

2017. விறகு ஆளாய் வந்த இறைவர், வாங்குபவர் களுக்கு மிக்க விலையினைச் சொல்லி மாடங்கள் நெருங்கிய வீதிகளையும், இரண்டு தெருக்கள் கூடுமிடங் களையும் சிறிய தெருக்களையும் நெருங்கிய பின்பற்றிய மறையையும் திருமால், பிரமன் இவர்களின் சூழ்ச்சிகளை யும், பகற்பொழுதையும் கடந்து சென்று ஏமநாதன் கடை வாயிலின் கண்செல்வாராயினர்.

மாலைக்கால வர்ணன்

2018. அப்பொழுது உயிர் போன்ற தம் காதலரின் வருகையை நோக்கி அழைப்பவர் போல ஆம்பல் வாய் மலர, இரவினைத் தோற்றுவித்து திங்கள் புன்முறுவல் தோன்ற எழுந்தது. உயிர்த் துணைவரின் பிரிவினைக் கண்ட மகளிர் கண்ணீர் உகுத்து முகம் வாடுதல் போலத் தாமரை மலர்கள் குவிந்தன. கதிரவன் மேற்குக் கடலில் நீந்திச் சென்றான்.

2049. பறவை வாயடைத் தருகணை பார்ப்பொடும் பெடையைச்
சிறக ராலணைத் திரும்பொழிற் குடம்பையுட் செறிய
நறவ வாய்ப்பெடை யுண்டதே ணக்கிவண் டோடைப்
பொறைகொ டாமரைப் பள்ளியுட் புகுந்துகண் படுக்க.

2050. புல்லென் நீள்நிலைக் குரங்கினம் பொதும்பர்புக் குறங்க
முல்லை யாய்மகா ருய்த்தரக் கன்றுள்ளி முந்திக்
கொல்லை யானிரை மனைதொறுங் குறுகிடச் சிறுபுன்
கல்வி மாணவச் சிறார்பயில் கணக்கொலி யடங்க.

2051. புனைந்த ஆழ் கடற் கரும்படா முடம்பெலாம் போர்த்து
வனைந்த பூண்முலை நிலமகள் துயில்வது மானக்
கனைந்த காரிருண் மெல்லெனக் கவிதரப் பிரிவால்
இனைந்த காதலர் நெஞ்சில்வேள் எரிகணை நாட்ட.

2052. திங்கள் வாணுதன் முயற்கறைத் திலகமுஞ் சிவந்த
மங்கு லாடையு மயங்கிருள் ஓதியும் வான்மீன்
பொங்கு மாரமும் பொலிந்துதன் கொண்கனைப் பொருப்பன்
மங்கை தேடிவந் தாளென வந்தது மாலை.

2049. ஆண் பறவைகள் வாய்திறந்து ஒலிக்காமல் தன்னருகு வந்து அணையும் குஞ்சுகளையும், பெட்டை களையும் சிறகினால் அணைத்துப் பெரிய பொழில்களில் உள்ள தங்கள் கூடுகளில் அடங்கின. தேனை உண்ட பெண் வண்டின் வாயில் உள்ள தேனை ஆண் வண்டுகள் நக்கி, ஓடையில் உள்ள தாமரையாகிய படுக்கையுள் புகுந்து உறங்கும்.

2050. பொலிவற்ற தன்மையுடைய குரங்குக் கூட்டங்கள் சோலைகளை அடைந்து துயின்றன. முல்லை நிலத்திலுள் ஆயச் சிறுவர்கள் நடத்திச் செல்லும் பசுவின் கூட்டங்கள் கன்றுகளை நினைந்து வீடுகள் தோறும் முற்பட்டுச் சென்றன. ஆரம்பக் கல்வி பயிலும் மாணவச் சிறுவர்கள் தமிழ் நெடுங்கணக்கை முறை வைத்து ஓதும் ஒலி அடங்கியது.

2051. அரம்பூண்ட தனங்களையுடைய நிலமடைந்தை, தான் இடையில் உடுத்திருந்த கடலாகிய கரிய ஆடையை உடல் முழுவதும் போர்த்து உறங்குவது போலக் கரிய இருள் மெல்லென வந்து உலகினைக் கவிந்தது. பிரிவினால் வருந்திய காதலர்களின் நெஞ்சில் மன்மதன் மலர்க் கணைகளை நாட்டினான்.

2052. மலையரையன் புதல்வியாகிய உமாதேவியார், திங்களாகிய ஒளி பொருந்திய நெற்றியில் முயற்களங்க மாகிய பொட்டும், செவ்வானமாகிய ஆடையும், மயங்கிய இருளாகிய கூந்தலும் விண்மீன்கள்ாகிய விளங்குகின்ற ஆரமும் ஆகிய இவற்றால் பொலிவுற்றுத் தனது நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளைத் தேடி வந்தாள் என்னும்படி மாலைப் பொழுது வந்தது.

2053. எடுத்த விந்தன மொருபுறத் திறக்கியிட் டுன்றி
அடுத்த வன்புறந் திண்ணைமீ தமர்ந்திளைப் பாறித்
தொடுத்த வின்னிசை சிறிதெழீஇப் பாடினார் சுருதி
மடுத்தி யாரவன் பாடுவான் என்றிசை வல்லான்.

வேறு

2054. வண்டறை கொன்றை யான்முன் வந்துநீ யாரை யென்றான்
பண்டரு விபஞ்சி பாண பாத்திரன் அடிமை யென்றான்
முண்டக மலரோன் மாயோன் புரந்தரன் முதன்மற் றேனை
அண்டருந் தன்குற் றேவ லடிமையாக் கொண்ட வம்மான்.

2055. கனியிசைக் கிழவன் றன்கீழ்க் கற்பவர் அனேகர் தம்முள்
நனியிசைக் கிழமை வேட்டு நானுமவ் வினைஞு னானேன்
தனியிசைக் கிழவ னோக்கித் தலையெலா மொடுங்க மூத்தாய்
இனியிசைக் கிழமைக் காகா யென்றெனைத் தள்ளி விட்டான்.

2056. வெவ்விற கெறிந்து கட்டி விலைபகர்ந் தேனும் ஐய
இவ்வயி றோம்பு கேனென் றித்தொழில் பூண்டே னென்ன
நைவளந் தெரிந்த ஏம நாதனும் விறகு மள்ளா
அவ்விசை யொருகா லின்னும் பாடென வையன் பாடும்.

ஏமநாதனும் இறைவனும்

2053. விறகாளாய் வந்த சோமசுந்தரக் கடவுள் தாம் சுமந்து வந்த விறகுக் கட்டை ஒரு புறத்தில் ஊன்றி இறக்கி வைத்து, வந்தவனாகிய ஏமநாதனது வெளித்திண்ணையில் மேல் அமர்ந்து இளைப்பாறி இனிமையுடைய இசையைச் சிறிது எழுப்பிப் பாடினார். இசையில் வல்ல ஏமநாதன் அவ்விசையைக் கேட்டு 'பாடுகின்றவன் யாவன்'? என்று கருதினான்.

2054. வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மாலையணிந்த இறைவன் திருமுன் வந்து நின்று, "நீ யாவன்?" என்று வினவினான். தாமரை மலரில் உள்ள பிரமனும். திருமாலும், இந்திரன் முதலிய ஏனைய தேவர்களும் ஆகிய இவர்களைத் தனது குற்றேவல் செய்யும் அடிமைகளாகக் கொண்ட இறைவன், "பண்ணமைந்த யாழ் வல்லோனாகிய பாணபத்திரனின் அடிமை நான்" என்று கூறினான்.

2055. "சுவை கனிந்த இசைவல்ல அப்பாணபத்திரனிடத்து இசை கற்கும் மாணவர் பலருள், இசை கற்பதற்கு மிக விரும்பி நானும் அவர்களுள் ஒருவனாய் இசை கற்கும் தொழிலையுடையவனானேன். ஒப்பற்ற இசைக்குரிய அப்பாணபத்திரன் என்னைப் பார்த்து, "நீ தசையெல்லாம் சுருங்க, வயதிலே மிக முதிர்ந்து விட்டாய். இனிமேல் நீ இசையினைக் கற்கத் தகுதியற்றவன் ஆயினை" என்று என்னை நீக்கி விட்டான்.

2056. ஆதலால், "ஐயனே! உலர்ந்த விறகினை வெட்டிக் கட்டி விற்றாயினும் வயிறு வளர்க்கலாம் என்று கருதி இத் தொழிலைப் பூண்டேன்" என்றான். இசை நூலில் வல்ல அவ் ஏம நாதனும் விறகாளை நோக்கி, "விறகு விற்கும் மன்னனே! நீ பாடிய அந்த இசையை இன்னும் ஒரு முறை பாடுக" என்று கூறினான்.

2057. குண்டுநீர் வறந்திட் டன்ன நெடுங்கொடிக் குறுங்காய்ப் பத்தர்த்
தண்டுநீ ணிறத்த நல்யா ழிடந்தழீஇத் தெறித்துத் தாக்கிக்
கண்டுமா டகந்தி ரித்துக் கௌவிய திவவிற் பாவ
விண்டுதேன் ஒழுகிற் றென்ன வீக்கிமென் சுருதி கூட்டி.

2058. விசையொடு தானந் தோறும் விரல்நடந் தூச லாட
இசைமுத லேழிற் பல்வே றின்னிசை யெழுஞ்சா தாரி
அசையொடு வீதிப் போக்கு முடுகிய லராகம் யார்க்கும்
நசைதரு நரம்பு கண்டம் ஒற்றுமை நயங்கொண்டு ஆர்ப்ப.

2059. வயிறது குழிய வாங்கல் அழுமுகங் காட்டல் வாங்குஞ்
செயிரறு புருவ மேறல் சிரநடுக் குறல்கண் ணாடல்
பயிரரு மிடறு வீங்கல் பையென வாயங் காத்தல்
எயிறது காட்ட லின்ன வுடற்றொழிற் குற்ற மென்ப.

2060. வெள்ளைகா குளிகீ ழோசை வெடிகுர னாசி யின்ன
எள்ளிய வெழாலின் குற்றம் எறிந்துநின் றிரட்ட லெல்லை
தள்ளிய கழிபோக் கோசை யிழைத்தனெட் டுயிர்ப்புத் தள்ளித்
துள்ளலென் றின்ன பாடற் றொழிற்குற்றம் பிறவுந் தீர்ந்தே.

இறைவன் யாழினை வாசித்தல்

2057. விறகாளாக வந்த ஐயன், மடுவின் நீர் வறந்தாற் போன்ற நீண்ட சுரைக் கொடியில் இருந்து எடுக்கப் பெற்ற உள்ளீடும் நீரும் வற்றிய குண்டான சிறிய சுரைக்காயாகிய பத்தர் அமைந்த கோட்டினையும், மிக்க நிறத்தினையுடைய நல்ல யாழினை இடத்தோளில் சாத்தி நரம்பைத் தெரிந்து தாக்கிப் பண்ணை எழுப்பிப் பார்த்து, முறுக்காணியைச் சுழற்றி, வார்க்கட்டில் கவ்வும்படி நரம்பைப் பிணித்து இறாலிலிருந்து தேனொழுகுற்றாற் போலப் பரவும்படி மென்மையாகச் சுருதியை எழுப்பினார்.

2058. சுரங்கள் எழும் தானங்கள் தோறும் விசையுடன் விரல் சென்று போக்குவரவு செய்ய, ஏழிசைகளுக்கும் முதலாய் உள்ள ஏழு சுரங்களில் பல்வேறு வகைப்பட்ட இனிய இசைகளில் ஒன்றாய் எழும் 'சாதாரிப் பண்ணினை' அசையும் விதிப் போக்கும் வண்ணமும் திறமும் ஆகிய இவற்றால் எவர்க்கும் விருப்பம் தரும் நரம்பின் ஒலியும் மிடற்றின் ஒலியும் தம்முள் வேறின்றி ஒலிக்கப் பாடினான்.

2059. பாடும் பொழுது, வயிறு குழிபட மேல் வாங்குதலும் அழுமுகம் காட்டுதலும், வளைந்த குற்றமற்ற புருவம், நெற்றியேறுதலும், தலை அசைதலும், கண் ஆடுதலும், பாடுகின்ற அரிய மிடறு வீங்குதலும், பையைப் போல் வாய் திறத்தலும், பற்களைக் காட்டுதலும் இவை போல்வன பிறவுமாகிய உடலில் உண்டாகும் தொழில் குற்றங்களும்,

2060. நிறமற்ற வெள்ளோசையும், இன்னா ஓசையும், கீழோசையும், வெடித்த குரலும், மூக்கோசையும் இவை போல்வன வாகிய இசை நூலார் விலக்கிய மிடற்றோசையின் குற்றங்களும் ஒரு பண்ணைப் பாடும் போது வேறொரு பண்ணிலே விலகி நின்று ஒலித்தலும், அளவு கடந்த ஓரோசை நீங்கிப் பலவோசையாய் வருதலும், காகம் கத்தினாற் போலக் கத்தி ஓசை புரிதலும், பெருமூச்செறிந்து துள்ளலும் ஆகிய பாடுந் தொழிற் குற்றங்களும், பிற குற்றங்களும் இன்றிப் பாடினார்.

2061. எழுதுசித் திரம்போன் மன்னி யிழுமெனும் அருவி யோதை
முழவொலி கஞ்ச நாதம் வலம்புரி முரலு மோசை
கொழுதிசை வண்டின் தாரி யெனவிசைக் குணனும் வேரல்
விழுமிலை சிரல்மீன் மேல்வீழ் வீழ்ச்சிபோற் பாடற் பண்பும்.

2062. பொருந்தமந் தரத்தினோடு மத்திமந் தாரம் போக்கித்
திருந்திய துள்ள றூங்கன் மெலிவது சிறப்பச் செய்து
மருந்தன செய்யுள் ஓசை யிசையோசை வழாமல் யார்க்கும்
விருந்தெனச் செவியின் மாந்தப் பாடினார் வேதகீதர்.

வேறு

2063. விரைசார் மலரோன் அறியா விகிர்தன்
அரசாய் மதுரை யமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை யமர்ந்தா னவனென்
புரைசார் மனனும் புகுந்த னென்னே.

2064. பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டான் என்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா வமர்ந்தா னென்னே.

2065. நீல வண்ணன் றேறா நிமலன்
ஆல வாயில் அமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே.

2061. குற்றங்கள் இன்றிப் பாடும் காலத்து எழுதிய ஓவியம் போல் அசைவற்று இருந்து, இடையறாது வீழும் இழும் என்று ஒலிக்கும் அருவியின் ஓசை, முழவின் ஓசை, வண்டுகளின் ரீங்கார ஒலி, மிடற்றோசையின் குணங்களும், மூங்கிலினின்று விழும் இலையின் வீழ்ச்சி, மீன்கொத்திப் பறவையானது மீனின் மேல் விழுகின்ற வீழ்ச்சி ஆகிய இவை போன்ற பாடற் குணங்களும்,

2062. தோன்றும்படி படுத்தல், நலிதல், எடுத்தல் முதலிய ஓசைகளில் துள்ளல், தூங்கல், மெலிதல் என்னும் இசைகள் சிறக்கச் செய்து, அமுதம் போன்ற பாடலின் ஓசையும், இசையின் ஓசையும் வழுவாது யாவருக்கும் விருந்து என்னும்படி அவர்கள் காதினால் பருக, சாமகான ராகிய இறைவர் பாடியருளினார்.

2063. "மணம் பொருந்திய தாமரை மலரில் இருக்கும் பிரமனால் அறியப்படாத பெருமான் பாண்டிய மன்னனாக மதுரையில் வீற்றிருந்தான். இது என்னே? அங்ஙனம் அரசராய் மதுரையில் அமர்ந்த அவ்விறைவனே, என் குற்றமுடைய உள்ளத்திலும் குடிபுகுந்தான். இஃது என்னே!

2064. வேதமும் தெளிந்துணராத இறைவன், கூடலின் திருக்கோயிலில் எழுந்தருளினான். இது என்னே! அக்கூடலில் எழுந்தருளியது போல கொடியேனது உள்ளத்திலும் ஆடல் அரங்காய் (எண்ணி) அமர்ந்தான். இஃது என்னே!

2065. நீலநிறமுடைய திருமாலும் அறியப்படாத இறைவன் திருவாலவாயின்கண் வீற்றிருந்தான். இது என்னே! அவ்வாறு ஆலவாயில் அமர்ந்த அவ்விறைவன் மலரின் மணம் போல உள்ளத்தின் கண்ணும் புகுந்தான், இஃது என்னே!

வேறு

2066. பாணர்தம் பிரானைக் காப்பான் பருந்தோடு நிழல்போக்
கென்ன
யாணரம் பிசைபின் செல்ல விசைத்தவின் னிசைத்தே
னண்ட
வாணர்தஞ் செவிக்கால் ஓடி மயிர்த்துளை வழியத்
தேக்கி
யாணரின் னமுத யாக்கை யிசைமய மாக்கிற் றன்றே.

2067. தருக்களுஞ் சலியா முந்நீர்ச் சலதியுங் கலியா நீண்ட
பொருப்பிழி யருவிக் காலு நதிகளும் புரண்டு துள்ளா
அருட்கடல் விளைத்த கீத வின்னிசை யமுத மாந்தி
மருட்கெட அறிவன் றீட்டி வைத்தசித் திரமே யொத்த.

2068. வீணைகை வழுக்கிச் சோர்வார் சிலர்சிலர் விரல்ந
டாத்தும்
யாணரம் பெழாலுங் கண்டத் தெழாலும்வே றாக
வேர்ப்பார்
நாணமோ டுவகை தள்ள நாத்தலை நடுங்கித் தங்கள்
மாணிழை யவர்மேல் வீழ்வார் விஞ்சையர் மயங்கிச்
சில்லோர்.

2069. போதுளான் பரமன் பாதப் போதுளான் ஆனான்
வேலை
மீதுளான் பரமா னந்த வேலைமீ துள்ளா னானான்
தாதுளாங் கமலக் கண்போற் சதமக னுடல மெல்லாங்
காதுளா னல்லே னென்றான் கண்ணுளான் கானங்
கேட்டு.

2066. பாணர்களின் தலைவனாகிய பாண பத்திரனைக் காக்கும் பொருட்டு, பருந்தினோடு அதன் நிழல் செல்லுதல் போல வீணை நரம்பில் எழும் இசை பின் தொடரப் பாடியருளிய, இனிய இசைத்தேன் தேவர்களின் செவியாகிய கால்வாய் வழியாக ஓடி உரோமத் துவாரத்தில் வழியும்படி நிரம்பி அமுதமாகிய அவர்களின் உடல்களை இசை மயமாகச் செய்தது.

2067. அவ்விசையினைக் கேட்டவளவில் மரங்களும் அசையவில்லை. மூன்று நீரினையுடைய கடல்களும் ஒலிக்க வில்லை. உயர்ந்த மலையிலிருந்து விழும் அருவிகளும் ஆறுகளும் புரண்டு துள்ளவில்லை. அருட்கடலாகிய இறைவன் பாடியருளிய இன்னிசை கீதமாகிய அமுதத்தைப் பருகிய அவை தீட்டி வைத்த சித்திரமே போலாயின.

2068. இறைவனின் தேவகானத்தைக் கேட்ட விஞ்சை யர்களில் சிலர் வீணையானது கையினின்று விழச் சோர்வர். வேறு சிலர் தம் விரலால் வருடி எழுப்பப்படும் யாழ் நரம்பின் இசையும் மிடற்றினது இசையும் வேறாகுமாறு வியர்த்து நிற்பர். வேறு சிலர் நாணம் ஒரு பாலும் மகிழ்ச்சி ஒருபாலும் தள்ள நாக்கு நடுங்க மதிமயங்கித் தத்தம் மனைவியர் மேல் வீழ்வர்.

2069. நுதற் கண்ணுடைய சிவபெருமானுடைய தேவ கானத்தைக் கேட்டுத் தாமரை மலரில் இருக்கும் பிரமன் அவ்விறைவனுடைய திருவடித் தாமரையின் கீழ் உள்ளவனானான். பாற்கடலின் மேல் அறிதுயில் கொள்ளும் திருமால் பேரின்பக் கடலில் உள்ளவனானான். இந்திரன், "எனக்கு கிடைத்த கண்ணினைப்போல உடல் முழுவதும் செவிகள் பெற்றிலனே" என்று வருந்தலானா னான்.

2070. முனிவருந் தவத்த ராதி முத்தர்மா சித்தர் அன்பன்
துனிவரும் பழங்கண் டீர்ப்பான் சுந்தரத் தோன்றல் கீதங்
கனிவருங் கருணை யென்னுங் கடலிலன் பென்னு மாற்றிற்
பனிவருங் கண்ணீர் வெள்ளம் பாய்ந்திட இன்பத் தாழ்ந்தார்.

2071. ஊடிவே றோதுங்கித் துன்ப வுவரியுட் குளிர்த்தார் தம்மிற்
கூடிவே றற்ற வின்பக் குளிர்கடல் வெள்ளத் தாழ்ந்தார்
நாடிவே றிடைப்பி ரிந்தார் மேன்மன நடாத்தி மேனி
வாடிவேள் அலைப்பச் சோர்ந்து மம்மர்நோ யுழந்தார் மண்ணோர்.

2072. பைத்தலை விடவாய் நாகம் பல்பொறி மஞ்ஞை நால்வாய்
மத்தமான் அரிமான் புல்வாய் வல்லிய மருட்கை யெய்தித்
தத்தமா றறியா வாகித் தலைத்தலை மயங்கிச் சோர
இத்தகை மாவும் புள்ளு மிசைவலைப் பட்ட வம்மா.

2073. வன்றரை கிழிய வீழ்போய் வான்சினை கரிந்து நின்ற
ஒன்றறி மரங்கள் எல்லாஞ் செவியறி வுடைய வாகி
மென்றளி ரீன்றுபோது விரிந்து கண் ணீருஞ் சோர
நன்றறி மாந்தர் போல நகைமுக மலர்ந்த மாதோ.

2070. விருப்பு வெறுப்பற்ற முனிவர்களும், அருந்தவம் புரிபவரும், சீவன் முக்தரும் பெரிய சித்தரும் பாண பத்திரனது துன்பத்தையும் அதனால் வரும் மெலிவையும் நீக்குபவராகிய சோமசுந்தரக் கடவுளின் இசையாகக் கனிந்த கருணைக் கடலில் அன்பாகிய ஆற்றோடும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளம் பாய இன்பத்தில் ஆழ்ந்தனர்.

2071. மண் உலகில் உள்ளவர்களும் ஊடல் காரணமாக வேறாக ஒதுங்கித் துன்பக் கடலுள் மூழ்கிய மகளிர் தாமாகவே தலைவர்களைக் கூடி வேற்றுமை யில்லாத இன்பக் கடலிலே ஆழ்ந்தனர். மகளிர் பொருள் முதலியவற்றை நாடி மறுபுலத்துப் பிரிந்து சென்ற தம் கணவர் மேல் மனத்தைச் செலுத்தி, மன்மதன் வருத்தம் செய்யும் காம நோயால் உடல் வாடி உள்ளம் சோர்ந்து வருநதினர்.

2072. படத்தையுடைய தலையும் நஞ்சுடைய வாயும் பொருந்திய பாம்புகளும், பல பொறிகளையுடை மயில்களும், தொங்கும் வாயும் மதமயக்கத்தையுமுடைய யானைகளும், சிங்கங்களும், மான்களும், புலிகளும் இங்ஙனம் ஒன்றுக்கொன்று பகையையுடைய ஏனைய விலங்குகளும் பறவைகளும் இசையால் மயங்கித் தத்தம் பகையை அறியாதனவாய் ஆங்காங்கு ஒன்றோடொன்று கலந்து சேர்ந்து இசையாகிய வலையிற் பட்டன.

2073. வலிய நிலம் பிளக்குமாறு விழுது வீழ்த்திப் பெரிய கிளைகள் உலர்ந்து நின்ற ஊறு என்னும் ஓரறி வுடைய மரங்களெல்லாம் செவியறிவு பெற்று மெல்லிய தளிரினை ஈன்று பூக்கள் மலர்ந்து கண்ணீர் (கள் + நீர்) பொழிய தமக்கு உறுதியான மக்களைப் போல நகையோடு முகமலர்ந்தன.

2074. வாழிய வுலகின் வானோர் மனிதர்புள் விலங்கு மற்றும்
ஆழிய கரணம் எல்லா மசைவற வடங்க வையன்
ஏழிசை மயமே யாகி யிருந்தன வுணர்ந்தோ ருள்ளம்
ஊழியி லொருவன் றாள்புக் கொடுங்கிய தன்மை
யொத்த.

2075. கண்ணிறை நுதலோன் சாம கண்டத்தின் எழுந்த
முல்லைப்
பண்ணிறை தேவ கீதஞ் சராசர வுயிரும் பாரும்
விண்ணிறை திசைக ளெட்டும் விழுங்கித்தன்
மயமேயாக்கி
உண்ணிறை யுயிரு மெய்யு முருக்கிய திசைவல்
லானை.

வேறு

2076. சிந்தை தோயுமைம் பொறிகளுஞ் செவிகளாப் புலன்கள்
ஐந்து மோசையா விசைவலா னிருந்தன னாகப்
பந்த நான்மறை நாவினாற் பத்திரன் ஆளாய்
வந்து பாடினா ரிந்தனச் சுமையொடு மறைந்தார்.

2077. யான றிந்தசா தாரியன் றிம்பருள் இதனை
நான றிந்ததென் றொருவரு நவின்றிலர் தேவ
கான மீதிவற் குணர்த்தினோன் கடவுளே யன்றி
ஏனை மானுடர் வல்லரோ இதுவியப் பென்னா.

2074. இவ்வாறு வானுலகிலுள்ள தேவர்களும், மனிதர்களும் பறவையும் விலங்கும் இசையில் பதிந்த மன முதலிய காரணங்கள் அனைத்தும் அசைவின்றி அடங்க இறைவர் பாடிய ஏழிசை மயமே ஆகி இருந்தன. அது மெய்யுணர்ந்தோரின் உள்ளம் இறுதியில்லாத ஒருவனாகிய இறைவன் திருவடியின் கண் ஒடுங்கிய தன்மையை ஒத்தது.

2075. நெற்றிக் கண்ணுடைய சோமசுந்தரக் கடவுளின் சாமவேதம் பாடும் திருமிடற்றினின்றும் எழுந்த சாதாரிப் பணணாகிய தேவகானம் அசையும் பொருள்களையும், அசையாப் பொருள்களையம் நிலவுலகத்தையும், விண்ணுலகத்தையும், நின்ற எட்டுத் திசை திக்குகளையும் விழுங்கித் தன் மயமாகவே, செய்து இசையில் வல்ல ஏம நாதனுடைய உள்ளத்தையும், உயிரையும், உடலையும் உருக்கியது.

2076. மனத்துடன் பொருந்தும் ஐம்பொறிகளும் செவிகளாகவும், ஓசையாகவும் இசையில் வல்ல ஏமநாதன் மயங்கி இருந்தான். பந்தம் முதலிய உறுப்புகளையுடைய நான்மறைகளைக் கூறியருளிய நாவினால் பாணபத்திரன் அடிமையாக வந்து பாடியருளிய இறைவர் விறகுச் சுமை யோடும் மறைந்தருளினார்.

ஏமநாதனின் வியப்பு

2077. இறைவனின் இசையைக் கேட்டு மயங்கிய ஏமநாதன், "இது நான் அறிந்த சாதாரிப்பண் அன்று. இவ்வுலகத்தில் ஒருவராயினும் இதனை நான் அறிந்தது என்று கூறினாரில்லை. இது தேவகானம். இதனை இவனுக்கு அறிவித்தவர் கடவுளேயன்றி மற்றைய மனிதர்கள் அறிவிக்க வல்லாரோ! இஃது ஆச்சரியம்!

2078. இழுக்கி விட்டவிக் கிழமக னிசையிதேல் அந்த
வழுக்கில் பத்திரன் பாடலெற் றோவென மதியா
அழுக்க முற்றெழுந் திசைவலா னடுத்ததன் பண்டர்
குழுக்க ளுங்குலை குலைந்திட இருள்வழிக்
கொண்டான்.

2079. மடக்கு பல்கலைப் பேழையு மணிக்கலம் பிறவும்
அடக்கு பேழையுங் கருவியாழ்க் கோலுமாங் காங்கே
கிடக்க மானமு மச்சமுங் கிளர்ந்துமுன் னீர்த்து
நடக்க உத்தர திசைக்கணே நாடினா னடந்தான்.

2080. சிவிகை யோர்வழி விறலியர் ஓர்வழி செல்லக்
கவிகை யோர்வழி கற்பவ ரோர்வழி கடுகக்
குவிகை யேவல ரொருவழி கூடநா னுள்ளத்
தவிகை யோவரு மொருவழி யகன்றிட வகன்றான்.

2081. அன்று பத்திரன் கனவில்வந் தாடலேற் றழகர்
இன்று பத்திர விசைவலா னிடைவிற காளாய்ச்
சென்று பத்திரன் அடிமையா மென்றுபாண் செய்து
வென்று பத்திரஞ் செய்துநின் வேண்டுகோ ளென்றார்.

2082. குஞ்சி நாண்மலர்க் கொன்றையா ரங்கனங் கூறும்
நெஞ்சி னானினைப் பரியசொற் கேட்டலு நெஞ்சம்
அஞ்சி னானிது செய்பவோ வடியனேன் மறைகட்
கெஞ்சி னாரைஇன் றிரந்தவா றென்றுகண் விழித்தான்.

2078. பாணபத்திரனால் தள்ளப்பட்ட இம்முதியோன் இசை இதுவாயின், அப்பாணபத்திரனுடைய இசை எத்தன்மையதோ?" என்று கருதி வருத்தமுற்று கவலையில் ஆழ்ந்தான். பின்னர் இசையில் வல்ல ஏமநாதன் எழுந்து தன்னிடம் பயிலும் மாணாக்கர்களும் தலைதடுமாறிச் செல்ல இரவிலேயே ஓடத் தலைப்பட்டான்.

2079. பல்வகை ஆடைகளை மடித்து வைத்துள்ள பெட்டிகளும், மணிகள் இழைத்த அணிகளையும் பிற பொருளையும் அடக்கிய பெட்டிகளையும், கருவியாகிய யாழ்க்கோலும் ஆங்காங்கே கிடக்க மானமும் அச்சமும் முன்னே இழுத்துச் செல்ல வடதிசைக் கண்ணே நாடிச் சென்றான்.

2080. பல்லக்கு ஒரு வழியும், பாடினிகள் ஒரு வழியும் செல்லவும், குடை ஒரு வழியும் மாணவர் ஒரு வழியும் விரைந்து செல்லவும் கைகூப்பி வணங்கும் ஏவலர் ஒரு வழியும், உள்ளத்தில் நாண் ஒழிந்த பாண்மக்கள் ஒரு வழியும் விரைந்து செல்லத் தானும் நீங்கினான்.

பாணபத்திரன் கனவில் இறைவன் தோன்றுதல்

2081. வெற்றியுடைய இடப ஊர்தியையுடைய சோம சுந்தரக் கடவுள் அன்றிரவே பாணபத்திரன் கனவில் தோன்றி, "பாணபத்திரனே! உன் வேண்டுகோளின்படியே நாம் இன்று இசையில் வல்ல அந்த ஏமநாதனிடத்து விறகாளாய்ச் சென்று 'யாம் பாணபத்திரன் அடிமை' என்று கூறி இசைபாடி வென்று நின்னைக் காத்தனம்" என்றார்.

2082. முடியில் அன்றலர்ந்த கொன்றை மலர் மாலையுடைய இறைவர் அவ்வாறு கூறியருளிய, மனத்தினாலும் நினைத்தற்கரிய அம் மொழிகளைக் கேட்ட அளவில் பாணபத்திரன் மனம் நடுங்கி, "இக்காரியம் செய்தற்கோ அடியேன் மறைகட்கு எட்டாத இறைவரை இன்று குறையிரந்து வேண்டினேன்" என்று கண் விழித்து எழுந்தான்.

2083. கண்மல ர்ந்தெழு பத்திரன் கரையிலா வுவகை
உண்மல ர்ந்தெழு மன்புகொண் டுக்கவெங் கதிரோன்
விண்மல ர்ந்தெழு முன்புபோய் விசும்பிழி கோயில்
பண்மல ர்ந்தநான் மறைப்பொருள் அடித்தலம்
பணிந்தான்.

2084. கடிய கானகம் புகுதவோ கட்டிய விறகை
முடியில் ஏற்றவோ முண்டகத் தாள்கணொந் திடவந்
தடிய னேன்பொருட் டடாதசொற் பகரவோ வஞ்சக்
கொடிய னேன்குறை யிரந்தவா விளைந்ததே குற்றம்.

2085. நெடிய னேன்முதல் வானவர் நெஞ்சமுஞ் சுருதி
முடிய னேகமுங் கடந்தநின் முண்டகப் பாதஞ்
செடிய னேன்பொருட் டாகவிச் சேணிலந் தோய்ந்த
அடிய னேற்கெளி தாயதோ வையநின் பெருமை.

2086. நாத வந்தமுங் கடந்த மெய்ஞ் ஞானவா னந்த
போதம் என்பரஃ தின்றொரு புடவிமா னுடமாய்
ஆத பந்தெற எறிந்தவிந் தனஞ்சுமந் தடியேன்
பேதை யன்பள வாயதோ பெருமநின் னுருவம்.

மதுரை நகரினை அடைந்து வணங்குதல்

2083. அங்ஙனம் கண் விழித்து எழுந்த பாணபத்திரன் அளவற்ற மகிழ்ச்சியால் அகமலர்ந்து அன்பு மேலோங்க, வெவ்விய கதிர்களையுடைய சூரியன் வானில் உதித்து எழுவதற்கு முன்னரே சென்று, விண்ணினின்றும் இழிந்த இந்திரவிமானத்தில் எழுந்தருளியுள்ள இசை நிறைந்த நால்வேதப் பொருளாயுள்ள சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளை வணங்கினான்.

2084. "எம்பெருமானே! கொடிய கானகத்தின் கண் செல்லவோ? விறகுச் சுமையைத் திருமுடியில் ஏற்றுதற்கோ? தாமரை மலர் போன்ற திருவடிகள் நோவுமாறு நடந்து வந்து அடியேன் பொருட்டுப் 'பாணபத்திரன் அடிமை' என்று தகாத சொல் கூறுதற்கோ? கொடியேனாகிய அடியேன் குறையிரந்து வேண்டினேன்; ஐயகா! அடியேனுக்குப் பெரும்பிழை விளைந்து விட்டதே! இதற்கு என்ன செய்வேன்?

2085. "திருமால் முதலிய தேவர்களின் உள்ளங்களையும் எண்ணற்ற வேதங்களின் முடிகளையும் கடந்தருளிய தேவரீரது தாமரை மலர்போன்ற திருவடிகள் எளியேன் பொருட்டாக இப்பெரிய நிலவுலகத்தின் கண் தோய்ந்தனவே! ஐயனே! நினது பெருமை அடியேன் திறந்து எளிதாயிற்றோ?

2086. "நாதாந்தத்தைக் கடந்த சச்சிதானந்த வடிவமே தேவரீருடைய திருவுருவம் என்று பெரியோர் கூறுவர். அவ்வுருவம் இன்று நிலவுலகின்கண் ஒரு மனித வடிவாய், வெயில் சுட்டு வருத்த, வெட்டிய விறகினைச் சுமப்பது பேதையேனுடைய அன்பின் அளவாகியதோ?

2087. மறிந்த தெண்டிரை கிடந்தவ னுந்தியில் வந்தோன்
அறிந்த தன்றரும் பொருள்வரம் பகன்றெழு விசும்புஞ்
செறிந்த வண்டமுங் கடந்தது சிறியனேன் பொருட்டாத்
தறிந்த விந்தனஞ் சுமந்ததோ தம்பிரான் முடியே.

2088. என்ன வந்தனை செய்துநின் றேத்தியங் கயற்கண்
மின்ன மர்ந்தபங் கொருவனை வலங்கொடு மீண்டு
மன்னர் தம்பிரான் ஆகிய வரகுண தேவன்
தன்னை வந்தடி பணிந்தனன் தந்திரிக் கிழவோன்.

2089. வந்த ஏழிசைத் தலைமகன் வரவறிந் தரசன்
அந்த வேழிசைக் கிழவனை யழையென வுழையோர்
பந்த யாழ்மக னிருக்கைபோய்ப் பார்த்தனர் காணார்
சிந்தை யாகுலம் அடைந்தவன் போனவா தெரியார்.

2090. எங்கு ளானெனத் தேடுவார் இவரெதி ரயல்வாய்
அங்கு ளார்சில ரறிந்தவா றறைகுவா ரவனேற்று
இங்கு ளான்விற கெடுத்தொரு முதுமக னிவன்பாற்
பொங்கு மேழிசைப் பத்திர னடிமையாய்ப் போந்தான்.

2087. "இறைவனது திருமுடியானது, தெளிந்த மடங்கி வீசும் அலைகளையுடைய பாற்கடலில் பள்ளி கொண்டவனாகிய திருமாலும், அவனது உந்தியில் தோன்றியவனாகிய பிரமனும் அறிந்ததன்று. அரிய பொருள்களின் முடிவாயது. பரந்த வானினையும் நெருங்கிய அண்டங்களையும் கடந்தது. இன்று சிறியேனாகிய என் பொருட்டு வெட்டப்பட்ட விறகினைச் சுமந்ததோ?"

மன்னனை அடைதல்

2088. என்று வணங்கி நின்று துதித்து அங்கயற் கண்ணம்மை அமர்ந்த பாகத்தையுடைய சோமசுந்தரக் கடவுளை வலம் செய்து திரும்பிய யாழுக்குரிய பாணபத்திரன், மன்னர் மன்னனான பாண்டியனை அடைந்து, வணங்கினான்.

2089. அவ்வாறு வந்த ஏழிசை வல்ல பாணபத்திரனது வருகையைப் பாண்டியன் கண்டு உடனே, "வடபுலத்தி லிருந்து வந்த ஏழிசை வல்ல ஏமநாதனை அழைத்து வாருங்கள்" என்று ஏவலர்களை விடுப்ப, அவர்கள், கட்டமைந்த யாழ் மகனாகிய ஏமநாதன் இருப்பிடம் சென்று அங்கு அவனைக் காணாது அவன் போன விதம் அறியாதவர்களாய் வருந்தித் தேடினார்கள்.

2090. 'எங்குள்ளார்?' என்று தேடுகின்ற ஏவலாளர் எதிரே அங்கே அருகில் உள்ளோர் சிலர் அறிந்தவாறு சொல்வார். "ஏமநாதன் நேற்றுவரையில் இங்கு இருந்தான். ஒரு கிழவன் விறகு சுமந்து கொண்டு இவ் ஏம நாதனிடம் வந்து, தான் ஏழிசையில் வல்ல 'பாணபத்திரனின் அடிமை' என்று கூறினான்.

2091. பாடி னான்பின்பு பட்டது தெரிகிலேம் பானாள்
ஓடி னானெனக் கேட்டலும் ஒற்றர்போய்க் கொற்றஞ்
சூடி னானவை யடைந்தவர் சொல்லியவாறே
ஆடி னார்வியப் படைந்தனு மானமுற் றரசன்.

2092. தன்ன டைந்தவத் தந்திரித் தலைவனை நோக்கி
என்ன வாறவன் போனவா றிங்கினும் போன
பின்னை யாதுநீ செய்தனை எனவிசைப் பெருமான்
தென்னர் கோனடி தொழுதுதன் செய்தியை
மொழிவான்.

2093. நென்னல் வாயடி யேனின தாணிழ னீங்கிப்
பின்னல் வார்சடை மௌலியெம் பிரானடி பணிந்தேன்
இன்ன லார்குறை யிரந்துமீண் டிருக்கைபுக்கு
இருந்தேன்
கன்ன லார்மொழி பங்கரென் கனாவில்வந் தருளி.

2094. ஓடி யுன்பொருட் டாகநாம் விறகெடுத் துழன்று
வாடி நின்பகைப் புறங்கடை வந்துசா தாரி
பாடி வென்றுநின் பகைவனைத் துரந்தனம் எனச்சொல்
லாடி னார்விழித் தேனிது நிகழ்ந்ததென் றறைந்தான்.

2095. ஏவன் மைந்தர்போய் விளங்கிவந் திசைத்ததும்
வீணைக்
காவ லன்கனா நிகழ்ச்சியும் ஒத்தலிற் கைக்கும்
பூவ லங்கலா னிஃதுநம் பொன்னகர்க் கூடல்
தேவர் தம்பிரான் றிருவிளை யாட்டெனத் தெளிந்தான்.

2091. "பின்னர் இசைபாடினான். அதன் பின்னர் நடந்த நிகழ்ச்சியை அறியோம். அவ் ஏமநாதன் பாதி இரவில் ஓடிவிட்டான்" என்றார்கள். அதுகேட்ட, ஏவலர்கள் விரைந்து சென்று அரசன் அவையை அடைந்து அவ்வயலார் சொன்னவற்றை அப்படியே விண்ணப்பம் செய்தனர். பாண்டியன் அதிசயித்து ஐயமுற்றான்.

2092. தன்னைச் சார்ந்து நின்ற அந்த யாழ்த் தலைவனாகிய பாணபத்திரனைப் பார்த்து, "ஏமநாதன் ஓடியவிதம் என்னை? நீ நேற்று இங்கிருந்து சென்ற பிறகு யாது செய்தாய்?" என்று வினவினான். இசைப் பெருமான் மன்னனின் அடிகளை வணங்கித் தனது செய்தியைக் கூறுவானாயினான்.

2093. "அரசே! நேற்றைய பொழுது அடியேன் இங்கிருந்து போனபின் பின்னிய நீண்ட சடைமுடியினை யுடைய எம் பெருமான் சோம சுந்தரக் கடவுளின் திருவடிகளை வணங்கி துன்பம் மிக்க என் குறைகளை இரந்து கூறி மீண்டு வீட்டிற்குச் சென்று விட்டேன். கரும்பு போன்ற இனிய மொழியுடைய உமையம்மையைப் பாகத்தில் உள்ள அவ்விறைவர் என் கனவில் தோன்றினார்.

2094. "தோன்றி, 'நாம் உம் பொருட்டாக ஓடி, விறகு சுமந்து நகரமெங்கும் திரிந்து வாடி, உம் பகைவனாகிய ஏமநாதன் தலைவாயில் சென்று சாதாரிப் பண்ணைப் பாடிவென்று அவனைத் துரத்தி விட்டோம்' என்று கூறியருளினார். யானும் கண் விழித்தேன். இதுதான் நடந்த செய்தி" என்று கூறினான்.

2095. ஏவலாளர் சென்று தெரிந்து வந்து கூறியதும் வீணைக் காவலன் கனா நிகழ்ச்சியும் ஒத்திருத்தலால், வேப்பம் பூமாலையை அணிந்த பாண்டியன், 'இது நமது நகரமாகிய அழகிய கூடலின் கண் எழுந்தருளிய தேவனாகிய சோமசுந்தரக் கடவுள் திருவிளையாடல்' என்று தெரிந்தான்.

2096. இகழ்ந்த கூற்றெறி சேவடிக் கிடையறா நேயம்
திகழ்ந்த பத்திரன் அன்பையுந் தேவரைக் காப்பான்
அகழ்ந்த வாழிநஞ் சுண்டவ னருளையும் வியந்து
புகழ்ந்து போய்மது ராபுரிப் புனிதனைப் பணியா.

2097. பத்தர் யாழிசைக் கிழவனைப் பனைக்கைமான் எருத்தில்
வைத்து மாடநீ ணகர்வலஞ் செய்வித்து மலர்ந்த
சித்தம் ஆழ்ந்திட வரிசைகண் மிதப்புறச் செய்து
தத்து மான்றொடைத் தேரினான் றன்மனை புகுவான்.

2098. தேவ ருந்தவ முனிவருந் தேவரிற் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய விருப்பவர் இருதாள்
நோவ வந்துமக் காட்செய்து நுங்குறை முடித்தார்
ஆவ ரேலுமக் கனைவரு மேவல ரன்றோ.

2099. ஆத லாலெனக் குடையர் நீருமக்குநான் அடியேன்
ஈத லாலெனக் கும்மொடு வழக்குவே றிலைநான்
ஓத லாவதோர் குறையுள தின்றுதொட் டுமக்கு
வேத நாதனைப் பாடலே கடனென விடுத்தான்.

2096. அவமதித்து வந்த எமனை உதைத்த சிவந்த திருவடிகட்கு இடையறாது நேயம் பூண்ட பாணபத்திரனது அன்பையும், தேவர்களைக் காக்கும் பொருட்டுக் கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட இறைவனது அருளையும் வியந்து பாராட்டிப் புகழ்ந்து, சென்று மதுரையில் எழுந்தருளிய இறைவனை வணங்கினான்.

வரகுணன் பாணபத்திரனை யானை மீதேற்றி நகர் வலம் செய்தல்

2097. யாழ் இசைக்கு உரிய பாணபத்திரனை, பனை போன்ற துதிக்கையுடைய யானையின் மேல் ஏற்றி மாடங்கள் நிறைந்த நகர்வலம் செய்வித்தான். பின்னர் பாணபத்திரன் மனம் மகிழும் வண்ணம் வரிசைகள் பல வற்றை, தாவுகின்ற குதிரைகள் பூட்டிய தேரையுடைய பாண்டியன் கொடுத்துத் தன் அரண்மனை அடைவதற்கு முன் அவனை நோக்கிச் சொன்னான்.

2098. "தேவர்களும், தவத்தையுடைய முனிவர்களும் திருமால் முதலிய அனைவரும் தமக்குக் குற்றவேல் புரிய வீற்றிருப்பவராகிய இறைவர் தமது அருமைத் திருத்தாள் நோவ வந்து உமக்கு ஏவல் செய்து உமது குறையினை முடித்தருளினாராயின் உமக்கு எல்லோரும் ஏவலாளர்கள் அன்றோ?

2099. "ஆகையால் நீர் என்னுடைய தலைவர். நான் உம்முடைய அடிமை. நீர் தலைவரும் நான் அடிமையு மாகிய இம்முறையேயன்றி எமக்கு உம்மோடு வேறு வழக்கில்லை. இன்னும் நான் உம்மிடத்தே குறையிரப்ப தொன்றுண்டு. அஃது இன்று முதல் வேதமுதல்வனாகிய சோம சுந்தரக் கடவுளைப் பாடுதலே உமக்குக் கடமை என்பதேயாகும்." என்று வேண்டி விடை கொடுத்தனுப்பி னான்.

2100. அரச னல்கிய வெறுக்கைபூ ணாடைகள் பிறவும்
பாகு நாவலர் மாணவர் யாவர்க்கும் பகிர்ந்து
வரிசை யாலிசைக் கிளையொடு மனையில்வந் தெய்திக்
கரைசெ யாமகிழ் சிறந்திசைக் காவல னிருந்தான்.

விறகு விற்ற படலம் முற்றிற்று.

42. திருமுகம் கொடுத்த படலம்

2101. முன்னவன் மதுரை மூதூர் முழுமுதல் இசைவ லானை
இன்னிசை பாடி வென்ற தின்றுரை செய்தே மந்தத்
தென்னவன் சேரன் மாடே திருமுகங் கொடுத்துப் பாணர்
மன்னவன் றனக்கு செம்பொன் வழங்கிய வழக்கஞ் சொல்வோம்.

2102. இனிமதி யெமக்கீ தென்னா யாழ்வல்லோன் அன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயிற் பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன் கோயில்முப் போது மெய்திக்
கனிமதி யன்பிற் பாடுங் கடப்படு நியமம் பூண்டான்.

2100. வரகுண பாண்டியன் கொடுத்த செல்வமும் அணியும் ஆடைகளும் பிறவுமாகிய அனைத்தையும் துதிக்கின்ற நாவலர்கட்கும் மாணவர்கட்கும் பகிர்ந்து கொடுத்து பாண் சுற்றத்தோடும், அரசன் செய்த வரிசை யோடும் மனையின் கண் வந்தடைந்து, யாழ் வேந்தனாகிய பாணபத்திரன் அளவற்ற மகிழ்ச்சியுடன் இனிது வாழ்ந்து இருந்தான்.

விறகு விற்ற படலம் முற்றிற்று.

42. திருமுகம் கொடுத்த படலம்

2101. முன்னவரும், மதுரைப் பழம்பதியில் எழுந்தருளியவருமான சோமசுந்தரப் பெருமான், இசையில் வல்ல ஏமநாதனை இனிய இசைபாடி வென்ற திருவிளை யாடலை இப்பொழுது கூறினோம். இனி அவ்விறைவனே சேரப் பெருமானிடத்துத் திருமுகம் கொடுத்துப் பாணர் வேந்தனாகிய பத்திரனுக்குச் செம்பொன் வழங்கிய திருவிளையாடலைக் கூறுவோம்.

இறைவன், பாணபத்திரனுக்குப் பாண்டியன் பொருளை ஈதல்

2102. யாழில் வல்ல பாணபத்திரன், அந்நாள் முதல், "இனி எமக்கு அறிவாவது இதுவே" என்று கருதி, சந்திரன் மரபினனாகிய வரகுண பாண்டியன் அரண்மனையில் இசை பாடுகின்ற உரிமையை விடுத்துச் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலிலே மூன்று காலங்களிலும் சென்று கனிந்த அன்போடு இசைபாடும் நியமத்தை மேற் கொண்டான்.

2103. இத்தொழி லன்றி வேறு தொழிலிவற் கின்மை யாலே
பத்திரன் இலம்பா டெய்தப் பொறுப்பரோ பழனக் கூடற்
சித்தவெம் மடிகள் வேந்தன் பொன்னறைச் செல்வம்
வௌவிப்
பத்தர்யா ழிடத்தோ ளேந்திப் பாடுவான் காண
வைப்பார்.

2104. சிலபொலங் காசு சின்னாள் மணிக்கலன் சின்னாள்
செம்பொற்
கலைவகை சின்னாள் அம்பொற் சாமரைக் காம்பு
சின்னாள்
அலர்கதி ரரியான் சேக்கை யாடகத் தகடு சின்னாள்
குலமணி வருக்கஞ் சின்னாள் கொடுத்திடக் கொண்டு
போவான்.

2105. கைவரும் பொருளைத் தந்த கள்வருந் தானும் அன்றி
எவ்வெவர் தமக்குந் தோற்றா தெரியிலிட் டழித்துஞ்
சின்னஞ்
செய்வன செய்துந் தன்னைச் சேர்ந்தவ ரிரந்தோர்
கைபார்த்
துய்பவர் பிறர்க்கு மாறா துதவியுட் கவலை தீர்ப்பான்.

2106. வைகலுங் கொடுப்போர் பின்னாண் மறுத்தன ராகப்
போய்ப்போய்க்
கைதொழு திறைஞ்சி வாளா வருமவன் கலியின் மூழ்கி
உய்வகை வேறு காணா தொக்கலும் ஒக்க வாடிக்
கையற வடைய நோனா துறங்கினான் கனவி
னெல்லை.

2103. இவ்வாறு இறைவன் திருமுன் பாடுதலேயன்றி வேறு தொழில் இவனுக்கு இல்லாமையால் வறுமை நிலையை அடைந்தான். அதனை, வயல்சூழ் கூடலெம்பதியில் உள்ள இறைவர் பொறுப்பாரோ? பொறார். ஆதலின் அவர் பாண்டியனின் கருவூலத்தில் உள்ள செல்வங்களைக் கவர்ந்து பாணபத்திரன் முன் ஒவ்வொரு நாளும் வைப்பாராயினார்.

2104. சில நாள் பொற்காசும், சிலநாள் மணிகள் பதித்த அணிகலன்களும், சிலநாள் சிவந்த பொன்னாடை வரிசைகளும் சிலநாள் அழகிய சாமரையின் பொற்காம்புகளும், சிலநாள் சிங்காதனத்தில் வேய்ந்த ஒளியுடைய பொற்றகடும், சிலநாள் பல சாதி மணிக் குவியல்களும் இறைவன் அளிக்க, பாணபத்திரன் பெற்றுக் கொண்டு போவானாயினான்.

உறவினர்கட்கு வழங்கல்

2105. அங்ஙனம் கையில் கிடைத்த பொருளைத் தனக்கு அளித்த கள்வரும் தானுமே அல்லாமல் வேறு எவ்வகையினர்க்கும் தெரியாமல், பாணபத்திரன் நெருப்பி லிட்டு உருக்க வேண்டியவற்றை உருக்கினார். உருமாற்ற வேண்டியவற்றை உருமாற்றினார். அவற்றைக் கொண்டு தன்னைச் சார்ந்தவர்கட்கும், இல்லை என்று யாசித்தவர் கட்கும், தன் கை வரவு பார்த்து வாழ்வோர்க்கும், பிறர்க்கும் இடையறாது அளித்து அவர்களின் உள்ளக் கவலையை நீக்கி வருவாலராயினார்.

2106. இவ்வாறு நாள்தோறும் கொடுத்து வந்த இறைவர். சிலகாலம் சென்றபின் ஒன்றும் கொடாதொழிந்தார். பாணபத்திரன் நாள்தோறும் சென்று சென்று கைகூப்பி ஒன்றும் பெறாதவனாய்த் திரும்பி வந்து கொண்டிருந்தான். வேறு பிழைக்கும் வழி அறியாமல் வறுமைக் கடலில் அழுந்திப் பசியினால் தானும் தன் சுற்றத்தாரும் ஒரு சேர வாடித் துன்பம் பொறுக்கலாற்றாது துயின்றான். அப்போது அவன் கனவில்,

2107. சித்தவெம் பெருமான் வந்து செப்புவார் அப்பா நிம்பத்
தொத்தவன் கோசந் தன்னிற் றும்பியுண் கனியின் வெளவி
இத்தன மின்று காறு மீந்தன மெம்பா லன்பு
வைத்தவ னறிந்தாற் சங்கை மனத்தனாய் விகற்பங் கொள்வான்.

2108. மயலறக் கற்புக் காக்கு மகளிர்போற் றுறவு காக்க
முயலும் யோகரி லுட்காப்பு முரசெறி புறஞ்சூழ் காப்புங்
கயலிலச் சினையு நிற்கக் கவர்ந்ததற் புதமிக் கள்வன்'
உயிர்தொறும் ஒளித்து நின்ற வொருவனோ வறியே னென்பான்.

2109. கோமக னினைய செய்தி யறியுமேற் கோசங் காப்போர்க்
காமுறு தண்ட நின்போல் அன்பகத் தெம்மை வைத்த
தேமரு போந் தின் கண்ணிச் சேரமான் றனக்கிப் போது
நாமொரு முடங்க றீட்டி நல்குவம் போதி யென்னா.

2110. மறைக்குரை செய்த வாக்கான் மதிமலி புரிசை யென்னுஞ்
சிறப்பியற் சீர்சால் செய்யுட் பாகரஞ் செப்பித் தீட்டிப்
பிறைச்சடைப் பெருமா னல்கி மறைந்தனன் பெரும்பாண் செல்வன்
உறக்கநீத் தாடிப் பாடி யுவகைமா கடலில் ஆழ்ந்தான்.

பாணபத்திரன் கனவில் தோன்றியருளல்

2107. சித்தமூர்த்திகளாகிய எம்பெருமான் பாணபத்திரன் கனவில் தோன்றியருளிக் கூறுவார். "அப்பனே! நாம் வேப்பமலர் மாலையை அணிந்த பாண்டியனது பொன்னறையில், யானை உண்ட விளாங்கனி போல் அது ஆகுமாறு பொருளைக் கவர்ந்து இது வரையில் உமக்குக் கொடுத்தருளினோம். எம்மிடத்தில் அன்பு வைத்த வரகுண பாண்டியன் அதனை அறிந்தால் வேறு நினைத்து விடுவான்.

2108. "வேறு ஆடவரிடத்து ஆசையின்றிக் கற்பினைக் காக்கும் மகளிருக்கு நாணம் முதலிய அகத்தே நின்று காத்தல் போலவும், துறவினைக் காக்க முயலுகின்ற சிவ யோகிகட்கு புறத்தில் உள்ள ஐம்பொறி விடயங்கள் புகாது தடுத்து நிற்றல் போலவும், அகக் காவலும் முரசொலியுடன் காக்கும் புறக்காவலும் மீன் முத்திரையும் இருக்கப் பொருளைக் கவர்ந்தது அற்புதம்! இவ்வாறு கவர்ந்த கள்வன் உயிர்கள் தோறும் ஒளித்து நின்ற ஒருவனா யிருப்பானோ! அறியேன்' என்று கருதுவான்.

2109. "மன்னவன் களவுபோன இச்செய்தியை அறிவானேல், கருவூலம் காக்கும் காவலர்க்கு மிக்க தண்டனையும் கொடுப்பான். ஆதலால் உம்மைப் போல் அன்போடு எம்மை உள்ளத்தில் வைத்துள்ள, தேன்மிக்க பனம்பூமாலையை அணிந்த சேரனுக்கு இப்போது நாம் ஒரு ஓலை எழுதித் தருவோம். நீ அங்குப் போகக் கடவை" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

திருமுகம் கொடுத்தருளல்

2110. வேதத்திற்குப் பொருள் செய்த திருவாக்கினால் 'மதிமலி புரிசை' என்னும் தொடக்கத்தையுடைய சொற் பொருட் சிறப்புடைய திருமுகப் பாசுரம் ஒன்றை எழுதிக் கொடுத்து பிறைச்சடைப் பெருமான் மறைந்தருளினார். பெருமை மிக்க இசைச் செல்வத்தையுடைய பாணபத்திரன் உறக்கத்தினின்றும் எழுந்து, ஆனந்தக் கூத்தாடிப் பாடி மகிழ்ச்சிக் கடலில் அழுந்தினான்.

(மதிமலிபுரிசை என்னும் இப்பாசுரம் *11*-ம் திருமுறையில் முதலாக உள்ளது.)

வேறு

2111. வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்டு
ஆங்கிறை யடிபணிந் தகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலங்கொண் டொல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான்.

2112. கொல்லையுங் குறிஞ்சியுங் கொதிக்கும் வெம்பரற்
கல்லத ரத்தமுங் கடந்து முட்புறப்
பல்குளைக் கனியடி யிடறப் பைப்பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினான்.

2113. அலைகட னெடுந்துகில் அந்த நாடெனுந்
தலைமகள் தனக்குவான் றடவு குன்றுபூண்
முலையென விளங்கின முகத்திற் றீட்டிய
திலகமே யானது திருவஞ் சைக்களம்.

2114. அறமகள் ஆக்கமு மலரின் மேயசெந்
நிறமக ளாக்கமு நீதி சான்றபோர்
மறமக ளாக்கமும் வடசொற் றென்கலைத்
திறமக ளாக்கமுஞ் சிறந்த தந்நகர்.

2115. மண்புகழ் அந்நகர் மறுகின் மாடொரு
தண்புனற் சாலையிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற் கன்றிராக்
கண்புனை நுதலினார் கனவிற் றோன்றினார்.

மலை நாடடைதல்

2111. பாணபத்திரன் தான் பெற்ற அப்பாசுரத்தைப் பட்டாடையில் வைத்துச் சுற்றி இறைவன் திருவடியை வணங்கி அங்கிருந்து நீங்கி, உயர்ந்த திருக் கோயிலை வலம் வந்து விரைந்து மேற்றிசை நோக்கி மலை நாட்டிற்கு வழி கொண்டு புறப்பட்டுச் செல்லத் தொடங்கினான்.

2112. முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கொதிக்கின்ற வெய்ய பருக்கைக் கற்களையுடைய வழியான பாலை நிலத்தையும் கடந்து புறத்தில் முள்ளையும் அகத்தில் சுளையையும் உடைய பலாக்கனிகள் இடற மெல்ல மெல்ல நல்ல வயல்கள் சூழ்ந்த மலை நாட்டினை அடைந்தான்.

திருவஞ்சைக் களம்

2113. அலைக்கின்ற நெடிய கடலை ஆடையாக வுடைய அந்த மலை நாடென்னும் பெண்ணுக்கு வானளாவி நிற்கும் பெரிய மலைகள் அணிகள் பூண்ட கொங்கைகளாக விளங்கின. 'திருவஞ்சைக் களம்' என்னும் உயரிய பதி அம்மாதின் முகத்தில் இட்ட திலகம்போல் விளங்கிற்று.

2114. அப்பதியில் அறமகளாய செல்வமும், தாமரை மலரில் வசிக்கும் திருமகளாய பொருட் செல்வமும், நீதி அமைந்த போருக்குரிய கொற்றவையாலாய வீரச் செல்வமும், வடமொழி தென்மொழி என்னும் பகுப்பினையுடைய கலைகளாய கல்விச் செல்வமும் சிறப்புப்பெற்று விளங்கின.

சேரமான் பெருமாள் நாயனாரின் கனவு

2115. இத்தகைய புவி போற்றும் புகழ் வாய்ந்த திருவஞ்சைக் களத்து நகரின் வீதியின் கண் உள்ள ஒரு தண்ணீர்ப பந்தலில் பாணபத்திரன் தங்கினான். பிறகு கண் பொருந்திய நெற்றியையுடைய சோமசுந்தரக் கடவுள், வானுலகம் புகழும் நீதியினையுடைய சேரமான் பெருமானின் கனவில் தோன்றியருளினார்.

2116. தென்னவன் மதுரையில் இருக்குஞ் சித்தர்யாம்
நின்னிடை வந்துளே நின்னைக் கண்டுதான்
நன்னிதி வேண்டநம் மோலை கொண்டுநம்
இன்னிசைப் பாணபத் திரனிங் கெய்தினான்.

2117. மற்றவற் கருநிதி கொடுத்து மன்னநீ
தெற்றென வரவிடு கென்று சித்தர்தாம்
சொற்றனர் போயினார் சுரக்குந் தண்ணளி
ஒற்றைவெண் குடையினான் உறக்க நீங்கினான்.

2118. கங்குல்வாய்க் கண்டவக் கனவைப் பெண்ணையந்
தொங்கலான் றமரொடு சொல்லிச் சேற்கணாள்
பங்கினான் றிருமுகங் கொணர்ந்த பத்திரன்
எங்குளான் கொல்லெனத் தேட வெண்ணுவான்.

2119. மற்றவர் தமைத்துரீஇ வருக தில்லெனக்
கொற்றவன் ஏவலோர் குறுகி மாடமுந்
தெற்றியு நியமமு மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிநக ரெங்குந் தேடுவார்.

2120. தருமநீர்ப் பந்தரில் இருக்குந் தந்திரி
வருமிசைக் கிழவனைக் கண்டு வல்லைபோய்த்
திருமகற் குணர்த்தினார் சேனை யோடெழீஇப்
பெருமகன் பாணர்தம் பிரானை நண்ணினான்.

2116. "மன்னவா! நின்னிடத்து வந்துள்ள யாம் பாண்டியனது மதுரையிலே இருக்கும் சித்தரே ஆவோம், நம் அடியவன் பாணபத்திரன். அவன் உம்மைக் கண்டு நல்ல பொருள் பெறுதற் பொருட்டு நம்முடைய திருமுகம் பெற்றுக் கொண்டு இங்கு வந்துள்ளான்.

2117. "மன்னனே! நீ அப்பாணபத்திரனுக்கு நிறைந்த அரிய பொருள் கொடுத்து, விரைந்து அனுப்புக" என்று சித்தமூர்த்திகள் கூறி மறைந்தருளினார். உயிர்களிடத்து தண்ணிய அருளைச் சுரக்கும் ஒப்பற்ற வெண்குடையை யுடைய சேரப் பெருமான் உறக்கம் நீங்கி விழித்தெழுந்தான்.

2118. அழகிய பனம்பூ மாலையை அணிந்த அவ்வேந்தன் இரவிலே தான் கண்ட அக்கனவினை அமைச்சரிடம் கூறி, "அங்கயற்கண்ணம்மையின் மணாளரான சோமசுந்தரக் கடவுளின் திருமுகத்தைக் கொண்டு வந்த அந்தப் பாணபத்திரன் எங்குள்ளார்" என்று தேடிக்காண, எண்ணினான்.

2119. பின்னர் தன் ஏவலரிடம், "அப்பாண பத்திரனைக் தேடிக் கண்டு வருக" என்று கட்டளை இட்டான். ஏவலர் சென்று மாடங்களிலும், திண்ணைகளிலும் கடைவீதிகளிலும் மன்றங்களிலும், சூரியன் போல் விளங்கும் அந்நகரின் எவ்விடத்தும் போய்த் தேடுவாராயினார்.

எதிர் கொண்டழைத்தல்

2120. அவர்கள், அறத்தின் பொருட்டு வைத்த நீர்ச் சாலையில் தங்கி இருக்கும் யாழ் கைவந்த பாண பத்திரனைக் கண்டு விரைந்து சென்று அரசனுக்குத் தெரிவித்தனர். அவ்வரசர் பெருமானும் நால்வகைப் படையோடும் எழுந்து பாணர் பெருமானை அடைந்தார்.

2121. கண்டனன் முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேற்
கொண்டனன் பாடினன் கூத்தும் ஆடினன்
தண்டென வீழ்ந்தன னன்பிற் றண்ணறா
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே.

2122. வாங்கினன் றிருமுக மலர்க்க ணொற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போன்மகிழ்
தூங்கினன் றடங்கணீர் துளிப்ப மெய்யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே.

வேறு

2123. மின்னவிருஞ் செம்பொனணி மாடக் கூடன்
மேயசிவன் யாமெழுதி விடுக்கு மாற்றம்
நன்னர்முகில் எனப்புலவர்க் குதவுஞ் சேர
நரபாலன் காண் கதன்போ னம்பா லன்பன்
இன்னிசையாழ்ப் பத்திரன்றன் மாடே போந்தா
னிருநிதியங் கொடுத்துவர விடுப்ப தென்னத்
தென்னர்பிரான் றிருமுகத் தின் செய்தி நோக்கிச்
சேரர்பிரான் களிப்பெல்லை தெரியா னாகி

வேறு

2124. பொன்னின் றளிகை மிசைவைத்துப் புழைக்கை
மதமான் றலையேற்றி
மன்னுங் கொளையாழ்ப் புலவனைமுன் வைத்துப்
பின்னே தானிருந்து
மின்னுங் கதிர்கா லிணைக்கவரி வீசிப் பலவே
றியங்கலிப்பத்
தென்னென் றளியார் இசைத்தாரான் றிருமா நகரை
வலஞ்செய்யா.

2121. அரசர்க்கு அரசனாகிய சேரமான் பாணபத்திரனைக் கண்டு அன்பினால் கைகூப்பி தலையின் மீது வைத்துக் கொண்டு பாடினார். ஆனந்தக் கூத்தாடினார். தண்டம்போல் கீழே விழுந்து வணங்கினார். குளிர்ந்த தேனைக் கண்டு வண்டு மகிழ்வது போல மகிழ்ந்தார்.

2122. மன்னர் பெருமானாகிய சேரமான் பெருமான் அத்திருமுகத்தை வாங்கிக் கண்களில் ஒற்றித் தலையின் மேல் மாலை போலத் தாங்கினார். மகிழ்ச்சி மிக்குப் பெரிய கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார், உடல் புளகிக்க உரோமம் சிலிர்த்தது.

2123. "ஒளி விளங்கும் பொன்னாலாகிய மாடங்கள் நிறைந்த மதுரைப் பதியில் எழுந்தருளிய சிவ பெருமானாகிய யாம் எழுதி அனுப்பும் செய்தி, நல்ல மேகத்தினைப் போல் புலவர்களுக்கு வரையாது அளிக்கும் சேரவேந்தன் காண்க. இந்த திருமுகம் கொண்டு வரும் இனிய இசையினையுடைய யாழில் வல்ல பாணபத்திரன் நின்னைப்போல் என்னிடத்து அன்புடையான். அவன் உன்னிடத்து வருகின்றான். அவனுக்குப் பெருநிதி கொடுத்து அனுப்ப வேண்டும்'' என்று தென்னர் பிரானாகிய சோமசுந்தரக் கடவுள் வரைந்தருளிய திருமுகத்துச் செய்தி நோக்கி சேரர் பெருமான் மகிழ்ச்சியின் வரம்பினை அடைந்தார்.

2124. அத்திருமுகத்தைப் பொற்பீடத்தின் மேல் வைத்து, துதிக்கையையுடைய யானையின் மேலேற்றி, பெருமை மிக்க யாழ் வாணனாகிய பாணபத்திரனை முன்னே வைத்துத் தான் பின்னே அமர்ந்து ஒளிவிளங்கும் இரட்டைக் கவரியை வீசிக் கொண்டு, பல வகை வாத்தியங்கள் முழங்க, தென்னென்று வண்டுகள் ரீங்கார மிடும் மாலையை அணிந்த சேரமான் பெருமான் அழகிய பெரிய நகரை வலம் செய்வித்தான்.

2125. பஞ்சு தடவுஞ் சீறடியார் பலமங் கலங்கொண்
டெதிர்போத
மஞ்சு தடவு நீள்குடுமி மாட மனையிற் கொடுபோகி
நஞ்சு தடவு மணிகண்ட னண்பன் றனைநன் னீராட்டி
அஞ்சு தடவி யோவியஞ்செய் தமைத்த மணிமண்
டபத்தேற்றி.

2126. அம்பொற் றவிசிட் டருச்சனைசெய் தாறு சுவையின்
அமுதருத்திச்
செம்பொற் கலவை நறுஞ்சாந்தந் தீம்பூ வாதி முகவாசம்
பைம்பொற் கலந்து வெள்ளிலைதீம் பழுக்காய் பிறவு
முறைநல்கி
உம்பர்க் கிறைவன் திருமுகத்தி லுய்ப்ப தெனலால்
உய்த்துமென.

2127. செம்பொ னறையைத் திறந்தழைத்துக் காட்டி இனைய
திருவெல்லாம்
உம்பர் பெருமான் அடியீர்நீ ருடையீர் கவர்ந்து
கொண்மினென
இம்பர் நிழற்றும் வெண்குடையா னிசைப்ப வெதிர்தாழ்ந்
திசைக்கிழவன்
நம்ப னருளுக் குரியீர்நீர் நல்கிற் றமையும்
எனக்கென்ன.

2125. செம்பஞ்சூட்டிய சிறிய அடிகளையுடைய மகளிர் அட்டமங்கலங்களையும் ஏந்திக் கொண்டு எதிரில் வரச் சென்று முகில் உலவும் சிகரமுடைய மாடத்தை யுடைய அரண்மனையின் கண் கொண்டு சென்றான். நஞ்சளாவிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானுக்கு அன்பனாகிய பாணபத்திரனை மணம் பொருந்திய நன்னீரால் திருமஞ்சனம் செயவித்து ஐவகை நிறங்களும் தடவி ஓவியம் வரைந்தமைந்த மணி மண்டபத்தில் எழுந்தருள்வித்தான்.

விருந்தளித்தல்

2126. அழகிய பொன்னாலாகிய தவிசளித்து, அறு சுவையுடைய இனிய உணவினை உண்ணச் செய்து, சிவந்த பொன்னிறமான இனிய கலவைச் சந்தனமும், மலர் முதலிய முகவாசமும், பொற்றட்டில் இனிய வெற்றிலையும் பாக்கும் பிறவும் ஆகியவற்றை முறைப்படி கொடுத்து, தேவர்கட்குத் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுள் அருளிய திருமுகத்தின் கண் 'வரவிடுப்பது' என்று கட்டளை இருத்தலால் அங்ஙனமே செய்வோமென்று கருதினான்.

2127. கருவூலத்தைத் திறந்து பாணபத்திரனை அழைத்துக் காட்டி "எம்பெருமானுடைய திருத் தொண்டரே! இத்திரவியம் எல்லாவற்றையும் நீரே கைக்கொண்டுபோம்" என்று நிலவுலகைக் காக்கும் தண்ணளி நிறைந்த குடையுடைய சேரப் பெருமான் கூறினார். இசைக்கு உரிய பாணபத்திரன் சேரமானை எதிர் வணங்கி, இறைவனது திருவருளுக்குரியராகிய் நீர் தருவது தமியேனுக்குப் போதும்" என்று கூறினான்.

2128. மன்னன் றானெண் ணியவாற்றால் வழங்க வழங்க
மறுத்துமறுத்
தின்னல் தீரு மிசைக்கிழவ னிலங்கும் பொலம்பூண்
இருநிதியம்
பொன்னஞ் சிவிகை கரிபரிமான் பொற்பட் டாடை
பலபிறவுந்
தன்ன என்னு மளவாற்றாற் றானே கொள்ளத்
தார்வேந்தன்.

2129. பின்னே ழுடியோ சேட்சென்று பெருமை சான்ற
வரிசையினாற்
றன்னே ரிசையான் றனைவிடுத்து மீண்டா னாகத்
தமிழ்மதுரை
மின்னேர் சடையார் இசைத்தொண்டன் தானு மீண்டு
வெயிலவிரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன் போல மதுரை
நகர்புக்கான்.

2130. வந்து மதுரைப் பெருமானை வணங்கிக் கொணர்ந்த
நிதியெல்லாங்
இந்து மருமா னகருள்ளார் யாரும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும் புலவோர் தமக்கு
முறைநல்கிச்
சந்த யாழி னிசைப்பாணர் தரும மனையான்
வைகினான்.

திருமுகம் கொடுத்த படலம் முற்றிற்று.

விடை பெற்றுப் போதல்

2128. சேரப் பெருமான், "எல்லாப் பொருளும் அவருடையன" என்று தாம் எண்ணிய வண்ணம் வாரி வாரிக் கொடுக்கவும், பாணபத்திரன் அவற்றை மறுத்து மறுத்துப் பொன்னணிகளையும், பெரிய நிதியையும், பொற் சிவிகையையும் பலயானைகளையும் குதிரைகளையும் பட்டாடைகளையும் பிறவற்றையும் தனக்கு விருப்பமுடைய வற்றைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான். மாலையை அணிந்த மன்னனாகிய சேரமான்,

மதுரை அடைதல்

2129. பின்னே ஏழு அடி தூரம் தொடர்ந்து சென்று பெருமை சான்ற வரிசையுடன் தனக்குத்தானே ஒத்த இசை வல்ல பாணபத்திரனை அனுப்பி வைத்து மீண்டு வந்தார். தமிழ் வளர்க்கும் மதுரை நகரில் எழுந்தருளிய மின்னலை யொத்த சடையையுடைய சோமசுந்தரப் பெருமானது இசைபாடும் தொண்டனாகிய பாணபத்திரனும் திரும்பி பொன்னாலாகிய அழகிய கிரீடம் அணிந்த குபேரனைப் போல மதுரை மாநகரை அடைந்தான்.

மகிழ்வுடன் வாழ்தல்

2130. சந்தமமைந்த யாழின் இசையில் வல்ல பாண்டியன் செய்த அறமே அனைய பாணபத்திரன், மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். தான் கொண்டு வந்த பொருள் அனைத்தையும் சந்திரன் மரபினன் ஆகிய பாண்டிய மன்னனின் நகரில் உள்ள அனைவரும் அறிய, மறையுணர்ந்த அந்தணர்க்கும் புலவர்களுக்கும், இரவலர் முதலிய ஏனையோர்க்கும் வேண்டுவன வழங்கி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

திருமுகம் கொடுத்த படலம் முற்றிற்று.

43. பலகையிட்ட படலம்

2131. கருத்துழாய் முகிலொருபாற் கலந்தவர்பத் திரற்குநிதி
திருந்துதா ருதியனிடைத் திருமுகமுந் தளித்ததிது
வருந்தியா ழுவனிசைப்ப மழைதூங்கு நள்ளிரவில்
இருந்துபா டெனப்பலகை யிட்டதூஉம் இனிப்பகர்வாம்.

2132. முன்புடைய நாயகனை முப்போதும் புகுந்திறைஞ்சி
இன்புறுமேழ் இசைக்கிழவ னிருநிதிய மருளியபின்
அன்புசிறந் தரையிரவு மடைந்துபணிந் தடல்விடையின்
பின்புறநின் றேழிசையும் பாடிவரும் பேறடைவான்.

2133. தொழுந்தகையன் பருந் தேவர் தொகுதிகளுந்
தொழுந்திங்கட்
கொழுந்தலைய நதியலையக் குளிக்கின்ற தனிக்கடவுள்
செழுந்தரளச் சிவிகையின்மேற் றேவிதிருப் பள்ளியறைக்
கெழுந்தருளும் போதுபணிந் தேத்துவான் ஒரிரவில்.

43. பலகையிட்ட படலம்

2131. கரிய துழாய் மாலையை அணிந்த முகில் போன்ற திருமால் ஒருபுறம் அமைந்த சோமசுந்தரப் பெருமான், பாணபத்திரனுக்கு, திருத்ததமாகிய மாலையை அணிந்த சேரமானிடம் திருமுகம் கொடுத்துப் பொருள் அளித்தருளிய திருவிளையாடல் இது. அப்பாணபத்திரன் மழை பொழியும் நடு இரவில் வருந்திப் பாட, "இதன் மீது இருந்து பாடுக", என்று பெருமான் பலகையிட்டருளிய திருவிளையாடலையும் இனிக் கூறுவோம்.

பாணபத்திரன் இசைத் தொண்டு

2132. முன்னே எப்பொழுதும் போய், தம்மை ஆளாக உடைய சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்ககளிலும் சென்று இசைபாடி வந்த பாணபத்திரன், சேரமானிடம் பெரும் செல்வம் பெற்ற பின்பு அன்பு மிகுந்து அர்த்த யாமத்திலும் சென்று வணங்கி இடப தேவருக்குப் பின்பக்கம் நின்று கொண்டு ஏழிசை பாடிவரும் நியமம் பூண்டு ஒழுகி வந்தான்.

2133. யாவரும் வணங்கும் தகுதியுடைய அடியார் களும் தேவர் குழாங்களும் வணங்கவும், பிறைச் சந்திரன், ஒருபால் விளங்கவும், கங்கை ஒருபால் அலையவும், வெள்ளியம் பலத்தில் ஆடியருளும் ஒப்பற்ற இறைவன், முத்து சிவிகையின் மேல் உமையம்மையாரின் திருப் பள்ளியறைக்கு எழுந்தருளும் நடுயாமத்தில் பணிந்து, இசை பாடுவானாயினான். ஒருநாள் இரவில்.

2134. இன்னிசையாழ்ப் பெரும்பாணன் எவ்விடையூ
றடுத்தாலுந்
தன்னியம நெறியொழுக்கந் தவானென்ப துலகறியப்
பொன்னியலுஞ் சடைமௌலிப் புராணர்திரு
விளையாட்டால்
அன்னிலையிற் கருங்கொண்மூ வார்த்தெழுந்த
திசையெல்லாம்.

2135. தடித்துநிரை புடைபரப்பித் தடுமாறித் திசைமயங்கத்
துடித்துவிட வாயரவஞ் சோர்ந்துகருண் டளையொதுங்க
இடித்துடுவின் கணம்புதைப்ப விருள்கான்று சலபதிமுன்
முடித்திடுவான் வரவிடுத்த முகிலேழும் வளைந்தவென.

2136. கருங்கடலை விசும்பெடுத்துக் கவிழ்ப்பதென
வெண்டாரை
நெருங்கிருளி னிருப்புக்கோ னிரைத்ததென நிறங்கருக
ஒருங்குசொரிந் துள்ளுணரார் உள்ளம்போ லுட்புறம்பு
மருங்கொடுகீழ் மேலென்று தெரியாத மயங்கிருள்வாய்.

2137. மாமாரி யிடைநனைந்து வருவானம் மாரிதனைப்
பூமாரி யெனநினைந்து திருக்கோயில் புகுந்தெய்திக்
காமாரி தனைப்பணிந்து கருணைமா ரியில்நனைந்து
தேமாரி பொழிவதெனத் தெள்விளியாழ் வாசிப்பான்.

2134. இன்னிசையாழ் வல்ல பெருமையுடைய பாண பத்திரன் எத்தகைய இடையூறு நேர்ந்தாலும் தன் நியம நெறியினின்றும் தவறான் என்பதை உலகினர் அறியும் பொருட்டு, பொன் போலும் சிவந்த சடையுடைய பழம் பொருளான சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாட்டி னால், இருள் மிக்க அந்நேரத்தில் எட்டுத் திக்குகளிலும் கரிய முகில் சூழ்ந்து முழங்கின.

2135. அப்போது நஞ்சு பொருந்திய பாம்புகள் துடி துடித்துச் சோர்ந்து சுருண்டு புற்றில் நுழைந்து பதுங்கின. இடி இடித்து அணியணியாக மின்னல் எழுந்து வீசின. திசைகள் தடுமாறி மயங்கும்படி விண்மீன்கள் மறைய இருள் கவிந்தது. வருணன் முன்னொரு நாளில் மதுரையை அழித்தற் பொருட்டு ஏவிய ஏழு முகில்களும் வந்து வளைத் தாற்போல் மேகங்கள் வந்து வளைத்தன.

2136. செறிந்த இருளினால் இரும்புக் கோல்களை வரிசையாக நட்டு வைத்தாற் போல நிறம் கருகித் தோன்ற அவற்றைக் கடல் நீர் முழுவதையும் வானம் எடுத்து தலை கீழாய்க் கவிழ்த்தது போலப் பெருமழை வெள்ளிய தாரை களாகப் பொழிந்தது. ஆன்மாவாகிய தம்மையும் தலைவனாகிய சிவத்தையும் அறிந்து கொள்ளாதவர் மனம் போல உள்ளென்றும் வெளியென்றும் கீழென்றும், மேலென்றும் அறியலாகாது மயங்கும் வண்ணம் இருள் இருந்தது.

2137. அந்த இருளின் பெருமழையில் நனைந்து வருபவனாகிய பாணபத்திரன், அம்மழையை மலர்மழை எனக் கருதி திருக்கோயிலுட் சென்று புகுந்தான். சோம சுந்தரக் கடவுளை வணங்கினான். அருள் மழையில் நனைந்து தேன் மழையினைப் பொழிவதுபோல் இசை யமைந்த யாழினை வாசிக்கத் தொடங்கினான்.

2138. விடைக்கடவுள் பின்னின்று வீணையிடத்
தோள்கிடத்திப்
புடைத்துநரம் பெறிந்துமிடற் றொலிபோக்கிப்
பொலங்கொன்றைச்
சடைக்கடவுள் செவிவழிபோய் அருட்பைங்கூழ்
தலையெடுப்பத்
தொடைத்தமிழி னிசைப்பாணிச் சுவையமுத
மடைதிறந்து.

2139. நரம்புநனைந் திசைமழுங்க நனைந்துடலம் பனிப்பவிசை
வரம்பொழுகு விரன்மிறைத்து வலிவாங்க மயிர்சிலிர்ப்ப
நிரம்பியசே றடிபுதைப்ப நின்றுநிறை யன்பிசையாய்
அரும்புதல்போ லென்புருக்கும் அமுதவிசை பாடுமால்.

வேறு

2140. மாதர் நகையாய் மதுரேசர் உண்பலிக்கெம் மனைவாய்
வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென் சிந்தை கவர்ந்தாற்
போலுங்
காதன் முகத்தரும்பக் கையறவு தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித் தூவி
பிழைத்தேன் போலும்.

2141. ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டுண்பலிக்கு
நம்மனையின் ஊடே கூடற்
கண்ணுதலா ருள்ளாளக் காணமிசைத் தென்னுள்ளங்
கவர்ந்தார் போலுங்
கண்ணுதலார் பாடு மவிநயங்கண் டாகங் கலப்பேன்
பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித் தாவி
பெற்றேன் போலும்.

2138. இடபதேவரின் பின்னே நின்று யாழினை இடது தோளில் அணைத்து நரம்பை அமுக்கித் தெறித்து, மிடற்றின் ஒலியை எழுப்பித் தமிழினால் தொடுக்கப்பட்ட இசைப் பாட்டாகிய சுவை மிக்க அமிழ்தம் மடையுடைத்தது போல கொன்றை மாலை அணிந்த சோம சுந்தரக் கடவுளின் திருச்செவியாகிய கால் வழியே சென்று பாய்ந்து திருவருளாகிய பயிர் ஓங்கும்படி.

2139. யாழின் நரம்பு நனைந்து இசை மழுங்கவும், உடம்பு நனைந்து நடுங்கவும் குரல் முதலிய இசையின் எல்லை கடவாது போக்குவரவு செய்யும் விரல்கள் விறைத்து வலிக்கவும், குளிரால் மயிர் சிலிர்க்கவும் கால்கள் சேற்றில் புதைந்து சிறிதும் பெயராது நின்று கொண்டு அன்பே இசை மயமாய் அரும்புதல் போல எலும்பினை உருக்கும் அமுத இசையினைப் பொழிந்தான்.

2140. "அழகிய பல் வரிசையுடைய பெண்ணே! இம் மதுரேசர் உண்ணும் பொருட்டு எம்மனையின் கண் வந்து முகத்தில் காதற்குறியைக் காட்டி என் சிந்தை கவர்ந்தார் போலும்! அங்ஙனம் காதற் குறிப்பு முகத்திலே தோன்ற காமநோய் தீருமாறு, கலக்கத் தொடங்கினேன். ஒரு கூறு பெண் வடிவாய் இருந்தார். அதனால் நாணி நீங்கி விழித்து உயிர் பிழைத்தேன் போலும்!

2141. "ஒள்ளிய நெற்றியையுடைய தோழியே! தலையோட்டினை ஏந்தி உண்ணும் உணவு பொருட்டு நமது வீட்டிற்கு வந்து, கூடலில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணையுடைய இறைவன் 'உள்ளாள' கானம்பாடி என் உள்ளம் கவர்ந்தார்போலும்! அவர் பாடும் இன்பச்சுவை நயத்தைக் கண்டு, அவர் மார்பில் கலக்கத் தொடங்கினேன். ஒரு கூறு பெண் வடிவாய் இருந்தார். அதனால் நாணம் நீங்கி விழித்து உயிர் பிழைத்தேன் போலும்!

2142. ஐயரியுண் கண்ணாய் திருவால வாயுடையா ரையங் கொள்வான்
மையனகை செய்தென் வனமுலையின் மேற்செங்கை வைத்தார் போலும்
மையனகை செய்வதென் வனமுலைமேற் கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி விழித்தாவி தரித்தேன் போலும்.

வேறு

2143. பாடுவார் இருவர்க் கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் செவியி லூட்டுந் தொண்டுகண் டிதன்மேல் நின்று
பாடுவா யுனக்கே யிந்தப் பலகையென் றாழ்ந்த வன்பின்
நாடுவார் விசும்பிற் கூறி நகைமணிப் பலகை யிட்டார்.

2144. இறையரு ளாணை யஞ்சி யிட்டபொற் பலகை யேறி
நறைகெழு மதுர கீதம் பாடிநான் மறைகள் சூடும்
அறைகழல் அகத்துட் கொண்டு பலகையு மங்கை கொண்டு
மறைவழி யாழ்வல் லோன்றன் மனைவயிற் செல்லு மெல்லை.

2145. மின்னுமா மேக நீங்கி விசும்புவாய் விளங்கித் தென்றல்
மன்னுமா மலய மேய மாதவன் குடித்த வைகற்
பொன்னுமா மணியு முத்தும் புலப்படக் கிடந்த வேலை
என்னமீன் விளங்கித் தோன்ற ஏகியில் புகுந்தான் இப்பால்.

2142. "அழகிய செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களையுடைய தோழியே! திருவாலவாயுடைய சோமசுந்தரக் கடவுள், உண்ணும் பொருட்டுக் காமக் குறிப்புடன் நகைத்து எனது அழகிய கொங்கையின் மேல் தன் சிவந்த திருக் கரத்தை வைத்தனர் போலும்! அவர் அங்ஙனம் செய்ய மயங்கிச் சோர்வேனாகிய நான் ஒரு பெண்ணை இடப்பாகத்திற் கண்டு அதனால் துணுக்குற்று விழித்து உயிர் பிழைத்தேன் போலும்!

இறைவன் பாணபத்திரனுக்குப் பொற்பலகை இடுதல்

2143. இசைபாடும் 'ஆகா', 'ஊகூ' என்னும் இருவருக்கு அந்நாளில் பரிசிலாக சங்கக் குழைகளை அணிந்த திருச் செவிகளை இடமாக அளித்த கூடற்பெருமான் பாண பத்திரனின் இசைத்தொண்டினைக், கண்டு அருளி, "பாணபத்திரா! இந்தப் பலகை உனக்கே உரியது. நீ இதன் மேல் நின்று பாடுவாய்" என்று அழுத்திய அன்பிலே நாடி வானிலே அசரீரியாய்க் கூறியருளி மணி இழைத்த பலகை ஒன்று இட்டார்.

பாணபத்திரன் தன் வீடு அடைதல்

2144. அப்போது பாணபத்திரன் இறைவன் அருளிய ஆணையை மறுப்பதற்கு அஞ்சி அப்பொற் பலகையின் மேல் ஏறி நின்று தேனினும் இனிய இசையினைப் பொழிந்தான். பிறகு நான்மறைகளும் முடியாற்சூடும் வீரக் கழலணிந்தத திருவடியினை உள்ளத்திற்கொண்டு அப் பலகையினைக் கையிலேந்தி இசை நூலின் வழியே யாழ் வாசித்தலில் வல்லவனாகிய பாணபத்திரன் தன் வீட்டிற்குச் சென்றான்.

2145. அவ்வாறு செல்லும்போது தென்றற்காற்று வீசும் பொதியமலையில் தங்கிய பெரிய தவத்தையுடைய அகத்தியமுனிவன் கடலைப் பருகிய அன்று பொன்னும் முத்தும் சிறந்த மணிகளும் வெளிப்படக் கிடந்தாற்போல, வானம் விளக்கமடைந்து கரிய முகில்கள் நீங்கி விண் மீன்கள் தோன்றின. மழை நின்றது. பாணபத்திரன் வீட்டிற் புகுந்தான்.

2146. பாயிருட் படலங் கீண்டு பரிதிகண் விழித்துச் செங்கை
ஆயிரம் பரப்பி முந்நீர் அலைகட னீந்து மெல்லை
மாயிரு ஞாலங் காக்கும் வரகுணன் இரவு தங்கள்
நாயகன் பாடற் கீந்த நல்லருட் பரிசில் கேட்டான்

2147. இன்னிசைக் கரசை யிட்ட பலகைமீ திருத்தி மன்னர்
மன்னவ னிவனே யெங்கண் மதுரைநா யகனென்
றுன்னி
மின்னிவர் மணிப்பூ ணல்கி விளைநில மிகவு நல்கி
நன்னிதி வெறுப்ப நல்கி வரிசையா னடத்தி வந்தான்.

வேறு

2148. இறையருள் வரிசை பெற்றபத் திரனு மேறுயர்த்
தவரைநாற் போதும்
முறையினால் வழிபட் டொழுகுவா னாக முடிகெழு
வரகுண வேந்து
மறைமுதல் அடிகள் வந்துவந் தனையால் வழுத்துவான்
சில்பகல் கழிய
நிறைபெருஞ் சுடரோன் றிருவுரு வடைந்து
நெறியினாற் சிவபுர மடைந்தான்.

பலகையிட்ட படலம் முற்றிற்று.

பாண்டியன் பாணபத்திரனை உபசரித்தல்

2146. பின்பு கதிரவன் கண் விழித்து, கடிய இருட் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு தனது கிரணமாகிய ஆயிரம் கரங்களையும் விரித்துக் கீழைக்கடலில் நீந்தும் போது வேந்தர் வேந்தனாகிய வரகுண பாண்டியன், இரவுப் பொழுதில் தங்கள் குல தெய்வமான சோமசுந்தரக் கடவுள், பாணபத்திரன் பாடலுக்கு அளித்தருளிய அருட் கொடையைக் கேட்டறிந்தான்.

2147. இனிய இசைக்கு அரசானகிய அப்பாணபத்தி ரனை இறைவன் கொடுத்தருளிய அப்பலகையின் மேல் இருக்கச் செய்து, "இவனே எங்கள் மதுரை நாயகன்" என் எண்ணி ஒளிமிக்க மணிகள் அழுந்திய அணிகலன்களையும் விளை நிலங்களையும் பெரு நிதிகளையும் மிகுதியாகக் கொடுத்து முறையாகப் பலநாளும் மன்னர் மன்னனாகிய வரகுண பாண்டியன் நடத்தி வந்தான்.

2148. வரகுண மன்னன் அருளிய வரிசையைப் பெற்ற பாணபத்திரன் இடபக்கொடியினை உயர்த்திய சோம சுந்தரக்கடவுளை நான்கு காலங்களிலும் வழிபட்டு ஒழுகி வந்தான். முடியுடை வேந்தனாகிய வரகுண தேவன் வேத முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயில் வந்து அவன் திருவடிகளை வணங்கித் துதித்து சில நாள் கழிந்த பின் நிறைபெரு சுடரான திருவுரு (சாரூப்பியம்) பெற்றுச் சிவலோகத்தை அடைந்தான்.

பலகையிட்ட படலம் முற்றிற்று.

44. இசைவாது வென்ற படலம்

2149. கூட லம்பதியி லாடக மேருக் கொடிய விற்குரிசில்
அடியவ னுக்குப்
பாட லின்பரிசி லாகிய செம்பொற் பலகை யிட்டபடி
பாடின மன்னான்
வீட ரும்பொருவில் கற்புடை யாளோர் விறலி யைப்பரம
னிறையருள் பற்றி
மாட கஞ்செறியும் யாழ்வழி பாடி வாது
வென்றவர லாறு மிசைப்பாம்.

2150. வரகு ணன்கதி யடைந்தபின் அம்பொன் மௌலி
சூடிய விராச விராசப்
புரவ லன்புவி மடந்தையை வேட்டுப் புயந்த ரூஇக்கொடு
நயந்தரு நாளிற்
பரவு மன்பதை புரந்தொழு கந்தப் பஞ்ச வற்குரிய
ரஞ்சன வுண்கண்
மரபின் வந்தமட வார்பல ரேனை மையல் செய்யுமட
வார்பல மாதோ.

2151. அன்ன போகமட வாருள் ஒருத்தி யரச னுக்கமுது
மாவியு மாகும்
மின்ன னாண்மதுர கீத மிசைக்கும் விஞ்ஞை
யின்றுறைவ லாளவ ளுக்கும்
பன்ன காபரண னின்னிசை பாடும் பத்தி
ரன்பொருளில் கற்புடை யாட்கும்
மன்னு கீதவினை யாலிகல் மூள வழுதி காதன்மட
மாது பொறாளாய்.

44. இசைவாது வென்ற படலம்

2149. அழகிய மதுரைத் திருநகரில் எழுந்தருளிய பொன்மேருவாகிய அழகிய வில்லேந்திய சோமசுந்தரக் கடவுள், தன் அடியானாகிய பாணபத்திரனுக்கு அவன் பாடலுக்குப் பரிசாகச் சிவந்த பொற்பலகை அளித்த திரு விளையாடலைக் கூறினோம். இனி அப்பாணபத்திரனது ஒப்பற்ற மனைவியார், இறைவனது திருவருளைப் பற்றுக் கோடாக்கொண்டு, முறுக்காணி செறிந்த யாழை மீட்டிப் பாடி ஒரு விறலியை வென்ற திருவிளையாடலைக் கூறு வோம்.

பாடினியிடம் பாண்டியனின் காமக்கிழத்தி பகை கொள்ளல்

2150. வரகுண பாண்டியன் சிவகதி அடைந்தபின் அழகிய பொன்னாலாகிய முடிசூடிய இராசராச பாண்டியன் என்பான் மணந்து, பாண்டி நாட்டை நல்ல முறையில் அரசு புரிந்து வந்தான். பெரிய மக்கட் கூட்டத் தைப் பாதுகாத்தொழுகும் அப்பாண்டியனுக்கு உரிமையாய் உள்ளவர் மையுண்ட கண்களையுடைய தனது மரபில் வந்த மகளிர் பலர். கணிகையருள்ளே மயக்கம் செய்யும் காமக் கிழத்தியர் பலர்.

2151. அந்தக் காமக்கிழத்தியருள் ஒருத்தி அவ்வரச னுக்கு அமுதம் போன்றவளாயும் உயிர் போன்றவளாயும் விளங்கினாள். இனிய இசைபாடும் கல்வித்துறையில் வல்லவள். அவளுக்கும் பாம்பணியையுடைய கூடற் பெருமான் திருமுன் இசைபாடும் பாணபத்திரனுடைய ஒப்பற்ற கற்பினையுடைய மனைவிக்கும் இசைபாடும் செய லால் பகை மூண்டது. பாண்டியனது காதலுக்குரிய இளமையாகிய மாது மனம் பொறாதவளானாள்.

2152. பாடி னிக்கெதிரொர் பாடினி தன்னைப் பாட விட்டிவள்
படைத்த செருக்கை
ஈட ழிப்பலென வெண்ணி யெழீஇத்தன் னிறைம
கற்கஃ திசைத்தலும் அந்தத்
தோடி றப்பொரு கயற்கணி னாடன் சொன்ன
வாறொழுகு மன்னவர் மன்னன்
நாடி யத்தகைய விறலியை யீழ நாட்டி னும்வர
வழைத்து விடுத்தான்.

2153. பந்த யாழ்முதுகு தைவர விட்டுப் பாட லாயமிரு பக்கமு
மொய்ப்ப
வந்த பாடினி மடந்தையு மன்னர் மன்ன
னைத்தொழுதோர் கின்னர மாதிற்
சந்த வேழிசை மிழற்றின ணின்றா டன்னை
நோக்கியொரு மின்னிடை யாண்மேற்
சிந்தை போக்கிவரு தீப்பழி நோக்காத் தென்ன
ருக்கரசன் இன்னது செப்பும்.

2154. பத்தி ரன்மனைவி தன்னையெம் முன்னர்ப்பாடு
தற்கழை யதற்கவள் ஆற்றா
துத்த ரஞ்சொலினும் யாமவள் சார்பா யுனைவி
லக்கினும் விடாது தொடர்ந்தே
சித்த நாணமுற வஞ்சின மிட்டுச் செல்ல னில்லென
வளைந்துகொ ளென்னா
எய்த்த நுண்ணிடையி னாளை யிருக்கைக் கேகி
நாளைவரு கென்று விடுத்தான்.

பாண்டியன் ஈழநாட்டுப் பாடினியை அழைத்தல்

2152. இந்தப் பாடினிக்கு எதிராக ஒரு பாடினியை பாடவிட்டு இவள் கொண்ட செருக்கினை வலியழிப்பேன் என்று கருதி எழுந்து தன் மன்னனுக்கு அச்செய்தியைக் கூறியவளவில், தோடு இற்றொழியும்படி போர்புரியும் கயல் போன்ற கண்ணையுடைய அக்காமக்கிழத்தி சொன்னபடி நடக்கும் மன்னர் மன்னனாகிய அப்பபாண்டியன், அங்ஙனம் பாடி வெல்லும் தகுதியுடைய பாடினியை ஆராய்ந்து கண்டு ஈழ நாட்டினின்றும் வரவழைத்தான்.

2153. அவள் கட்டமைந்த யாழ் முதுகினில் தொங்கு மாறு விட்டுக்கொண்டு, பாடும் மகளிர் கூட்டம் இரண்டு பக்கங்களிலும் மொய்ப்ப, பலர் சூழ வந்து வேந்தர் வேந்த னாகிய பாண்டியைத் தொழுதாள். ஒரு கின்னர மங்கை போல் பண்ணமைந்த ஏழிசைகளையும் பாடி நின்றாள். அங்ஙனம் நின்ற அவளை நோக்கி, மெல்லிய இடையினை யுடைய தன் காமக்கிழத்தியின் மேல்வரும் கொடிய பழி யினை நோக்காத பாண்டியருக்கு வேந்தனாகிய இராசராசன் இதனைச் செல்வான்.

2154. “விறலியே! நீ நாளைக்குப் பாணபத்திரன் மனைவியை எம்முன் பாடுவதற்கு அழைப்பாயாக. அதற்கு அவள் உன்னோடு பாட ஆற்றாது மறுப்பினும் யாம் அவள் சார்பாய் நின்று உன்னைத் தடுத்தாலும் நீ அவளை விடாது பின்பற்றி அவள் மனம் நாணமுற வஞ்சினமிட்டு ‘போகாதே நில்’ என்று தடுத்துக் கொள்” என்று கூறி, நுண்ணிய இடையினையுடைய அப்பாடினியை “இருப்பிடம் சென்று நாளை வருவாய்” என்று அனுப்பினான்.

வேறு

2155. பின்னர் இன்னிசைப் பத்திரன் பெருந்தகை விறலி
தன்னை யங்கழைத் துளத்தொன்று புறத்தொன்று சாற்றும்
என்னொ டின்னிசை பாடுவா ருளர்கொலோ இங்கென்று
உன்னி வந்திருக் கின்றன ளிசைவலா ளொருத்தி.

2156. ஆட மைத்தடந் தோளினா யவளொடுங் கூடப்
பாட வல்லையோ பகரெனப் பாடினி பகர்வாள்
கோட ருந்தகைக் கற்புமிக் கூடலெம் பெருமான்
வீட ருங்கரு ணையுமெனக் கிருக்கையால் வேந்தே

2157. பாடி வெல்வதே யன்றிநான் பரிபவம் உழந்து
வாடு வேனலே னென்றுரை வழங்கலு மதுக்கால்
ஏடு வார்குழ லவளையு மிருக்கையுய்த் திருந்தான்
நீடு வார்திரைப் பொருநையந் தண்டுறை நிருபன்.

2158. மற்றை வைகலவ் விருவரைப் பஞ்சவன் மதுரைக்
கொற்ற வன்றன தவையிடை யழைத்துநேர் கூட்டிக்
கற்ற வேழிசை கேட்குமுன் கலத்தினும் போந்த
வெற்றி வேன்மதர் நெடுங்கணாள் விறலியை வைதாள்.

பாண்டியன், பாணபத்திரன் மனைவியை அழைத்தல்

2155. பின்னர், பாண்டியன் இசை பாடுதலின் வல்ல பாணபத்திரனின் மனைவியாகிய மிகுந்த கற்புடைய பாடினியைத் தன் அவையின் கண் அழைப்பித்து அகத் தொன்று எண்ணி வெளியில் வேறு விதமாய்ப் பேசுகின்றான். "இசையில் ஒரு பெண் தன்னை நன்கு மதித்தமையால் இங்கு என்னுடன் இனிய இசை பாடு கின்றவர் உள்ளார்களோ?" என்று வந்திருகின்றனள்.

2156. அசையும் மூங்கிலைப் போன்ற தோள்களை யுடைய பெண்ணே! நீ அவளுடன் ஒப்பாக நின்று பாடு வதற்கு வலிமையுடையோ? கூறுவாய்" என்று வினவினான் அதற்கு அவள், "அரசே! மாறுதல் இல்லாத பெருமையுடைய கற்பும் இந்நான்மாடக் கூடலில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் திருவருளும் எனக்குத் துணையாக இருத்தலின்.

2157. அவளோடு பாடி நான் வெற்றி பெறுவது அல்லாமல் தோல்வியால் வருந்தி வாட்டமுறேன்" ஏ்ன்று கூறினாள். தேன் பொழியும் மலர் சூடிய நீண்ட கூந்தலை யுடைய அப்பாடினியையும், நீண்ட பெரிய அலைகளை யுடைய தாமிரபரணியின் அழகிய துறைகளையுமுடைய பாண்டியன் அவள் இருப்பிடத்திற்குப் போகும்படி விடுத் தான்.

வாக்கு வாதம்

2158. மறுநாள், பாண்டியனாகிய அம்மதுரை மன்னன் அவ்விருவரையும் தன் அவைக்கு அழைப்பித்து ஒருவருக்கொருவர் நேரில் இருக்குமாறு செய்து, அவர்கள் கற்ற ஏழிசைகளையும் பாடுமாறு ஏவிக் கேட்பதற்கு முன்னரே, மரக்கலத்தினின்றும் வந்த வெற்றி மிக்க வேல் போன்ற கண்ணையுடையவள், பாணபத்திரன் மனைவி யாகிய பாடினியை இகழ்ந்துரைத்தாள்.

2159. குற்ற மெத்தனை யெத்தனை குணங்கள்யாழ்க்
கோலுக்
குற்ற தெய்வமே திசைப்பதெவ் வுயிருடம் புயிர்மெய்
பெற்ற வோசையெவ் வளவவைக் குத்தரம் பேசி
மற்றெ னோடுபாடு இல்லையேல் வசையுனக் கென்றாள்.

2160. இருமை யும்பெறு கற்பினால் இயம்புவாள் கலத்தின்
வரும ரும்பெறற் கல்வியும் வாதின்மே லூக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திரும கன்சபை யறியவாய் திறக்கவேண் டாவோ.

2161. நெய்யுண் பூங்குழன் மடவரால் நின்னொடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலால் தீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுன்போல்
உய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்

2162. வென்றி மீனவன் விலக்குவான் போலெதிர் விலக்கித்
துன்று தார்க்குழன் மடந்தைமீர் பாடுமின் தோற்றோர்
வென்ற மாதரார்க் கடிமையாய் விடுவதே சபதம்
என்று மானமுண் டாக்கலும் ஈழநாட் டரிவை.

2159. "வீணைக்கு எவ்வளவு குற்றங்கள்? எத்தனை குணங்கள்? பொருந்திய தெய்வங்கள் யாவை? ஒலிப்பது எந்த உயிர் எழுத்து? எந்த மெய்யெழுத்து? எந்த உயிர்மெய் யெழுத்து? அவைகட்கு அமைந்த ஓசை எவ்வளவு? அவை கட்கு விடை கூறிப் பின் என்னுடன் பாடுவாயாக. இன்றேல் உனக்கு அது குற்றமாகும்" என்று கூறினாள்.

2160. இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடைவதற்குரிய கற்பிற் சிறந்த பாணபத்திரனின் மனைவி. "பூங்குழலாய்! மரக்கலத்தினின்றும் வந்த பெறுவதற்குரிய கல்வியினையும், வாதின் மேற் சென்ற மன எழுச்சியின் பெருமையினையும் பலரும் விரும்புகின்ற பெண் நலத்தின் செருக்கினையும் பாண்டியனது அவையிலுள்ளோர் அறியுமாறு உன் வாயினைத் திறந்து காட்ட வேண்டாவோ?

2161. "நெய் பூசிய மலர்களையுடைய கூந்தலை யுடைய பெண்ணே! நான் உன்னோடு இசைவாது செய்யும் சண்டைக்கு எதிரன்றிக் கொடியவாயினைத் திறந்து இகழும் சண்டைக்கும் எதிரல்லேன். உன்னைப் போல் மானத்தை விற்றுப் பிழைக்கும் பெண்களே அதற்கு எதிராவார்" என்று கூறினாள்.

2162. அப்போது வெற்றியையுடைய பாண்டியன் விலக்குகின்றவனைப் போல் நடித்து எதிர் நின்று தடுத்து "மாலை அணிந்த கூந்தலையுடைய பெண்களே! நீவிர் வீண் பேச்சின்றிப் பாடுவீர்களாக. தோற்றவர் வெற்றி பெற்ற வர்க்கு அடிமையாய் ஆவதே சபதம்! என்று கூறி இருவருக்கும் மானத்தை உண்டாக்கினான். ஈழ நாட்டிலிருந்து வந்த பெண்,

2163. முந்தி யாழிடந் தழீஇக்குரல் வழிமுகிழ் விரல்போய்
உந்த வேபெரு மிதநகை யுட்கிடந் தரும்பச்
சந்த வேழிசை இறைமகன் றாழ்செவிக் கன்பு
வந்த காதலாள் மழலையின் அமுதென வார்த்தாள்.

2164. வீணை வாங்கினண் மாடக முறுக்கினள் விசித்து
வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தனர் இயக்கர்
நாண மெல்விரல் நடைவழி நாவிளை யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்.

2165. அரச னுட்கிடை யறிந்திலர் அவைக்களத் துள்ளார்
விரைசெய் வார்குழற் பாடினி பாடலை வியந்தார்
புரைசை மானிரைப் பூழிய னிலங்கையிற் போந்த
வரைசெய் குங்குமக் கொங்கையாள் பாடலை
மகிழ்ந்தான்.

வேறு

2166. தென்னவன் உட்கோ ளெல்லை தெரிந்தன ரவையத்
துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று மும்மையுந் துறந்தோ
ரேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா
றன்றோ.

முதல் நாள் பாண்டியன் முன் இசைப்போட்டி

2163. தான் முற்பட்டு யாழினை இடத்தோளில் தழுவிக் குரல் என்னும் நரம்பின் வழியே முகிழ்ந்த விரல் சென்று தாக்கப் பெருமிதப் புன்னகை உள்ளே கிடந்து சிறிது தோன்ற, பண்ணமைந்த ஏழிசைகளைப் பாண்டி மன்னனது செவிகளில் அன்பு வளர்தற்கு ஏதுவாகிய காதல் காட்டும் அவன் காமக் கிழத்தியின் மழலை மொழியாகிய இனிய அமுதம் போல் வார்த்தாள்.

2164. பாணர் பெருமானாகிய பத்திரனின் மனைவி யான பாடினியும், யாழினை எடுத்து மாடகத்தை முறுக்கிக் கட்டமைந்த நரம்பினைத் தாக்கி, இசையில் சிறந்த கந்தர்வர்களும் இரு செவிகளில் கேட்டு நாணுறும்படி மெல்லிய விரல் தடவும் ஓசையின் வழியே நாவால் விளைக்கும் இசையமுதத்தைப் பலர் செவிகளில் நிரப்பினாள்.

2165. அவையில் உள்ள அனைவரும் அரசனின் மனக் கருத்தை அறியாது மணம் கமழ்கின்ற நீண்ட கூந்தலை யுடைய விறலியின் பாடலைக் கொண்டாடினர். கழுத்துக் கயிற்றினையுடைய யானைக் கூட்டங்களையுடைய பாண்டியன், இலங்கையினின்றும் வந்த, குங்குமக் குழம் பணிந்த மலையை ஒத்த தனங்களையுடைய ஈழப் பாடினி யின் பாடலைப் பாராட்டினான்.

2166. அவையில் உள்ளோர் பாண்டியன் உள்ளக் கிடக்கையைத் தெரிந்து அவன் புகழ்ந்த வண்ணமே அவ்வீழப் பாடினியின் பாடலையே புகழ்ந்தனர். இறைவனது திருவருளைப் பெற்று மூவாசைகளைத் துறந்து பெரியோனாயினும் அரசர் சொன்னவாறே சொல்வது வழக்காறல்லவா?

2167. பொன்றளிர் அனையாண் மையற் புதுமது நுகர்ந்து தீது
நன்றறி யாத கன்னி நாடவ னவையை நோக்கி
இன்றொரு நாளிற் றேரத் தக்கதோ விதுவென் றந்த
வென்றடு வேற்க ணாரைப் போமென விடுத்தான்
மன்னோ.

•

2168. மருவிய ஆய மேத்த விருந்தினாள் மனைவந்
தெய்திப்
புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்த தாகப்
பெருமிதந் தலைக்கொண் டானாப் பெருங்களிப்
படைந்து மஞ்சத்
திருமல ரணைமே லார்வந் திளைத்தினி திருந்தாள்
இப்பால்.

2169. வணங்குறு மருங்கிற் கற்பின் மடவரன் மதங்கி தானும்
அணங்கிறை கொண்ட நெஞ்சள் அங்கயற் கண்ணி
பாகக்
குணங்குறி கடந்த சோதி குரைகழ லடிக்கீழெய்தி
உணங்கினள் கலுழ்கண் ணீரளொதுங்கிநின் றிதனைச்
சொன்னாள்.

2170. தென்னவன் ஆகி வையஞ் செய்யகோல் செலுத்திக்
காத்த
மன்னவ வழுதி வார வழிவழக் குரைப்ப தானான்
அன்னவன் கருத்துக் கேற்ப வவைஉரு மனைய
ரானார்
பின்னடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவ ரையா.

2167. பொன்தளிர் மேனியையுடைய காமக்கிழத்தி மேல் வைத்த காமமாகிய புதிய மதுவினைப் பருகித் தீமையும் நன்மையும் அறியாத கன்னி நாட்டினையுடைய பாண்டியன் அவையிலுள்ளாரைப் பார்த்து, "இவ்விசை வாதின் முடிவு இன்று ஒரே நாளில் தேர்ந்து அறியத்தக்கதோ?" என்று கூறிப் பகைவரைக் கொல்லும் வேல் போன்ற கண்களையுடைய விறலியர் இருவரையும் "இருக்கைக்குப் போவீராக," என விடுத்தான்.

பாணபத்திரன் மனைவியின் வருத்தம்

2168. தன்னைச் சூழ்ந்த மகளிர் கூட்டம் புகழ புதிதாக வந்த ஈழப் பாடினி, தன் விடுதி வந்தடைந்து இராசராச பாண்டியன் தன் பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்ததாகப் பெருமிதம் கொண்டு, பெரும் செருக்குற்றுத் தூங்கும் மஞ்சத்தின் மேல் பரப்பிய மலர்ப் படுக்கையின் மேல் மகிழ்ச்சி மிக்குக் கவலையின்றி இருந்தாள்.

2169. வளையும் இடையும் கற்பினையுமுடைய பாணபத்திரன் மனைவியாகிய பாடினி மனக்கலக்கம் உடையவளாய் அங்கயற்கண்ணம்மையை ஒரு பாகத்தி லுடைய, குணத்தையும் குறியையும் கடந்த ஒளிவடி வினனாகிய சோமசுந்தரக் கடவுளின் ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடிகளை அடைந்து வணங்கி வாட்டமுற்று கண்ணீர் சிந்தி ஒதுங்கி நின்று இதனைக் கூறுவாளாயினாள்:

2170. "சுந்தர பாண்டியனாகி நிலவுலகைச் செங்கோலோச்சிப் புரந்தருளிய மன்னனே! இராசராச பாண்டியன் அன்பு சென்ற வழியே வழக்குப் பேசுவானா யினான். அவன் கருத்திற் கிசைய அவையோர் யாவரும் அத்தன்மையர் ஆயினர். ஐயனே! இங்ஙனமாயின் இனி நடு நிலைமை தூக்கிப் பேசுவோர் யார்?

2171. உன்னருட் டுணைசெய் தென்பா லுறுகணோய்
துடைப்ப தென்ன
மின்னனாய் நீயே நாளை வெல்லுமா செய்தும் அஞ்சேல்
என்னவா காய வாணி யிறிலா னருளாற் கேட்டு
மன்னருங் கற்பி னாடன் மனைபுகுந் திருந்தாள்
மன்னோ.

2172. அன்றுபோன் மற்றை ஞான்று மழைத்தனன் பாடல்
கேட்டுக்
குன்றுபோற் புயத்தா னென்னல் கூறிய வாறே கூற
மன்றுளார் பலரும் அன்ன வண்ணமே சொன்னார்
கேட்டு
நின்றபாண் மடந்தை பாண்டி நிருபனை நோக்கிச்
சொல்வாள்.

2173. தென்னரே றனையாய் ஞால மனுவழிச் செங்கோல்
ஒச்சும்
மன்னரே றனையாய் வார வழக்கினை யாதலால்நீ
சொன்னவா றவையுஞ் சொல்லத் துணிந்தது துலைநா
வன்ன
பன்னகா பரணர் முன்போய்ப் பாடுகேம் பாடு
மெல்லை.

2174. இருவரேம் பாட்டுங் கேட்டுத் துணிந்திவள் வென்றாள்
என்னா
ஒருவர்சந் நிதியிற் சொன்னாற் போதுமென்
றுரைத்தாள் பாண்டித்
திருமகன னைய வாறே செய்மினீர் செய்மி னென்ன
மருவளர் குழலி னார்த மனைபுகுந் திருந்தார்
பின்னாள்.

2171. "உனது திருவருளாகிய துணையைப் நல்கியருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அழிவில்லாத இறைவன் திருவருளால் அசரீரி தோன்றி, "பெண்ணே! நாளைக்கு நீயே வெல்லும்படி அருள் செய்வோம். நீ அஞ்சற்க" என்று கூறிற்று. அதனைக் கேட்டு அரிய கற்பினையுடைய விறலி தன் வீட்டிற்குச் சென்று இருந்தாள்.

இரண்டாம் நாள் பாண்டியன் முன் இசைப் போட்டி

2172. மலை போலும் தோள்களையுடைய பாண்டியன் அன்று போலவே அடுத்த நாளும் அவ்விரண்டு விறலிகளையும் அழைப்பித்து அவர்கள் பாடலைக் கேட்டு நேற்றுப் புகன்ற வண்ணமே புகன்றான். அவையில் உள்ள அனைவரும் அவ்வரசன் கூறிய வண்ணமே கூறினர். அதனைக் கேட்டு மனம் புழுங்கி இருந்த பாணபத்திரன் மனைவி பாண்டிய வேந்தனைப் பார்த்துக் கூறுவாளாயினாள்.

2173. "பாண்டியருள் ஆண் சிங்கம் போன்றவனே! இம்மண்ணுலகில் மனுதர்ம நெறிப்படி செங்கோல் செலுத்தும் மன்னர்களுள் ஏறு போன்றவனே! நீர்தான் அன்பின் வழி நின்று வழக்கினை ஓரும் தன்மையை உடையாய் ஆயினை. ஆதலால் நீர் சொன்னவாறே அவையும் கூறத் துணிந்தது. தராசின் நா போலும் நடுவு நிலைமையுள்ள சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று நாங்கள் பாடுகிறோம். அங்ஙனம் பாடுங்கால்,

2174. எங்கள் இருவரின் பாடலையும் கேட்டு யாரேனும் ஒருவர் மனம் துணிந்து 'இருவருள் இவள்தான் வென்றனள்' என்று அவ்விறைவன் சந்நிதியில் சொன்னால் போதும்" என்றனள். இராசராச பாண்டியன், "அங்ஙனமே நீர் செய்யும்" என்று கூறினான். மணம்மிக்க கூந்தலையுடைய அவ்விறலியர் இருவரும் தத்தம் வீட்டிற்குச் சென்று தங்கினர். மறுநாளில்,

வேறு

2175. தென்றல் நாடனு மந்திரச் செல்வரும்
நன்று தீதுணர் நால்வகைக் கேள்வியோர்
ஒன்ற வேகி ஒளிவிடு வெள்ளிமா
மன்ற வாணர்மா மண்டபத் தெய்தினார்.

2176. எய்தி யம்மட மாதரை யிங்குறச்
செய்தி ரென்னத் திருமகன் ஏவலோர்
நொய்தி னோடி நொடித்தழைத் தாரொடு
மைதி கழ்ந்த விழியார் வருவரால்.

2177. படிமை யார்தவப் பாடினி வந்தெனக்கு
அடிமை யாவளின் றையமின் றாலெனக்
கொடுமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங்
கடுமை யாகவந் தாள்கலத் தின்வந்தாள்.

2178. கற்பின் மிக்கெழு கற்புங் கருத்தினிற்
சிற்ப ரஞ்சுடர் சேவடி மேல்வைத்த
அற்பு மிக்கெழ மெல்லவந் தாளரோ
பொற்பின் மிக்குள பத்திரன் பொன்னனாள்.

2179. அலங்கு மாரமோ டங்கதம் ஆதிபல்
கலன்க டாங்கிக் கலைஞர் குழாத்திடை
இலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலங்கொள் நாவலர் போல்வந்து வைகினார்.

2175. தென்றல் வீசும் பொதிய மலையையுடைய பாண்டிய மன்னனும், அமைச்சர்களும், இசையின் குற்றங்களையும், குணங்களையும் பகுத்து உணர்ந்த கீதஞானம், இலக்கிய ஞானம், சுருதி ஞானம், தாள ஞானம், என்னும் நால்வகை ஞானம் நிறைந்த இசை நூற் புலவர்களும் சூழச் சென்று ஒளி வீசுகின்ற வெள்ளியம் பல வாணரது பெரிய மண்டபத்தை அடைந்தனர்.

கூடல் பெருமான் திருமுன் இசைப்போட்டி

2176. அங்ஙனம் அடைந்து அப்பாண்டிய மன்னன் "அந்த இளமையுடைய விறலியரை இங்கு வரச் செய்யுங்கள்" என்று கட்டளை இட்டான். ஏவலர் விரைந்து மன்னர் கட்டளையைக் கூறினர். அவ் ஏவலருடன் மை விளங்கிய விழியினையுடைய அவ்விருவரும் வருவா ராயினர்.

2177. மரக்கலத்தில் வந்த ஈழநாட்டுப்பாடினி, "இன்று பாணபத்திரன் மனைவி வந்து எனக்கு அடிமையாய் விடுவாள். "இதற்கு ஒரு சந்தேகமும் இல்லை" என்று கருதிக் கொடுஞ் செருக்கோடு நெறி பிறழ்ந்த மனத்தோடு விரைவாக வந்தனள்.

2178. அழகினால் மேம்பட்ட பாணபத்திரன் மனைவி யாகிய திருமகளை ஒத்த பாடினி, கற்பின் மிகுந்த தன்மை யாலும் தனது உள்ளத்தில் ஞானப் பரஞ்சோதியாகிய சோமசுந்தரக் கடவுளின் சிவந்த திருவடிகளின் மேல் வைத்த மிகுந்த அன்பினாலும் பொலிவு தோன்ற மெதுவாக வந்தனள்.

இறைவர் தோன்றுதல்

2179. மாடங்களையுடைய மதுரைக்கு இறைவராகிய சோமசுந்தரக் கடவுளும், இசை நூலில் உணர்வுமிக்க புலவர் போலும், அசைகின்ற முத்து மாலையோடும் தோளணி முதலிய பல அணிகளைத் தரித்துப் புலவர் குழுவில் நடுவில் வந்து தங்கினார்.

2180. அந்த வேத்தவை தன்னில் அருங்கலம்
வந்த வேய்த்தடந் தோளிசை மாதராள்
முந்த வேத்திசை பாடினள் முந்தையோர்
சிந்தை வேட்டொன்றுஞ் செப்பின ரில்லையால்.

2181. வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட விருக்கையின் வைகியே
யாண ரம்பெறிந் தின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால்.

வேறு

2182. குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க் கிமையாக்
குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப்
பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற்
படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென்
பேசுவனே.

2183. தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே
வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை
நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
ஆனா யென்று பிறர்பழித்தால் அடியேன் விடையே
தறைவேனே.

2180. அப்போது அச்சபையில் மரக்கலத்தில் வந்த மூங்கில் போலும் பருத்த தோளையுடைய பாடினி அரசர்க்குரிய இசையைப் பாடினாள். சபையில் வீற்றிருந்த முதியோர் மனம் விரும்பி ஒன்றும் கூறாதிருந்தனர்.

2181. பாணர் கோமானாகிய பாணபத்திரன் மனைவி, வீணையை இடத்தோளில் ஏந்திய வண்ணம், கலைமகள் இருந்து பாடும் பதுமாசனத்திலே தானும் இருந்து, யாழ் நரம்பினை விரலினால் தாக்கித் தடவி, இனிய இசையினை ஆராய்ந்து எழுப்பிப் பாடுவாளாயினாள்.

2182. "அங்கை அளவான நீரையும் பச்சிலையையும் இட்டு வழிபடுவோர்க்கு ஐராவதமும் படத்தைக் கொண்ட அனந்த சயனமும் தாமரை மலர்த் தவிசும் ஆகிய இவற்றை, மதுரையில் எழுந்தருளியுள்ள பெருமானே! நீ தருவாய். அவருக்கு அவற்றை அருள்பவனாகிய நீயே கையில் கபாலம் ஏந்தி இல்லங்கள் தோறும் சென்று யாசிப்பாய் என்று கூறும் புறச்சமயிகட்கு யான் யாது கூறுவேன்?

2183. தேன் போலும் இனிய சொற்களையுடைய மகளிரின் பார்வையால் மயங்கி அவர் பின் சென்று அலையாதவர்க்கே வீடுபேறு உரியதென்று, பல வகைப் பட்ட மறைப்பொருளை விரித்து, மதுரை நம்பரனே நீயே கூறியருளினாய்! அங்ஙனம் கூறியவனாகிய நீயே ஒரு பாதி வடிவமாயினை என்று சொல்லிப் புறச்சமயிகள் ஏசினால் அவர்கட்கு அடியேன் யாது விடை கூறுவேன்?

2184. வரத னாகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி
வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தாய் என்பார்க் கென்நான்
விளம்புவனே.

வேறு

2185. கண்ணுதன் மதுரைப் பிரானையிவ் வாறு கருதிய
பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டணைமுதல் இசைநூல் பகர்முதல்
தொழிலிரு நான்கும்
எண்ணுறு வார்தல் வடித்திடல் முதலா மெட்டிசைக்
கரணமும் பயப்ப
மண்ணவர் செவிக்கோ வானரர் செவிக்கும்
வாக்கினாள் நாவிளை யமுதம்.

2186. இடையினோ டேனைப் பிங்கலை யியக்க மிகந்துமு
லந்தொடுத் தியக்கி
நடுவுறு தொழிலாற் பிரமரந் திராந்த நடைபெற
விசைக்கு முள்ளாளம்
மிடறுவீங் காள்கண் ணிமைத்திடாள் எயிறு
வெளிப்படாள் புருவமே னிமிராள்
கொடிறது துடியாள் பாடலு மதுகேட் டனைவருங்
குதூகல மடைந்தார்.

2184. அருட் கொடையுடையவனாகி எல்லா வுயிர்க்கும் மாய மலத்தின் தொழில் வலியை அடக்கி வீட்டின்பத்தினை, மதுரையில் எழுந்தருளிய ஒப்பற்ற முழு முதற் கடவுளே! நீயே அருளுவாயாயினை. அவ்வின்பத் தினை அருளும் நீயே, வீட்டினை விரும்பி யோகு செய்வாரைப்போல அரிய நோன்புகளையுடைய யோக நிலையை அடைந்தனை என்று பழிப்பார்க்கு யான் யாது கூறுவேன்"?

2185. நெற்றிக் கண்ணையுடைய மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை இவ்வாறு கருதிய இசைப் பாட்டினால் மனம் கனிந்து பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, கையூழ் விளையாட்டு, குறும்போக்கு என்னும் முதற்தொழில் எட்டும் வார்தல், வடித்தல், உந்தல், ஊழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்னும் இசைக் கரணம் எட்டும் பொருந்திய யாழிசையோடு நாவிசை அமுதத்தை மண்ணுலகத்தவர் செவிக்கேயன்றி வானுலகத்தவர் செவிக்கும் வார்த்தாள்.

2186. இடைகலை, பிங்கலைகளின் இயக்கத்தைத் தடுத்து மூலதாரத்தினின்றும் காற்றினை எழுப்பிச் சுழு முனையின் தொழிலால் பிரமரந்திரம் வரை நடைபெற இசைக்கும் 'உள்ளாள' கீதத்தினைக் கழுத்து வீங்காமலும், கண் இமையாமலும், பல் வெளிப்படாமலும், புருவம் நிமிராமலும், கபோலம் துடியாமலும் பாடினாள். அவ்விசையினைக் கேட்டு அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

2187. கன்னிநா டுடையான் கைதவன் எனும்பேர்க் காரணந்
தேற்றுவா னெனத்தான்
இன்னிசை யறிஞ னாகியு முன்போ லியம்புவா
னொருப்படு கின்றான்
முன்னவ னருளாற் றன்மனக் கோட்ட முரண்கெடப்
பொதுமையா னோக்கி
இன்ன வள்தானே வென்றன ளென்றா னினையவா
றனைவரு மொழிந்தார்.

2188. கரியுரை மொழிந்த கைதவன் இலங்கைக் கைதவப்
பாடினி கழுத்திற்
புரிகுழன் மாதை யிருத்தென விருத்தும் போதுமை
யிடங்கரந் திருந்த
அரியநா வலரீ தற்புத மீதற் புதமென வறைந்தவை
காண
விரிகதிர் மின்போன் மறைந்தனர் யாரும் வியந்தனர்
பயந்தனன் வேந்தன்.

2189. செங்கணே றழகர் ஆடலீ தென்றே யாவருந்
தெளிந்தன ரேத்தி
அங்கணா யகர்தங் கருணையின் திறனு மடியவ
ரன்பையுந் தூக்கித்
தங்கணா ரருவி பெருகவா னந்தத் தனிப்பெருஞ்
சலதியி லாழ்ந்தார்
வங்கமேல் வந்தாள் பிடர்மிசை யிருந்த மாணிழை
விறலியை மன்னன்.

பாணபத்திரன் மனைவி வெற்றி பெறள்

2187. கன்னித் தமிழ் நாடனாகிய பாண்டியன் கைதவன் என்னும் தனது பெயரின் காரணத்தை எல்லோருக்கும் அறிவிப்பானைப் போலத் தான் இசை நூலில் வல்லவனாய் இருந்தும் முன் போலவே முடிவு சொல்வதற்கு மனம் துணிகின்றவன், சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் மனக் கோட்டம் நீங்கிவிட நடுநிலைமை வகித்து இருவர் இசையினையும் சீர்தூக்கிப் பார்த்து, பாணபத்திரன் மனைவியே வென்றனள்'' என்றான். அப்படியே சபையில் இருந்த எல்லோரும் கூறினர்.

2188. சான்று மொழி பகர்ந்த பாண்டியன், "வஞ்சகம் மிகுந்த ஈழ நாட்டுப் பாடினியின் கழுத்தில் பாண பத்திரன் மனைவியை இருத்துக" என்று ஏவினான். அதனைக் கேட்ட ஏவல் மகளிர் அவ்வாறே இருத்தினர். அப்போது உமா தேவியாரின் இடப்பாகத்தை மறைத்து மானிட வடிவம் தாங்கி புலவராய் வந்து எழுந்தருளியிருந்த சோமசுந்தரக் கடவுள், "இஃது அற்புதம்! இஃது அனைவரும் காண மின்னலைப் போல் மறைந்தருளினார். அது கண்ட யாவரும் வியப்புற்று நின்றனர். பாண்டியன் பயந்து நடுங்கினான்.

பாண்டியன், பாடினிகளுக்குப் பரிசு வழங்கல்

2189. அனைவரும், அது, சிவந்த கண்களையுடைய இடபத்தின் மேல் இவர்ந்தருளும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலென்று அறிந்தனர். அருட்பார்வையுடைய இறைவருடைய திருவருள் திறத்தையும் அடியாரின் அன்பையும் சீர்தூக்கித் தம் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கத் துதித்துப் பேரின்பக் கடலுள் ஆழ்ந்தனர். மரக் கலத்தில் வந்த ஈழப் பாடினியின் தோளின் மேல் ஏறியிருந்த மாட்சிமையுடைய அணிகளணிந்த பாடினியை மன்னன்,

2190. இறக்குவித் தவட்கு முந்தமுத் தாரம் எரிமணிக்
கலன்துகில் வரிசை
பெறக்கொடுத் தேனை யவட்குமுன் மகிழ்ச்சி
பெறச்சில வரிசைதந் தவையிற்
சிறக்கவந் தொருங்கு வைகிவா னிழிந்த தெய்வதக்
கோயில்புக் கிருந்த
அறக்கொடி யிடஞ்சேர் பெரும்புல வோர்க்கு மருங்கலன்
ஆதிக ணல்கா.

வேறு

2191. மன்னவர் வலிகள் எல்லாந் தெய்வத்தின் வலிமுன்
நில்லா
அன்னமா தெய்வஞ் செய்யும் வலியெலா மரண்மூன்
றட்ட
முன்னவன் வலிமுன் னில்லா வெனப்பலர் மொழிவ
தெல்லாம்
இன்னபாண் மகளிற் காணப் பட்டதென் றிறும்பூ
தெய்தா.

2192. மின்னியல் சடையி னானை விடைகொடு வலஞ்செய்
தேகி
இன்னிய மியக்கஞ் செய்ய வெழில்கொள்தன் கோயில்
எய்தித்
தொன்னிதி பெற்றான் போலச் சுகுணபாண் டியனைப்
பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினா னிராச ராசன்.

இசைவாதுவென்ற படலம் முற்றிற்று.

2190. கீழே இறக்கி, அப்பாடினிக்கு மன்னன் முற்பட அவளுக்கு முத்து மாலைகளையும், மணிக்கலன்களையும் ஆடைகளையும் வரிசையாகக் கொடுத்தான். பின்னர் ஈழப் பாடினிக்கும் அவள் மனம் மகிழும் வண்ணம் சில வரிசைகளை அளித்தான். அதன் பின்னர், இராசராச பாண்டியன் சபையில் வந்து அனைவரோடும் ஒருங்கு எழுந்தருளியிருந்து விண்ணின்றும் இறங்கிய தெய்வ விமானத்தின் கண் புகுந்திருந்த தரும வல்லியாகிய இறைவியை இடப்பாகத்தில் கொண்ட பெரும் புலவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கும் அரிய அணிகலன்கள் முதலியவற்றை அளித்தான்.

2191. "அரசர்களின் வலிமையெல்லாம் தெய்வத்தின் வலிமை முன் நில்லா. அப்பெரிய தெய்வங்கள் செய்யும் வலிமை எல்லாம் மூன்று புரங்களையும் எரித்த சிவபெருமானின் வலிக்கு முன் நில்லா" என்ப் பலர் மொழிவது எல்லாம் இப்பாடினி வாயிலாகக் காணப்பட்டது என்று வியப்படைந்தான்.

இறைவனை வழிபடல்

2192. இராசராச பாண்டியன், மின் போன்ற சடையையுடைய சோமசுந்தரக் கடவுளை வலம் வந்து அப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு அழகிய தன் அரண்மனையை அடைந்தான். சேமநிதி பெற்றவனைப் போலச் சுகுண பாண்டியன் என்னும் மைந்தனைப் பெற்று மிகுந்த மகிழ்வோடு வாழ்ந்து வந்தான்.

இசைவாது வென்ற படலம் முற்றிற்று.

45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

2193. இருளைக்கந் தரத்தில் வைத்தோன் தன்னிடத்
தென்றும் அன்பின்
தெருளைத்தந் தவட்கு மாறாந் தெரிவையை யிசையால்
வெல்ல
அருளைத்தந் தளித்த வண்ணம் அறைந்தனந் தாயாய்ப்
பன்றிக்
குருளைக்கு முலைதந் தாவி கொடுத்தவாறு எடுத்துச்
சொல்வாம்.

2194. முறையென விமையோர் வேண்ட முளைத்தநஞ்
சயின்று சான்றாய்
உறையென மிடற்றில் வைத்த வும்பரான் மதுரைக்
காரந்
திறையென எறிநீர் வைகைத் தெற்கது குருவி ருந்த
துறையென வுளதோர் செல்வத் தொன்மணி மாட
மூதூர்.

2195. தருநாத னாதி வானோர் தங்குரு விருந்து நோற்பக்
குருநாதன் எனப்பேர் பெற்றுக் கோதிலா வரந்தந்
தேற்றில்
வருநாதன் சித்தி ரத்தேர் வலவனா ருடனே கஞ்சத்
திருநாதன் பரவ வைகி யிருக்குமச் சிறந்த வூரில்.

45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

2193. நஞ்சினைத் தன் கண்டத்தில் வைத்தருளிய சோமசுந்தரக் கடவுள் எப்போதும் தன்னிடம் உண்மை அன்பை வைத்த பாடினிக்கு அவள் பகையாகிய ஈழப் பாடினியை இசையினால் வெல்லுமாறு திருவருளைத் தந்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். இனி அப்பெருமானே பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்து உயிரைக் காத்த திருவிளையாடலை எடுத்துக் கூறுவோம்.

குருவிருந்த துறை

2194. தேவர்கள், "முறையோ?" என்று குறையிரந்து வேண்ட, கடலில் தோன்றிய நஞ்சை உண்டு அதனைத் தன் மிடற்றில் சான்றாகத் தங்க வைத்த சிவலோகநாதன் எழுந்தருளிய மதுரை மாநகர்க்குத் திறையாக முத்துக்களை வீசும் நீரினையுடைய வையையாற்றின் தெற்கிலே 'குருவிருந்த துறை' என்னும் பெயர் கொண்ட ஒரு பெரிய அழகிய ஊர் உள்ளது.

2195. அவ்வூரில் கற்பகத்தருவின் தலைவனான இந்திரன் முதலிய தேவர்களுக்குக் குருவாகிய வியாழ பகவான் தங்கி இருந்து தவம் புரிந்தார். சிவபெருமான் அவருக்குப் பல வரங்களைத் கொடுத்துக் 'குருநாதர்' என்னும் பெயருடன், இருந்தார். சிவபெருமானின் விசித்திரமான தேரைச் செலுத்தும் பாகனாகிய பிரமனும், தாமரை மலரில் வீற்றிருக்கும் இலட்சுமியின் மணாளனான திருமாலும் போற்றும்படி 'குருநாதர்' அப்பதியில் எழுந்தருளியிருந்தார். அத்தகைய சிறந்த பதியிலே,

2196. சுகலனென் றொருவே ளாளன் அவன்மனை சுகலை
யென்பாள்
இகலருங் கற்பி னாள்பன் னிருமகப் பெற்றாள்
செல்வப்
புகலருஞ் செருக்கா லன்ன புதல்வரைக் கடியா ராகி
அகலருங் களிப்பு மீதூ ரன்பினால் வளர்க்கு நாளில்.

2197. தந்தையுந் தாயு மாயத் தறுகண்மிக் குடைய ராகி
மைந்தரும் வேட ரோடு கூடிவெங் கானில் வந்து
வெந்தொழில் வேட்டஞ் செய்வார் வெயில்புகாப்
புதற்கீழ் எய்தி
ஐந்துவித் திருந்து நோற்குங் குரவனை யங்குக்
கண்டார்.

2198. கைத்தலம் புடைத்து நக்குக் கல்லும்வெம் பரலும் வாரி
மெய்த்தவன் மெய்யிற் றாக்க வீசினார் வினையை
வெல்லும்
உத்தமன் வீக்கஞ் செய்தார் தவத்தினுக் குவரென்
றுன்னிச்
சித்தநொந் தினைய வஞ்சத் தீயரைச் செயிர்த்து
நோக்கா.

2199. தொழுந்தொழின் மறந்து வேடத் தொழிலுழந் துழல்வீர்
நீர்மண்
உழுந்தொழில் உடைய நீரால் பன்றியி னுதரத் தெய்திக்
கொழுந்தழ லனைய வேனக் குருளையாய்த் தந்தை
தாயை
இழந்தல முறுமி னென்னா விட்டனன் கடிய சாபம்.

சுகலன் புதல்வர்கள் இழிநிலை அடைதல்

2196. 'சுகலன்' என்னும் பெயருடைய வேளாளன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் மனைவி 'சுகலை' என்று சொல்லப்படுவாள். மாறுபாடில்லாத கற்பினையுடைய அவள் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். செல்வத் தாலாய சொல்லுதற்கரிய செருக்கினால் அப்பெற்றோர்கள், தம் புதல்வர்களிடத்தில் குற்றம் கண்டபோது நல்வழிப் படுத்தாது மிக்க அன்போடு வளர்த்து வந்தனர்.

2197. இவ்வாறு வளர்ந்து வரும் நாளில் தாயும் தந்தையும் இறந்துவிட அப்புதல்வர்கள் வன்கண்மை மிக உடையவராகி வேடர்களோடு கூடிக் காட்டில் வந்து கொடுந்தொழிலாகிய வேட்டையாடும் தொழிலை மேற் கொண்டனர். ஒருநாள் சுகலன் புதல்வர்கள் அக்காட்டிலே வெயில் புகாத புதரின் கீழ்சென்று, ஐம்புலன்களையும் வென்று தியானம் நோற்கின்ற வியாழ பகவானைக் கண்டார்கள்.

சுகலன் புதல்வர்கள் தேவ குருவால் சாபம் பெறுதல்

2198. இரண்டு கைகளையும் ஒன்றொடொன்று தாக்கி நகைத்துக் கற்களையும் கொடிய பருக்கைகளையும் அள்ளி மெய்த்தவத்தினையுடைய வியாழ பகவான், உடம்பிலே தாக்கும்படி எறிவார்கள். இவ்வஞ்சகக் கொடியோரை, வினையைப் புறங்காணும் அவ்வுத்தமன், "இவர் நமது தவத்திற்கு இடையூறு செய்தவரே", என்று நினைத்து மனம் நொந்து சினம் கொண்டார்.

2199. "பெரியோரைக் காணின் வணங்கும் கடப் பாட்டினை மறந்து வேடர் தொழிலை மேற்கொண்டீர்! நீங்கள் நிலத்தை உழும் தொழில் உடையீர்கள். ஆதலால் கொழுவிய பன்றிக் குட்டிகளாய்ப் பிறந்து தாய் தந்தையரை இழந்து துன்பமடைவீர்களாக" என்று கொடிய சாபம் இட்டார்.

2200. பாவத்தை யனைய மைந்தர் பன்னிரு பேரும் அஞ்சிச்
சாவத்தை யேற்றெப் போது தணிவதிச் சாப மென்ன
ஆவத்தை யகற்று மீச னருட்கழ னினைந்து வந்த
கோவத்தை முனிவு செய்தக் கடவுளர் குரவன் கூறும்.

2201. என்னையா ளுடைய கூடல் ஏகநா யகனே உங்கட்
கன்னையாய் முலைதந் தாவி யளித்துமே லமைச்ச ராக்கிப்
பின்னையா னந்த வீடு தருமெனப் பெண்ணோர் பாகன்
றன்னையா தரித்தோன் சொன்னான் பன்னிரு தனயர் தாமும்.

2202. தொன்மைசால் குருவி ருந்த துறையதன் புறத்த வான
பன்மைசால் கான வாழ்க்கைப் பன்றிகட் கரசாய் வைகுந்
தன்மைசால் தனியே னத்தின் தன்பெடை வயிற்றிற் சென்று
வன்மைசால் குருளை யாகிப் பிறந்தனர் வழக்கால் மன்னோ.

2203. ஆனநா ளொருநாள் எல்லை யரசருக் கரச னான
மீனவன் மதுரை நீங்கி மேற்றிசைக் கான நோக்கி
மானமா வேட்டஞ் செய்வான் மத்தமா வுகைத்துத் தண்டாச்
சேனைதன் புறம்பே மொய்ப்பச் செல்கின்றான் செல்லு மெல்லை.

2200. பாவமே உருவம் கொண்டு வந்தாற் போன்ற அப்பன்னிரண்டு பேர்களும் பயந்து சாபத்தினை ஏற்று "இந்தச் சாபம் எப்போது நீங்கும்?" என்று வேண்டினர். தேவகுரு தனது சினம் தணிந்து உயிர்களுக்கு நேர்ந்த இடையூற்றினை நீக்கும் சிவபெருமானுடைய திருவருளை யுடைய திருவடியை மனத்தில் சிந்தித்துக் கூறத் தொடங்கினான்.

2201. "என்னை ஆளாக உடைய கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளே, உங்களுக்குத் தாயாய் வந்து முலை கொடுத்து உயிரைக் காத்துப் பாண்டியனுக்கு மந்திரிகளாகச் செய்தருளிப் பேரின்ப வீட்டினையும் அருளுவான்" என்று உமையம்மையை ஒரு கூறாக உடைய அவ்விறைவனைப் பேணி வழிபடும் அக்குரவன் கூறினான். பன்னிரு மைந்தர்களும்,

பன்றிக் குட்டிகளாகப் பிறத்தல்

2202. சுகலன் பிள்ளைகள் பன்னிருவரும், பழமை மிக்க குருவிருந்தத் துறையின் பக்கத்தில் உள்ள பல காடுகளில் சஞ்சரிக்கும் பன்றிகள் எல்லாவற்றிற்கும் அரசாகிய ஓர் ஒப்பற்ற பன்றியின் பெட்டை வயிற்றிற் போய்ச் சாப நெறியால் வலிமைமிக்க குட்டிகளாகப் பிறந்து இருந்தார்கள்.

இராசராச பாண்டியன் வேட்டைமேல் செல்லுதல்

2203. ஒருநாள் மன்னர்களுக்கு மன்னனாகிய இராச ராச பாண்டியன் மதுரையை விட்டு மேற்குத் திக்கில் உள்ள காட்டினை நோக்கி, பெரிய விலங்குகளை வேட்டையாட எண்ணித் தன்னுடைய சேனைகள் நெருங்கிச் சூழ்ந்து வர மதநீர் சிந்தும் யானையின் மேலேறி வருகின்றான்.

2204. மாவழங் கிடங்க டேர வல்லதோல் வன்கால் ஒற்றர்
பாவடிச் சுவடு பற்றிப் படர்ந்துநா றழல்பு லால்வாய்த்
தீவிழி யுழுவை ஏனந் திரிமருப் பிரலை புல்வாய்
மேவிட னறிந்து வல்லே விரைந்துவந் தெதிரே
சொன்னார்.

2205. மறத்துறை வேட்ட மாக்கள் வல்லைபோ யொடியெ
றிந்து
புறத்துவார் வலைகள் போக்கி நாயதன் புறம்பு போர்ப்ப
நிறைத்துமா வொதுக்கி நீட்டும் படைஞராய் நிரைசூழ்
நிற்ப
அறத்துறை மாறாக் கோலான் ஆனைமேல் கொண்டு
நிற்ப.

2206. சில்லரித் துடிகோ டெங்குஞ் செவிடுறச் சிலையா
நிற்பப்
பல்வகைப் பார்வை காட்டிப் பயில்விளி யிசையா
நிற்பர்
வல்லிய மிரலை மையல் மானினம் வெருளா நிற்ப
வில்லிற வலித்து வாங்கி மீளிவெங் கணைக
டூர்த்தார்.

2207. செறிந்தமான் முறிந்ததாள் சிதைந்தசென்னி செம்புனற்
பறிந்தவாறு வெண்ணிணம் பரிந்துவீசு கையிறா
மறிந்தவே முயர்ந்தவேழ மாண்டவெண்கு வல்லியம்
பிறிந்தவாவி யோடும்வாய் பிளந்தவாய் விழுந்தவே.

2204. விலங்குகள் பயிலும் இடங்களை அறியும் ஒற்றர்கள், விலங்குகளின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிச் சென்று புலால் நாறும் வாயினையும், நெருப்புப் போன்ற சினத்தீ எரியும் கண்களையும் உடைய புலிகளையும், பன்றிகளையும், திருகிய கொம்புகளைக் கொண்ட கலைமான்களையும், மானினங்களையும், அவை வாழிடங் களையும் அறிந்து அவற்றை விரைந்து வந்து தம் மன்னனிடம் சொன்னார்கள்.

2205. வேட்டை ஆடுதலில் வல்லார் முன்னே விரைந்து சென்று காடுகளை வெட்டிச் சரித்து புறம்பே வலைகளைக் கட்டி நாய்களைப் புறத்தே காவலாக வைத்து விலங்குகளை ஒரு வழிப்படுத்தி அவற்றின் மேல் விடும் படைகளை ஏந்திய வீரர்களைப் பக்கத்தில் நிறுத்தி வைத்தனர். அறநெறியினின்றும் மாறாத செங்கோலை யுடைய பாண்டியனும் யானையின் மேலேறி ஒருபால் நின்றனன்.

2206. அப்போது சில்லரி, உடுக்கை, ஒரு வகைக் கொம்பு முதலியவற்றை எவ்விடத்தும் செவிடுபடுமாறு ஒலித்தனர். ஆங்காங்கே பல வகையான பார்வை விலங்குகளை நிறுத்தி அவ்விலங்குகளின் ஒலிகளைப் போல ஒலித்து நின்றனர். புலிகளும், மான்களும் மத மயக்கத்தையுடைய யானைக் கூட்டங்களும் அஞ்சுமாறு வில் முறியுமாறு வில்லை வளைத்து வலிய கொடி கணைகளைப் பொழிந்தனர்.

2207. மான்களில் சில கால் முறிந்து விழுந்தன. சில தலை சிதைந்து பாய்ந்தன. குருதி ஆறாகப் பெருகி ஓடியது. ஏழு முழம் உயர்ந்த யானைகள் அசைகின்ற துதிக்கை அற்று வெள்ளிய நிணம் சிந்தி மாண்டன. கரடிகளும், புலிகளும் வாய்பிளந்து உயிர் நீங்கி வீழ்ந்தன.

2208. தொட்டபுற் கிழங்குவாடை தொடைவிரைந்து
கண்ணியுட்
பட்டவும் பொறித்துவைத்த பார்வைவீழ்ந் தடுத்தவுங்
கட்டியிட்ட வலைபிழைத்து ஞமலிகௌவ நின்றவும்
மட்டிலாத வொட்டிநின்ற மள்ளர்வேலின் மாய்ந்தவே.

2209. பட்டமா வொழிந்துநின்ற மறவிலங்கு பல்சில
வட்டமா வளைந்துடுத்த வலையினுந்தி யப்புறத்
தெட்டிநின்ற கொலைஞர்மே லெதிர்ந்துமீள்வ
வெயில்வளைத்
தொட்டினாரை மலையுமாப் பொறிக்கணங்க
ளொத்தவே.

2210. வல்லியந் துளைத்தகன்று மான்றுளைத் தகன்றுவெங்
கல்லியங்கு மெண்கினைத் துளைத்தகன்று கயவுவாய்
வெல்இபந் துளைத்துமள்ளர் விட்டவாளி யிங்ஙனஞ்
சொல்லினுங் கடிந்துபோய்த் துணித்தமா வளப்பில.

2211. மடுத்தவாளி யிற்பிழைத்து வலையைமுட்டி யப்புறத்
தடுத்தமானை வௌவிநாய் அலைத்து நின்ற ஆதிநாள்
உடுத்தபாச வினையினின்று முய்குவாரை ஒய்யெனத்
தடுத்தவா விளைத்துநின்ற தையலாரை யொத்தவே.

2208. தோண்டிய புல்லின் மணமும், கிழங்கின் மணமும் வீச விரைந்து ஓடி வந்த பன்றிகள் வலைகளிலே வீழ்ந்தன. கட்டி வைத்த வலையினின்றும் தப்பி ஓடிய விலங்குகளை வேட்டை நாய்கள் கௌவி நிறுத்தின. அளவற்ற விலங்குகள் அருகில் நின்ற வீரர்களின் வேற் படையால் மாய்ந்தன.

2209. இறந்தது போக, வேற்படைக்கு இலக்காகாது பிழைத்து நின்ற கொடிய மிருகங்கள் வட்டமாக வளைந்து சூழ்ந்த வலையினின்றும் தாவிப் புறத்தே அடுத்து நின்ற வேட்டுவ மாக்கள் மீது பாய்ந்து மீளும். மதிலைச் சூழ்ந்து எதிர்த்த பகைவரைத் தாக்கும் பொறிகளாகிய விலங்குக் கூட்டங்களை அக்காட்சி ஒத்திருந்தது.

2210. வீரர்கள் இட்ட கணைகள் முனிவர் இடும் சாப மொழியினும் விரைந்து சென்று புலிகளையும், மான்களையும் வெப்பமமைந்த மலைகளில் இயங்கும் கரடி களையும், பெரிய வாயினையுடைய வெற்றிமிக்க யானை களையும் துளைத்துச் சென்றன. இவ்வாறு துண்டிக்கப்பட்டு இறந்த விலங்குகள் அளவிறந்தன.

2211. பாய்ந்த கணைகளினின்றும் தப்பி வலையைக் கிழித்துக் கொண்டு அப்புறம் ஓடிய மான்களைக் கௌவி வருத்தி நின்றனவாகிய நாய்கள், முன்னாளில் சூழ்ந்த பாசமாகிய வலையினின்றும் தப்பிப் பிழைத்துச் செல்லும் பெரியோரை, விரைந்து தடுத்து ஆசையை விளைத்து நின்ற பெண்களை ஒத்தன.

2212. மதியைநேர் வகிர்ந்து கௌவி யனையவான்
மருப்புவெங்
கதியவேழ மீதுதாது காலுநீல முகையின்நீள்
நுதியவே னுழைந்தசெம்பு ணூழில்வீழு முதிரநீர்
முதியகான வரையின்மீது மொய்த்ததீயை யொத்தவே.

2213. மள்ளரோசை துடியினோசை வயிரினோசை
வாளிபோய்த்
தள்ளவீழ் விலங்கினோசை தப்பியோடு மானின்மேற்
துள்ளுநாய் குரைக்குமோசை கானமூடு தொக்குவான்
உள்ளுலா யுடன்றொலிக்கும் உருமினோசை புரையுமால்.

2214. இன்னவேறு பல்விலங் கெலாமலைத் திலங்குவேல்
மன்னரேறு தென்னர்கோ மகன்குடக்கி னேகுவான்
அன்னபோதொ ரேனமேன வரசிருக்கு மடவிவாய்
முன்னரோடி வந்துநின்று வந்தசெய்தி மொழியுமால்.

வேறு

2215. எங்களுக் கரசே கேட்டி யிங்குள விருக மெல்லாந்
திங்களுக் கரசன் கொன்று வருகிறான் என்று செப்ப
வெங்களிப் படைந்து பன்றி வேந்தனு மடுபோ ராற்றச்
சங்கையுற் றெழுந்து போவான் றன்னுயிர்ப் பெடையை
நோக்கா.

2212. சந்திரனை இருகூறாகப் பிளந்து கௌவினாற் போன்ற வெள்ளிய மருப்பினையும் வெய்ய நடையினையு முடைய யானையின் மேல், நீலோற்பலத்தின் அரும்பு போல நஞ்சுபூசிய வேற்படையை ஊடுருவிய பசும் புண்ணின் தொளையினின்று பொழியும் குருதிநீர், முற்றிய மரங்களையுடைய காடு அடர்ந்த மலையின் மேல் சூழ்ந்த நெருப்பினை ஒத்தது.

2213. வீரர்களின் ஆர்ப்பொலியும், உடுக்கையின் ஒலியும் ஊது கொம்பின் ஒலியும் அம்புகளால் தாக்கப் பட்டு வீழுகின்ற விலங்குகளின் ஒலியும், வலையிலிருந்து தப்பியோடும் மான்களின் மேல் தாவுகின்ற நாய்களின் குரைப்பு ஒலியும் காட்டின்கண் ஒரு சேரத் திரண்டு வானின் கண் இடிக்கும் இடியின் ஓசையை ஒத்திருந்தன.

ஒரு பன்றி அரச பன்றியைச் சந்தித்துப் பேசுதல்

2214. இங்ஙனம் பல்வேறு வகையான விலங்குகளை யெல்லாம் வருத்தி அரசருள் ஏறு போன்றவனும் வேற் படையை ஏந்தியவனுமான பாண்டிய மன்னன் மேற்றிசை நோக்கிச் செல்வானாயினான். அப்போது ஒரு பன்றி, பன்றியரசன் இருக்கும் காட்டின்கண் முன்னர் ஓடி வந்து நின்று தான் வந்த செய்தியைக் கூறும்.

2215. "எங்களுக்கு அரசனே கேட்பாயாக! இங்குள்ள விலங்குகளனைத்தையும் சந்திரன் மரபினனாகிய பாண்டியன் கொன்று வருகின்றான்" என்று சொன்னது. உடனே அப்பன்றியரசனும் அதனைக் கேட்டுப் பெரும் களிப்படைந்து கொல்லுதலையுடைய பெரிய போர் புரிய எழுந்து செல்லும்போது, தனது உயிர் போன்ற பெண் பன்றியை நோக்கி,

2216. இன்றுபாண் டியனை நேரிட் டிருஞ்சமர் ஆடி வென்று
வன்றிறல் வாகை யோடு வருகுவ னேயோ அன்றிப்
பொன்றுவ னேயோ நீயுன் புதல்வரைப் பாது காத்து
நன்றிவ ணிருத்தி யென்ன நங்கைப்பே டின்ன கூறும்.

2217. ஆவியங் கேக விந்த வாகமிங் கிருப்ப தேயிப்
பாவியோ மேனாள் அந்தப் பறழினை வகுத்த தெய்வம்
மாவம ராடி வென்று வருதியேல் வருவே னன்றி
நீவிளிந் திடத்து மாய்வேன் நிழலுக்குஞ் செயல்வே
றுண்டோ.

2218. போதுக மெழுக வென்னாப் பொருக்கென வெழுந்து
நீலத்
தாதுற ழேனப் பாட்டி தன்புடை தழுவிச் செல்லும்
பேதுறு பறழை நூக்கிப் பின்றொடர்ந் தணைந்து
செல்லக்
காதெயிற் றெறுழி வேந்தன் காலென நடந்தான்
அன்றே.

2219. பல்வகைச் சாதி யுள்ள பன்றியின் கணங்கள் எல்லாம்
வெல்படைத் தறுகட் சேனை வீரராய் முன்பு செல்லச்
செல்லெனத் தெழித்துச் செங்கட் டீயுக மான
மென்னும்
மல்லல்வாம் புரவி மேல்கொண் டெழுந்தனன் வராக
வீரன்.

2216. "இன்று பாண்டியனை எதிர்த்து நான் பெரிய போர் புரிந்து வெற்றி பெற்று வெற்றி மாலையுடன் வருவேனோ? அல்லது இறந்து படுவேனோ? அறியேன், நீ உன் புதல்வர்களை நன்றாகப் பாதுகாத்துக் கொண்டு இங்கு இருப்பாயாக" என்று கூறியது. அதற்குப் பெண் பன்றி,

2217. "என் பிராணநாயகனே! உயிர் அங்குச் செல்ல, இந்த உடல் இங்குத் தனித்திருப்பது வழக்கமோ? முன்னாளில் இக்குட்டிகளை வகுத்த தெய்வம், இப்பாவியோ? அது வேறு. ஆதலின் நானும் வந்து நீ பெரும் போர் புரிந்து வெற்றி பெறுவாயேல் உன்னுடன் மீள்வேன். அல்லாமல் நீ இறந்து படுவாயேல் அங்ஙனமே யானும் இறந்தொழிவேன். உடம்பின் நிழலுக்கு அவ்வுடம்பைத் தொடர்ந்து செல்வதன்றி வேறு செயலும் உளதோ?

ஆண் பன்றி போருக்குச் செல்லல்

2218. ஆதலின் செல்வோம். எழுக!" என்று கூறி விரைந்து எழுந்தது. இரும்பினையொத்த நிறத்தையுடைய பெண் பன்றி தனக்குப் பக்கத்தில் வந்து தழுவி நின்ற குட்டிகளைத் தள்ளிவிட்டு நிழல்போல் தன் கணவனைப் பின்பற்றி அணைந்து செல்ல, கொல்லுகின்ற பற்களை யுடைய ஆண் பன்றி காற்றெனக் கடிது சென்றது.

பன்றி வீரர்களின் பெரும் போர்

2219. பல்வேறு சாதியான பன்றிக் கூட்டங்கள் அனைத்தும் வெல்லும் படை வீரராய் அஞ்சாமல் முன்னே செல்ல அரசப் பன்றி இடி போல ஒலித்துக் கண்களி னின்றும் சினத்தீ சிந்த மானம் என்கிற தாவுகின்ற வலிய குதிரை மேல் ஏறிப் போருக்கு எழுந்தது.

2220. முற்படு தூசியாக நடக்கின்ற முரட்காற் பன்றி
மற்படு சேனை நேரே வருகின்ற மன்னர் மன்னன்
வெற்படு தடந்தோள் வன்றாள் வீரமேற் சீறிச் செல்லப்
பிற்பட வொதுங்கி வீரர் பெய்தனர் அப்புமாரி.

2221. சொரிந்தன சோரி வெள்ளஞ் சொரிந்தன வீழ்ந்த யாக்கை
சரிந்தன குடர்கள் என்பு தகர்ந்தன வழும்பு மூளை
பரிந்தன சேனங் காகம் படர்ந்தன வுயிரு மெய்யும்
பிரிந்தன ஏவன நின்ற பிறைமருப் பேன வீரர்.

2222. பதைத்தனர் எரியிற் சீறிப் பஞ்சவன் படைமேற் பாய்ந்து
சிதைத்தனர் சிலரைத் தள்ளிச் செம்புனல் வாயிற் சோர
உதைத்தனர் சிலரை வீட்டி யுரம்பதை படக்கோ டூன்றி
வதைத்தனர் சிலரை நேரே வகிர்ந்தனர் சிலரை மாதோ.

2223. தாள்சிதைந் தாருஞ் சில்லோர் தலைசிதைந் தாருஞ் சில்லோர்
தோள்சிதைந் தாருஞ் சில்லோர் தொடைசிதைந் தாருஞ் சில்லோர்
வாள்சிதைந் தாருஞ் சில்லோர் வரையறுத் தலரோன் தீட்டும்
நாள்சிதைந் தாருஞ் சில்லோர் நராதிபன் சேனை வீரர்.

2220. முன்னணியில் நிற்கின்ற முரட்டுக் கால்களை யுடைய வலிமைமிக்க படை எதிரே வருகின்ற வேந்தர் வேந்தனாகிய பாண்டியனது மலை பொருது வென்ற பெரிய தோள்களையும் வலிய தாள்களையுமுடைய வீரர்கள் மீது சீறிச் செல்ல அவ்வீரர்கள் பின்னே ஒதுங்கி நின்று அம்பு மழையைப் பொழிந்தனர்.

2221. குருதிகள் பொழிந்து வெள்ளமாகப் பெருகிற்று. பன்றிகளின் உடல்கள் கீழே வீழ்ந்தன. குருடர்கள் சரிந்தன. எலும்புகள் முறிந்தன. மூளைகள் சிதறின. அதைத் தின்னப் பருந்துகளும், காகங்களும் மேலே பறந்தன. பன்றிகள் இவ்வாறு உயிர் வேறு உடல் வேறாகப் பிரிந்தன. பிழைத்து நின்ற பிறை போன்ற கோட்டினையுடைய பன்றி வீரர்.

2222. நெருப்பைப் போலச் சினந்து உடல் பதைத்து பாண்டியன் படை மீது பாய்ந்து சிலரைச் சிதைத்தனர். சிலரைக் கீழே தள்ளி அவர்கள் வாயிலிருந்து குருதி ஒழுகுமாறு உதைத்தனர். சிலரை வீழ்த்தி அவர் மார்பில் கொம்பு புதையுமாறு அழுத்திக் கொன்றனர். சிலர் உடலைச் சரிபாதியாகக் கிழித்தார்கள்.

2223. பாண்டிய வேந்தனுடைய படை வீரர்களில், கால் முறிந்தவர் சிலர். தலையுடைந்தவர் சிலர். தோள் முறிந்தவர் சிலர். தொடை நொறுங்கினவர் சிலர். சிலர் வாட்படை அற்றனர். சிலர் பிரமன் வரையறுத்து விதித்த வாழ்நாளைப் போக்கினர்.

2224. கண்டனர் கன்னி நாடு காவலன் அமைச்சர் சீற்றங்
கொண்டனர் முசல நேமி கூற்றென வீசி யார்த்தார்
விண்டனர் மாண்டார் சேனை வீரரு வனைய
வெல்லைப்
புண்டவ ழெயிற்று வேந்தைப் புடைநின்ற பேடை
நோக்கா.

2225. ஏவிய சேனை யெல்லாம் இறந்தன வினிநாஞ் செய்ய
லாவதென் வாளா நாமு மழிவதிங் கென்னை தப்பிப்
போவதே கரும மென்று புகன்றதத் துணையை
நோக்கிச்
சாவதை யஞ்சா ஏனத் தனியர சொன்று சாற்றும்.

2226. நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னாலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத் தாத
லாலுன்
கண்ணறி வுடைமைக் கேற்ற காரியம் உரைத்தாய்
மானம்
எண்ணறி வுடையோர்க் கெல்லா மிழுக்குடைத் தன்றோ
ஈதால்.

2227. தூங்கிருள் வறுவாய்ச் சிங்கம் இரண்டுறை துறையின்
மாடோர்
வாங்கிரு மருப்புக் கேழல் வந்துநீர் பருகி மீளும்
வீங்கிரு ளுடற்கா ரேன மொன்றுறை துறையில் வீரந்
தாங்கிரு மடங்க னீர்க்குத் தலைப்பட வஞ்சு மன்றே.

2224. கன்னி நாட்டினைக் காவல் செய்யும் பாண்டிய மன்னனது அமைச்சர் இதனைக் கண்டு சினம் கொண்டனர். கூற்றுவனைப் போல இரும்புலக்கைகளையும் திகிரிகளையும் எறிந்து ஆரவாரித்தனர். அவற்றால் படை வீரர் அனைவரும் விண்டு மாண்டனர். அப்பொழுது பகைவரின் புலாலில் உலாவும் பற்களையுடைய பன்றி வேந்தனைப் பக்கத்தில் நின்ற பெண் பன்றி பார்த்தது.

2225. "ஏவிய படை முழுதும் மாண்டன. இனி நாம் செய்யக் கடவது என்னை? நாமும் இங்கே வீணாக உயிர் விட வேண்டியதில்லை. உயிர் தப்பிப் போவதே நமக்குரிய செயலாகும்" என்று கூறியது. சாவதற்கு அஞ்சாத ஒப்பற்ற பன்றியரசு அவ்வாறு கூறிய மனைவியைப் பார்த்து ஒன்று கூறத் தொடங்கியது.

2226. "நுண்ணிய அறிவினையுடையராகி நூலோடு பழகினாலும் பெண்ணறி வென்பதெல்லாம் பேதைமத்தே! ஆதலால் உன்னறிவுக்கேற்ற காரியம் சொன்னாய். மானத்தைப் பொருளாகக் கருதும் அறிவுடையோர் அனைவருக்கும் இது குற்றமுடையதல்லவா?

2227. இருள் தங்கிய வறிய வாயினையுடைய இரண்டு சிங்கங்கள் நிற்கின்ற நீர்த்துறையிலே, இரண்டு வளைந்த கொம்புகளையுடைய பன்றி வந்து அஞ்சாது நீர்குடித்து விட்டுச் செல்லும். ஆனால் இருள் போன்ற பெரிய உடலை யுடைய ஒரு பன்றி நிற்கிற நீர்த் துறையில் வீரத்தை அணியாகத் த,,ங்கிய இரண்டு சிங்கங்கள் நீர் பருகுவதற்கு வர அஞ்சும்.

2228. அத்திட மரபின் வந்து பிறந்துளேன் ஆத லாலே
கைத்திடு தாரான் வீரங் கவர்ந்திசைதிசையும் வானும்
வைத்திட வல்லே னன்றி மடிந்திட வல்லே னாகிற்
பொய்த்திடு முடம்பே யன்றிப் புகழுடம் பழிவ துண்டோ

வேறு

2229. நீநில் லெனத்தன் பெடைதன்னை நிறுத்தி நீத்தென்
கானில் லெனவாழ் கருமாவின் கணங்கள் எல்லாம்
ஊனில் லுயிருண் டனமென்றினி யோடல்கூடற்
கோனில் லெனஆர்ப் பவன்போலக் கொதித்து
நேர்ந்தான்.

2230. நிலத்தைக் கிளைத்துப் பிலங்காட்டி நிமிர்ந்த தூள்வான்
தலத்தைப் புதைப்பத் தனியேன வரவு நோக்கி
வலத்தைப் புகழ்ந்தான் வியந்தான் சிலைவாங்கி
வாளிக்
குலத்தைச் சொரிந்தான் பொருநைத்துறைக் கொற்கை
வேந்தன்.

2231. குறித்துச் செழியன் விடுவாளியைக் கோல வேந்தன்
பறித்துச் சிலவாளியை வாய்கொடு பைம்புல் என்னக்
கறித்துச் சிலவாளியைக் கால்கொடு தேய்த்துத்
தேய்த்து
முறித்துச் சிலவாளியை வாலின் முறித்து நின்றான்.

2228. யான் அத்தகைய வீரம் வாய்ந்த குடியில் வந்து பிறந்தேன். ஆகையால் கைப்பினையுடைய வேப்பம் பூ மாலையை அணிந்த இப்பாண்டியனுடைய வீரத்தைக் கொள்ளை கொண்டு எனது புகழை எட்டுத் திக்குகளிலும், விண்ணுலகத்திலும் நாட்டுவேன். அங்ஙனம் செய்யாது போனால் புறங்கொடாது போர்க்களத்தில் மடிவேன். என்றும் அழியும் தன்மையுடைய இப்பூதவுடம்பு அழிவதே யன்றி புகழுடம்பு அழிவதில்லை.

2229. ஆகவே, அஞ்சுகின்ற நீ இங்கு நிற்பாயாக!" என்று கூறித் தன் பெண் பன்றியை நிறுத்தி விட்டுத் தான் மட்டும் தனித்துச் சென்றது. அப்போது, "பாண்டியனே! என் காட்டில் வாழ்ந்த பன்றிக் கூட்டம் முழுவதையும் கொன்று விட்டோம் என்று மகிழ்ந்து இனி ஓடாதே நில்" என்று ஆரவாரம் செய்து வெகுண்டு எதிர்த்தது.

2230. பெரிய கோபத்தால் நிலத்தைக் கீறிப் பாதாளத்தைக் காட்டித் துகள் விண்ணினை மறைக்க எழுந்து நிமிர்ந்து சென்றது. ஒப்பில்லாத அப்பன்றியின் வருகையைப் பொருநை யாற்றின் துறையையும் கொற்கைப் பதியையும் உடைய பாண்டிய வேந்தன் கண்டு அதன் வீரத்தைப் புகழ்ந்து பாராட்டினான். வில்லை வளைத்து அம்புக் கூட்டங்களை அவ்வரச பன்றியின் மேல் சொரிந்தான்.

2231. தன்னைக் குறியாக வந்து தைத்த அம்புகளைப் பன்றியரசு உடம்பினின்று அவற்றைப் பிடுங்கிப் பசிய புல்லைப் போல வாயாலே கடித்தது. சில கணைகளைக் கால்களாலே தேய்த்துத் தேய்த்து முறித்தது. சிலவற்றை வாலினால் முறித்தது.

2232. மானம் பொறாது மதியின்வழி வந்த வேந்தன்
தானம் பொறாது கவிழ்க்கும்புகர்த் தந்தி கையில்
ஊனம் பொறாத முசலங்கொடுத் தேறி யுய்த்தான்
ஏனம் பொறாதார்த் திடியேற்றின் எழுந்த தன்றே.

2233. தந்திப் பொருப்பைத் துணிக்கென்று தழன்று சீற்றம்
உந்திக் கதலிக் கொழுந்தண்டென வூசற் கையைச்
சிந்திப் பிறைவாள் எயிறோச்சிச் சிதைத்து வீட்ட
முந்திக் கடுந்தேர் மிசைப்பாய்ந்தனன் மூரித் தாரான்.

2234. திண்டேர் மிசைநின் றடனேமி திரித்து விட்டான்
கண்டேன வேந்தன் விலக்கிக் கடுங்காலிற் பாய்ந்து
தண்டே ருடையத் தகர்த்தான்பரி தன்னிற் பாய்ந்து
வண்டேறு தாரான் விடவேலை வலந்தி ரித்தான்.

2235. சத்திப் படைமேல் விடுமுன்னர்த் தறுகண் வீரன்
பத்திச் சுடர்மா மணித்தார்ப்பரி மாவின் பின்போய்
மொத்திக் குடர்செம் புனல்சோர முடுகிக் கோட்டாற்
குத்திச் செகுத்தான் பொறுத்தானலன் கூடல் வேந்தன்.

2236. மண்ணிற் குதித்து வலிகண்டு வராக வேந்தை
எண்ணித் தலையிற் புடைத்தான்கை யிருப்புத்
தண்டாற்
புண்ணிற் படுசெம் புனல்ஆறு புடவி போர்ப்ப
விண்ணிற் புகுந்தான் சுடர்கீறி விமான மேலால்.

2232. அதனைக் கண்ட சந்திர மரபில் வந்த இராசராச பாண்டியன் மனம் பெறாமல், மதநீரைப் பொறுக்க லாற்றாது கொட்டுகின்ற முகத்தில் புள்ளி களையுடைய யானையின் கையில் இரும்புலக்கையைக் கொடுத்து அதன் மேல் ஏறிச் செலுத்தினான். அதனைக் கண்ட பன்றி பொறுக்கலாற்றாது இடிபோல் முழங்கி எழுந்தது.

2233. "மலை போன்ற இவ் யானையைத் துணிப்பேன்" என்று சினந்து பாய்ந்து, வாழையின் கொழுவிய தண்டைப் போல் ஊசலாடும் துதிக்கையைத் துணித்து, பிறை போன்ற ஒள்ளிய கொம்பால் உடலைச் சிதைத்துக் கொன்றது. வலிய சேனையையுடைய பாண்டியன் முற்பட்டு விரைந்து, செலவினையுடைய தேரின் மேல் ஏறிக் கொண்டான்.

2234. வலிய தேரின் மேல் நின்று கொண்டு கொல்லும் திகிரிப்படையைச் சுழற்றி விட்டான். பன்றியரசன் அதனைக் கண்டு தடுத்து, கடிய காற்றைப் போல விரைந்து பாய்ந்து தண்ணிய நிழலையுடைய தேர் சிதையும்படி உடைத்தான். வண்டுகள் மொய்க்கும் மாலை அணிந்த பாண்டியன் பின்பு குதிரை மேற் பாய்ந்து ஏறி நஞ்சு பூசிய வேற்படையை வலமாகச் சுழற்றினான்.

பன்றியரசு விண்ணுலகைடதல்

2235. அவன் அதை விடுமுன் அஞ்சாமல் நின்ற அப்பன்றி ஒளிவிளங்கும் பெரிய மணிகள் அழுந்திய கிண்கிணி மாலையணிந்த அந்தக் குதிரையின் பின் சென்று தாக்கி, குடலும் குருதியும் சோர, கொம்பினால் விரைந்து குத்தி அதனைக் கொன்றான். பாண்டியன் அது கண்டு பொறுக்கலாற்றாது, சினந்து,

2236. நிலத்திலே குதித்து, பன்றியரசனின் வலிமையைக் கண்டு மதித்து, பின் கையில் உள்ள இரும்புத் தண்டால் தலையில் அடித்தான். உடனே பன்றியரசின் உடலிலிருந்து பெருகும் இரத்த வெள்ளம் புவியை மூட உயிரை விடுத்து, சூரிய மண்டலத்தைக் கிழித்து விமான மீதேறி விண்ணுலகைடைந்தான்.

2237. வேனிற் கிழவோனில் விளங்கி வியந்து வானோர்
தேனிற் பொழிபூ மழைபெய்ய நனைந்து தெய்வக்
கானத் தமுதுண் டிருகாது களித்து வீர
வானத் தமுதுண்டு அரமங்கையர் கொங்கை
சேர்ந்தான்.

வேறு

2238. பின்றுணை யாய பெடைத்தனி யேனம்
என்றுணை மாய விருப்பது கற்போ
வென்றிலன் ஏனும் விசும்படை வேனால்
என்றிகல் வேந்தை யெதிர்த்த துருத்தே.

2239. விறனவில் பேட்டை விளிப்பது வேந்தர்க்
கறனல வென்றவன் ஆள்வினை மள்ளர்க்
கிறைமக னான சருச்சர னென்றோர்
மறமக னேர்ந்தம ராட வளைந்தான்.

2240. நனிபொழு தாடம ராடின னஞ்சிற்
கனிசின வன்பெடை காய்சின வேடத்
தனிமக னைத்தரை வீட்டின தாற்றல்
இனியிலை யென்ன விளைத்துயிர் சோர்வான்.

2241. இரும்புசெய் தண்டினை யிம்மென வோங்கிப்
பொரும்பெடை சென்னி புடைத்து விளிந்தான்
விருந்தின ராயிரு வோரும் விமானத்
தருந்திறல் வானம் அடைந்தன ரன்றே.

2237. அப்போது அப்பன்றியரசன் மன்மதனைப் போல் விளங்கித் தேவர்கள் வியந்து பொழிந்த பூ மழையான மழையில் நனைந்தான். தெய்வத்தன்மை பொருந்திய தேவ இசையாகிய அமுதினை இருசெவிக ளாலும் பருகி மகிழ்ந்து வீர சொர்க்கத்தில் உள்ள தேவ அமுதினை உண்டு அர மாதர்களின் கொங்கையை அணைத்தான்.

பெண் பன்றியின் போர்

2238. துணையாக நின்ற ஒப்பற்ற பெண் பன்றி "என் துணைவன் இறப்ப நான் உயிருடன் வாழ்வது கற்பு நெறியாமோ? நான் போர் செய்யின் வெல்லேனாயினும் என் துணைவனோடு விண்ணுலகம் சேர்வேன்" என்று கருதி பகைமை உடைய பாண்டிய மன்னனைச் சினந்து எதிர்த்தது.

2239. "வீரங் கூறி எதிர்த்த இப்பெண் பன்றியை மாய்ப்பது மன்னர்க்கு அறமல்ல" என்று அம்மன்ன னுடைய போர்த் தொழில் வீரர்கட்குத் தலைவனான 'சருச்சரன்' என்ற பெயருடைய ஒரு வேடன் தானே எதிர்த்துப் போர் புரிவதற்குச் சூழ்ந்தான்.

2240. அவன் அப்பெண் பன்றியை எதிர்த்து நெடுநேரம் போர் புரிந்தான். நஞ்சினும் கொடிய சினத்தை யுடைய அப்பெண் பன்றி, காய்கின்ற சினத்தையுடைய வேடனாகிய 'சருச்சரனை' தரையில் வீழ்த்தியது. இனிப் போர் புரிய வலியில்லை என்று சொல்லுமாறு மெலிந்து அவன் உயிர் சோர்ந்தான்.

2241. இரும்பாற் செய்த தண்டத்தை விரைந்து ஓங்கிப், பெண் பன்றியின் தலையில் அடித்து இறந்தனன். அவ்விருவரும் விமானத்திலேறி வீர சொர்க்கத்திற்குச் சென்றனர்.

2242. வன்றிறன் மன்னவர் மன்னவனும் தன்
பொன்றிகழ் மாநகர் புக்கன னிப்பாற்
பன்றி விழுந்து பருப்பத மாகா
நின்றது பன்றி நெடுங்கிரி யென்ன.

2243. அன்று தொடுத்தத னுக்கது பேராய்
இன்றும் வழங்குவ திம்பரி னந்தக்
குன்றில் அருந்தவர் விஞ்சையர் கோபம்
வென்றவ ரெண்ணிலர் வீடுற நோற்பார்.

வேறு

2244. என்று கூறிய அருந்தமிழ்க் கிலறவனை நோக்கி
துன்று மாதவர் அறிவிலாச் சூகர் வுருவக்
குன்றின் மீதிருந் தவரெலாங் கோதற நோற்று
நின்ற காரணம் யாதெனக் குறுமுனி நிகழ்த்தும்.

2245. வேனில் வேளென விளங்குவிச் சாதரன் என்னுந்
தான யாழ்மகன் புலத்தியன் தவத்தினுக் கிடையூ
றான பாண்செயப் பன்றியாச் சபித்தன னறவோன்
ஏன மாகுவோன் உய்வதென் றெனக்கென முனிவன்.

பன்றிமலை

2242. மிக்க வலியினையுடைய இராசராச பாண்டியனும் தனது அழகிய பெரிய நகரிற் புகுந்தான். அப்புறம் அப்பன்றி கீழே விழுந்து இறந்த இடம், 'பன்றிமலை' என்று அனைவரும் எண்ணும்படி பெரிய மலையாகியது.

2243. இந்நிலவுலகில் அன்று முதல் அம்மலைக்குப் பன்றிமலை என்பதுவே பெயராகி இன்று வரை வழங்கி வருகின்றது. அப்பன்றி மலையில் முனிவரும் விஞ்சையரும் ஆகிய அளவிறந்தோர் முக்திபெறும் பொருட்டுத் தவம் புரிந்து வருகின்றனர்.

பன்றி அரசனின் முற்பிறப்பு

2244. என்று இவ்வாறு கூறிய அருந்தமிழ் அகத்திய முனிவனைப் பார்த்து, நெருங்கி இருந்த முனிவர்கள், நோக்கி, "அறிவில்லாத பன்றியின் வடிவமாகிய மலையின் மீது முனிவர் விஞ்சையர் முதலியோர் தவம் புரியக் காரண் யாது? என்று வினவினார். அகத்திய முனிவர் பதில் கூறத் தொடங்கினார்.

2245. "வேனிற் காலத்திற்குரிய மன்மதன் போலப் பேரழகு கொண்டு விளங்கிய 'விச்சாதரன்' என்னும் இயக்கன், புலத்தியமுனிவன் என்ற முனிவனின் தவத்திற்கு இடையூறு உண்டாகும்படித் தாளங்கள் அமைந்த யாழ் வல்ல இடைப்பாட்டினைப் பாடினான். அம்முனிவன் அவனைப் பன்றி ஆகுமாறு சபித்தனன். அங்ஙனம் பன்றியாகும் அவன் 'அடியேனுக்கு இச்சாபம் நீங்குவது எப்போது?' என்று வேண்டினன். அம்முனிவன்.

2246. மன்னர் மன்னனாந் தென்னவன் வந்துநின் வனத்திற்
துன்னு பல்வகை விலங்கெலாந் தொலைத்துனை
மாய்க்கும்
பின்னர் இவ்வுருப் பெறுகெனப் பணித்தன னியக்கன்
அன்ன வாறுவந் திறந்துபின் பழவுரு வடைந்தான்.

2247. ஆய புண்ணிய விஞ்சையன் ஆகமாய்க் கிடந்த
தூய நீரதா லவ்வரை மீமிசைத் துறந்த
பாய கேள்விய ரிறைகொளப் பட்டதெவ் வுயிர்க்கும்
நாய னார்மது ரேசரு நயந்தவ ணுறைவார்.

2248. என்ற கத்தியன் விடைகொடுத் தியம்பினன் இப்பாற்
பன்றி ஏற்றையும் பாட்டியும் பைம்புனத் திட்டுச்
சென்ற விந்தபின் பன்னிரு குருளையுந் திகைப்புற்று
அன்ற லக்கணோ யுழந்தமை யாரளந் துரைப்பார்.

2249. ஓடு கின்றன தெருமரல் உறுவன நிழலைத்
தேடு கின்றன தாய்முலைத் தீயபால் வேட்டு
வாடு கின்றன தாகவெம் பசிநனி வருத்த
வீடு கின்றன வெயில்சுட வெதும்புகின் றனவால்.

2250. இன்ன வாறிவை யணங்குறு மெல்லைவேல் வல்ல
தென்ன ராகிய தேவர்க டேவரங் கயற்கண்
மின்ன னாளொடு மின்னவிர் விமானமீ தேறி
அன்ன கானகத் திச்சையால் ஆடல்செய் திருந்தார்.

2246. 'இராசராச பாண்டியன் வந்து நின் காட்டில் பலவகையான விலங்குகளையெல்லாம் மாய்த்து உன்னையும் கொல்லுவான். பின் இந்த வடிவத்தைப் பெறக் கடவை' என்று அருளிச் செய்தான். அந்த இயக்கன் அங்ஙனமே பன்றியாக வந்து இறந்தபின் பழைய வடிவத்தை பெற்றனன்.

2247. "அந்தப் புண்ணிய வடிவினன் ஆகிய இயக்கனுடைய உடலாகக் கிடந்த அது தூயதன்மையுடையதாகும். அதனால் அம்மலையின் மேல் சிறந்த முனிவர் முதலியோர் தங்கித் தவம் புரிந்தனர். எல்லா வுயிர்கட்கும் இறைவராகிய மதுரேசரும் அவ்விடத்தில் விருப்பத்துடன் எழுந்தருளி இருப்பார்."

2248. என்று அகத்தியமுனிவர் பதில் கூறியருளினார். பின் இறந்துபோன பன்றியரசும் பெட்டையும், பெரிய பசிய காட்டின் கண் விட்டுச் சென்ற அவர்களின் பன்னிரண்டு குட்டிகளும், திகைத்து அடைந்த துன்பத்தை அளவிட்டுக் கூறவல்லார் யார்? ஒருவரும் இல்லை.

2249. அக்குட்டிகள் தாய் தந்தையரைத் தேடி ஓடுகின்றன. காணாமையால் சுழல்கின்றன. நிழலைத்தேடி அலைகின்றன. தாயின் இனிய முலைப்பாலை விரும்பி வாட்டமடைகின்றன. தாகமும் கொடிய பசியும் துன்புறுத் தலால் உயிர் சோருகின்றன. வெயில் சுடுவதால் வெதும்பி வருந்துகின்றன.

இறைவர் பன்றியாக வடிவுகொண்டு வருதல்

2250. இவ்வாறு பன்றிக் குட்டிகள் வருந்தும் பொழுது தென்னராகிய தேவ தேவரான இறைவர் மின் ஒத்த கண்ணுடைய அங்கயற்கண்ணம்மையோடு ஒளி விளங்கும் விமானத்தின் மேலேறி அக்காட்டின் கண் தமது இச்சை யினால் திருவிளையாடல் கொண்டிருந்தார்.

2251. ஏன மென்பற முறுகணோய்க் கிரங்கினார் இச்சை
ஆன வன்புதந் தத் துய ரகற்றுவா னீன்ற
மான வன்புடைப் பேடையின் வடிவெடுத் தயருங்
கான வன்பறழ் கலங்கஞர் கலங்கநேர் வந்தார்.

2252. கிட்டு கின்றதந் தாயெதிர் குட்டியுங் கிட்டி
முட்டு கின்றன மோப்பன முதுகுறத் தாவி
எட்டுகின்றன கால்விசைத் தெறிவன நிலத்தை
வெட்டு கின்றன குதிப்பன வோடுவ மீள்வ.

2253. ஏன மின்னமுங் காண்பரி தாகிய வேனம்
ஆன மெய்ம்மயிர் முகிழ்த்திடத் தழுவிமோந் தருளின்
மான மென்முலை யருத்திமா வலனும்வன் றிறனும்
ஞான மும்பெருந் தகையுநற் குணங்களுநல்கா.

2254. துங்க மாமுகம் ஒன்றுமே சூகர முகமா
அங்கம் யாவையு மானுடை யாக்கைய வாக்கிக்
கங்கை நாயகன் கடவுளர் நாயகன் கயற்கண்
மங்கை நாயகன் கருணையாம் திருவுரு மறைந்தான்.

2255. இம்மை யிப்பவத் தன்னையாய் இனிவரு பவமுஞ்
செம்மை செய்தசே தனத்தையுஞ் சேதனஞ் செய்தார்
எம்மை யெப்பவத் தாயினும் எனைப்பல வுயிர்க்கும்
அம்மை யப்பராய்க் காப்பவர் அவரலா லெவரே.

பன்றிகுட்டிக்கு முலைகொடுத்த படலம் முற்றிற்று.

2251. அந்நிலையில் அவர் மென்மையுடைய அப் பன்றிக்குட்டிகளின் துன்ப நோய்க்கு இரங்கி அன்பு வைத்து விருப்பத்துடன் துயரகற்ற அவற்றை ஈன்ற அன்பினை யுடைய தாய்ப் பன்றியின் வடிவம் கொண்டு காட்டின் கண் பசியால் வருந்திக் கலங்கி நின்ற அக்குட்டிகளின் முன் சென்றருளினார்.

2252. அங்ஙனம் நெருங்கி வருகின்ற தாயின் எதிரே குட்டிகளும் விரைந்து ஓடிவந்து முட்டின. மோந்து பார்த்தன. முதுகில் தாவி எட்டின. காலை விசைத்துப் பின் எறிந்து நிலத்தை வலிந்து வெட்டின. குதிப்பனவும் ஓடுவனவும் மீள்வனவும் ஆயின.

பால் கொடுத்தல்

2253. திருமாலாகிய பன்றி — இன்னமும் காண்டற்கு அரியதாகிய பன்றி, மெய்சிலிர்க்கக் குட்டிகளைத் தழுவி மோந்தது. அவற்றை அணைத்துக் கருணைப் பெருக்கால் சுரந்த பெரிய மெல்லிய முலைப்பாலை ஊட்டியது. மிக்க வலியும் சிறந்த வெற்றியும் ஞானமும் பெருந்தகைமையும் பிற நற் குணங்களும் உண்டாகும் வண்ணம் அருள் புரிந்தது.

2254. பின்னர் அக்குட்டிகட்குச் சிறந்த பெரிய முகம் ஒன்றனையும் பன்றி முகமாக வைத்து ஏனைய உறுப்புகள் அனைத்தையும் மானிட உறுப்புகளாக மாறச் செய்தது. பின்னர் கங்கையின் கேள்வனும் தேவர்கள் தலைவனும் அங்கயற்கண்ணம்மையின் நாயகனுமாகிய சோமசுந்தரக் கடவுள் அருளாற் கொண்ட பன்றியின் அத்திருவுருவத்தை மறைத்தருளினார்.

2255. இப்பன்றியாகிய பிறப்பின் கண் தாயாய் வந்து முலை கொடுத்து அறிவில்லாத பன்றிக் குட்டிகளையும் அறிவுடைய மக்களாகச் செய்து மேல்வரும் பிறவியையும் தூய்மையாக்கினார். எவ்வுலகத்தில் எப்பிறப்பாலாயினும் பலவகையான உயிர்கள் எல்லாவற்றிற்கும் தாயும் தந்தையும் ஆகி நின்று காப்பவர் அவரே அல்லாமல் வேறு யாருளர்? ஒருவரும் இல்லை.

46. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

2256. தந்தை தாயிழந் தலமரு குருளையத் தாயாய்
வந்து நாயகன் முலைகொடுத் தருளிய வகையீ
தந்த வாறிரு மைந்தரு மந்திர ராகி
எந்தை யார்சிவ புரம்புகுந் திருந்தவாறு இசைப்பாம்.

2257. ஆதி நாயகன் றிருவுரு மறைந்தபின் அனைய
கோதில் ஆறிரண்டு ஏனமாக் குமரருங் காலைச்
சோதி யாறிரண் டருக்கர்போற் றோன்றியப் பொருப்பில்
ஓதி யாய்ந்தபல் கலைஞராய் ஒருங்குவீற் றிருந்தார்.

2258. அனைய ராயவர் வைகுநாள் அறைபுனற் கூடற்
புனித நாயக னருட்டிற முயிர்க்கெலாம் பொதுவாய்
இனிய வாவன வென்பதை யாவருந் தேற
வனிதை பால்மொழி மங்கைதன் மணாளனை
வினவும்.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

2256. தந்தை தாய் இழந்து வருந்திய பன்றிக்குட்டி களுக்கு இறைவன் தாய்ப்பன்றியாய் உருவெடுத்து வந்து முலை கொடுத்தருளிய திருவிளையாடல் இது. இனி அந்தப் பன்னிரண்டு குமரர்களும் பாண்டியர்களுக்கு அமைச்சர் களாகிப்பின் எம் தந்தையராகிய இறைவரது சிவ லோகத்தை அடைந்திருந்த திருவிளையாடலைக் கூறுவோம்.

அங்கயற்கண்ணம்மையாரின் வினா

2257. முதற் கடவுளாகிய இறைவன் திருவுருவம் மறைந்தருளிய பின்னர் பன்றிமுகக் குமாரர்கள் பன்னிரு வரும் காலையில் எழுந்து பன்னிரண்டு ஒளிமிக்க இளம் சூரியர்களைப் போல் காணப்பட்டு அம்மலையின்கண் கற்றுத் தெளிந்த பல கலைகளிலும் வல்லவர்களாகி ஒரு சேர வீற்றிருந்தார்கள்.

2258. அங்ஙனம் அவர்கள் இருக்கும் நாளில், ஒலிக்கும் நீர் சூழ்ந்த மதுரையில் எழுந்தருளிய நின்மல னாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவருளின் வகைகள் எல்லா உயிர்கட்கும் பொதுவாய் நின்று இன்பம் தருவன என்று அனைவரும் தெளிந்துய்ய, பால் போலும் மொழிகளையுடைய அங்கயற்கண்ணம்மையார் இறை வனை நோக்கி,

2259. வெவ்வி லங்கினும் வெய்யவா யசேதன விலங்காம்
இவ்வி லங்கையிற் றேனமென் குருளைகட் கிரங்கிக்
கைவி லங்கினை எய்தநீ கருணையாய் முலைதந்
திவ்வி லங்கறி வகற்றிய தியாதென விறைவன்.

2260. அகில வேதமு மாகம பேதமு நம்மைச்
சகல சீவத யாபரன் என்றுரை சால்பால்
இகலில் சேதன மசேதன மாகிய விரண்டும்
புகலில் வேறல எமக்கவை பொதுமைய அதனால்.

2261. தாயி ழுந்துவெம் பசித்தழல் அகஞ்சுடத் தழன்று
காயு மாதபம் புறஞ்சுடக் கானிடைக் கிடந்து
தீயும் ஏனமென் குருளைக டெருமர விரங்கி
ஆயு மாய்முலை யளித்துயி ரளித்தன மதனால்.

2262. அளவி லாற்றலுந் திறனுநல் லரும்பெறற் கல்வி
விளைவு ஞானமுங் கிடைத்தனர் மீனவற் கினிமேல்
வளைவி லாதகோல் அமைச்சராய் வளம்பல பெருக்கிக்
களைவில் பாசம்நீத் தெம்பருங் கணத்தவ ராவார்.

2263. என்று நாயக னாயகிக் கிறைகொடுத் தியம்பி
அன்று மீனவன் கனவில்வந் தரசகேள் பன்றிக்
குன்றில் ஏனம் முகத்தராய்ப் பன்னிரு குமரர்
வென்றி வீரராய் வைகுநர் மிக்கறி வுடையார்.

2259. "எம்பெருமானே! கொடிய விலங்குகள் எல்லா வற்றினும் மிகக் கொடியதாய் அறிவில்லாதனவாய் விளங்கிய பற்களையுடைய இளமை வாய்ந்தவனாய் உள்ள பன்றிக் குட்டிகட்கு இரக்கமுற்று நீர் தாய்ப் பன்றியாகி முலை கொடுத்து முன்னை விலங்கின் அறிவைப் போக்கி யருளியது என்னை?" என்று வினவினார். இறைவர்,

இறைவரின் விடை

2260. "எல்லா வேதங்களும், பலவகைப்பட்ட ஆகமங்களும் நம்மைச் சகல சீவ தயாபரன் (எல்லா உயிர்கட்கும் ஓரே தன்மையான அருளுடையவன்) என்று சொல்வதால் சேதனப் பொருள் (அறிவுப் பொருள்) அசேதனப் (அறிவில்லாத பொருள்) பொருள் என்னும் இரண்டும் நமக்கு வேறல்ல. ஒரு தன்மையனவே. அக்காரணத்தால்,

2261. தாயை இழந்து கொடிய பசித்தீ சுட்டு வருத்தவும் கொதித்து எரிகின்ற வெயில் புறத்தில் சுட்டு வருத்தவும், காட்டின்கண் பற்றுக் கோடின்றிக் கிடந்து துன்பமடைந்த பன்றிக்குட்டிகட்கு இரங்கித் தாயாகி முலை கொடுத்து அவற்றைத் காத்தருளினோம். அங்ஙனம் அருளினமையால்,

2262. அளவற்ற வலியும் வெற்றியும் பெறுதற்கரிய கல்வியின் முதிர்ச்சியின் ஞானமும் கைவரப்பெற்றன. இனி இராசராச பாண்டியனுக்குச் செங்கோல் செலுத்தும் அமைச்சர்களாகிய பலவகை வளங்களையும் பெருக்கிப் போக்குதற்குரிய பாசங்களை ஒழித்து எமது பெரிய சிவ கணத்தலைவராவர்."

பன்றிமுகக் குமரர்களை மந்திரியாக்குதல்

2263. என்று இறைவர் இறைவிக்கு விடை கூறியருளினார். அன்று பாண்டியன் கனவின்கண் வந்து, "அரசனே! பன்றி மலையில் பன்றி முகமுடைய பன்னிரண்டு வெற்றி மிக்க குமரர்கள் இருக்கின்றனர். அவர் அறிவினை உடையவர்.

2264. அவரை நின்கடைக் கமைச்சராக் கோடிபென் றளவில்
சிவப ரஞ்சுடர் அருள்செயச் செழியர்கோ வேந்தன்
கவல ருங்களிப் புடையனாய்க் கண்மலர்ந் தெழுமான்
தவழ் நெடுந்திரைக் கருங்கடல் தத்திநீந் தெல்லை.

2265. மாண்ட கேள்விசால் மந்திரர்க் குணர்த்தியம் மலைமேற்
காண்டகு ஏனமா வீரரைக் கொணர்கெனக் கருணை
பூண்ட காவலன் அமைச்சரும் போயவர்க் கண்டு
வேண்ட வீரரு மீண்டினார் மீனவன் றிருமுன்.

2266. வந்தி றைஞ்சிய வராகமா மைந்தரை நேர்கண்
டந்த மில்களிப் படைந்துவேந் தமைச்சியற் கிழமை
தந்து வேறுபல் வரிசையுந் தக்கவா நல்கிக்
கந்து சீறிய கடகரிக் கைதவன் பின்னர்.

2267. பழைய மந்திரக் கிழார்மடப் பாவைபோல் வாரை
விழவு சால்கடி மங்கலம் விதியினாற் புணர்த்தி
அழகி தாமென நடத்தினான் அனையரும் வீரக்
கழலி னாற்கொரு கவயமுங் கண்ணுமாய் நடப்பார்.

2264. "அம்மைந்தர்களை உனது அவையினுக்கு மந்திரிமார்களாகக் கொள்ளக் கடவை" என்று பரஞ்சோதி யாகிய சிவபெருமான் அருளிச் செய்தார். பாண்டியர் பெரு வேந்தனாகிய இராசராசன் கவலையற்ற மகிழ்வுடையவ னாய் விழித்தெழுந்தான். சூரியன் தேரில் பூட்டிய ஏழு குதிரைகளும் அலைகள் தவழும் கரிய கீழைக் கடலை தாவி நீந்தும் வைகறைப் பொழுதில்,

2265. மாட்சிமைப்பட்ட கேள்வி நிறைந்த மந்திரிகட்கு அக்கனவினை அறிவித்தான். பன்றி மலையில் உள்ள அழகும் பெருமையும் மிக்க அப்பன்றி வீரர்களை இங்கு அழைத்து வருக என்று கட்டளை இட்டான். கருணை பூண்ட அம்மன்னனின் அமைச்சரும் அங்குச் சென்று அவ்வீரர்களைக் கண்டு, வருமாறு வேண்டினர். அவ்வீரர்களும் பாண்டியன் திருமுன்னர் வந்தனர்.

2266. அங்ஙனம் வந்து வணங்கிய பெருமை பொருந்திய அவ்வீரரை இராசராச பாண்டியன் எதிர் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்து அவர்கட்கு அமைச்சியல் உரிமையை நல்கிப் பல்வேறு வரிசைகளையும் தக்கவாறு கொடுத்தான். கட்டுத் தறியைச் சினந்த மதயானையுடைய பாண்டியன், பின்னர்.

2267. மந்திரக் கிழமையுடைய பழைய அமைச்சர் பெற்ற இளமையும், பதுமை போன்ற தோற்றமும் உடைய பெண்களை மறை நூல் விதிப்படி அவர்கட்குச் சிறப்புமிக்க திருமணம் செய்வித்தான். பார்த்தவர்கள் 'அழகிது' என்று சொல்லுமாறு சிறப்புடன் நடத்தினான். வீரக்கழல் அணிந்த பாண்டியனுக்கு, பன்றி முக வீரர் பன்னிருவரும் கவசமும் கண்ணும் போல ஒழுகினார்கள்.

2268. உடம்பா றிரண்டிற் குயிரொன்றன வொன்றி யைவாய்
விடம்பா யரவம் விழுங்குமிரை யொத்து நெஞ்சந்
திடம்பாடு கொள்ள வினைவாங்கிச் செழியன் கல்வி
இடம்பாடு நல்கும் பயன்போல்மகிழ் வெய்த நின்றார்.

2269. நல்லாவின் பாலில் நறுந்தேன்கலந் தென்னப் பன்னூல்
வல்லாரு மாகி மதிநுட்பரும் ஆகிச் சோர்வில்
சொல்லா லடையார் மனமுங்களி தூங்கச் சொல்லிப்
பல்லார் பிறர்சொற் பயனாய்ந்து கவர வல்லார்.

2270. பழையே மிறையுட் கொளப்பட்டமென் றேமாப் பெய்தார்
உழையவேல் செய்யுஞ் சிறார்போல வொதுங்கி வேந்தன்
விழைவே ததனை விடம்போல வெறுத்து வெஃகார்
அழல்போ லணுகார் அகலார்நிழ லன்னநீரார்.

2271. மறுக்குஞ் செயல்நீத்து நடக்கையின் வையத்தோரை
ஒறுக்கும் பொருளும் பணிகேட்கையின் ஒன்ன லாரை
செறுக்கும் பொருளுங் கவரார்விளை செல்வமாக்கள்
இறுக்கும் பொருளே யிரைவற்கிவ ரீட்டும் செல்வம்.

பன்றி வீரர்களின் தன்மை

2268. பன்னிரண்டு உடம்பிற்கும் உயிர் ஒன்றே என்று அனைவரும் சொல்லும் வண்ணம் அவர் அனைவரும் ஒற்றுமையுடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். ஐந்து வாய்களையுடைய பாம்பானது விழுங்கும் இரை போன்ற திடம் கொண்ட உள்ளத்தோடு கருமத்தை ஏற்று நடத்துவர். பாண்டியனது கல்விப் பொருளும், செல்வப் பொருளும் அவனுக்குப் பயன் அளித்தல் போலப் பயன் நல்கி மகிழ்ச்சியோடு தமக்குரிய அமைச்சியல் தொழில் புரிவர்.

2269. நல்ல பசுவின் பாலில் நறுந்தேன் கலந்தாற் போல, பல நூல்களைக் கற்று வல்ல செயற்கை அறிவான கல்வி அறிவோடு, இயற்கையான நுண்ணறிவும் பெற்று இருந்தனர். சோர்வில்லாத மொழிகளாலே பகைவர்களின் மனமும் களிப்படையுமாறு பேசி வந்தனர். பிறர் கூறும் சொற்களில் உள்ள குற்றத்தை விடுத்து அவற்றின் பயனை மட்டும் ஆராய்ந்து கொள்ளும் வல்லமையுடையவராய் இருந்தனர்.

2270. அரசனது உடல் நிழல் போல் விடாது நிற்கும் அவ்வமைச்சர், "நாம் பழமையுடையோம். அரசனால் மதிக்கப்பட்டோம்" என்று களிப்படையாமல் அருகில் நின்று ஏவியவற்றைச் செய்யும் சிறுவர்களைப் போல ஒரு பக்கம் ஒதுங்கி நடந்தனர். அரசனால் விரும்பப்பட்ட பொருள் எதுவோ, அதனைச் சிறிதும் தாம் விரும்பாது விடம் போல் வெறுக்கும் இயல்பினர். அரசனை அனல் போல் கருதி அணுகாமலும் நீங்காமலும் தீக்காய்வார் போல் நடந்து வந்தனர்.

பன்றி முக வீரர்களின் ஆட்சித் திறமை

2271. குடிமக்கள் தாம் மறுக்கப்பட்ட செயல்களை விலக்கி நல்வழியில் நடத்தலால் அவர்களைத் தண்டித்து வாங்கும் பொருளும் பகைவர்கள் தாம் ஏவிய ஏவலைக் கேட்டு ஒழுகியதால் அவர்களை வென்று பெறும் பொருளும் இல்லையாயிற்று. குடிமக்கள் விளை பொருளில் ஆறிலொரு கடமை இறுக்கும் இறைப்பொருள் ஒன்றே அவ்வமைச்சர் தம் அரசனுக்கு ஈட்டும் செல்வமாகும்.

2272. மறத்தாம வேலான் மனக்கொள்கைதந் நெஞ்சுமன்
வான
நிறத்தாடி நீழ லெனத்தோற்ற நிறுத்து மற்றது
அறத்தா றெனிலாற்றுவர் அன்றெனி லாக்க மாவி
இறத்தான் வரினு மனத்தானு மிழைக்க வெண்ணார்.

வேறு

2273. இன்னவா றொழுகும் பன்னிரு வோரும் ஈகையுந்
தருமமும் புகழுந்
தென்னர்கோ மகற்கு வைகலும் பெருகத்
திசையெலாம் விசயமுண் டாக்கிப்
பன்னகா பரணன் சிவபுர மடைந்து பரன்கண நாதருட்
கலந்து
மன்னிவீற் றிருந்தார் மன்னர்மன்னவனும் வான்பத
மடைந்து வீற்றிருந்தான்.

பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் முற்றிற்று.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

2274. வரிக்குருகிப் பத்திரற்குப் பலகையிட்ட மணிகண்டன்
அரிக்குருளை வடிவான வடல்வீரர்க் கரசன்பார்
பரிக்குமமைச் சியலளித்த் பரிசுரைத்தாம் பசுபதிபாற்
கரிக்குருவி குருமொழிகேட் டருளடைந்த
கதைபகர்வாம்.

2272. கொலையில் பயின்ற வேற்படையை ஏந்திய மன்னனது மனக் கருத்து, வானம் போன்றதும் ஒளியை யுடையதுமாகிய கண்ணாடியின் நிழல் போல விளங்கித் தோன்ற அதனைச் சீர்தூக்கி நன்றாக ஆராய்ந்து அறநெறி யிற்பட்டனவாயின் செய்வர். அறநெறியிற்படாதாயின் தங்கள் செல்வத்திற்கும் உயிருக்கும் இறுதிவரினும் அவற்றைச் செய்ய மனத்திலும் கருதார்.

சிவபதம் அடைதல்

2273. இங்ஙனம் ஒழுகும் அமைச்சர் பன்னிருவரும் பாண்டியர் பெருமானுக்கு ஈகையும், அறமும் புகழும் நாள் தோறும் பெருகுமாறு எட்டுத் திசைகளிலும் வெற்றியை உண்டாகச் செய்து வாழ்ந்திருந்தனர். சிலகாலம் சென்ற பின், பாம்பணியையுடைய இறைவரது சிவலோகத்தை அடைந்து, அவரது சிவகணங்களுட் கலந்து நிலைபெற்று இருந்தனர். மன்னர் மன்னனான இராசராச பாண்டியனும் இந்திர பதவியைப் பெற்று வீற்றிருந்தான்.

பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம் முற்றிற்று.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

2274. இசைப்பாட்டிற்கு நெகிழ்ந்து பாணபத்திரற்குப் பலகையிட்டருளிய நீலமணி போலும் திருமிடற்றினை யுடைய இறைவன், பன்றிக்குட்டிகளின் வடிவாகிய வெற்றி மிக்க பன்னிரண்டு வீரர்களுக்கும் பாண்டிய நாட்டை ஓம்பும் அமைச்சியலை அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். அவ்விறைவனிடத்துக் கயவாயென்னும் பறவை குரு மொழியினைக் கேட்ட அவன் திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

வேறு

2275. மன்னவன் இராச ராசன் வானவர்க் கரச னான
பின்னவன் குமர னான பெருவலி மடங்க லன்னான்
துன்னல ரடுபோர் சாய்க்குஞ் சுகுணபாண் டியன்நீர் ஞாலம்
இன்னறீர்த் தறக்கோ லோச்சி யீர்ங்குடை நிழற்று நாளில்.

2276. ஆற்றல்சா லொருவன் மேனாள் ஆற்றவு மறனே போற்றி
மாற்றமில் சிறிது பாவஞ் செய்ததன் வலத்தால் வந்து
தேற்றமில் கயவா யாகிச் செனித்தலாற் காக மாதி
கூற்றென வூற்றஞ் செய்யக் குருதிசோர் தலைய தாகி.

2277. புட்கெலாம் எளிதா யூறு பாடஞ்சிப் புரத்துள் வைகி
உட்கிநீள் வனத்துட் போகி வழிமருங் கொருசார் நிற்குங்
கட்கவிழ்ந் தொழுகப் பூத்த கவிழிணர் மரமேல் வைகி
வெட்கமீ தூரச் சாம்பி வெய்துயிர்த் திருக்கு மெல்லை.

2278. விடையவ னீறு பூசு மெய்யவன் பூண்ட கண்டித்
தொடையவன் புறம்பும் உள்ளுந் தூயவன் குடையுங் கையில்
உடையவன் தரும தீர்த்த யாத்திரை ஒழுக்கம் பூண்ட
நடையவ னொருவன் அந்த நறுந்தரு நிழலிற் சார்ந்தான்.

கரிக் குருவியின் துன்பம்

2275. வேந்தனாகிய இராசராச பாண்டியன் இந்திர பதவியைப் பெற்ற பின்னர் அவன் மகனான சுகுண பாண்டியன் என்பான் பகைவரது அடு போரினை அழிக்கும் பெரிய வலியுடைய ஆண் சிங்கத்தைப் போல் விளங்கி, கடல் சூழ்ந்த உலகத்து உயிர்கள் துன்பத்தைப் போக்கி, தண்ணிய குடை நிழலால் செங்கோல் செலுத்தி வந்தான்.

2276. அந்நாளில், முற்பிறவியில் வலிமை மிக்க ஒருவன் அறத்தை மிகவும் செய்து, சிறிது பாவத்தையும் செய்தமையால் அப்பாவத்தின் வலியால் அறிவில்லாத கரிக்குருவியாய் வந்து பிறந்தான். அக்கரிக் குருவிக்குக் காக்கை முதலிய பறவைகள் கூற்றுவனைப்போல் இடை யூற்றினை விளைத்து வந்தன. அதனால் அது குருதி வழிகின்ற தலையினை உடையதாகியது.

2277. பறவைகள் அனைத்திற்கும் எளிய பறவையாய், அவை செய்யும் இடையூற்றுக்குப் பயந்து நகரத்துள் இருந்து பின் அங்கிருப்பதற்கும் பயந்து நீண்ட காட்டினுள் புகுந்து வழியருகில் ஒரு புறத்தில் நிற்கும். தேன் கவிழ்ந்து ஒழுகுமாறு மலர்ந்த பூங்கொத்துகளையுடைய மரத்தின் மேல் தங்கி மிகுந்த நாணத்துடன் சோர்ந்து பெருமூச்செறிந்து கொண்டு அமர்ந்திருந்தது. அப்பொழுது,

கரிக்குருவி நல்லுரை கேட்டு மதுரையடைதல்

2278. இடபவூர்தியையுடைய இறைவனது திரு நீற்றினை அணிந்த மெய்யினை உடையவனாய் உருத்திராக்க, மாலையுடையவனாய், உள்ளும் புறமும் தூய்மையுடையவனாய் கையில் குடையையுடையவனாய், தரும தீர்த்தயாத்திரை செய்து வருபவனுமாய், தூய நதிகளில் சென்று நீராடும் வழக்கத்தையுடைய ஒருவன் அந்த நறிய மரநிழலை அடைந்தான்.

2279. இருந்தவன் சிலரை நோக்கி யியம்புவான் எவர்க்கும் பேறு
தருந்தலந் தீர்த்த மூர்த்தித் தன்மையிற் சிறந்த அன்பு
வருந்த மிழ் மதுரை பொற்றா மரைத்தடஞ் சுந்த ரேசப்
பெருந்தகை யென்று சான்றோர் பேசுவ ராத லாலே.

2280. ஓரிடத் தினைய மூன்று விழுப்பமும் உள்ள தாகப்
பாரிடத் தில்லை ஏனைப் பதியிடத் தொன்றே என்றுஞ்
சீருடைத் தாகுங் கூடற் செழுநக ரிடத்தம் மூன்றும்
பேருடைத் தாகு மென்றாற் பிறிதொரு பதியாது என்றான்.

2281. இம்மது ரேசன் சேவித் தேத்துவோர்க் கெளிய னாகிக்
கைம்மலர் நெல்லி போலக் கருதிய வரங்கள் எல்லாம்
இம்மையி னுடனே நல்கு மேனைய தலத்து வானோர்
அம்மையி னன்றி நல்கா ராதலா லதிக னென்றான்.

2282. மற்றது கேட்டுக் கொம்பர் வைகிய கயவாய் ஞானம்
பெற்றது பறவை யாகிப் பிறந்ததும் பிறவுந் தேற்றம்
உற்றது நாமிச் சன்ம மொழிப்பதற் கறவோன் இங்ஙன்
சொற்றதே யுறுதி யென்று துணிவுகொண் டெழுந்த தன்றே.

2279. நிழலை அடைந்து தங்கி இருந்த அவன், அங்குள்ள சிலரைப் பார்த்து, "யாவருக்கும் நற்பயனை நல்கும் தலம் அன்புவளரும் தமிழையுடைய மதுரை; தீர்த்தம் பொற்றாமரை; மூர்த்தி சோம சுந்தரப் பெருமான் என்று சான்றோர் பேசுவர். ஆதலால்

2280. "ஒரே இடத்தில் இம்மூவகைச் சிறப்பும் நிறைந்த இடம் இந்நிலவுலகில் வேறெங்கும் இல்லை. மற்றைய பதிகளில் இம்மூன்றில் ஒன்றே எஞ்ஞான்றும சிறப்புற்று விளங்கும். சிறப்புடைய மதுரையிலோ இம்மூன்றும் சிறப்புற்று விளங்கும் என்றால் இதற்கு இணையான தலம் வேறு எங்குள்ளது? இல்லை.

2281. "இம்மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் தன்னை வணங்கித் துதிப்போர்க்கு, மலர்போன்ற உள்ளங்கை நெல்லிக்கனித் தோற்றம் போல எளிமையுடைய வராய்த் தோன்றி வணங்கியவர் கருதிய வரங்கள் அனைத்தையும் இப்பிறப்பிலே உடன் தந்தருள்வார். மற்றைய தலத்துக் கடவுளர் மறுபிறப்பின்றி இப்பிறப்பில் நல்கார். ஆதலால் சோம சுந்தரக் கடவுள் மேன்மையுடைய மூர்த்தி' என்று கூறினான்.

2282. அம்மரக் கிளையில் சாம்பி இருந்த கரிக்குருவி அதனைக் கேட்டவுடன் ஞானம் பெற்றது. தான் பறவையாகப் பிறந்த காரணமும் பிறவும் தெளிந்தது. "இக் கொடிய பிறவியை நாம் ஒழிப்பதற்கு இங்கு இவ்விரத ஒழுக்கினன் கூறியதே உறுதி," என்று கருதித் துணிந்து எழுந்தது.

2283. ஆய்மலர்க் கான நீங்கி யாடக மாடக் கூடற்
போய்மலர்க் கனக கஞ்சப் புண்ணியப் புனறோய்ந்து ஆம்பல்
வாய்மலர்க் கயலுண் கண்ணாள் மணாளனை வலஞ்செய்து அன்பிற்
றோய்மலர்க் கழலு ளானை யகத்தினாற் றொழுதர்ச் சித்தே.

2284. இன்னண மூன்று வைகல் கழிந்தபின் எம்பி ராட்டி
தன்னமா காத லானைத் தாழ்ந்தெதிர் நோக்கி ஐய!
என்னையிக் கயவாய் செய்யுஞ் செயலிதன் வரவியா தென்ன
முன்னவன் அதன்றன் செய்தி வரவெலா முறையாற் கூறா.

2285. பத்திமை நியமம் பூண்ட பறவைமேற் கருணை நாட்டம்
வைத்திமை யாத முக்கண் மறைமுத லொருசேய்க் கன்று
நித்திய நிலைமை நல்கி நேர்ந்தவெங் கூற்றைக் காய்ந்த
சத்திய ஞான மிர்த்திஞ் சயத்தினை யுபதே சித்தான்.

வேறு

2286. உவமை யற்றவன் உரைத்த மந்திரஞ்
செவிமடுத்தலுஞ் சிற்று ணர்ச்சிபோய்ப்
பவம கற்றிடப் படுக ரிக்குரீஇ
கவலை விட்டான் கழல்வ ழுத்துமால்.

2283. வண்டுண்ணும் தேன் உடைய மலர்கள் நிறைந்த காட்டை விட்டு நீங்கி, பொன்மாடம் நிறைந்த மதுரை நகரை அடைந்து, மலர்கள் நிறைந்த பொற்றாமரைப் புண்ணிய நீரில் மூழ்கி, ஆம்பல் போன்ற திருவாயினையும் கயல் போன்ற மையுண்ட கண்களையும் உடைய உமையம்மையின் மணாளனான சோமசுந்தரக் கடவுளை வலம் செய்து அன்பாகிய நீரில் தோயும் தாமரை மலர் போன்ற திருவடிகளையுடைய அவ்விறைவனை மனத்தினால் வணங்கிப் பூசித்தது.

சோமசுந்தரக் கடவுளை வழிபடல்

2284. இங்ஙனம் மூன்று நாட்கள் சென்றபின் எம் பிராட்டியார் தம் காதலராகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி நேரே பார்த்து, ‘ஐயனே! இக்கரிக்குருவி செய்யும் வழிபாடு எதன் பொருட்டு? இதன் வரவு யாது? என்று வினவினார். இறைவன் அக்கரிக்குருவியின் செய்தியையும் அதன் வரலாறுமாகிய அனைத்தையும் முறைப்படி கூறியருளினார்.

2285. இமையாத மூன்று கண்ணுடைய அச்சோம சுந்தரக் கடவுள், அன்பு செய்வதையே கடமையாகக் கொண்ட அப்பறவையின் மீது அருள் நோக்கம் வைத்தார். முன்னாளில் மார்க்கண்டேய முனிவருக்கு அழிவற்ற தன்மையைக் கொடுத்து எதிர்த்த கொடிய கூற்றவனை மாய்த்த உண்மை ஞானமாகிய ‘மிருத்திஞ்சய’ மந்திரத்தை உபதேசித்தருளினார்.

2286. ஒப்பற்றவனாகிய இறைவன் உபதேசித்தருளிய அம் ‘மிருத்திஞ்சய’ மந்திரத்தைக் காதிற் கேட்ட அளவில் சிற்றறிவு நீங்கிப் பேரறிவு பெற்றுப் பிறவித்துன்பம் ஒழிந்து அவ்விறைவன் திருவடிகளை அக்கரிக்குருவி துதித்தது.

2287. எண்ணி லாவுயிர்க் கிறைவ போற்றிவான்
தண்ணி லாமதிச் சடில போற்றியென்
புண்ணி யப்பயன் போற்றி யங்கயற்
கண்ணி நாதநின் கருணை போற்றியால்.

2288. தெளிதல் இன்றியே செய்த தீமையால்
விளியு மென்னையு மாளல் வேண்டுமோ
எளிய ரெங்குளா ரென்று தேர்ந்துதேர்ந்
தளியை யாவதுன் னருளின் வண்ணமே.

2289. உம்மை நல்லற முடைய நீர்மையால்
இம்மை யிம்மனு வியம்பி னாயிது
அம்மை நன்னெறிக் கேது வாதலான்
மும்மை யும்நல முடைய மொய்ம்பினேன்.

2290. ஆயி னும்மெனக் கைய வோர்குறை
தீய புள்ளெலா மூறு செய்தெனைக்
காயு மானமுங் கழியக் கண்டபேர்
ஏயெ னும்படிக் கெளியன் ஆயினேன்.

2291. என்ன வக்குரீஇ யியம்ப வெம்பிரான்
அன்ன புட்கெலாம் வலியை யாகெனப்
பின்னு மக்குரீஇ தாழ்ந்து பேதைஎற்
கின்னு மோர்வரந் தருதி யென்றதால்.

இறைவனை வேண்டி வரம் பெறல்

2287. "அளவற்ற உயிர்களுக்குத் தலைவனே வணக்கம்! வானில் உலாவும் குளிர்ந்த சந்திரனைத் தரித்த சடையையுடையவனே வணக்கம்! அங்கயற்கண்ணம்மையின் மணாளனே உனது திருவருளுக்கு வணக்கம்!

2288. "தெளிதல் இன்றி நினது கருணைத் திறத்தை அறியாது நலிந்து நிற்கும் அடியேனையும் ஆளுதல் வேண்டும்? எளியவர் எங்குள்ளார் என்று தேடித் தேடி அலைந்து அருள் புரிதலே நின் திருவருளின் தன்மையாகும்.

2289. "முற்பிறப்பில் செய்த நல்லறத்தின் தன்மையால் இப்பிறப்பில் இம் மந்திரத்தை உபதேசித்து அருளினை! இது மறுமையில் சிவகதியில் சேர்வதற்குக் காரணமாதலால் மூன்று பிறப்பிலும் பயன்பெற்ற வலியனானேன்.

2290. "ஆனாலும், ஐயனே! எனக்கு ஓர்குறையுண்டு. கொடிய பறவை எல்லாம் என்னைத் துன்புறுத்தி வருகின்றன. கண்டவரெல்லாம் நகைக்கும்படி நான் அனைத்திற்கும் எளியனானேன்."

2291. என்று அக்கரிக்குருவி கூற "அந்தப் பறவைகள் எல்லாவற்றினும் நீ வலியை ஆகக்கடவை" என்று சோம சுந்தரக்கடவுள் அருளினார். உடனே கரிக்குருவி, "அறிவில்லாத எனக்கு இன்னும் ஒருவரம் தந்தருள்வாய்" என்று இரந்துவேண்டியது.

2292. வலியை யென்பதென் மரபி னுக்கெலாம்
பொலிய வேண்டுமெப் போது நீசொன
ஒலிய மந்தரம் ஓதி யோதிநாம்
கலியை வெல்லவுங் கருணை செய்கென.

2293. ஆவ தாகவென் றமரர் நாயகன்
மூவெ ழுத்தினான் முடிந்த வம்மனு
தாவில் தெய்வத மிருடி சந்தமோ
டோவில் ஓசைமூன் றொடுதெ ருட்டினான்.

வேறு

2294. குருமொழி பயின்று முள்வாய்க் குருவிதன் குலனுந் தன்போல்
அருமறை முதல்வன் ஈந்த வாற்றலாற் பறவைக் கெல்லாம்
பெருமைசால் வலியா னென்னும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செம்பொற் கனைகழ லடிசேர்ந் தன்றே.

2295. இக்கரிக் குருவி தானோற்று எய்திய வரத்தைத் தன்போல்
ஒக்கலு மெளிதா வெய்தப் பெற்றதால் உலகின் மேன்மை
தக்கவ னொருவன் வாழத் தன்கிளை வாழ்வ தென்ன
மிக்கவ ரெடுத்துக் கூறும் பழமொழி விளக்கிற் றன்றே.

2292. "வலிமையாக" என்று நீ அருளியது என் மரபில் வரும் பறவைகள் அனைத்திற்கும் விளங்க வேண்டும். எப்போதும் நீ கூறியருளிய ஒலியையுடைய மந்திரத்தை இடையீடின்றிப் பயின்று அச்சமும் துன்பமும் நீங்க வேண்டும். அருள் செய்வாயாக," என்று வேண்டியது.

2293. தேவர் தேவனாகிய இறைவன் "அங்ஙனமே ஆகக்கடவது" என்று கூறியருளி மூன்று எழுத்தினால் முடிந்த அம்மந்திரத்தைத் தெய்வம் இருடி, சந்தம் என்ப வற்றுடன் எடுத்தல் படுத்தல், நலிதல் என்ற மூவகை ஓசை யோடும் தெளிவித்தார்.

2294. முள்போலக் கூரிய வாயையுடைய அக்கரிக் குருவி குருமொழியை இடைவிடாது பயின்று, தன் சாதிப் பறவைககளும் தன்னைப் போலவே, அரிய வேத முதல் வனாகிய சிவபெருமான் அருளிய வலியால் பறவைகளுக் கெல்லாம் வலியனவாகி, 'வலியன்' என்னும் காரணப் பெயரைப் பெற்று உலகில் சிறப்புற்றிருந்தது. நீலமணி போலும் திருமிடற்றினையுடைய அவ்விறைவனது சிவந்த பொன்னாலாகிய ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடியைச் சேர்ந்தது.

இறைவனிடத்து அன்புடையார் தன்மை

2295. இக்கரிக்குருவி தான் வருத்தி நோற்றுப் பெற்ற வரத்தினை, தன்னைப்போல் தன் சுற்றமும் எளிதாக அடையும்படி, வேண்டிப் பெற்றது. அதனால் 'உலகில் மேலான தகுதியுடையான ஒருவன் வாழ, அவனது சுற்றமும் வாழ்வதாகும்' என்னும் பழமொழி விளங்கிற்று என அறிவுடையோர் எடுத்துக் கூறுகின்றனர்.

வேறு

2296. ஈச னடிக்கன் பில்லார்போ லெளியார் இல்லை
யாவர்க்கும்
ஈச னடிக்கன் புடையார்போல் வலியா ரில்லை
யாவர்க்கும்
ஈச னடிக்கன் பின்மையினா லெளிதாய்த் திரிந்த
இக்கயவாய்
ஈச னடிக்கன் புடைமையினால் வலிதா யிற்றே
யெவ்வுயிர்க்கும்

கரிக்குருவிக்குபதேசம் செய்த படலம் முற்றிற்று.

48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

2297. அத்தி தந்த விமான வழகியார்
பத்தி தந்த பறவைக்கு மந்திர
சித்தி தந்த திறனிது நாரைக்கு
முத்தி தந்த கருணை மொழிகுவாம்.

2298. தேக்கு நீர்வைகை நாட்டொரு தென்புலத்
தாக்கு மாடவைப் பொன்றுள தவ்வயின்
வீக்கு யாழ்செயும் வண்டுக்கு வீழ்நற
வாக்கு தாமரை வாவியொன் றுள்ளதால்.

2299. ஆழ மிக்க கயந்தலை யத்தலை
வாழு மீனம் அனைத்தையும் வாய்ப்பெய்து
சூழ நந்துமுத் தீனுந் துறைக்கணே
தாழ்வ தோர்செய்ய தாண்மட நாரையே.

2296. இறைவனின் திருவடியிடத்து அன்பு கொள்ளாதவர்களைப் போன்ற கொடியவர்கள் உலகில் இல்லை. அவ்விறைவன் திருவடியிடத்து அன்பின்மையால் எளிய பறவையாகத் திரிந்த கரிக்குருவி, பின் இறைவன் திருவடியிடத்து அன்பு கொண்டதால் எல்லாப் பறவைகட்கும் வலிய பறவையாய் விளங்கிற்று.

கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம் முற்றிற்று.

48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்

2297. எட்டு யானைகளால் தாங்கப்பெற்ற விமானத்தில் எழுந்தருளிய சுந்தரவிடங்கர், அன்பு செய்த கரிக்குருவிக்கு மந்திரசித்தி அருளிய திருவிளையாடல் இதுவாகும். இனி நாரைக்கு முத்தி கொடுத்த திருவிளையாடலைக் கூறுவோம்.

நாரையின் வாழ்க்கை

2298. நிரம்பிய நீரையுடைய வையையாறு சூழ்ந்த பாண்டிநாட்டின் தெற்கில் மாடங்கள் நிறைந்த பதி ஒன்று உள்ளது. அங்கு யாழிசைபோல் இசைபாடும் வண்டுகளுக்கு தேனினை அளிக்கின்ற தாமரை மலர்கள் நிறைந்த தடாகம் ஒன்றுள்ளது.

2299. மிக்க ஆழத்தையுடைய அத்தடாகத்தில் வாழும் மீன்கள் அனைத்தையும் உண்டு, சங்குகள் சுற்றிலும் முத்துக்களை ஈனும் அத்துறையின் கண், சிவந்த கால்களையுடைய இளமையான ஒரு நாரை தங்கி வாழ்ந்து வந்தது.

2300. சிறிய நாண்மழை யின்றியச் சேயிதழ்
வெறிய தாமரை யோடை வியன்கரை
இறைகொள் நாரை யிருவினைப் பௌவமும்
வறிய தாகி வறப்ப வந்ததால்.

2301. நுரைசெ றித்தன்ன நோன்சிறை நாரையும்
இரைவி ரும்பியவ் வாவி யிகந்தொரீஇ
விரைய வந்தொரு கானிடை வீழ்ந்ததாற்
புரையி லோர்க்கிடன் ஆகுமப் பொங்கர்வாய்.

2302. முத்த ரான முனிவர் குழாத்தொடுஞ்
சுத்த வானந்த வாரியுள் தோய்ந்துதன்
சித்த மாசு கழீஇச்சிவ மாகிய
சத்தி யத்தவ மாமுனி தங்குமால்.

2303. கூப்பி டெல்லைக் குணித்துச் சதுரமா
யாப்ப மைந்து சுற்றெங்கும் படி,த்துறை
கோப்ப மைத்து குளிர்சந்தி யாமடங்
காப்ப மைந்தோர் கயந்தலை யுள்ளதால்.

2304. விரைசெய் சண்பகம் பாதிரி வேங்கைதேன்
இரைசெய் வஞ்சி இலஞ்சி குராமரா
நிரைசெய் கிஞ்சுக நீண்மரு தாதியா
உரைசெய் பன்மர மும்புறத் துள்ளவால்.

2300. சிலநாள் மழையின்மையால் சிவந்த இதழ் பொருந்திய மணமுள்ள தாமரை மலர் நிறைந்த அந்தத் தடாகம், அதன் அகன்ற கரையின்கண் தங்கிய நாரையின் இருவினைக் கடலும் பயனற்றதாய் வற்றுமாறுபோல, நீர் வற்றியது.

2301. நுரைசெறித்து வைத்தாற்போல வெள்ளிய வலிய சிறைகளையுடைய அந்நாரையும் இரையை விரும்பி அவ்வறண்ட தடாகத்தினின்றும் நீங்கி விரைந்து சென்று குற்றமற்ற முனிவர்கள் வாழும் காட்டிலே சோர்ந்து விழுந்தது.

2302. அக்காட்டில் சீவன் முத்தர்களான முனிவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். அம்முனிவர் கூட்டத்திலே சிவானந்தக் கடலில் மூழ்கிச் சிவமாம் தன்மை பெற்ற 'சத்தியன்' என்ற பெயருடைய முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

2303. அங்கு ஒரு கூப்பிடு தூரம் எல்லை அளவு கொண்ட சதுரமாய் கட்டப்பட்டு, சுற்றிலும் படித்துறை அமைப்பெற்று கரையிலே 'சந்தியாமடம்' உடைய ஒரு தடாகம் இருந்தது.

அச்சோ தீர்த்தம்

2304. மணம்வீசும் சண்பகமும் பாதிரியும் வேங்கையும் வண்டுகள் ஒலிக்கும் வஞ்சியும், முருக்கும், நீண்ட மருதும், குராவும் என்று சொல்லப்பட்ட பல மரங்களும் அதன் புறத்தே சூழ்ந்து இருந்தன.

2305. அந்த வாவியின் பேரச்சோ தீர்த்தமென்
றிந்த ஞாலம் இயம்புவ தாலிரை
உந்த வாவுகொ டுக்க வெழுந்து முன்
வந்த நாரை யதன்கரை வைகுமால்.

2306. ஆய்ந்த மாதவர் அப்புனி தத்தடந்
தோய்ந்து தோய்ந்தங் கெழுந்தொறுந் தோள்புறஞ்
சாய்ந்த வார்சடைக் கற்றையிற் றத்துமீன்
பாய்ந்து பாய்ந்து புரள்வன பார்த்தரோ.

2307. ஈண்டை யித்தவத் தோர்திரு மேனியைத்
தீண்ட எத்தவஞ் செய்தன வேகொலென்
றாண்டை மீன்நமக் காகா வெனவிரை
வேண்டு நாரை வெறுத்தங் கிறுத்ததலால்.

வேறு

2308. தன்னிகர் தவத்தோர் யாருந் தடம்படிந் தேறி நித்த
மன்னிய கரும முற்றிச் சந்தியா மடத்தில் வைகி
மின்னிய மகுடஞ் சூடி வேந்தனாய் உலகங் காத்த
பொன்னியல் சடையான் கூடற் புராணநூ லோது
கின்றார்.

2305. அந்த தடாகத்தினை ‘அச்சோதீர்த்தம்’ என்று இந்நிலவுலகத்தவர் அழைப்பர். அந்தத் தடாகத்தின் முன்னே உணவின்கண் எழுந்த மிகுந்த விருப்பத்தினால் அந்த நாரை வந்து தங்கியது.

நாரை கொண்ட விரதம்

2306. உண்மைப் பொருளை ஆராய்ந்துணர்ந்த பெரிய முனிவர் அந்தத் தூய தடாகத்தில் மூழ்கி மூழ்கி மேலே எழுந்தோறும், பிடரிலே சாய்ந்து கிடக்கும் நீண்ட சடைத்திரளில் குதிக்கின்ற மீன்கள் பாய்ந்து பாய்ந்து புரளுதலைப் பார்த்தது.

2307. “இங்கு இம் முனிவர்கள் திருமேனியைத் தீண்டு வதற்கு இம் மீன்களை எத்தனை தவம் செய்தனவோ? அவ்வாறு வசிக்கும் இம் மீன்களை நான் இரையாகக் கொள்ளுவது தகாது” என்று கருதி இரையை வெறுத்து அங்கு இருந்தது.

2308. தனக்குத் தானே ஒப்பற்ற தவம் புரியும் முனிவர்கள் அனைவரும் அத்தடாகத்தில் நீராடிக் கரையேறி நித்திய கருமம் முடித்துச் சந்தியா மடத்தில் அமர்ந்து, மின்னிய மகுடம் சூட்டி சுந்தர பாண்டியனாய் உலகினைப் புரந்தருளிய பொன் போலும் அழகிய சடையுடைய சோமசுந்தரக் கடவுளின் மதுரை மான்மிய நூலை ஓதி வருவாராயினர்.

2309. அண்ணலெம் பெருமான் செய்த அருள்விளை யாட்டு மாதிப்
பண்ணவன் சிறப்புங் கூடற் பழம்பதிச் சிறப்புந் தீர்த்தத்து
எண்ணருஞ் சிறப்புஞ் சேர்ந்தோர்க் கௌிவரும் இறைவ னென்னும்
வண்ணமு மெடுத்துக் கூறக் கேட்டங்கு வதியு நாரை.

2310. மடம்படு மறிவு நீங்கி வல்வினைப் பாசம் வீசித்
திடம்படு மறிவு கூர்ந்து சிவபரஞ் சோதி பாதத்து
இடம்படும் அன்பு வாவென் றீர்த்தெழ எழுந்து நாரை
தடம்படு மாடக் கூடற் றனிநக ரடைந்து மாதோ.

2311. வாங்கிய திரைசூழ் பொற்றா மரைபடிந் திமையா சூழ்ந்து
தாங்கிய விமான மேய தலைவனைத் தாழ்ந்து சூழ்ந்து
தேங்கிய அருட்க ணோக்கத் தெரிசித்துத் திருமுன் வைகி
ஓங்கிய கருணை மேனி யுள்ளுறத் தியானஞ்செய்து.

2312. இந்நிலை நியம மூவைந் தெல்லைஞான் றியன்று பின்னாள்
அந்நிலை யொழுகு நாரை ஆடக கமலந் தோய்வான்
வன்னிலை மதில்சூழ் ஞாங்கர் வந்துழிப் பசியால் வெந்து
மின்னிலை வேல்போற் றுள்ளு மீன்கவர்ந் துண்கும் என்னா.

நாரை மதுரை நகரை அடைந்து வாழ்தல்

2309. அப்புராணத்திலே இறைவனாகிய எம் பெருமான் செய்தருளிய திருவிளையாடல்களையும், முதற் கடவுளாகிய சோமசுந்தரக் கடவுளின் சிறப்பினையும், அவனது பழைய பதியான கூடல் பதியின் சிறப்பினையும், அம்மூர்த்தி தலம் தீர்த்தங்களை அடைந்தோர்க்கு இறைவன் எளிதில் வந்து அருள் புரிந்த தன்மையையும், எடுத்துச் சொல்ல அங்கே தங்கி இருந்த நாரை அவற்றைக் கேட்டது.

2310. உடனே அந்நாரை, அறியாமையோடு கூடிய அறிவு நீங்கப் பெற்று, வலிய வினைத் தொடர்பை அறுத்து, உறுதியாகிய மெய்யுணர்வுபெற்று, சிவபரஞ் சுடரின் திருவடிக் கண் பரந்த அன்பு, "வா, வா" என்று இழுக்கப் புறப்பட்டு அகன்ற மாடங்கள் நிறைந்த கூடலாகிய ஒப்பற்ற மதுரைத் திருநகரை அடைந்தது.

2311. அலைகள் சூழ்ந்த பொற்றாமரையின் கண் நீராடி, இமையாத யானைகளால் தாங்கப்பட்ட விமானத்தின் கண் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி வலம் வந்தது. அவ்விறைவன் தன் அருள் நிறைந்த திருக்கண்ணால் பார்த்தருள அவனது அருளுருவைத் தரிசனம்செய்து திருமுன் இருந்து, கருணை நிறைந்த அப் பெருமானின் திருமேனியை உள்ளத்தில் பொருந்த தியானம் செய்தது.

இறைவன் நாரைக்கு அருள் புரிதல்

2312. இவ்வாறு பதினைந்து நாள்கள் வரையில் நியம மாக வழிபாடு நிகழ்த்தியது. அங்ஙனம் ஒழுகிய நாரை பொற்றாமரையின் கண் நீராடுவதற்காகப் பதினாறாம் நாள் வலிய சுற்று மதிலின் அருகில் வந்த பொழுது, பசியினாலே மிக வருந்தி, அங்கிருந்த ஒளிவிடும் வேல் போன்று துள்ளுகின்ற மீனைப் பிடித்து உண்ண வேண்டும் என்று நினைத்தது.

2313. சிறிதுளத் துள்ளி நாதன் திருவருள் வலத்தாற் பின்னர்
அறிவுவந் தச்சோ விந்த வறப்பெருந் தீர்த்தத் துள்ளே
எறியும்மீன் அருந்த வாசை யெழுந்ததே யெனக்கிப் போதிப்
பிறவியென் றொழிவ தென்னாப் பேரகு ரடைந்து பின்னும்.

2314. சுந்தரச் செம்மல் பாதத் துணைமலர் அன்பிற் றோய்ந்து
சிந்தைவைத் திருக்கு மெல்லை தேவரு மறையுஞ் செய்யும்
வந்தனைக் கரியான் நாரை மனநினை வடிவாய்த் தோன்றி
எந்தமக் கினியாய் வேண்டும் வரமென்கொ லியம்பு கென்றான்.

வேறு

2315. செய்ய கான்மட நாரையுஞ் சென்றுதாழ்ந்து
ஐய னேயிப் பிறவி யறுத்துநின்
மெய்யர் வாழ்சிவ லோகத்தின் மேவிதான்
உய்ய வேண்டுமொன் றின்னமும் உண்டரோ.

2316. வள்ளல் என்மர புள்ளவு மற்றைய
புள்ளு மிந்தப் புனித மலர்த்தடத்
துள்ள மீனுயி ருண்ணினெக் காலமுந்
தள்ளொ ணாத பழிவந்து சாருமே.

2317. என்று மித்தடம் மீனில வாகநீ
நன்று சால்வர நல்கென வெள்ளிமா
மன்று ளானும் வரந்தந்து போயினான்
சென்று நாரை சிவலோகஞ் சேர்ந்ததால்.

2313. இறைவன் திருவருள் வலியால் பின்பு அறிவு வரப்பெற்று, "ஐயனே! இந்த அறவடிவாகிய பெரிய தீர்த்தத்தினுள்ளே தாவுகின்ற மீனையருந்த எனக்கு அவா உண்டாயிற்றே! இந்தக் கொடிய பிறவி எப்போது ஒழியுமோ!" என்று பெருந் துன்மடைந்தது.

2314. மீண்டும், சோமசுந்தரக் கடவுளின் திருவடியான இரண்டு தாமரை மலர்கள் மீது வைத்த அன்பில் தோய்ந்து அந்நிலையில் மனத்தைப் பதிய வைத்திருக்கும் போது, தேவர்கட்கும் வேதங்கட்கும் எட்டாத அவ்விறைவன், அந் நாரை தன் மனத்தில் நினைத்த வடிவமாகத் தோன்றி, "எனக்கு இனிய நாரையே! உமக்கு வேண்டும் வரம் யாது? அதனைக் கூறக் கடவாய்," என்று திருவாய் மலர்ந்தருளினார்.

நாரை வரம் பெறுதல்

2315. சிறந்த தாளையுடைய அவ்விள நாரையும் இறைவன் திருமுன் சென்று விழுந்து வணங்கி, "ஐயனே, இக்கொடிய பிறவியைப் போக்கி அடியேன் நினதுமெய் யன்பர்கள் வாழும் சிவலோகத்திற் சென்று பிழைக்க வேண்டும். இன்னமும் மற்றொரு வரமும் வேண்டும்.

2316. "கருணை வள்ளலே! எனது மரபில் உள்ளனவும் மற்றையுமான பறவைகள் இந்த மலர்நிறைந்த தூயவாவியில் உள்ள மீன்களை உண்டால் நீங்க முடியாத பாவம் வந்து அவற்றைச் சேரும் ஆதலால்,

நாரை முக்தி அடைதல்

2317. "எஞ்ஞான்றும் இவ்வாவியில் மீன்கள் இல்லையாமாறு நன்மை நிறைந்த அவ்வரத்தினை நீ எனக்கு வழங்க வேண்டும்" என்று வேண்டியது. பெரிய வெள்ளியம் பலத்துள் ஆடும் சோமசுந்தரக் கடவுள் அவ்வரத்தை அருளி மறைந்தருளினார். நாரை சிவலோகம் சேர்ந்தது.

2318. இயங்க ளைந்தும் இயம்ப விமானமேற்
புயங்க ணான்குமுக் கண்களும் பொற்பவான்
வியங்கொள் பூமழை வெள்ளத்து வாழ்ந்து போய்
வயங்கொ ணந்தி கணத்துள் வதிந்ததே.

2319. அன்று தொட்டின் றளவும்பொற் றாமரை
என்று ரைக்கு மெழின்மலர் ஒடையிற்
சென்று கைத்துத் திரிகின்ற மீனலால்
ஒன்று மற்றன நீர்வா ழுயிர்களும்.

வேறு

2320. தன்கிளை யன்றி வேற்றுப் பறவைகள் தாமுந் தன்போல்
நன்கதி யடைய வேண்டிற் றேகொலிந் நாரை செய்த
அன்பினில் வியப்போ வீசன் அருளினில் வியப்போ அன்பர்க்கு
இன்புரு வான வீச னன்பருக் கெளிதே தைய.

வேறு

2321. மறக்கு றும்புக் களைகட்டு மண்ணின்மேல்
அறப்பெ ரும்பயிர் ஆக்கிய தன்பயன்
சிறக்க நல்கிட வுண்டு செருக்குவான்
துறக்க மெய்தி யிருந்தான் சுகுணனும்

நாரைக்கு முத்தி கொடுத்த படலம் முற்றிற்று.

கூடற் காண்டம் முற்றிற்று.

2318. தேவதுந்துபிகள் ஐந்தும் ஒலிக்க, விமானத்தின் மேலேறி நான்கு தோள்களும் மூன்று கண்களும் பொருந்திய சிவவடிவம் பெற்று, வானோர் பொழிந்த பெருமைமிக்க மலர் மழையில் நனைந்து நந்திக் கணங் களுள் ஒன்றாய்த் தங்கியது.

2319. அன்று முதல் இன்று வரை பொற்றாமரை என்று சொல்லப்படும் அழகிய மலர்கள் நிறைந்த அத் தடாகத்தில் ஓடித் துள்ளி விளையாடும் மீன்களேயன்றி ஏனைய நீர் வாழ் உயிர்களும் சிறிதுமின்றி ஒழிந்தது.

இறைவன் அன்பர்க்கு எளியன்

2320. தன் இனமாகிய பறவைகளே அல்லாமல் வேறு இனப் பறவைகளும் தன்னைப் போல சிவகதி அடையுமாறு இறைவனிடத்து வரம் வேண்டியது இந் நாரை! இதன் அன்பில் வியப்புளதோ? அன்றி அதற்கு எளிவந்த இறைவன் அருளின் கண் வியப்புளதோ? எது வியக்கற் பாலது? அன்பர்களுக்கு இன்ப வடிவாய் விளங்கும் சோம சுந்தரக் கடவுளின் திருவருள் அன்பர்களின் அன்புக்கு மிக எளிதே ஆகும்.

சுகுண பாண்டியன் சுவர்க்கம் அடைதல்

2321. சுகுண பாண்டியன் தன்னாட்டில் பாவமாகிய சிறிய களையைப் பிடுங்கி அறமாகிய பெரிய பயிரை வளர்த்து அதன் பயன் மிகவும் கைகூட அதனை உண்டு களித்தற் பொருட்டு சுவர்க்க லோகத்தை அடைந்திருந் தான்.

நாரைக்கு முத்தி கொடுத்த படலம் முற்றிற்று.

கூடற் காண்டம் முற்றிற்று.

திருவிளையாடற் புராணம்

3. திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயான படலம்

2322. பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி யுடல்குளிப்பப்
பதிக மோதும்
சேயுடையா ரணந்திளைக்குஞ் செவியுடையார்
அளவிறந்த திசைக ளெட்டுந்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்
விடவரவஞ் சுற்று மால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல் வேண்டுவதிம்
மனித யாக்கை.

2323. வேதனெடு மாலாதி விண்ணாடர் மண்ணாடர் விரத
யோகர்
மாதவர்யா வருங்காண மணிமுறுவல் சிறிதரும்பி மாடக்
கூடல்
நாதனிரு திருக்கரந்தொட் டம்மியின்மேல் வைத்தகைய
னாட்டச் செல்வி
பாதமலர் எழுபிறவிக் கடனீந்தும் புணையென்பர்
பற்றிலாதோர்.

திருவிளையாடற் புராணம்

3. திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயான படலம்

2322. தமது மடத்தில் பாயை ஆடையாக உடைய சமணர், வைத்த பழியாகிய நெருப்பு, பாண்டிய மன்னனின் உடலை அடைய, அதை நீங்கத் திருப்பதிகம் பாடி அருளிய ஞானசம்பந்தரின் பாடலை இடைவிடாமல் நுகரும் செவி யினையுடையவரும், எட்டுத் திக்குகளையும் தம்முடைய ஆடையாக உடையவரும், கொன்றை மாலையை உடைய வரும், நஞ்சுடைய பாம்பால் வரையறுக்கப்பட்ட திருவால வாயினை உடையவருமான சோமசுந்தரக் கடவுளைப் புகழ்ந்து பாடும் பேற்றினை உடையவராக இருப்பதற்காக வாவது இம் மானிடப் பிறவி வேண்டுவதே ஆகும்.

2323. பிரமன், திருமால் முதலிய தேவர்களும் பூமியில் உள்ள மானிடர்களும், நோன்புடைய சிவயோகிகளும், தவமுடைய முனிவரும் காணும்படி சோமசுந்தரப் பெருமான், அழகிய புன்னகை சிந்தி, இரண்டு திருக்கரங்க ளாலும் தொட்டு அம்மியின் மேல் வைத்து அருளப்பட்ட அங்கயற்கண்ணம்மையின் திருவடிகளை, பற்றற்ற பெரியோர்கள் பிறவியாகிய கடலைக் கடப்பதற்குரிய நாவாய் என்று கூறுவார்கள்.

வேறு

2324. ஓலவாய் மறைக டேறா வொருவன்றன் னுலகந் தன்னைச்
சேலவா யுழலு நாரைக் கருளிய செயல் ஈதம்ம
நீலவாய் மணிநேர் கண்டன் நெடியநான் மாடக் கூடல்
ஆலவா யாகச் செய்த அருட்டிறம் எடுத்துச் சொல்வாம்.

2325. சித்திர மேரு வென்ற திரண்ட தோட் சுகுணன் பின்பு
சித்திர விரதன் சித்ர பூடணன் திண்டேர் வல்ல
சித்திர துவசன் வென்றிச் சித்திர வருமன் வன்றோட்
சித்திர சேனன் சீர்சால் சித்ரவிக் கிரமன் என்போன்.

2326. மணிகெழு தேரி ராச மார்த்தாண்டன் இராச சூடா
மணியணி முடியி ராச சார்த்தூல வழுதி சிந்தா
மணிநிகர் துவிச ராச குலோத்தமன் மடங்கா வென்றி
மணிதிகழ் பொலம்பூ ணாயோ தனப்பிர வீணன் மன்னோ.

2327. இயம்பருந் திறலி ராச குஞ்சரன் பரவி ராச
பயங்கரன் கைக்கும் பைந்தார் உக்கிர சேனன் பாரைச்
சயங்கெழு தோள்மே லேந்து சத்துருஞ் சயன்வீ மத்தேர்
வயங்கெழு மன்னன் வீம பராக்ரம வழுதிமாதோ.

2324. ஒலிக்கின்ற மறைகளாலும் அறிய முடியாத இறைவன், தன்னுடைய சிவலோகத்தை, சேல்மீன் என்ற மீனை விரும்பிய நாரைக்கு அருளிய திருவிளையாடல் இது வாகும். நீல நிறமான திருமிடற்றினை உடைய இறைவன் நீண்ட நான்மாடக் கூடலை திருவாலவாயாகச் செய்த திருவிளையாடலை இனிமேல் சொல்வோம்.

ஊழியின் முடிவு

2325. அழகிய மேருமலையை வென்ற திரண்ட தோள்களையுடைய சுகுண பாண்டியனுக்குப்பின் சித்திர விரதனும், சித்திர பூடணனும், தேர்ப்போரில் வல்ல சித்திர துவசனும், வெற்றியுடைய சித்திர வருமனும், வலிய தோள்களையுடைய சித்திர சேனனும், சிறப்புடைய சித்திரவிக்கிர மனும்.

2326. மணி பொருந்திய தேரினையுடைய இராச மார்த்தாண்டனும், இராசசூடாமணியும், இராச சார்த்தூல பாண்டியனும், கொடையாளியான துவிசராச குலோத்த மனும், வெற்றியும் மணிகளுடைய பொன்னணிகளையு முடைய ஆயோதனப் பிரவீணனும்.

2327. வெற்றியையுடைய இராசகுஞ்சரனும், பரவிராச பயங்கரனும், வேப்பம்பூமாலையை அணிந்த உக்கிர சேனனும், உலகை வெற்றி மிக்க தோள்களால் காத்த சத்துருஞ்சயனும், வெற்றி மிக்க வீமரதனும், வீம பராக்ரம பாண்டியனும்,

2328. பெய்வளை விந்தை சேர்ந்த பிரதாப மார்த்தாண் டப்பேர்த்
தெவ்வடு சிலையான் றேர்விக் கிரமகஞ் சுகன்றே ரார்போர்
வெளவிய சமர கோலா கலனெ னும் வாகை வேலான்
அவ்விய மவித்த சிந்தை யதுலவிக் கிரமன் என்போன்.

2329. எழில்புனை யதுல கீர்த்தி யெனவிரு பத்தி ரண்டு
வழிவழி மைந்த ராகி வையங் காத்த வேந்தர்
பழிதவி ரதுல கீர்த்தி பாண்டியன் றன்பால் இன்பம்
பொழிதர உதித்த கீர்த்தி பூடணன் புரக்கு நாளில்.

2330. கருங்கடல் ஏழுங் காவற் கரைகடந் தார்த்துப் பொங்கி
ஒருங்கெழுந் துருத்துச் சீறி யும்பரோ டிம்ப ரெட்டுப்
பொருங்கட கரியு மெட்டுப் பொன்னெடுங் கிரியு நேமிப்
பெருங்கடி வரையும் பேரப் பிரளயங் கோத்த தன்றே.

2331. அப்பெருஞ் சலதி வெள்ளத் தழிந்தன அழிவி லாத
எப்பெரும் பொழிலும் ஏழு தீபமு மிவற்றுள் தங்கி
நிற்பன செல்வ வான திணைகளு நீண்ட சென்னிப்
பர்ப்பத வகையு மீறு பட்டன ஆக வங்கண்.

2332. தேனிழி குதலைத் தீஞ்சொற் சேனெடுங் கண்ணி கோயில்
வானிழி விமானம் பொற்றா மரைவிளை யாட்டின் வந்த
கானிழி யிடபக் குன்றம் கரிவரை நாகக் குன்றம்
ஆனிழி வரைவ ராக வரைமுதல் அழிவி லாத.

2328. வீரமகள் அணைந்த பிரதாப மார்த்தாண்டனும், பகைவெல்லும் வில்லும் சிறந்த தேரும் உடைய விக்கிரம கஞ்சுகனும், பகைவர் வலிமையை அழித்த வெற்றி வேலையுடைய சமர கோலாகலனும், வெற்றி வேலை உடைய பொறாமை அற்ற உள்ளமுடைய அதுல விக்கிரமனும்.

2329. அழகிய அதுல கீர்த்தி என்பவனும் ஆகிய இருபத்திரண்டு அரசர்கள் வழிவழியாகத் தோன்றி இவ்வுலகை ஆண்டார்கள். அவர்களில் பழியற்ற அதுல கீர்த்தி என்னும் பாண்டியனுக்குத் தோன்றிய கீர்த்தி பூடண பாண்டியன் என்பவன் சிறப்புடன் அரசாண்டு வந்தான். அப்போது

2330. கருங்கடல் ஏழும், ஒருசேரப் பொங்கி எழுந்து வெகுண்டு சீறி ஆரவாரம் செய்து காவலாகிய எல்லையைக் கடந்து, விண்ணுலகும் மண்ணுலகும், எட்டு திக்கு யானைகளும் எட்டுப் பொன் மலைகளும், அச்சம் தரும் சக்கரவாள கிரியும் நிலை மாறுமாறு பிரளயமாக ஒன்றோடொன்று சேர்ந்தன.

2331. அந்தப் பெரிய கடல்வெள்ளத்தில் மூழ்கி, அழிவில்லாத பெரிய பூமியும், ஏழு தீவுகளும், இவற்றுள் தங்கி இருப்பனவும், செல்வனவுமாகிய பொருள்களும், மலை வகைகளும் ஒழிந்தன.

ஊழியிலும் அழியாதவை

2332. இனிய தேன்போன்ற மொழியினை உடையவளும், நீண்ட விழிகளையுடையவளுமான உமையம்மையாரின் திருக்கோயிலும், வானில் இருந்து இறங்கிய இந்திர விமானமும், பொற்றாமரைக் குளமும், இறைவனின் திருவிளையாடலால் வந்து தங்கிய இடப மலையும், யானை மலையும், நாக மலையும், பசுமலையும், பன்றி மலையும் அழியவில்லை.

2333. வெள்ளநீர் வறப்பா ஆதி வேதியன் ஞால முன்போல்
உள்ளவா றுதிப்ப நல்கி யும்பரோ டிம்பர் ஏனைப்
புள்ளொடு விலங்கு நல்கிக் கதிருடற் புத்தேள் மூவர்
தள்ளரு மரபின் முன்போல் தமிழ்வேந்தர் தமையுந்
தந்தான்.

வேறு

2334. அங்கியை மதிமர பென்னு மாழியுட்
டங்கிய கலையெணான் கிரட்டி தன்னொடும்
பொங்கிய நிலாமதி போலத் தோன்றினான்
வங்கிய சேகர வழுதி மன்னனே.

2335. தாளணி கழலினான் தங்கள் நாயகன்
கோளணி புரிசைசூழ் கோயில் சூழவோர்
வாளணி கடிநகர் சிறிது வைகவைத்
தாளரி யேறென வவனி காக்குநாள்.

2336. செய்யகோன் மனுவழி செலுத்து நீர்மையாற்
பொய்கெழு கலிப்பகை புறந்தந் தோடத்தன்
வையகம் பல்வளஞ் சுரப்ப வைகலும்
மெய்கெழு மன்பதை மிக்க வால்அரோ.

2337. பல்குறு மானுடப் பரப்பெ லாமொருங்
கல்குறு விடங்குறை வாக வாய்மதுப்
பில்குறு தாரினான் பிறைமு டித்தவன்
மல்குறு கோயிலின் மருங்கர் எய்தினான்.

உலகத் தோற்றம்

2333. பின்னர் பிரளய நீர்வடிய, சிவபெருமான் முன் இருந்தது போன்றே உலகைத் தோன்றுமாறு அருள்புரிந்து, தேவர்களையும் மக்களையும் விலங்குகளையும், பறவை களையும் மற்றை உயிரினங்களையும் தோற்றுவித்தார். ஒளி வடிவமான சந்திரன் சூரியன் தீக்கடவுள் மரபில் முன் போலவே மூன்று தமிழ் மன்னர்களையும் தோற்றுவித்தார்.

வங்கியசேகர பாண்டியனின் ஆட்சிமுறை

2334. அங்ஙனம் சந்திரன் மரபில், அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்தவனாய் விளக்கம் பொருந்திய சந்திரனைப் போன்ற தோற்றமுடைய வங்கியசேகர பாண்டியன் என்னும் பாண்டியன் தோன்றினான்.

2335. காலில் வீரக்கழலைப் பூண்ட அப்பாண்டிய மன்னன், தங்கள் கடவுளாகிய சோமசுந்தர பெருமானின் ஒன்பது கோள்களும் தவழும் மதிலையுடைய திருக் கோயிலைச் சூழ ஒரு சிறிய காவலையுடைய நகரை அமைத்துக் கொண்டு, சிங்கம் போன்று பூமியைக் காத்து வந்தான்.

2336. மனு தர்மத்தின்படி அரசாட்சி செய்து வருகின்ற தன்மையினால் பொய்யுடைய வறுமை முதலிய தீமைகள் நாட்டை விட்டு ஓட, தன் நாடு முழுவதும் பல நன்மைகள் சிறக்கும்படி ஆண்டதால் நாள்தோறும் மக்கள் தொகை அதிகரித்தது.

2337. இவ்வாறு பெருகி வரும் மக்கள் கூட்டம் தங்கு வதற்கு உரிய இடம் போதாமையால், பாண்டிய மன்னன், பிறையணிந்த சோமசுந்தரப் பெருமானின் திருக்கோயிலை அடைந்தனன்.

2338. கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு
திறையவ நின்னருள் வலியி னிந்நிலப்
பொறையது வாற்றுவேற்கு ஈண்டிப் போதொரு
குறையதுண் டாயினது என்று கூறுவான்.

2339. இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதாப்
பத்தனங் காணவிப் பதிக்க ணாதியே.
வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்
அத்தமற் றதனையின் றறியக் காட்டென்றான்.

2340. நுண்ணிய பொருளினு நுண்ணி தாயவர்
விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்
திண்ணிய வன்பினுக் கெளிய சித்தராய்ப்
புண்ணிய அருட்கடல் ஆகிப் போதுவார்.

வேறு

2341. பாம்பி னாற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்
பாம்பி னாற்புரி நூல்சன்ன வீரம்வெம் பகுவாய்ப்
பாம்பி னாற்குழை குண்டலம் பாதகிண் கிணிநாண்
பாம்பி னாற்கர கங்கணம் பரித்தனர் வந்தார்.

2342. வந்த யோகர்மா மண்டப மருங்குநின் றங்கைப்
பந்த வாலவா யரவினைப் பார்த்துநீ யிவனுக்
கிந்த மாநக ரெல்லையை யளந்துகாட்டு என்றார்
அந்த வாளரா வடிபணிந் தடிகளை வேண்டும்.

2338. கழுத்திலே கறையுடைய பெருமானான சோம சுந்தரக் கடவுளை வணங்கி, கைகூப்பி "தலைவனே! உன்னுடைய அருளினாலே இந்நிலவுலகைக் காத்துவந்த எனக்கு இப்போது ஒரு குறை உண்டாகியுள்ளது," என்று சொல்லி அதனைக் கூறத் தொடங்கினான்.

2339. "இவ்வளவு மக்களும் வசிக்கத்தக்க தகுதி யுடையதாக ஒரு நகரினை உண்டாக்குவதற்கு, பழையதாக உள்ள ஒருவரையறையான எல்லையை என்னால் காண முடியவில்லை. அத்தனே! அந்த எல்லையை நான் அறிந்து கொள்ளக் காட்டவேண்டும்" என்று இரந்து வேண்டினான்.

சித்த மூர்த்திகள்

2340. நுட்பமான பொருளினும் மிக நுட்பமான பொருளாய் விளங்கும் சோமசுந்தரக் கடவுள், வானில் இருந்து இறங்கிய ஓர் விமானத்தில் இருந்து எழுந்தருளிய, பாண்டிய மன்னனின் அன்பிற்குரிய ஒரு சித்த மூர்த்தியாகி அற அருட்கடலாகி வரத்தொடங்கினார்.

2341. பாம்பினால் அரைஞாணும் கோவணமும் அணிந்திருந்தார். கால்களே இல்லாத அப்பாம்பு போன்ற தோற்றமுடைய பெருமான் பூணூலும் வெற்றிமாலையும் பூண்டிருந்தார். பிளவுடைய நாக்கையுடைய பாம்பினால் குழையும் குண்டலமும், காற் சதங்கை கோத்த கயிறும், கை வளையும் உடையவராகத் திகழ்ந்தார்.

2342. அவ்வாறு வந்த சித்த மூர்த்தியானவர் பெரிய மண்டபத்தின் அருகில் நின்று அழகிய திருக்கைகளில் கட்டி இருந்த நஞ்சுடைய பாம்பைப் பார்த்து, "நீ இப்பாண்டிய மன்னனுக்கு இம்மாநகர் எல்லையை அளந்து காட்டு," என்றார். அப் பாம்பு அச் சித்தமூர்த்தியை அடிபணிந்து வணங்கி ஒன்றை வேண்டத் தொடங்கியது.

2343. பெரும விந்நகர் அடியனேன் பெயரினால் விளங்கக்
கருணை செய்தியென் றிரந்திடக் கருணையங் கடலும்
அருண யந்துநேர்ந்து அனையதே யாகெனப் பணித்தான்
உருகெ முஞ்சின வுரகமும் ஒல்லெனச் செல்லா.

2344. கீட்டி சைத்தலைச் சென்றுதன் கேழ்கிளர் வாலை
நீட்டி மாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்
கோட்டி வாலைவாய் வைத்துவேற் கொற்றவற்கு
எல்லை
காட்டி மீண்டரன் கங்கண் மானது கரத்தில்.

2345. சித்தர் தஞ்சின கரத்தெழுந் தருளினார் செழியன்
பைத்த வாலவாய் கோலிய படிகுவர் எடுத்துச்
சுத்த நேமிமால் வரையினைத் தொட்டகழ்ந் தெடுத்து
வைத்த தாமென வகுத்தனன் மஞ்சுசூ ழிஞ்சி.

2346. தென்றி சைப்பரங் குன்றமும் வடதிசை இடபக்
குன்ற முங்குடக்கு ஏடக நகரமுங் குணபாற்
பொன்ற லங்கிழித் தெழுபொழிற் பூவண நகரும்
என்ற நாற்பெரு வாயில்கட்கு எல்லையா வகுத்தான்.

2343. "பெருமானே! இந்நகரம் என்னுடைய பெயரால் விளங்க அருள்புரிய வேண்டும்," என்று இரந்தது. கருணைக் கடலாக விளங்கும் அச் சோமசுந்தரப் பெருமானும், விருப்பத்துடன் உட்பட்டு "அப்படியே ஆகுக," என்று அருளினார். கண்டவர்களுக்கு அச்சத்தினை உண்டாக்கும் அப்பாம்பும் விரைந்து சென்றது.

பாம்பு எல்லையைக் காட்டல்

2344. கீழ்த்திசையின் பக்கம் சென்று வாலை நீட்டி பெரிய அம்மாநகர்க்கு வலமாக நிலத்தில் படிந்து, உடலை வளைத்து, வாலைத் தன் வாயில் வைத்துப் பெரிய வளைய மாக்கி, அதன் உட்புறப்பகுதியே அந்நாட்டிற்குரிய பழைய எல்லையென அப்பாண்டிய வேந்தனுக்குக் காட்டி மீண்டும் அப்பாம்பானது இறைவனுடைய திருக்கரத்தின் கங்கணம் ஆனது.

மதில் அமைத்தல்

2345. சித்த மூர்த்திகள் தம்முடைய திருக்கோயிலில் எழுந்தருளினார். பாண்டிய மன்னன், பாம்பு வளைத்து எல்லையை வரையறுத்துக் காட்டியபடி மதில் சுவர் உண்டாக்க எண்ணினான். அதன்படியே, சக்கரவாள மலையை அடியோடு தோண்டி எடுத்து வைத்தது போன்று முகில் தவழும்படியான பெரிய மதிலை அமைத்தான்.

2346. நான்கு பெரிய வாயில்களுக்கும், தெற்கில் திருப் பரங்குன்றமும், வடக்கில் இடபமலையும், மேற்கில் திரு வேடகமும், கிழக்கில் சோலைகள் சூழ்ந்த திருப்பூவண நகரும் எப்போதும் எல்லைகளாக இருக்கும்படி அம்மதில் களை அமைத்தான்.

2347. அனைய நீண்மதில் ஆலவாய் மதிலென அறைவர்
நனைய வார்பொழில் நகரமு மாலவாய் நாமம்
புனைய லாயதெப் போதுமப் பொன்னகர் தன்னைக்
கனைய வார்கழற் காலினான் பண்டுபோற் கண்டான்.

2348. கொடிகள் நீண்மதின் மண்டபங் கோபுரம் வீதி
கடிகொள் பூம்பொழில் இன்னவும் புதியவாக் கண்டு
நெடிய கோளகை கிரீடம்வா ணிழன்மணி யாற்செய்
தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான்

2349. பல்வ கைப்பெருங் குடிகளின் பரப்பெலா நிரப்பிச்
செல்வ வானவர் புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப
மல்லல் மாநகர் பெருவளந் துளும்பிட வளர்த்தான்
தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல்.

திருவாலவாயான படலம் முற்றிற்று.

50. சுந்தரப் பேரம்பு எய்த படலம்

2350. அங்கண ருரக மணிந்தருள் வடிவ மடைந்தர சகமகிழக்
கங்கண விடவர வங்கொடு கடிநகர் கண்டருள் முறையிதுவாஞ்
சங்கணி குழையினர் பஞ்சவன் வழிபடு தம்பெயர் எழுதியகூர்
வெங்கணை கொடுவள வன்படை முடுகிய வென்றியை இனிமொழிவாம்.

2347. அந்த நீண்ட மதிலை ஆலவாய் மதில் என்று கூறுவர். தேன் உடைய மலர் நிறைந்த சோலைகள் சூழ்ந்த அந் நகரம் எப்போதும் ஆலவாய் என்ற பெயரை உடைய தாயிற்று. அந்த அழகிய நகரத்தை, வீரக்கழலணிந்த கால் களையுடைய அப்பாண்டியன் முன்போல் ஆக்கினான். (ஆலவாய்-விடம் உள்ள வாய்: பாம்பு)

2348. கொடிகள் உடைய நீண்ட மதிலும், மண்டபமும், கோபுரமும், வீதியும், மணம்மிக்க சோலை களும், இவை போன்ற பிறவும், புதியனவாக உண்டாக்கி னான். சோமசுந்தரக் கடவுள் அணியும்படிக் கவசமும் முடியும் வேறு பல அணிகளும், சிறந்த மணிகளால் செய்து கொடுத்தான்.

பாண்டியன் ஆட்சிச் சிறப்பு

2349. பல வகையான மரபுடைய சிறந்த குடி மக்களைக் குடியேற்றினான். குபேரன் இந்திரன் இவர்கள் நகரைவிட சிறப்புடைய நகராய்ச் செல்வங்கள் நிறைந்து விளங்க அமைத்தான். முன்னாளில் அரசாண்ட குலசேகர பாண்டியன் போன்று வங்கிய சேகரப் பாண்டியனும் அரசாண்டு வந்தான்.

திருவாலவாயான படலம் முற்றிற்று.

50. சுந்தரப் பேரம்பு எய்த படலம்

2350. அருள் கண்ணையுடைய இறைவர், பாம்பணிந்த சித்த மூர்த்திகளின் வடிவம் கொண்டு வங்கிய சேகரமன்னன் உள்ளம் மகிழ, கங்கணமாக அணிர்திருந்த பாம்பினால் நகரின் எல்லையை வரையறுத்துக் காட்டிய திருவிளையாடல் இதுவாகும். சங்கினைக் குழையாக அணிந்த இறைவர், அவருடைய பெயர் தீட்டப்பட்ட அம்பினால் விக்கிரம சோழன் படையைத் துரத்திய திரு விளையாடலை இனிக் கூறுவோம்.

2351. வெங்கயல் நீள்கொடி வங்கிய சேகரன் வெண்குடை
நீழலின்வாய்
வங்கமு லாவிய தெண்கடன் ஞாலம் அடைந்தையு
மாசறுசீர்ச்
செங்கம லாலய மங்கையும் வாலிய திண்பது
மாலயமேல்
நங்கையு மோவற மங்கல மான நயம்பெற
வாழ்வுறுநாள்.

2352. வேழ மறப்படை சூழ வெதிர்த்தவர் வீறு கெடுத்தடியில்
தாழ வடர்த்திகல் வாகை தொடுத்தலர் தார்புனை
விக்கிரமச்
சோழன் மதிக்குல நாயக னைப்பொரு சூள்கரு
தித்தொலையா
ஆழ்கட லுக்கிணை யாமனி கத்தொடும் ஆடுஅம
ருக்கெழுவான்.

2353. கயபதி காய்சின நரபதி பாய்துர கதபதி யேமுதலா
வயமிகு தோள்வட திசையின ராதிபர் வலிகெழு
சேனையினோ
டியமிடி யேறிமி ழிசையென வாய்விட இரதம
தேறிநடாஅய்ப்
பயன்மலி காவிரி நதியரு கேயுறை பதிகொடு
மேயினனால்

2354. சிலைத்தெழு செம்பியன் வெம்படை மள்ளர் செயிர்த்து
மதிக்கடவுட்
குலத்தவ னாட்டினி ருந்தெழில் ஆனிரை கொண்டு
குறும்புசெய்து
மலர்த்தட மேரி யுடைத்து நகர்க்கு வரும்பல
பண்டமுமா
றலைத்து முடுக்கி நடுக்கம் விளைத்து அமர்க்கடி
யிட்டனரால்.

2351. கயல்மீன் ஓவியம் தீட்டப்பட்ட கொடியை உயர்த்திய வங்கிய சேகரப்பாண்டியனின் வெண்கொற்றக் குடையின் நிழலின் கண், மரக்கலங்கள் உள்ள தெளிந்த கடல் சூழ்ந்த நிலமகளும், குற்றமற்ற செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும், வெண்மையான தாமரை மலரில் கோயில் கொண்டிருக்கும் நாமகளும், அந்நாட்டில் உள்ள பல நன்மைகளை அடையும்படி நீங்குதல் இன்றி அங்கேயே தங்கி அருள் புரிந்தார்.

விக்கிரம சோழன் படை எடுத்து வருதல்

2352. யானைப் படை சூழ எதிர்த்த பகைவர் தமது பாதங்களில் விழுந்து வணங்கும்படி அவர் வலிமை கெட அழித்து வென்று வெற்றிக்குரிய வாகை மலர் மாலையை அணிந்த விக்கிரம சோழன், சந்திர மரபில் தோன்றிய வங்கிய சேகர பாண்டியனை வெற்றி கொள்ளும் எண்ணத் துடன் அழியாத ஆழ்ந்த கடலுக்கு நிகரான பெரிய படை யோடும் போர் செய்யக் கருதி எழத் தொடங்கினான்.

2353. கயபதியும், சினமுடைய நரபதியும் பாய்ந்து செல்லும் துரகபதியும் முதலான வெற்றிமிக்க வடதிசை மன்னர்களின் வலிமைமிக்க சேனையோடு, பல்லியங்கள் இடி போன்று ஒலி செய்ய, தேரில் ஏறிக் காவிரி ஆற்றின் அருகில் உள்ள, தான் வாழும் ஊரில் இருந்து புறப்பட்டு வரத் தொடங்கினான்.

சோழன் படை வீரர்கள் நாட்டைப் பாழ்படுத்தல்

2354. ஆரவாரத்துடன் எழுகின்ற சோழனுடைய கொடிய படைவீரர், பாண்டியனுடைய நாட்டில் தங்கி அழகிய பசுக் கூட்டங்களைக் கவர்ந்து சென்று, தீமை புரிந்தனர். பல ஏரிகளையும், குளங்களையும் உடைத்தனர். நகருக்கு வருகின்ற பலவிதமான பண்டங்களை வழியில் மறித்து, அதனைக் கொண்டு வருபவரைத் துரத்தித் துன்பம் விளைத்துப் போர் துவங்குவதற்கு அடிகோலினர்.

2355. மாற னறிந்தினி யென்செய்தும் நேரியன் வன்படை
யோவளவின்
றேறி யெதிர்ந்தம ராடல் எனக்கரி திக்குறை
யைப்பிறையோ
டாறணி பூரண சுந்தரன் எந்தை யடித்தல முன்குறுகாக்
கூறியி ரந்து வரம்பெறு கென்றிறை கோயி
லடைந்தனனால்.

2356. அடைந்து பணிந்தருள் நாயக னேயடி யேனொடு
விக்கிரமன்
தொடர்ந்தமர் ஆட அயற்புல மன்னர் தொகையோடு
பாசறைவாய்ப்
படர்ந்திறை கொண்டன னேபொர வொத்த பதாதி
யெனக்கிலையே.
மிடைந்து வரும்படை மிக்க விடத்தரண் வேறுள
தோவிறைவா.

2357. என்னை யினிச்செயு மாறென மாறன் இரந்து
மொழிந்திடலும்
முன்னவன் வானிடை நின்றச ரீரி மொழிந்தருள்
வான்முதல்நீ
அன்னவ னோடம ராடுபின் நாமு மடைந்துத
வித்துணையாய்
நின்னது வாகை யெனப்பொரு கின்றன நீயினி
அஞ்சலென.

2358. சிந்தை களித்திரு கண்கடுளித்திரு செங்கை
குவித்திறைவன்.
அந்தி மதிச்சடை யந்தண னைத்தொழு தன்று
புறப்படமுன்
வந்தன னொற்றுவ னந்தி வரைக்கயல் வந்தது
விக்கிரமன்
வெந்தறு கட்படை யென்றர சற்கு விளம்பினன்
அப்பொழுதே

பாண்டியன் இறைவனிடம் வேண்டுதல்

2355. இதனைப் பாண்டியன் அறிந்தான். "இனி நான் யாது செய்வேன்? சோழனது படையோ பெரியது. எனவே மேலே சென்று எதிர்த்துப் போர் செய்தல் என்னால் முடியாத செயல். எனவே இக்குறைபாட்டை, சந்திரனையும், கங்கையையும் அணிந்த எம்தந்தையாகிய சோமசுந்தரப் பெருமானின் முன்னே கூறி குறையிரந்து வரம் பெறுவேன்" என்று கருதி அவ்விறைவனின் திருக் கோயிலை அடைந்தான்.

2356. அவ்வாறு சென்று வணங்கி, "அருள்நாயகனே! என்னோடு விக்கிரம சோழனென்பான் வேற்று மன்னரின் படைகளோடு போர் புரிய எண்ணி, பாசறையின் வந்து தங்கி உள்ளான். அவனோடு போரிடுவதற்குத் தகுதியுடைய சேனை என்னிடத்தில் இல்லை. பெருகி வருகின்ற படை யானது, என்னை வந்து தாக்கும் போது எனக்குப் பாது காப்பாக இருப்பவன். இறைவனே! உன்னைத் தவிர வேறு உண்டோ?

2357. "இனி என்னால் செய்யக் கூடியது என்ன உள்ளது?" என்று பாண்டியன் இறைவனிடம் வேண் டிடவும், முதல்வனாகிய சோமசுந்தரக் கடவுள் வானத்திலே நின்று அசரீரியாகக்கூறி அருளினார். "முதலில் நீ அவனுடன் எதிர்த்துப் போர் செய். பின்னர் நாமும் அங்கு வந்து உனக்குத் துணையாகி வெற்றி உனக்குக் கிட்டும்படிப் போர் புரிவோம். இனி அஞ்ச வேண்டாம்" ஏன்று அருளினார்.

2358. அவ்வுரையைக் கேட்ட பாண்டியன் மிகவும் மனம் மகிழ்ந்து, இரண்டு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருகிட இரண்டு கைகளையும் குவித்து, பிறையணிந்த சடையுடைய அப்பெருமானை வணங்கி, திருக்கோவிலில் இருந்து புறப்பட்டான். அப்போது ஒற்றன் அவன் முன் வந்து "விக்கிரம சோழனுடைய படையானது இடப மலைக்கு அருகில் வந்துள்ளது" என்று கூறினான் அப்போதே,

2359. அரசனின் இயம்பல அதிர வலம்புரி யலற
வலங்குளைமான்
இரத மணைந்திட விசைகொடு சிந்தைபி னிடவல
வன்கடவப்
புரசை நெடுங்கரி திரையெறி யுங்கடல் பொருபரி
விண்டொடுதேர்
விரைசெய் நறுந்தொடை விருதர்க ணம்புடை விரவ
நடந்தனனால்.

வேறு

2360. அளந்து சூழ்திரு வால வாய்மதில் இன்பு றத்தக
ழாழிபோல்
வளைந்த சோழ னெடும்ப டைக்கெதிர் வஞ்சி
வேய்ந்தெழு பஞ்சவன்
கிளர்ந்த சேனை யதிர்ந்து கிட்டின கிட்டி யவ்விரு
படைஞருங்
களஞ்சி றந்திட வஞ்சி னங்கொடு கைவ குத்தமர்
செய்வரால்.

2361. சைய மொத்தெழு தேரி னாரொடு சைய மொத்தெழு
தேரரும்
மையன் மைக்கரி வீர ரோடெதிர் மையன் மைக்கரி
வீரருங்
கொய்யு ளைப்பரி வயவ ரோடிகல் கொய்யு ளைப்பரி
வயவருங்
கைய முற்படை வீசி மின்விடு கார் எனப்பொரு வாரரோ.

2362. முடங்கு வெஞ்சிலை வில்ல ரோடு முடங்கு வெஞ்சிலை
வில்லரும்
விடங்க லுழ்ந்திடு வேல ரோடு விடங்க லுழ்ந்திடு
வேலரும்
இடங்கை தோல்வல வாள ரோடு மிடங்கை தோல்வல
வாளரும்
மடங்க லேறு மடங்க லேறு மலைப்பது என்ன
மலைப்பரால்.

பாண்டியன் படையும் சோழன் படையும் போர் புரிதல்

2359. பாண்டியன் பல வாத்தியங்கள் ஒலிக்கவும் வலம்புரிச் சங்கு முழங்கவும், குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, மனத்தைவிட வேகமாக தேரைப்பாகன் செலுத்தவும், பெரிய யானையும், கடலைப் போன்ற குதிரையும், உயர்ந்த தேரும் வாசனை வீசும் மாலையை அணிந்த நாற்படை வீரரும் தன் பின்னே தொடர்ந்து வர முன்னே சென்றான்.

2360. திருவாலவாயின மதிற்புறத்தில் வரையறை யோடு தோண்டப்பட்ட கடல் போன்று, முற்றுகை யிட்டுள்ள சோழனின் பெரிய படைக்கு முன்னே, வஞ்சி மாலை சூடிப் போருக்கு எழுந்த பாண்டியனது படைகள் போருக்கு நெருங்கின. அவ்வாறு நெருங்கிய அவ்விரண்டு படைத் திறத்தாரும் சிறந்த வஞ்சின மொழிகளைக் கூறிப் படை வகுத்துப் போர் புரியத் தொடங்கினர்.

2361. 'சையம்' என்ற மலை போன்ற தேரினையுடைய வீரருடன் தேர்வீரரும். மயக்கத்தையுடைய யானை வீரருடன் யானை வீரரும், கொய்யப்பட்ட பிடரி மயிரை யுடைய குதிரை வீரருடன் குதிரை வீரரும், கையில் உள்ள படைக் கருவிகளை மேகத்தில் உள்ள மின்னல் போன்று வேகமாக வீசிப் போர் புரிந்தனர்.

2362. வளைந்த கொடிய வில்லையுடைய வீரருடன் வில் வீரரும், நஞ்சுமிழும் வேல் வீரருடன் வேல்வீரரும், இடக் கையில் கேடகமும், வலக் கையில் வாள்படையும் உடைய வாள்வீரருடன், வாள் வீரரும், சிங்கமும் எதிர்ப்பது போன்று போர் புரிந்தனர்.

2363. அரவி னன்னில மம்பு யம்பொறை யாற்று மீனவன்
ஆற்றல்கூர்
புரவி யின்னிரை வைய மேல்கொடு போந்த நேரியர்
வேந்தனோர்
விரவி மின்னிய முரசி யம்ப மிடைந்து வெஞ்சம
ராடுமா
றிரவி தன்னொடு மதிய வன்பொர வேகி னான்நிக
ராகுமால்.

2364. துள்ளு மாவொலி தான யாறு துளும்பு மாவெலி
தூண்டுதேர்
தள்ளு மாவொலி படையொ டும்படை தாக்கு
மாவொலி பொருநரார்த்
தெள்ளு மாவொலி மள்ளர் பைங்கழல் ஏங்கு மாவொலி
வீங்கியத்
தெள்ளு மாவொலி வேறு பாடு திரிந்து கல்லெனல்
ஆயதே.

2365. துடித்த வாளர வென்ன வீசிய தூங்கு கையின
வீங்குநீர்
குடித்த காரொடு கார்ம லைந்திடு கொள்கை போல
உடன்றுடன்று
இடித்த வாயின அசனி யேறின் இருப்பு லக்கை
எடுத்தெறிந்
தடித்த சோரியொ டாவி சோர விழுந்த வெஞ்சின
ஆனையே.

2366. எய்த வாளி விலக்கு வார்பிறி தெய்யும் வாளிதம்
மார்புதோள்
செய்த போதவ ராண்மை கண்டு சிரித்து வென்றி
வியப்பரால்
வைத வாவடி வேலே றிந்திட வருவ தைக்குறி
வழியினாற்
கொய்த தார்மற வாள் எறிந்து குறைத்து வேறு
படுத்துவார்.

2363. அனந்தன் என்னும் பாம்பினைப் போல நல்ல இந்நிலவுலகத்தைத் தன் தோளினால் தாங்கும் பாண்டியன் வலிமைமிக்க குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறிப் போருக்கு எழுந்த சோழமன்னன் எதிர் சென்று கலந்து போர் முரசு ஒலிக்க நெருங்கிச் சிறப்புடன் போர் புரிந்தான். அத்தன்மை சூரியனோடு சந்திரன் போர் புரிந்ததைப் போலிருந்தது.

2364. குதிரைகளின் கனைப்பு ஒலியும், யானைகளின் பிளிறல் ஒலியும், குதிரைகளால் இழுக்கப்படும் தேர்களின் ஒலியும், படைகளோடு படைகள் தாக்கும் ஒலியும், வீரர்கள் ஆரவாரத்துடன் ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசும் ஒலியும், வீரர்கள் காலில் பூண்ட கழல்களின் ஒலியும் வாத்தியங்களின் பேரொலியும் தம்முள் வேறுபாடின்றி எங்கும் கலந்து ஒலித்தன.

2365. துடிக்கின்ற பாம்புபோல, தொங்குகின்ற துதிக்கையை உடையனவாகிய யானைகள், மிகுந்த நீரை உண்ட கரிய மேகங்கள் ஒன்றோடொன்று மோதிப் போர் புரியும் தன்மை போன்று போரிட்டன. அவை இடிபோல சப்தமிட்டு, இரும்பு உலக்கையை எடுத்து அடித்தலால் ஒழுகும் குருதிபோன்ற இரத்தத்துடன் தம் உயிரும் சொரிய, கீழே விழுந்தன.

2366. பகைவர் எய்த அம்பினை விலக்குகின்ற வீரர்கள், அதே நேரத்தில் வேறு ஓர் அம்பு தம் மார்பில் பாய, எதிரியின் ஆண்மையைக் கண்டு மகிழ்ந்து, அவர் வெற்றியை வியந்து பாராட்டுவர். கூர்மையுடன் வேல் படையைப் பகைவர் வீச, வருகின்ற அவ்வேற்படையைக் குறிவைத்து வீரவாளை வீசித் துண்டித்து அழிப்பார்கள்.

2367. பின்னி டாதிரு படையு மொத்தம ராடு மெல்லை
பெரும்படைச்
சென்னி தன்றுணை யான உத்தர தேய மன்னவர்
படையொடும்
துன்னி ஞால முடிக்கு நாளெழு சூறை தள்ள
வதிர்ந்தெழும்
வன்னி யென்ன வுடன்றெ திர்ந்தனன் வழுதி சேனை
யுடைந்ததே

2368. மின்ன லங்கிலை வாளொ டுஞ்சிலை வில்லி ழந்தனர்
வீரரே
பன்ன லம்புனை தேரொ டுங்கரி பரியி ழந்தனர்
பாகரே
தென்ன வன்பொரு வலியி ழந்தனன் என்று செம்பியன்
வாகையும்
தன்ன தென்று தருக்கு மேல்கொடு சங்கெ டுத்து
முழங்கினான்.

2369. அந்த வேலையின் முன்ன ருந்தம தருளெ னக்குளிர்
கடிபுனற்
பந்தர் நீழல் அளித்தும் ஓடை படுத்தி யும்பகை
சாயவே
வந்த வேடர் வண்ண மேயொரு மான வேடர
சாய்வலஞ்
சிந்த வாகுல மூழ்கு மீனவன் சேனை காவல
ராயினார்

வேறு

2370. குன்றவில் வேடன் சாபங் குழைவித்துச் சுந்த ரேசன்
என்றதன் னாமந் தீட்டி யிட்டகூர்ங் கணைகள் தூண்டி
வென்றனம் என்று வாகை மிலைந்துவெண் சங்க
மார்த்து
நின்றவன் சேனை மீது நெறிபடச் செலுத்தா நின்றான்.

2367. இவ்வாறு புறங்கொடாது இரண்டு பக்கப்படை வீரர்களும் ஒத்துப் போரிடும்போது, பெரிய படையினை உடைய சோழன் தனக்கு உதவியாகிய வடநாட்டு வேந்தர் படையோடு நெருங்கி, உலகத்தை அழிக்கும் நாளில் எழுந்த ஊழிக்காற்றால் முழங்கி எழுந்த ஊழித் தீ போன்று வெகுண்டு எதிர்த்தான். அப்போது பாண்டியன் சேனை சிதறுண்டது.

சோழன் வெற்றிச்சங்கு ஊதுதல்

2368. பாண்டிய வீரர்கள் மின்போல விளங்கும் தகட்டு வடிவமாகிய வாள்படையோடு வில்லையும் இழந்தனர். பாகர்கள், பலவகையாக அலங்கரிக்கப்பட்ட தேரோடு யானைகளையும், குதிரைகளையும் இழந்தனர். விக்கிரமசோழன், பாண்டியன் போர் செய்தற்குரிய வலிமையை இழந்துவிட்டான் என்றும் அதனால் வெற்றி நம்முடையதே என்றும் கருதி, செருக்கோடு வெற்றிச் சங்கை எடுத்து ஊதினான்.

இறைவன் பாண்டியர் சேனைக்குத் தலைவனாதல்

2369. அப்பொழுது, தனது அருள்போல குளிர்ந்த மணமுள்ள நீரைப் பந்தர் நிழலின்கண் கொடுத்தும், சோழனை மடுவில் வீட்டியும் பகைவர் புறம் கொடுக்கு மாறு வந்த திருவேடத்தையுடைய சிவபெருமான், அவ்வாறே ஒரு பெருமையுடைய வேட மன்னராய் வந்து, வெற்றி அழிந்து போனதால் துன்பத்துடன் இருந்த பாண்டிய மன்னனுடைய சேனைக்குத் தலைவராய் ஆயினார். (இதில் வரும், நீரைப் பந்தர் நிழலில் கொடுத்த வரலாற்றினை இப்புராணத்தின் (கூடற் காண்டம்) 35 ஆம் படலத்தில் காண்க.)

2370. மேருமலையையே வில்லாக உடைய அப் பெருமான், வில்லை வளைத்து, சுந்தரேசர் என்ற தனது திருப்பெயர் தீட்டிய கூரிய கணைகளை, வென்று விட்டோம் என்று கருதி வெற்றிமாலை சூடிச் சங்கினை முழங்கி, நின்ற விக்கிரம சோழனின் சேனையின்மீது வரிசையாக விடுத்தார்.

2371. அம்முனை வாளி யொவ் வொன் றடல்புனை நூற்று
நூறு
தெம்முனை வீரர் தம்மைச் செகுத்துயிர் உண்ண
நோக்கி
இம்முனை வாளி யொன்றுக் கித்துணை வலியா
தென்னா
வெம்முனை மறவேற் சென்னி வியந்துரு மான மெய்தா

2372. அன்னகூர் வாளி தன்னைக் கொணர்கென அதனை
வாசித்
தின்னது சுந்த ரேசன் எனவரைந் திருப்ப தீது
தென்னவற்கு ஆலவாயான் றுணைசெய்த செயலென்
றஞ்சிப்
பொன்னிநா டுடையான் மீண்டு போகுவான்; போகு
வானை.

2373. செருத்துணை யாகி வந்த உத்தர தேயத் துள்ளார்
துருக்கரொட் டியர்வே றுள்ளார் யாவருஞ் சூழ்ந்து
நில்லென்
றுருத்தனர் வைது நீபோர்க் குடைந்தனை போதி யீதுன்
கருத்தெனின் ஆண்மை யாவர் கண்ணதுஉன் மானம்
என்னாம்.

2374. செல்லலை வருதி யென்னாச் செயி ர்த்தெழுந் திடியின்
ஆர்த்துக்
கல்லெழு வனைய திண்டோட் கௌரியன் மடைமேற்
சென்று
வில்லிற வலித்து வாங்கி வேறுவே றாகி நின்று
சொல்லினுங் கடிய வாளி தொடுத்தனர் விடுத்தார்
தூர்த்தார்.

2371. அந்தக்கூரிய அம்புகள் ஒவ்வொன்றும், வெற்றி மிக்க போர் முனையில் உள்ள பதினாயிரம் வீரர்களின் உயிரைப் பருகியது. அதனைப் பார்த்து, "இக்கூரிய அம்பினுக்கு இவ்வளவு வலிமை ஏது?" என்று, கூரிய கொலைத் தொழில் புரியும் வேலினை ஏந்திய சோழன் வியப்புற்றான்.

2372. யோசித்துப் பார்த்து அந்த அம்பினைக் கொண்டு வாருங்கள் என்று ஒருவனை அனுப்பி, அந்த அம்பினைக் கொண்டு வந்து அதனை வாசித்துப் பார்த்து, "இதில் சுந்தரேசன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இது பாண்டியனுக்கு ஆலவாய் அண்ணல் துணை புரிந்த செயலாகும்," என்று உணர்ந்து அச்சம் அடைந்து தன்னுடைய நாட்டிற்குத் திரும்பிப் போகத் தொடங்கினான் அவ்வாறு போகும் அவனை.

மற்ற அரசர்கள் சோழனைத் தடுத்தல்

2373. போர்த்துணையாக வந்த உத்திரதேசத்திலே உள்ள துருக்கரும் ஒட்டியரும், ஏனையோரும் ஒன்றுகூடி, நிற்பாயாக என்று சினந்து கூறித்திட்டினர். "நீ போருக்குத் தோற்றுப் போகின்றாய். இது உன் கருத்து எனில் நீ ஆண்மை உடையவனா? உனக்குப் பெருமை உண்டா?" என்றனர்.

2374. அத்துடன் "நீ செல்ல வேண்டாம், வருக!", என்று கூறிச் சினத்துடன் இடிபோல ஆரவாரம் செய்து கல் தூணைப் போன்ற திண்ணிய தோளையுடைய பாண்டியன் சேனை மேல் சென்று வில் முறியுமாறு இழுத்து வளைத்தனர். முனிவர்களின் சாப மொழிகளைவிட வேகமாகச் செல்லும் அம்புகளைத் தனித்தனியாக ஒவ்வோர் இடத்தில் நின்று தொடுத்து விடுத்தனர்.

2375. வடுத்தவா மருமச் செம்புண் மறமக னாகி நின்ற
கடுத்தவா மிடற்று முக்கட் கண்ணுதற் சாமி
தான்முன்
எடுத்தஆ டகவி லென்ன விருஞ்சிலை வாளி யென்று
தொடுத்தஆ டவர்தாம் விட்ட சுடுசரந் தொலைத்துப்
பின்னும்.

2376. பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமான் றேரைச்
சாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவெங் களிற்றை
மாய்த்தான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துவாம் பரியைக்
கொன்றான்
பத்தம்பு தொடுத்து நூற்றுப் பத்துமா னுடரை
வென்றான்.

2377. நூறம்பு தொடுத்து நூற்று நூறுவெம் பரிமேல் எய்தான்.
நூறம்பு தொடுத்து நூற்று நூறுவெங் கரிமேற்
பெய்தான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுதேர் சிதைய விட்டான்
நூறம்பு தொடுத்து நூற்று நூறுசே வகரை யட்டான்.

2378. ஆயிரம் வாளி யால்நூ றாயிரம் பரியைக் கொன்றான்
ஆயிரம் வாளி யால்நூ றாயிரங் கரியை வென்றான்
ஆயிரம் வாளி யால்நூ றாயிரந் தேரைச் சாய்த்தான்
ஆயிரம் வாளி யால்நூ றாயிரம் பேரைத் தேய்த்தான்.

2375. தழும்பு நீங்காத மார்பினிடத்தில் புண்ணை யுடைய வேடத்திருவுருவம் கொண்டு, நஞ்சுடைய திருமிடற் றினையும், மூன்று கண்களையும் உடைய சோமசுந்தரக் கடவுள், தான் திரிபுரம் எரித்த காலத்தில் கைக்கொண்ட மேருமலையாகிய பெரிய வில்லைவிடப் பெரிய வில்லில், ஓர் அம்பைத் தொடுத்து விடுத்து அவ்வேந்தர் விட்ட கணைகளை அழித்தார். மீண்டும்.

2376. பத்துக் கணைகளை விடுத்துக் குதிரை பூட்டப் பட்ட ஆயிரம் தேரை அழித்தார். பத்து அம்புகளை ஏவி ஆயிரம் கொடிய யானைகளைக் கொன்றார். பத்து அம்பு களை விடுத்து ஆயிரம் குதிரைகளை மாய்த்தார். மீண்டும் பத்து அம்புகளை விடுத்து ஆயிரம் வீரர்களைக் கொன்றார்.

2377. நூறு அம்புகளை வில்லில் பூட்டி எய்து பதினா யிரம் குதிரைகளை அழித்தார். நூறு அம்புகளைத் தொடுத்து, கொடிய பதினாயிரம் யானைகளைக் கொன்றார். பதினாயிரம் தேர் சிதையும்படி நூறு அம்பு களை விடுத்தார். நூறு அம்புகளை அனுப்பிப் பதினாயிரம் வீரர்களை அழியச் செய்தார்.

2378. ஆயிரம் அம்புகளால் நூறாயிரம் குதிரைகளைக் கொன்றார். ஆயிரம் வாளிகளால் நூறாயிரம் யானைகளை அழித்தார். ஆயிரம் அம்புகளால் நூறாயிரம் தேர்களை உடைத்தார். ஆயிரம் அம்புகளால் நூறாயிரம் வீரர்களைக் கொன்றார்.

2379. தடிந்தன தோளுந் தாளுந் தகர்ந்தன சென்னி மண்ணிற்
படிந்தன மடிந்தோர் யாக்கை பரிந்தன தும்பைத் தாமம்
மடிந்தன மையல் யானை மாண்டன தாண்டும் பாய்மான்
ஒடிந்தன கொடிஞ்சி மான்றேர் ஒதுங்கின வொழிந்த சேனை

2380. ஆவிமுன் னேகத் தாமும் அருக்கமண் டலத்தா றேகத்
தாவுவ என்ன ஆடுந் தலைபல சிலைவாள் பட்டுக்
கூவிளி யெடுத்து வீழுங் குறைத்தலை யாடப் பாதிச்
சாவுட னின்று கைகள் கொட்டுவ தாள மென்ன.

2381. தறைவிழத் தனது சென்னி வீட்டினார் தம்மை நின்ற
குறையுடல் கைவேல் குத்தி நூக்குவ குரவை பாடி
எறிபடு தலைகள் வாய்மென்று எயிறது கறித்து வீழ்ந்து
கறுவின மார்பந் தட்டி நிற்பன கவந்த யாக்கை.

2382. ஒருவழி பட்டு வீழும் இருதலை யொன்றற் கொன்று
மருவிய கேண்மைத் தாகி வாலெயி றிலங்க நக்குப்
பிரிவற வந்தாய் நீயு மென்றெதிர் பேசிப் பேசிப்
பரிவுற மொழிந்து மோந்து பாடிநின் றாடல்செய்த.

போர்க்களக் காட்சிகள்

2379. வீரர்களின் தோள்களும் கால்களும் அறுபட்டன. தலைகள் உடைந்தன. இறந்தவர்களின் உடல்கள் மண்ணில் வீழ்ந்தன. தும்பை மாலைகள் அறுந்தன. மத மயக்கத்தை உடைய யானைகள் மடிந்தன. குதிரைகள் பூட்டிய தேர்கள் ஒடிந்தன. எஞ்சிய சேனைகள் ஓடி மறைந்தன.

2380. சூரிய மண்டலத்திற்குச் செல்வதுபோல உயிர் முன்னே செல்ல, பல தலைகள் ஆடின. அம்புகளும், வாளும் பட்டு ஓசையுடன் கூவி விழுகின்ற தலையற்ற உடல்கள் ஆடின. குற்றுயிரோடு கூடிய உடல்கள் நின்று தாளம் போடுவது போன்று கையைக் கொட்டின.

2381. தனது தலை தறையில் விழ, அறுத்து வீழ்த்திய வரை, விழாமல் நின்ற தலையற்ற உடல் தன் கையில் உள்ள வேலால் குத்தித் தள்ளும். அறுபட்ட தலைகள் குரவைப் பாட்டுப் பாடி வாயினை மென்று பல்லைக்கடித்து வீழ்ந்தன. குறையுடல்கள் மார்பைத் தட்டி நின்றன.

2382. ஒரே இடத்தில் அறுபட்ட இரண்டு தலைகள் ஒன்றிற்கொன்று நட்போடு தம்முடைய வெண்மையான பற்கள் தோன்றும்படிச் சிரித்தன. பிரிவின்றி நீயும் வந்தனையே என்று பேசின. அன்புடன் வேறு செய்திகளையும் கூறிப் பாடிநின்று ஆடின.

2383. மாகவா றியங்கு சேனம் வல்லிருட் குவையின் அன்ன
காகம்வன் கழுகு வெம்போர்க் களனிடை யவிந்து
வீழ்ந்தோர்
ஆகமேற் சிறக டிக்கொண் டசைவன வேடை நீக்கப்
பாகநின் றால வட்டம் பணிப்பன போன்ற வன்றே.

2384. வெள்ளமாச் சோரி ஈர்ப்ப மிதக்கின்ற தேர்கள்
வெம்பேய்ப்
பிள்ளைகள் மூழ்கிக் கீழ்போய் மறித்தெனப் பெயர்ந்து
வீழ்வ
தெள்ளுநீர்க் கடலின் மீதூர் சிதைக்கல நிரையுந்
தாக்கித்
துள்ளிமற் றவற்றைச் சாய்க்குஞ் சுறவமும் போன்ற
அன்றே.

2385. கத்திநின் றொருபால் ஈர்ப்பக் கருங்கொடி சேனந்
துண்டங்
கொத்திநின் றொருபா லீர்ப்பக் குடவயிற் றழல்கட்
பூதப்
பத்திநின் றொருபா லீர்ப்பப் பட்டவ ராகங் கூளி
பொத்திநின் றொருபா லீர்ப்ப ஐம்பொறி போல
மன்னோ.

2386. துடுவைவான் முறம்கால் தள்ளுந் துணைச்செவி யரிசி
கோட்டின்
உடுவைதேர் மணியின் குப்பை யுரலடி யுலக்கை
திண்கோடு
அடுகலங் கடந்தீச் சோரி மத்தக மடுப்பென் றியானைப்
படுகளம் விசயச் செல்வி யடுமடைப் பள்ளிமானும்

2383. இருளின் தோற்றம் போன்ற காக்கைகளும், வலிய கழுகுகளும், கொடிய போர்க்களத்தில் இறந்து வீழ்ந் தவர்களின் உடல்களின் மேல் சிறகுகளை அடித்து அசைவ தால், வெப்பத்தைப் போக்கும் விசிறியை அசைப்பது போன்று ஓர் தோற்றம் உண்டானது.

2384. பெரிய குருதி வெள்ளம் இழுக்க, மிதந்து செல்லும் தேர்களும், கொடிய பேயின் பிள்ளைகளும், மிதந்தன. அப்பிள்ளைகள் மூழ்கிச் சென்று எழும்பித் தடுத்தலால் அத்தேர்கள் செல்லும் நிலை பெயர்ந்து வீழ்ந்தன. தெளிந்த நீரையுடைய கடலில் மேல் ஓடுகின்ற பாய் மரத்தையுடைய மரக்கலங்களையுடைய, மேலெழுந்து அம் மரக்கலங்களைத் தாக்கும் சுறாமீன்களையும் அக்காட்சி ஒத்திருந்தது.

2385. மனத்தை தம் தம் வழிக்கு இழுக்கும் ஐம்பொறி களைப் போன்று, மடிந்தவர் உடலைக் கரிய காகங்கள் கத்தி நின்று ஒருபுறம் இழுத்தன. பருந்துகள் மூக்கினால் கொத்தி ஒரு புறம் இழுத்தன. குடம் போன்ற வயிற்றையும் எரிகின்ற கண்களையும் உடைய பூத வரிசைகள், நின்று ஒருபுறம் இழுக்க, பேய்கள் மொய்த்து நின்று மறுபுறம் இழுத்தன.

2386. வாலைத் துடுப்பாகவும், காற்றைத் திரட்டும் இரண்டு செவிகளை முறமாகவும், தந்தங்களில் உள்ள நாண்மீனை ஒத்த முத்துக் குவியலை அரிசியாகவும், அடியை உரலாவும், கொம்பை உலக்கையாகவும், கன்னம் சமைக்கும் பாத்திரமாகவும், குருதியை நெருப்பாகவும், மத்தகத்தை அடுப்பாகவும் கொண்டு, விளங்கும் யானைகள் மடிந்த போர்க்களம், வீரத் திருமகள் சமைக்கும் மடைப் பள்ளியைப் போன்று காட்சியளித்தது.

2387. பிணத்தினைக் கோலிப் புண்ணீர் ஆற்றினைப் பெருக்கி யுண்பேய்க்
கணத்தினை யுதைத்து நூக்கிக் கரையுடைத் தொருவன் பூதம்
நிணத்தொடும் வருமந் நீத்தம் நேர்பட இருந்து கையால்
அணைத்துவாய் மடுக்கும் வைகை யருந்திய பூத மென்ன.

2388. புரத்தினுள் உயர்ந்த கூடற் புண்ணிய னெழுதி யெய்த
சரத்தினி லவிந்தார் சென்னிக் குற்றுழிச் சார்வாய் வந்த
அரத்தினை யறுக்கும் வைவே லயற்புல வேந்தர் நச்சு
மரத்தினை யடுத்து சந்துங் கதழெரி மடுத்த தென்ன.

2389. மாசறு காட்சி யான்றன் வாளியால் அவிந்தோர் தம்மை
மூசுவண் டென்னச் சூழ்ந்து மொய்த்தன பைத்த கூளி
காய்சினச் சேனங் கழுகினம் பற்றி யீர்த்துப்
பூசலிட் டொன்றோ டொன்று போர்செய்வான் தொடங்கிற் றம்ம.

2390. வெஞ்சின மறக்கோன் நம்பி விடுகணை வெள்ளத் தாழ்ந்து
வஞ்சின முறுதன் சேனை மடிந்தது கண்டு மாழாந்து
எஞ்சின படையுஞ் வேதிலார் நகையுஞ் சூழத்
துஞ்சின மறமுஞ் சூழச் சோழனும் உடைந்து போனான்.

2387. ஒரு வலிமையான பூதம், குண்டோதரன் தன் இரண்டு கைகளாலும் வையை நீரைத் தடுத்து குடித்தது போன்று, பிணங்களை அணையாக அமைத்து, இரத்த ஆற்றினைப் பெருக்கி, உண்ணுகின்ற பேய்க் கூட்டத்தை உதைத்துத் தள்ளி, அவ்வணையை உடைத்து, நிணங் களோடு வருகின்ற அவ் இரத்தப் பெருக்கினை நேர்முகமாக நின்று இரண்டு கைகளாலும் தடுத்துப் பருகும்.

(இதில் உள்ள வரலாற்றினை இப்புராணத்தில் மதுரைக் காண்டத்தில் உள்ள 8-ம் படலத்தில் காண்க.)

2388. முக்தி நகரங்களில் சிறந்ததான கூடல் மாநகரில் அறவடிவோடு வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுள், தானே தன் பெயர் எழுதி விடுத்த அம்புகளால், சோழனுக்குத் துன்பம் ஏற்பட்ட போது உதவியாகக் காக்க வந்த கூரிய வேல் படையை உடைய மன்னர்கள் அனைவரும் நஞ்சு மரத்தை அடுத்திருந்த சந்தன மரங்களும் சேர்ந்து எரியுண்டு போவது போன்று அழிந்து போயினர்.

2389. குற்றமற்ற அறிவினையுடைய இறைவனின் அம்புகளால் இறந்தவர்களை, பேய்கள் மலரில் மொய்க்கும் வண்டுகள் போன்று மொய்த்தன. மிகுந்த சினமுடைய பருந்துகளும் காகங்களும், கழுகுகளும் பிடித்து இழுத்தன. கலகம் விளைவித்து ஒன்றோடொன்று போர் புரியத் தொடங்கின.

சோழன் தோற்று ஓடினான்

2390. கொடிய சினத்தையுடைய வேடர் தலைவ னாகிய நம்பி, விடுத்த அம்பு வெள்ளத்து மூழ்கி வஞ்சினம் கூறிப் போருக்கு வந்த தம் சேனை இறந்து ஒழிந்தமை கண்டு, மயங்கி, எஞ்சிய சேனை தன்னைச் சூழ பகைவர் நகைப்பும் சூழ, வீரம் இன்மையும் சூழ, சோழன் தோற்று ஓடினான்.

2391. வில்லொடு மேக மன்ன வெஞ்சிலை வேட வேந்தன்
மல்லொடு பயின்ற தென்னன் மலர்முகச் செவ்வி நோக்கி
அல்லொடு மதிவந் தென்ன வருள்நகை சிறிது பூத்துச்
செல்லொடு பகைபோற் கொண்ட திருவுரு மறைந்து போனான்.

2392. பாடுவா யளிதே னூட்டும் பைந்தொடைச் செழியன் வென்றிக்
கோடுவாய் வைத்திட் டார்த்துக் குஞ்சர முகட்டில் ஏறித்
தோடுவாய் கிழிக்குங் கண்ணார் மங்கலந் துவன்றி ஏந்த
நீடுவார் திரைநீர் வேலி நீண்மதில் நகரிற் புக்கான்.

வேறு

2393. சிலைவிற்சே வகஞ்செய்து வாகை வாங்கித்
திருவறித்த சேவகற்குச் சிறந்த பூசை
நிலைவித்தாய் மணிப்பொலம்பூண் நிறுவிச் சாத்தி
நிழல்விரிக்கும் வெயின்மணியா னெடிய மேரு
மலைவிற்றான் என்னவரி சிலையு நாமம்
வரைந்தகடுங் கூர்ங்கணையும் வனைந்து சாத்தி
அலைவித்தாழ் கடலுலகுக் ககலச் செங்கோல்
அறம்பெருக்கும் வங்கியசே கரனா மண்ணல்.

சுந்தரப் பேரம்பெய்த படலம் முற்றிற்று.

இறைவர் மறைதல்

2391. வில்லோடு கூடிய மேகம் போன்ற, கொடிய வில்லையுடைய வேட மன்னன், மற்போரில் சிறந்த பாண்டியனது முகப் பொலிவை நோக்கி, இருளோடு சந்திரன் வந்தாற்போல, அருளோடு கூடிய புன்னகை சிறிது அரும்பி, இடியுடன் கொண்ட பகை போன்ற (கருமையான) தன் திருவுருவத்தை மறைந்து அருளினார்.

பாண்டியன் அரண்மனை அடைதல்

2392 இசைபாடும் வண்டுகளின் வாயில் மதுவை ஊட்டும் மலர்களை மாலையாக அணிந்த பாண்டியன், வெற்றிச் சங்கை வாயில் வைத்து முழக்கினான். யானையின் மத்தகத்தில் ஏறி நீண்ட கண்களையுடைய மகளிர் மங்கலங் களை முழங்க, அலைகளையுடைய நீரையே வேலியாக உடைய நீண்ட மதிலால் சூழப்பட்ட நகரின் உள்ளே சென்றான்.

2393. வில்லால் போர்செய்து, வெற்றி பெற்று, தனக்கு அரச செல்வத்தை அளித்த வீரனாகிய சோமசுந்தரக் கடவுளை, நினைந்து, சிறந்த பூசனை செய்து சிறந்த மணிகளை அமைத்துப் பொன்னால் செய்யப்பட்ட அணி களைச் செய்து சாத்தினான். ஒளியுடைய சிவந்த மணி களால், நீண்ட மேருமலையாகிய வில் இதுதான் என்று கண்டோர் கருதும் கட்டமைந்த வில்லையும் திருப் பெயர் தீட்டப்பட்ட அம்பையும் செய்து சாத்தி, கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் உள்ளோர் துன்பம் நீங்க வங்கியசேகரப் பாண்டியன் செங்கோலினால் அறம் தழைக்க அரசாண்டு வந்தான்.

சுந்தரப் பேரம்பெய்த படலம் முற்றிற்று.

51. சங்கப் பலகை கொடுத்த படலம்

2394. வேடுரு வாகி மேரு வில்லிதன் னாமக் கோலெய்து
ஆடம ராடித் தென்னன் அடுபகை துரந்த வண்ணம்
பாடினம் சங்கத்தார்க்குப் பலகைதந் தவரோ டொப்பக்
கூடிமுத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை
சொல்வாம்.

2395. வங்கிய சேக ரன்கோல் வாழுநாள் மேலோர் வைகல்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
பங்கய முளரிப் புத்தேள் பத்துவாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றச் செய்தான்.

2396. நிரப்பிய வழிநாள் நன்னீ ராடுவா னீண்ட வீணை
நரப்பிசை வாணி சாவித் திரியெனு நங்கை வேத
வரப்பிசை மநுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரும்
எல்லை.

51. சங்கப் பலகை கொடுத்த படலம்

2394. மேருமலையை வில்லாக உடைய சோமசுந்தரக் கடவுள், வேடுவரின் உருவம் கொண்டு தன்னுடைய திருப் பெயர் தீட்டிய அம்பினை விடுத்துப் போர் புரிந்து பாண்டியனுக்குப் பகையாக வந்த சோழனைத் துரத்திய திருவிளையாடலைக் கூறினோம். அவ் இறைவனே இனி, சங்கப் புலவர்களுக்குப் பலகை தந்தருளி அவரோடு வேற்றுமை இன்றிக் கூடி இருந்து முத்தமிழின் மேன்மையை விளங்கச் செய்த திருவிளையாடலைக் கூறுவோம்.

கலைமகள் சாபம் அடைதல்

2395. வங்கிய சேகர பாண்டியனது செங்கோல் நன்கு நடைபெற்று வருகின்ற நாளில், கங்கையின் அழகிய துறையை உடைய சிறந்த காவல் விளங்கும் மதிலை உடைய காசி என்னும் நாட்டில் தாமரை மலரில் உள்ள பிரம தேவன், குதிரை வேள்வி (அசுவமேதயாகம்) பத்தினைத் தேவர்கள் மகிழும்படி வேத வழியில் நின்று செய்தான்.

2396. அவற்றைச் செய்து முடித்த பின்னால் நல்ல நீரில் நீராடுவதற்கு, நரம்புடைய இசைக் கருவியைக் கையில் வைத்துள்ள கலைமகளும், சாவித்திரி என்னும் நங்கையும், மந்திர வடிவாகிய காயத்திரி என்னும் பெண்ணும், ஆகிய இம்மூன்று மனைவியரோடு புகழுடைய கங்கையாற்றில் நீராட அதனை நோக்கிச் செல்லத் தொடங்கினான். அவ்வாறு செல்லும் பொழுது.

2397. நானவார் குழலி னாரம் மூவருள் நாவின் செல்வி
வானவா றியங்கும் விஞ்சை மாதரள் ஒருத்தி பாடுங்
கானவா றுள்ளம் போக்கி நின்றனள் கமல யோனி
ஆனவா லறிவ னேகி யந்நதிக் கரையைச் சேர்ந்தான்.

2398. நாமகள் வரவு தாழ்ப்ப நங்கையர் இருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடங்கரை ஏறு மெல்லை
பாமகள் குறுகி யென்னை யன்றிநீ படிந்த வாறென்
னாமென வெகுண்டாள் கேட்ட அம்புயத் தண்ணல்
சொல்வான்.

2399. குற்ற நின் மேல தாக நம்மைநீ கோபங் கொள்வ
தெற்றென இனைய தீங்கை யெண்ணறு மாக்க
டோற்றம்
உற்றனை யொழித்தி யென்னா வுரைத்தனன் சாப
மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப் புலம்புகொண் டவலம்
பூண்டாள்.

2400. ஊனிட ரகன்றோய் உன்னா ருயிர்த்துணை யாவேன்
இந்த
மானிட யோனிப் பட்டு மயங்குகோ என்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்பும்வெண் கமலச்
செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுர்முகத் தலைவன் சாற்றும்.

2397. சாந்த பூசிய குழலையுடைய அம்மூன்று பெண்களில், கலைமகள், வானின் வழியே சென்று கொண்டிருந்த ஒரு விஞ்சை மகள் பாடுகின்ற இசையிலே தன் உள்ளத்தைப் பறி கொடுத்து நின்றாள். தாமரை மலரில் தோன்றிய தூய்மையான அறிவினையுடைய பிரமதேவன் அந்நதியின் கரையை அடைந்தான்.

2398. நாமகள் வருவதற்குக் காலதாமதம் ஏற்படவே, பிரமதேவன் மற்றைய இரண்டு பெண்களோடு கங்கையில் மூழ்கி அந்த ஆற்றின் பெரிய கரையில் ஏறத் துவங்கினான். அப்போது கலைமகள் சென்று, "நான் இல்லாமல் நீ நீராடியது எவ்வாறு?" என்று கோபமாகக் கேட்டாள். அதனைக் கேட்ட பிரமன் சொல்லத் தொடங்கினான்.

2399. "குற்றம் உன்னுடையதாக இருக்கும்போது என் மேல் கோபம் கொள்வது எத்தகைய தன்மையுடையது?" என்று கூறி "இக்குற்றத்தை நாற்பத்தெட்டு மக்களாகத் தோன்றி நீக்கிக் கொள்ளாவாயாக!" என்று சாபம் இட்டான். அச்சாபத்தை ஏற்ற பொன்வளையல் அணிந்த கலைமகள் அஞ்சிப் புலம்பித் துன்பமடைந்தாள்.

2400. "உடம்பு என்னும் பிறவியை எடுக்கின்ற துன்பமே இல்லாதவனே, உனக்கு உயிர்த் துணைவளாகிய நான் மனிதப் பிறப்பில் தோன்றி மயங்க வேண்டுமா?" என்று கூறினாள். வண்டுகள் தேனுண்டு வேதம் இசைக்கும் வெண்டாமரை மலரில் உள்ள அக் கலைமகளின் துன்பம் நீங்க அவளை நோக்கி, நான்கு முகங்களையுடைய அப்பிரமதேவன் சொல்லத் தொடங்கினான்:

2401. முகிழ்தரு முலைநின் மெய்யா முதலெழுத் தைம்பத் தொன்றில்
திகழ்தரும் ஆகா ராதி ஹாகாரம் ஈறாச் செப்பிச்
புகழ்தரு நாற்பத் தெட்டு நாற்பத்தெண் புலவ ராகி
அகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக.

2402. அத்தகு வருண மெல்லாம் ஏறிநின் றவற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
உய்த்திடும் அகாரத் திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமி ழால வாயெம் முதல்வரம் முறையான் மன்னோ.

2403. தாமொரு புலவர் ஆகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தொன்ப
தாமவ ராகி உண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
ஏமுறப் புலமை காப்பார் என்றனன் கமலப் புத்தேள்.

2404. அக்கர நாற்பத் தெட்டும் அவ்வழி வேறுவேறு
மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து
தொக்கவா ரியமு மேனைச் சொற்பதி னெட்டும் ஆய்ந்து
தக்கதென் கலைநுண் டேர்ச்சிப் புலமையில் தலைமை சார்ந்தார்.

2401. "அரும்பு போன்ற அழகிய தனங்களையுடைய பெண்ணே! உனது வடிவமாகிய ஐம்பத்தொரு முதலெழுத்துக்களில் விளங்குகின்ற ஆகாரம் முதல் ஹாகாரம் ஈறாக கூறப்பட்ட நாற்பத்தெட்டு எழுத்துகளும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகக் கடல் சூழ்ந்த இந்நிலவுலகில் அவதரித்திடுவார்கள்!

2402. "அந்த எழுத்துக்கள் எல்லாவற்றிலும் அவ்வெழுத்துகளின் மெய்யான தன்மையைப் பொருந்தி, வேறு வேறாக இயங்குமாறு செலுத்தும் அகரத்திற்குத் தலைமையாய் ஒழுகும் இறைவர், மூன்று தமிழையும் உடைய ஆலவாயின்கண் அமர்ந்த எம் சோமசுந்தரர் ஆவார். அம்மரபினால்.

நாற்பத்தெட்டுப் புலவர்கள்

2403. "தாம் ஒரு புலவர் ஆகி, திருவுருவம் தாங்கி, சங்கத்தின் பெருமை மிக்க மணிகள் பொருத்தப்பட்ட தவிசில் ஏறி, ஒரு சேர வீற்றிருந்து, நாற்பத்தொன்பதாவது புலவராகிய அகத்தின் கண் நின்று அந்நாற்பத்தெட்டுப் புலவருக்கும் அறிவை விளக்கி அரணாகப் புலமையைக் காத்தருள்வார்" என்று பிரமன் கூறினான்.

2404. அவ்வாறே நாற்பத்தெட்டு எழுத்துகளும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகத் தோன்றிப் பல சிறப்பு மிக்க கலைகளில் சிறப்படைந்து, ஆரிய மொழியையும், வேறாகத் தொகுக்கப்பட்ட பதினெட்டு மொழிகளையும் ஆராய்ந்து, பெருமை மிக்க தமிழில் மிக்க தேர்ச்சியுடையவர்களாய்த் தலைமை சான்று விளங்கினார்கள்.

2405. கழுமணி வயிரம் வேய்ந்த கலன்பல அன்றிக் கண்டிக்
கொழுமணிக் கலனும் பூணுங் குளிர்நிலா நீற்று மெய்யர்
வழுவறத் தெரிந்த செஞ்சொன் மாலையால் அன்றி ஆய்ந்த
செழுமலர் மாலை யானுஞ் சிவார்ச்சனை செய்யு நீரார்.

2406. புலந்தொறும் போகிப் போகிப்புலமையால் வென்று வென்று
மலர்ந்ததண் பொருநை நீத்த வளங்கெழு நாட்டில் வந்து
நிலந்தரு திருவின் ஆன்ற நிறைநிதிச் செழியன் செங்கோல்
நலத்தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணும் எல்லை

2407. பற்பல கலைமாண் தேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற
அற்புத மூர்த்தி எந்தை ஆலவாயடிகள் அங்கோர்
கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வா ராகிச்
சொற்பதங் கடந்த பாத மிருநிலந் தோயவந்தார்.

2408. அவ்விடை வருகின் றாரை நோக்கிநீ ராரை நீவிர்
எவ்விடை நின்றும் போது கின்றனி ரென்ன அன்னார்
வெவ்விடை யனையீர் யாங்கள் விஞ்சையர் அடைந்தோர் பாவம்
வெளவிடு பொருநை நாட்டின் வருகின்றே மென்ன லோடும்.

2405. அவர்கள், மணிகளாலும் வயிரங்களாலும் புனைந்த கலன்களோடு, உருத்திராக்க மாலையாகிய மணிக்கலனையும் அணிபவர்கள். குளிர்ச்சியுடைய நிலவின் வெண்மை போன்ற திருநீறுபூசிய மேனியை உடையவர்கள். குற்றமில்லாமல், ஆராய்ந்த சிறந்த சொற்களால் தொடுக் கப்பட்ட பாமாலையேயன்றிச் சிறந்த மலர் மாலையாலும் சிவவழிபாடு செய்கின்ற தன்மையுடையவர்.

2406. பல நாடுகளுக்கும் சென்று தம்முடைய புலமைத் திறத்தால் அங்குள்ளவர்களை வென்றவர். வளமை மிக்க குளிர்ந்த பொருநையாற்றால் குளிர்ச்சி யடைந்துள்ள, பாண்டிய நாட்டிற்கு வந்து, போர்த்திறமை யால் மாற்றாரின் நிலத்தைத் தம் நிலமாக மாற்றிக் கொள்ளும் பாண்டியனின் செங்கோல் திறம் செழித் தோங்கிய மதுரையை நோக்கி வருவாராயினர். அவ்வாறு வரும்பொழுது.

இறைவர் புலவராய் வருதல்

2407. பலவகைப்பட்ட கலைகளை உடையவரும், தேர்ச்சியுடைய வேதங்களின் பயனாய் நிலைபெற்ற ஞானத் தின் மூர்த்தியும், எம் தந்தையும் ஆகிய இறைவர், அங்கு சொல்லாலும் வர்ணிக்க முடியாத அவரின் திருவடிகள் நிலம் தோய நடந்து வரத் தொடங்கினார்.

2408. ஆலவாய் அண்ணல், அங்கு எதிரே வருகின்ற புலவர்களை நோக்கி, "நீவிர் யாவர்? நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டார். உடனே அப்புலவர்கள், "பெருமிதம் மிக்க இடபம் போன்றவரே! நாங்கள் புலவர் களாவோம். அடைந்தவர்களது பாவத்தைப் போக்கும் பொருநை சூழ்ந்த பாண்டிய நாட்டினிடத்தில் வந்து கொண்டிருக்கின்றோம்" என்று கூறினர். அப்போது.

2409. தனிவரு புலவர் நீவிர் தண்டமிழ் ஆல வாயெங்
கனிவரு கருணை மூர்த்தி கனைகழ லிறைஞ்சல்
வேண்டும்
இனிவரு கென்ன நீரே எங்களுக் களவில் கோடி
துனிவரு வினைகள் தீர்க்குஞ் சுந்தரக் கடவு ளென்றார்

2410. மறையினா றொழுகும் பன்மாண் கலைகள்போல்
மாண்ட கேள்வித்
துறையினா றொழுகுஞ் சான்றோர் சூழமீன் டேகிக்
கூடல்
கறையினார் கண்டத் தாரைப் பணிவித்துக் கரந்தார்
ஒற்றைப்
பிறையினார் மகுடந் தோற்றா தறிஞராய் வந்த
பெம்மான்.

2411. விம்மிதம் அடைந்து சான்றோர் விண்ணிழி விமானம்
மேய
செம்மலை வேறு வேறு செய்யுளாற் பரவி யேத்திக்
கைம்மலை உரியி னார்தங் கால்தொழு திறைஞ்சி
மீண்டு
கொய்ம்மலர் வாகைச் செவ்வேற் செழியனைக் குறுகிக்
கண்டார்.

2412. மறமலி நேமிச் செங்கோன் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி யவைக்களக் கிழமை
நோக்கித்
திறமலி யொழுக்கம் நோக்கிச் சீரியர் போலும் என்னா
நிறைமலி யுவகை பூத்த நெஞ்சினா னிதனைச்
செய்தான்.

2409. தனியே வந்த புலவராகிய இறையவர், "நீங்கள் குளிர்ச்சி மிக்க தமிழ்மொழியையுடைய ஆலவாயில் எழுந்தருளி, எம்முடைய கனிந்த அருளுடைய சோம சுந்தரப் பெருமானின் வீரக்கழலணிந்த திருவடியை வணங்க இப்போதே வர வேண்டும்," என்று கூறினார். உடனே அப்புலவர்கள் "எங்களுக்கு அளவில்லாத துன்பத்தைத் தரும் வினைகளைப் போக்கியருளும் சோமசுந்தரக்கடவுள் நீங்களே" என்றனர்.

2410. வேதங்களின் வழியே ஒழுகும் சிறப்புடைய கலைகள் போன்ற, கல்வி கேள்வித் துறையில் வல்லமை யுள்ள அப்புலவர்கள் தம்மைச் சூழ்ந்துவர, தம்முடைய ஒற்றைப் பிறை முடியை வெளிப்படுத்தாது புலவராய் வந்த சோமசுந்தரக் கடவுள் திரும்பிச் சென்று கூடல் மாநகரில் எழுந்தருளிய திருமிடற்றையுடைய இறைவனை வணங்கச் செய்து மறைந்தருளினார்.

2411. புலவர்கள் மிக்க வியப்படைந்தனர். வானத்தில் இருந்து இறங்கிய இந்திர விமானத்தில் எழுந்தருளிய இறையவரை, வேவ்வேறு பாடல்களாலே துதித்துப் புகழ்ந் தனர். யானைத் தோலைப் போர்த்திய அவ்விறையவரின் திருவடிகளை வணங்கினர். பிறகே மீண்டும் சென்று வாகை மலர் மாலையைச் சூடிய வேலையுடைய பாண்டியனைச் சென்று கண்டனர்.

2412. வெற்றி மிக்க சக்கரத்தையும் செங்கோலையும் உடைய வங்கிய சேகர பாண்டியன், வந்த புலவர்களின் சிறப்பு மிக்க புலமையைக் கருதியும், ஒழுக்கத்தைக் கருதியும், சிறந்தவர்கள் என்று தெளிவடைந்து மகிழ்ச்சி யுடன் இதனைச் செய்யத் தொடங்கினான்.

2413. திங்களங் கண்ணி வேய்ந்த செக்கரஞ் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின் மாடோர்
சங்கமண் டபமுண் டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி
அங்கமர்ந் திருத்தி ரென்ன இருத்தினான் அறிஞர்
தம்மை.

2414. வண்டமிழ் நாவி னார்க்கு மன்னவன் வரிசை நல்கக்
கண்டுளம் புழுங்கி முன்னைப் புலவரக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாதுசெய் தாற்றல் முட்டிப்
பண்டைய புலனும் தோற்றுப் படருழந்து எய்த்துப்
போனார்.

2415. இனையர்போல் வந்து வந்து மறுபுலத் திருக்குங்
கேள்வி
வினைஞரு மதமேற் கொண்டு வினாய்வினாய் வாதஞ்
செய்து
மனவலி யிளைப்ப வென்று வைகுவோர் ஒன்றை
வேண்டிப்
புனையிழை பாக நீங்காப் புலவர்முன் நண்ணி னாரே.

2416. முந்துநூன் மொழிந்தார் தம்மை முறைமையால்
வணங்கி எம்மை
வந்துவந் தெவரும் வாதஞ் செய்கின்றார் வரிசை யாக
அந்தமில் புலமை தூக்கி யளப்பதா எம்ம னோர்க்குத்
தந்தருள் செய்தி சங்கப் பலகையொன்று என்று
தாழ்ந்தார்.

2413. சந்திரனின் அழகிய மாலையை அணிந்த அருமையான சடையையுடைய சோம சுந்தரக் கடவுளின் திருக் கோயிலுக்கு வடமேற்குத் திசையில் ஓர் சங்க மண்டபத்தை உண்டாக்கினான். பின்னர் பல வரிசைகளை அப்புலவர்களுக்கு அளித்து, அவர்களை அச்சங்க மண்டத்தில் குடியமர்தத்தினான்.

2414. வலிமையான தமிழ்ப் புலவர்களுக்கு, பாண்டிய மன்னன் பல பரிசுகளை அளிக்க, அதனைக் கண்ட பழைய புலவர்கள் உள்ளம் வெதும்பினர். உடனே அவர்கள் பழைய புலவர்களை வாதுக்கு அழைத்துத் தோற்று, முன்னர் தாம் பெற்றிருந்த ஆற்றலும், பெருமையும், புலமையும் குறைந்து துன்பமடைந்து மனம் இளைத்துச் சென்றனர்.

2415. இந்தப் புலவர்களைப் போலவே, வேற்று நாட்டில் உள்ள அறிவில் சிறந்த புலவர்கள் பலர் வந்து செருக்குடன், பலவிதமான வாதங்களைப்புரிந்து, மனத்தின் வலிமை குறையத் தோற்றனர். இவ்வாறு பலரை வென்று தங்கி இருந்த அப்புலவர்கள், உமை அம்மையை இடப் பாகம் கொண்ட சோசுந்தரப் பெருமானிடம் ஒரு பொருளை வேண்டிப் பெறும் எண்ணத்துடன் சென்றனர்.

2416. முதல் நூலாகிய வேதாகமங்களை அருளிய இறைவனை முறையோடு வணங்கினர். “எம்மோடு தொடர்ச்சியாக, பலர் வந்து வந்து வாதம் செய்கின்றனர். எனவே முடிவில்லாத இப்புலமையைச் சீர்தூக்கி அளக்கும் கருவியாக எங்களுக்கு சங்கப் பலகை ஒன்று தந்தருள வேண்டும்” என்று வணங்கி வேண்டினர்.

2417. பாடிய பாணற் கன்று வலியவே பலகை யிட்டார்
பாடிய புலவர் வேண்டிற் பலகைதந் தருளார் கொல்லோ
பாடிய புலவராகும் படியொரு படிவங் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினார் பலகை யோடும்.

2418. சதுரமா யளவி ரண்டு சாணதிப் பலகை யம்ம
மதியினும் வாலி தாகு மந்திர வலிய தாகும்
முதியநும் போல்வார்க் கெல்லா முழம்வளர்ந் திருக்கை நல்கும்
இதுநுமக் களவு கோலாய் இருக்குமென் றியம்பி யீந்தார்.

2419. நாமகள் உருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை யமளி தன்னைப் பலகையாத் தருவ தென்னத்
காமனை முனிந்தார் நல்கக் கைக்கொடு களிறு தாங்கும்
மாமணிக் கோயில் தன்னை வளைந்துதங் கழகம் புக்கார்.

2420. நாறுபூந் தாம நாற்றி நறும்பனி தோய்ந்த சாந்தச்
சேறுவெண் மலர்வெண் டுசு செழும்புகை தீப மாதி
வேறுபல் வகையாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக் கீரன்
ஏறினான் கபில னோடு பரணனும் ஏறினானே.

2417. தம்மைப் பாடிப் பணிந்த பாணபத்திரருக்கு, தாமே வலியச் சென்று பலகை அருளிய அச் சோமசுந்தரக் கடவுள் பாடிய புலவர்கள் தாமே விரும்பி வேண்டினால் அதனைத் தராமல் இருப்பாரோ? பாடுகின்ற தன்மையுடைய ஒரு புலவர் போன்ற தோற்றம் கொண்டு பலகையுடன் இறைவர் வெளி வந்தார்.

(பாணபத்திரருக்கு அருளிய தன்மையை இப்புராணத்தின் 41-ம் படலத்தில் (மதுரைக்காண்டம்) காண்க.)

2418. "சதுர வடிவுடையதாய் இரண்டு சாண் அளவுள்ள இப்பலகை சந்திரனைவிட வெண்மையான தோற்றமுடையதாகும். அறிவில் தேர்ச்சியுடைய உம்மைப் போன்றவர்க்கு எல்லாம் இது ஒவ்வொரு முழமாக வளர்ந்து இருக்கை அளிக்கும். இந்தப் பலகை தங்களுக்கு ஓர் அளவு கோலாய் இருக்கும்", என்று கூறி அதனைத் தந்தருளினார்.

இறைவர் சங்கப் பலகை அருளல்

2419. கலைமகள் வடிவமாக வந்த அப்புலவர்களுக்கு வெண்டாமரையாகிய தவிசினை ஒரு பலகையாய்ச் செய்து தருவது போன்று, காமனை எரித்த இறைவர் தந்தருளினார். அவர்கள் அதனை வாங்கிக் கொண்டு, யானைகள் சுமக்கும் அத்திருக்கோயிலை வலம் வந்து தம்முடைய அவைக்குள் புகுந்தனர்.

2420. அப்பலகைக்கு மணம் வீசும் பூ மாலைகளைத் தொங்கவிட்டு, வாசனை வீசும் சந்தனக் குழம்பும், வெண் மலரும், வெள்ளாடையும், புனைந்து, நறிய புகையும் தீபமும் காட்டி பூசை செய்து வணங்கினர். பிறகு அச்சங்கப் பலகையில் நக்கீரர் முதலில் ஏறினார். அதன்பின் கபிலரும் பரணரும் ஏறினர்.

2421. இருங்கலை வல்லோ ரெல்லாம் இம்முறை யேறி யேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கு மொத்திடங் கொடுத்து நாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க் கெல்லாஞ்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்ற தன்றே.

2422. மேதகு சான்றோர் நூலின் விளைபொருள் விளங்கத் தம்மில்
ஏதுவு மெடுத்துக் காட்டும் எழுவகை மதமுங் கூறும்
போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாதுசெய் வார்கள் வந்தால் மறுத்துநேர் நிறுத்து மன்னோ.

வேறு

2423. ஆய ஆறெண் புலவரும் ஆய்ந்துணர்
பாய கேள்விப் பயன்பெற மாட்சியாற்
றூய பாட றொடங்கினர் செய்துகொண்
டேய வாறிருந் தாரந்த வெல்லைவாய்.

2424. பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தொன்றியே
தலைம யங்கிக் கிடந்தஅத் தன்மையால்.

2425. வேறு பாடறி யாது வியந்துநீர்
கூறு பாடல் இதுவென்றுங் கோதிலென்
தேறு பாட லதுவென்றுஞ் செஞ்செவெ
மாறு பாடுகொண் டார்சங்க வாணரே.

2421. பெரிய நூலில் வல்ல மற்றப் புலவர்கள் வரிசையாக ஏறி ஒருசேர வீற்றிருந்தனர். தன் உரை காண்பார் அனைவருக்கும் எழுத்தால் சுருங்கி நின்று பொருள் விரிவு காட்டித் தோன்றும் நூலைப் போல, இறைவன் தந்தருளிய பலகை ஒன்றே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முழமாக வளர்ந்து இடம் கொடுத்தது.

2422. தெய்வப் பலகை பெற்ற அச்சங்கப் புலவர்கள், தம்முன் நூல்களில் அமைந்த பொருள் விளங்க, ஏதுவும், உதாரணமும், எழுவகை மதமும் கூறும்போது அவற்றைக் கேட்டுத் தெளிவடைந்த கிளியும், நாகணவாய்ப் பறவையுமே வெளியே வந்து, வாதம் செய்பவர்கள் வந்தால், அவர்கள் கொள்கையை மறுத்துத் தம் கொள்கையை நிலை நாட்டும் எனில் எளிய அப்புலவர்களின் பெருமை அளத்தற்கு அரியதாகும்.

இறைவர் புலவர்களுக்குத் தலைமை ஏற்றல்

2423. அந்த நாற்பத்தெட்டுப் புலவர்களும், ஆராய்ந்து தெளிந்த நூற்பயன் விளங்க மாண்புடனே தூய்மையான பாடல்களைச் செய்து பாடிக் கொண்டு தம்தம் இச்சை வழியே இருந்தனர். அப்பொழுது,

2424. அப்புலவர்கள் செய்த பாடல்கள் அனைத்தும், உரை காண்போர் அறிவிற்கேற்ப விரியும் தன்மையுடைய பொருள் வளமும், சொல் வளமும், குறிப்பால் தோன்றும் பொருள் வளமும் ஒற்றுமையுடையதாய் வேறுபாடின்றி தலை மயங்கிக் கிடந்தன.

2425. இதனால் பாடல்களின் வேறுபாடு உணராமல் தம்முள் வியப்படைந்து, "நீர் கூறிய பாடல் இதுதான்", என்றும், "குற்றமற்ற தெளிந்த இந்தப் பாடல் என்னுடையது" என்றும சங்கப் புலவர்கள் ஒருவருக்கொருவர் தம்முள் மாறுபாடு கொண்டனர்

2426. மருளு மாறு மயக்கற வான்பொருள்
தெருளு மாறுஞ் செயவல்ல கள்வர்சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்முன்
அருளு நாவல ராய்வந்து தோன்றினார்.

2427. வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தை யாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கொணர்கெனப் பாவலர்
எந்தை யீங்கிவை யென்றுமுன் னிட்டனர்.

2428. தூய சொல்லும் பொருளின் றொடர்ச்சியும்
ஆய நாவல ரவ்வவர் தம்முது
வாய பாடல் வகைதெரிந் தவ்வவர்க்
கேய வேயெடுத் தீந்தனர் என்பவே.

2429. வாங்கு சங்கப் புலவர் மனங்களித்
தீங்கு நீரெம ரோடு மொருத்தராய்
ஓங்கி வாழ்திரென் றொல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொன் தவிசில் இருத்தினார்.

2430. பொன்னின் பீடிகை யென்னும்பொன் னாரமேல்
துன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னி னார்நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந் தார்மது ரேசரே.

2426. மயக்கமடையும் படியும், அம்மயக்கம் நீங்கும் படியும் செய்யவல்ல கள்வரும், சொல்லும் பொருளுமாம் மதுரேசருமாகிய சோமசுந்தரப் பெருமான், அப்புலவர் களின் முன் தாமும் ஒரு புலவராய் அருளோடு தோன்றினார்.

2427. அவ்வாறு வந்த நாவலராகிய இறைவர், தம்மை வணங்கும் புலவர்களை நோக்கி, "மணம் வருந்த மயக்கம் தரும் தளை அமைந்த செய்யுட்களைக் கொண்டு வாருங்கள்," என்று கட்டளை இட்டார். அப்புலவர்கள், "எம் தந்தையே! இங்குள்ள இவையே," என்று கூறி அவற்றைக் கொண்டு வந்து அவர் திருமுன் வைத்தனர்.

2428. தூய சொல்லும், தொடர்ந்த பொருளுமாகிய அந்நாவலர், அப்புலவர்களின் பொருள் முதிர்ச்சி வாய்ந்த பாடல்களின் வேறுபாடுகளை அறிந்து, அப்பாடல்களை அவரவர் மனம் மகிழும்படி எடுத்துக் கொடுத்தருளினார்.

2429. அவற்றை வாங்கிய புலவர்கள் மனம் மகிழ்ந்து, "நீர் எம்முடன் ஒருவராக இங்கே சிறந்த புலவராக் இருக்க வேண்டும்" என்று வேண்டி, விரைந்து தங்களைத் தாங்குகின்ற சிவந்த பொன்தவிசில் இருத்தினார்கள்.

2430. பொற்பலகை என்னும் பொன்னாரத்தில் நாற்பத்தெட்டுப் புலவர்களும் சுற்றிலும் பதித்த மணிகள் போன்று இருந்தனர். சோமசுந்தரக்கடவுள் பெருமை மிக்க நடு நாயக மணி போன்று வீற்றிருந்தார்.

2431. நதிய ணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்மர் என்னப் படும்புல வோரெலாம்
முதிய வான்றமிழ் பின்னு முறைமுறை
மதிவி ளங்கத் தொடுத்தவண் வாழுநாள்.

வேறு

2432. வங்கிய சேகரன் வங்கிய சூடா மணிதன்னைப்
பொங்கிய தேசார் முடிபுனை வித்துப் புவிநல்கி
இங்கியல் பாச வினைப்பகை சாய இருந்தாங்கே
சங்கியல் வார்குழை யானடி யொன்றிய சார்புற்றான்.

சங்கப்பலகை கொடுத்த படலம் முற்றிற்று.

52. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்

2433. சொற்குவை தேரும் பாவலர் மேவத் தொகுபீடம்
அற்குவை கண்டத் தண்ணல் அளித்தது அறைந்தேமால்
தற்குவை தந்தா லுய்குவ லென்னுந் தருமிக்குப்
பொற்குவை நல்கும் வண்ணம் எடுத்துப் புகல்கிற்பாம்.

2431. கங்கையைத் தரித்த இறைவரோடும் நாற்பத்தொன்பது பேர் என்று கூறத்தகும் புலவர்கள் அனைவரும், மீண்டும் பழைமையான சிறப்புடைய பாடல்களை முறையாகக் கற்போருக்கு அறிவு விளங்கக் கற்பித்து, பல பாடல்களை உண்டாக்கி வாழ்ந்து வந்தனர். அப்பொழுது,

வங்கிய சேகர பாண்டியன் சிவபதம் அடைதல்

2432. வங்கிய சேகர பாண்டியன், 'வங்கிய சூடாமணிக்கு' ஒளி நிறைந்த மணிமுடியைச் சூட்டி, நாட்டை ஒப்படைத்து, இம்மையில் அமைந்த 'வினைப் பாசம்' என்னும் பகைமை கெட இருந்து, மறுமையில் சங்காலாகிய குழையணிந்த சிவபெருமானின் திருவடியில் கலத்தலாகிய வீடுபேற்றை அடைந்தான்.

சங்கப் பலகை கொடுத்த படலம் முற்றிற்று.

52. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்

2433. சொற்களை ஆராய்ந்து தெளிவடையும் புலவர்கள் தங்க, சங்கப் பலகையை, இருள்போன்ற திருமிடற்றினையுடைய இறைவன் தந்ததைக் கூறினோம். பொற்கிழியில் உள்ள காசுகளை அளித்தால் பிழைப்பேன் என்று தனக்காக வேண்டும் தருமிக்கு அப்பொற்காசுகளை அளித்த திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

2434. மன்னவர் மன்னன் வங்கிய சூடா மணிமாறன்
தென்னவர் ஆகித் திகிரியு ருட்டுந் தென்கூடல்
முன்னவ ரன்னங் கண்டறி யாத முடிக்கேற்றுப்
பன்மலர் நல்கு நந்தனம் வைக்கும் பணிபூண்டான்.

2435. மாதவி பாதிரி தாதகி கூவிள மந்தாரந்
தாதவிழ் மல்லிகை முல்லையி லஞ்சி தடங்கோங்கம்
வீதவழ் கொன்றை கரந்தைசெ ழுங்கர வீரந்தண்
போதவிழ் நந்தி செருந்திகு ருந்தம் புன்னாகம்.

2436. முண்டக மென்கடி நீலமு தற்பல முப்போதும்
எண்டிசை யுங்கம் ழும்படி நந்தன மெங்குந்தேன்
உண்டிசை வண்டு படிந்துமு ரன்றிட வுண்டாக்கி
வண்டிமிர் சண்பக நந்தன முந்தனி வைத்தானால்.

2437. பொய்த்திடு நுண்ணிடை மங்கல மங்கையார்
பொன்பூண்டார்
ஒத்தெழு சண்பக மொய்த்தவ ரும்ப ருடைந்து எங்கும்
வைத்திடு நந்தன வாசம்வி ழுங்கி மணங்கான்று
பைத்து மலர்ந்தன கண்டு மகிழ்ந்து பரித்தேரான்.

பாண்டியன் நந்தவனம் வைத்தல்

2434. மன்னர் மன்னனான வங்கிய சூடாமணி பாண்டியன், சுந்தர பாண்டியனாய் அரசோச்சிய தென் திசை உள்ள நான்மாடக் கூடலில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின், பிரமனாலும் காணமுடியாத திருமுடிக்கு பொருத்தமான பல மலர்களைக் கொடுக்கும் 'திருநந்தவனம்' வைத்தலாகிய திருப்பணியை மேற் கொண்டான்.

2435. குருக்கத்தி, பாதிரி, ஆத்தி, வில்வம், மந்தாரம், மல்லிகை, முல்லை, கோங்கு, கொன்றை, கரந்தை, அலரி, நந்தியாவட்டம், செருந்தி, குருந்தம், புன்னாகம் போன்ற மலர்களோடு,

2436. தாமரையும், மெல்லிய மணமுள்ள நீலோற் பலமும் ஆகிய இவை போன்ற பிற மலர்களும் மூன்று காலத்திலும் எட்டுத் திசைகளிலும் வாசனை வீசுமாறு திருநந்தவனத்தினை, வண்டுகள் பூவிற் படிந்து, தேனுண்டு இசை பாடும்படி உண்டாக்கினான். அத்துடன் சண்பக நந்தவனத்தையும் தனியே வைத்தான்.

(சண்பக மலரில் வண்டு மொய்க்காது என்பதால் தனியே குறிப்பிட்டார்.)

2437. மெல்லிய இடையினை உடைய பெண்கள், பொன்னணி பூண்டதைப் போன்று, அழகுபெற்று, நெருக்க மான அரும்புகள் உடைந்து, பிற நந்தவனத்தின் வாசனையையெல்லாம் தன்னுட்படுத்தி, மணம்வீசி, மலர்ந்தன. குதிரைகள் பூட்டப்பட்ட தேரை உடைய பாண்டிய மன்னன் அதனைக் கண்டு மகிழ்ந்தான்.

2438. செருக்கிய வண்டு விழாமலர் கொய்து தெரிந்தாய்ந்து
செருக்கிய இண்டை நிரைத்தொடை தொங்கல்
நெடுந்தாமம்
மருக்கிளர் கண்ணி தொடுத்தணி வித்து வணங்காளுர்
கருக்கிய கண்ணுத லார்திரு மேனி கவின் செய்தான்.

2439. அன்னவி யன்பொழின் மாமது ரேசர் அடித்தாழ்வோன்
பொன்னவிர் சண்பக மாலைபு னைந்த புதுகோலா
தன்னைவி யந்திவர் சண்பக சுந்தரர் தாமென்னா
முன்னரி றைஞ்சினன் நிம்பம ணிந்தமு டித்தென்னன்.

2440. அன்னதொர் நாமம் பெற்றனர் இன்று மணிக்கூடன்
முன்னவ ரந்தத் தாமம வர்க்கு முடிக்கேற்றும்
இன்னதொர் நீராற் சண்பக மாற னென்றேபேர்
மன்னிவி ளங்கினன் வங்கிய சூடா மணிதானும்.

2441. சண்பக மாறன் சண்பக சுந்தரர் தம்மாடே
நண்பக மாறா நன்பணி செய்யு நன்னாளிற்
பண்பகர் சொல்லார் தம்புடை மாரன் படுபோர்மூண்
டெண்பக எய்வான் ஆகிய வந்தன் றிளவேனில்.

2438. வண்டுகள் மொய்க்காத சண்பக மலர்களைக் கொய்து, அதில் நல்ல மலர்களாகத் தேர்ந்தெடுத்து, காம்பு முதலியவற்றை நீக்கி, நெருங்கத் தொடுத்த இண்டை, வரிசையாகிய தொடை, தொங்கல், தாமம், கண்ணி ஆகிய பலவகை மாலைகளைத் தொடுத்து அணிவித்து, பகைவர்களின் ஊரான திரிபுரத்தை எரித்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானின் திருமேனியை அழகு செய்தான்.

(இண்டை — தண்டவடிவமாகத் தொடுத்த மாலை, தொடை — சதுரமாகத் தொடுத்த மாலை, தொங்கல் — சரமாகத் தொடுத்த மாலை, தாமம் — கோத்தமாலை, கண்ணி — வட்டவடிவமாகத் தொடுத்த மாலை.)

சண்பக சுந்தரர்

2439. அந்தப் பெரிய சோலை சூழ்ந்த மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரப் பெருமானின் திருவடியை வணங்குபவனாகி, வேப்பமலர் மாலையைச் சூடிய அப்பாண்டியன், பொன்போல் விளங்கும் சண்பக மாலை அணிந்த புதிய திருக்கோலத்தைக் கண்டு வியப்படைந்து இவர் சண்பக சுந்தரர் என்று பெயர் கூறி வணங்கினான்.

சண்பகப் பாண்டியன்

2440. அழகிய கூடல் மாநகரில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான், இன்றுவரை சண்பக சுந்தரர் என்ற பெயராலேயும் வழங்கப்பட்டு வருகின்றார். அந்த சண்பக மலர்களை அவரது திருமுடிக்கு அணிவித்த தன்மையாலேயே வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் 'சண்பக பாண்டியன்' என்னும் பெயர் பெற்று விளங்கினான்.

இளவேனிற் காலம்

2441. சண்பகப் பாண்டியன் சண்பக சுந்தரரிடம் நீங்காத அன்புடன் நல்ல திருப்பணி செய்து வரும் நாளில், இளவேனிற் காலம் வந்தது. பண்பான சொற்களைப் பேசும் மகளிரிடத்தில் மன்மதனின் மலர் அம்புகள் தாக்க அவர்கள் வருந்தும்படி இக்காலம் வந்தது.

வேறு

2442. மனிதர்வெங் கோடை தீர்க்கும் வசந்தமென் காலும் வேறு
துனிதவி ரிளங்கால் வேண்டுஞ் சோலையுஞ் சோலை வேண்டும்
புனிதநீர்த் தடமும் வேறு புதுமலர் ஓடை வேண்டும்
பனிதரு மதியும் வேறு பான்மதி வேண்டுங் காலம்.

2443. அண்டவான் தருமேற் சீறிச் சிவந்தெழுந் தாங்குத் தேமாத்
தண்டளிர் ஈன்று வானந் தைவர நிவந்த காசு
கொண்டிடை யழுத்திச் செய்த குழையணி மகளிர் போல
வண்டிறை கொள்ளப் பூத்து மலர்ந்தன செருந்தி யெல்லாம்.

2444. செங்கதிர் மேனி யான்போல் அவிழ்ந்தன செழும்ப லாசம்
மங்குலூர் செல்வன் போல மலர்ந்தன காஞ்சி திங்கட்
புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவஞ் செங்கை
அங்கதி ராழி யான்போ லலர்ந்தன விரிந்த காயா.

2445. தரைகிழித் தெழுநீர் வைகைத் தடங்கரை எக்கர் அல்குல்
அரவமே கலைசூழ்ந் தென்ன வலர்ந்துதா துகுப்ப ஞாழல்
மரகதந் தழைத்து வெண்முத் தரும்பிப்பொன் மலர்ந்து வாங்குந்
திரைகடற் பவளக் காடு செய்வன கன்னிப் புன்னை.

2442. மனிதர்களின் கொடிய வெப்பத்தைப் போக்கும் இளந்தென்றலும், வேறு ஒரு இளந்தென்றலை தன் வெப்பத்தைப் போக்க விரும்பியது. சோலையும் வேறு சோலையை விரும்பும், தூய்மையான நீர் நிறைந்த தடாகமும், வேறு நாள் மலர் நிறைந்த நீரோடையை விரும்பும், மக்கள் உயிர்கட்குக் குளிர்ச்சியை உண்டாக்கும் சந்திரனும் வேறு சந்திரனை விரும்பும். இத்தகைய தன்மை யுடையதாய் இளவேனில் காலம் இருந்தது.

இளவேனிற்கால வருணனை

2443. அப்போது மரங்கள் எல்லாம், வானில் உள்ள சிறந்த கற்பக மரங்களின் மேல் சீற்றம் கொண்டு சிவந்து எழுந்தாற்போல, குளிர்ந்த செந்தளிர்களைப் பரப்பி, வானுலகை அளாவி நின்றன. நீலமணிகளைக் கொண்டு இடை இடையே பதித்துச் செய்த காதணியை அணிந்த பெண்கள் போலச் செருந்திகள் அனைத்தும் வண்டுகள் இடை இடையே தங்கப் பூத்தன.

2444. வளமையான முள் முருக்கு மலர்கள், செவ்வொளி மிக்க சூரியனைப் போலச் செந்நிறமாக மலர்ந்தன. காஞ்சி மலர்கள், முகிலை ஊர்தியாக உடைய இந்திரன் போன்று கரியநிறமாக மலர்ந்தன. பொலிவுள்ள கிளைகளையுடைய குங்கும மரங்கள் சந்திரனைப் போல வெண்ணிறமாக மலர்ந்தன. விரிந்த காயாம் செடிகள், சிவந்த அழகிய கையில் திகிரியை உடைய திருமால் போல் நீலநிறமாக மலர்ந்தன.

2445. தரையைக் கிழித்துச் செல்லும் நீரையுடைய வையை ஆற்றின் பெரிய கரையாகிய பெண், மணல் மேடாகிய அல்குலில் ஒளியையுடைய மேகலையை அணிந்தாற்போலத் தோன்றுமாறு குங்கும மரங்கள் மலர்ந்து மகரந்தத்தைச் சிந்தின. இளமையுடைய புன்னை மரங்கள், மரகதம் போலும் இலைகள் தழைத்து வெண் முத்து போலும் முகை அரும்பிக் கடலில் உள்ள பவளக்காடு போலும் மரகதம் சிந்தின.

2446. ஊடினார் போல வெம்பி யிலையுதிர்ந் துயிரன் னாரைக்
கூடினார் போல எங்குங் குழைவரத் தழைத்து நீங்கி
வாடினார் போலக் கண்ணீர் வாரமெய் பசந்து மையல்
நீடினா ரலர்போற் பூத்து நெருங்கின மரங்கள் எல்லாம்.

2447. விழைதரு காத லார்தா மெலிவுற மெலிந்து நெஞ்சங்
குழைவுறக் குழைந்து நிற்குங் கோதிலாக் கற்பி
னார்போல்
மழையறுங் கோடை தீப்ப மரந்தலை வாட வாடித்
தழைவுறத் தழைத்து நின்ற தழீஇயபைங் கொடிகள்
எல்லாம்.

2448. சேட்டிகைத் தென்கால் தள்ளத் தெண்மதுச் சிதறத்
தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றுபூங் கொம்பர் ஆடல்
நாட்டியப் புலவ னாட்ட நகைமுகன் வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார் போன்ற வன்றே.

2449. மலர்ந்தசெவ் வந்திப் போதும் வகுளமு முதிர்ந்து வாடி
உலர்ந்துமொய்த் தளிதே னக்கக் கிடப்பன வுள்ள மிக்க
குலந்தரு நல்லோர் செல்வங் குன்றினுந் தம்பால்
இல்லென்று
அலந்தவர்க் குயிரை மாறி யாயினுங் கொடுப்ப ரன்றோ.

2446. ஊடல் கொண்ட பெண்களைப் போன்று மரங்கள் எல்லாம், வெம்பி இலையை உதிர்த்தன. உயிர் போன்ற தம் கணவனைக் கூடியது போன்று எங்கும் தழைகள் தோன்றத் தழைத்தன. அந்தக் கணவனைப் பிரிந்து வாடுகின்ற பெண்ணின் நிலைபோன்று கண்ணீர் வர, உடல் பசந்து, காம மயக்கம் மிக்க மகளிரின் பழிச்சொல் போல பூக்களை மலரவிட்டன.

2447. தம்மால் விரும்பப்பட்ட காதலர் மெலியத் தாமும் மெலிந்து, அவர்தம் உள்ளம் களிகூரத் தாமும் களிப்படைந்து நிற்கும் கற்புடைய பெண்கள் போல, மழையற்ற கோடை வெப்பத்தால் மரங்கள் வாடும்போது, அவற்றைச் சுற்றி நிற்கும் பசிய கொடிகளும் வாடி, மரங்கள் தழைக்கும் போது அக்கொடிகளும் தழைத்து நின்றன.

தென்றல் வருகை

2448. கொடிய தென்திசையில் இருந்து வரும் தென்றல் காற்று தள்ளுதலால், தெளிந்த தேன் துளிக்க வண்டுகள் இசைபாடுதலால் சாய்ந்து ஆடும் பூங்கொம்புகள், கூத்து வல்லோன் ஆட்டுவிக்க நகை முகத்தில் வியர்வை சிந்த பாட்டிசைத்து ஆடுகின்ற நாடக மகளிரை ஒத்தன.

2449. விரிந்த செவ்வந்தி மலரும், மகிழம் பூவும் நிலத்திலே உதிர்ந்து வாடிப் புலர்ந்து, வண்டுகள் மொய்த்துத் தேன் உண்ணக் கிடப்பவனாகிய காட்சி, உள்ளம் மிகுதியையுடைய உயர் குடியில் பிறந்த நல்லோர்கள், தம் செல்வம் சுருங்கிய காலத்தும், தம்மிடம் வந்து இல்லை என்று கூறி வருந்தியவர்க்குத் தம்முயிரை யாயினும் கொடுப்பர் என்பதை நினைவூட்டும்.

2450. நாறிய தண்ணந் தேமா நறுந்தளிர் கோதிக் கூவி
ஊறிய காமப் பேட்டை உருக்குவ குயின்மென் சேவல்
வீறிய செங்கோல் வேந்தன் வெளிப்படத் தேயங் காவல்
மாறிய வேந்தன் போல ஒடுங்கின மயில்கள் எல்லாம்.

2451. பொங்கரி னுழைந்து வாவி புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு குளிர்ந்துமெல் லென்று
தென்றல்
அங்கங்கே கலைகள் தேறு மறிவன்போல் இயங்கு
மன்றே.

2452. தாமரை களாஞ்சி தாங்கத் தண்குயின் முழவ மேங்க
மாமரு தமருங் கிள்ளை மங்கலம் இயம்பத் தும்பி
காமர மிசைப்ப முள்வாய்க் கைதைவா ளெடுப்ப
வேனிற்
கோமகன் மகுடஞ் சூடி யிருப்பதக் குளிர்பூஞ் சோலை.

2453. கலையினால் நிறைந்த இந்து காந்தமண் டபத்துஞ்
செய்த
மலையினும் எழுது மாட மருங்கினு நெருங்கு சோலைத்
தலையினுங் கமல வாவித் தடத்தினுந் தண்முத் தார
முலையினு மன்றிக் கோடை முடிவிடங் காணார்
மைந்தர்.

2450. மெல்லிய ஆண்குயில்கள், குளிர்ந்த அழகிய தேமாவின் நறிய தளிர்களைக் கோதிக் காமம் அரும்பிய தன் பெட்டைகளைக் கூவி உருக்குவன ஆயின. பெருமிதமுடைய செங்கோலையுடைய பெரு வேந்தன் தோன்ற, நாடுகாவல் மாறிய குறுநில மன்னனைப் போல மயில்கள் எல்லாம் ஒடுங்கின.

2451. தென்றல் காற்று, பல இடங்களில் சென்று பல நூல்களை ஆராய்ந்து அறியும் மாணவன் போலச் சோலையில் நுழைந்து, தடாகத்திற் புகுந்து, தாமரை மலரைத் துழாவி, நறுமணமுள்ள இருவாட்சி முல்லை மல்லிகைப் பந்தரிலே படிந்து, மகரந்தத்தையுடைய மலர்களின் மணங்களைக் கவர்ந்து குளிர்ந்து மெதுவாய் வந்து உலாவும்.

வேனிலாகிய அரசன் வீற்றிருத்தல்

2452. தாமரை, தாம்பூலம் எடுக்கும் கலம் (காளஞ்சி) ஏந்தவும், குயில் முழவம் ஒலிக்கவும், பெரிய மருத நிலத்தில் இருக்கும் கிளி மங்கலம் கூறவும், வண்டுகள் இசைப்பாட்டு பாடவும், முட்களையுடைய தாழை வாளை ஏந்தவும், வேனிலாகிய மன்மதன் முடிசூடி வீற்றிருக்கப் பெறுவது அக்குளிர்ந்த பூஞ்சோலை ஆகும்.

(கம்பரின் - தண்டலை மயிள்களாட என்ற பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்க பாடல்)

ஆடவரின் வெம்மையை ஆற்றும் இடங்கள்

2453. ஆடவர்கள், கலைகள் நிறைந்த சந்திரக் காந்தக் கல்லாகிய மண்டபத்திலும், செய்குன்றிலும், சித்திர மண்டபத்திலும் நெருங்கிய சோலையினிடத்தும், தாமரைத் தடாகத்தினிடத்தும், குளிர்ந்த முத்தாரம் அணிந்த மகளிர் கொங்கைகள் இடத்தும் அல்லாமல் வேனில் வெம்மையைப் போக்கும் இடம் வேறு காணாராயினர்.

2454. நிலந்தரு திருவி னான்ற நிழல்மணி மாடக் கூடல்
வலந்தரு தடந்தோண் மைந்தர் வானமும் வீழும் போக
நலந்தரு மகளி ரோடு நாகநா டவர்தஞ் செல்வப்
பொலந்தரு வனைய காட்சிப் பூம்பொழி னுகர்வான் போவார்.

வேறு

2455. மாத்தாண் மதமா னெருத்தின் மடங்கல் எனச்செல் வாரும்
பூத்தா ரொலிவாம் பரிமேற் புகர்மா வெனப்போ வாரும்
பார்த்தார் பரிதி யெனவாம் பரித்தே ருகைத்தூர் வாருந்
தேத்தா ருளர்வண் டலம்பச் சிலம்பி னடக்கின் றாரும்.

2456. நீலப் பிடிமேற் பிடிபோல் நெறிக்கொள் வாருந் தரள
மாலைச் சிவிகை மிசைவெண் மலராள் எனச்செல் வாரும்
ஆலைக் கரும்பன் துணைபோ லணித்தார்ப் பரியூர் வாருங்
கோலத் தடக்கை பற்றிக் கொழுநருடன்போ வாரும்.

2457. சுருப்புக் கமழ்தேங் கண்ணித் தொடுபைங் கழலா டவருங்
கருப்புச் சிலைமன் னவனாற் கருவின் படையன் னவரும்
விருப்புற் றெறிநீர் வைகை வெள்ளைத் தரளந் தெள்ளிப்
பொருப்பிற் குவிக்கும் புளினம் புறஞ்சூழ் சோலை புகுவார்.

2454. மாற்றாரது நிலத்தை வெற்றியினால் பெற்றுக் கொடையாகத் தரும் வங்கிய சூடாமணி பாண்டியனது, ஒளிமிக்க மணிகள் அணிசெய்யும் மாடங்கள் நிறைந்த கூடலில் உள்ள காளையர்கள் விண்ணவரும் விரும்பும் இன்பத்தை அளிக்கும் தத்தம் அழகிய மாதருடன் வானுலகின் செல்வம் மிக்க பொன்மயமாகிய கற்பகச் சோலை போன்ற தோற்றமுடைய பூஞ்சோலையில் இன்பம் துய்க்கப் போவரராயினர்.

ஆடவரும் மகளிரும் பூம்பொழிலை அடைதல்

2455. பெரிய கால்களையும், மத மயக்கத்தையும் உடைய யானையின் பிடரியில் ஆண்கள், ஆண் சிங்கத்தைப் போல் சென்றனர். அழகிய கிண்கிணிமாலை ஒலிக்கும் குதிரை மேல், புள்ளி முகமுடைய யானையைப் போல் செல்வார்கள், பன்னிரண்டாகப் பகுக்கப்பட்டு, நிறைந்த சூரியர்களைப் போலச் சிலர் தேர்மீது சென்றனர். தேன்நிறைந்த மாலையில் வண்டுகள் ஒலிக்கச் சிலர் மலைபோல நடந்து சென்றனர்.

2456. பெண்களில் சிலர் கரிய பெண்யானை மீது பெண் யானையைப் போலச் சென்றனர். முத்து மாலையால் வேயப்பட்ட பல்லக்கின்மீது, வெண்டாமரை மலரில் உள்ள கலைமகள் போலச் சிலர் சென்றனர். வில்லையுடைய மன்மதனின் மனைவியான இரதி தேவியைப் போலச் சிலர் சென்றனர். சிலர் தங்கள் காதலர்களின் கையைப் பிடித்துக் கொண்டு சென்றனர்.

2457. வண்டுகள் மொய்க்கும் மணம் கமழும் தேன் நிறைந்த மாலையை அணிந்த, வீரக் கழல் பூண்ட ஆடவர்களும், வில்லையுடைய மன்மதனது நான்கு வகைப் பட்ட படைகளைப் போன்ற மகளிரும், மிகுந்த விருப்பத்துடன் நீர் நிறைந்த வையையாறு முத்துக்களைக் கொழித்து வெள்ளை மலைபோலக் குவிக்கின்ற மணற்குன்றுகள் சூழ்ந்த சோலைகளை அடைந்தனர்.

2458. கூந்தற் பிடியும் பரியு மூர்வார் கொழுநர் தடந்தோள்
ஏந்தச் சயமா தென்னத் தழுவா இழிந்து பொழில்வாய்ப்
பூந்தொத் தலர்பொற்கொடிதா துகுமா றென்னப் புனைந்த
சாந்தக் கலவை உகப்போய் வனமங் கையர்போற் சார்ந்தார்.

2459. ஏமா சலமென் முலையார் நடையோ வியமே யென்னப்
பூமா தவிசேர் வாரும் புன்னை நிழல்சேர் வாருந்
தேமா நிழல்சேர் வாருஞ் செருந்தி நிழல்சேர் வாருங்
காமா யுதசா லைகள்போற் கைதை நிழல்சேர் வாரும்.

2460. கோடும் பிறைவா ணுதலார் குழலைக் கருவிக் காரென்று
ஆடுந் தோகை யவர்கண் ணோக்கிக் கணையென் றஞ்சி
ஓடுங் கொடியி னன்னா ருருமாந் தளிரென் றயில்வான்
நாடுங் குயிலன் னவர்பன் ணிசைகேட்டு ஒதுங்கி நாணும்.

2461. நீடுந் தரங்கம் இரங்கு நிறைநீர் நிலையே யன்றிப்
பாடுஞ் சுரும்புண் கழுநீர் பைந்தாட் குமுதம் பதுமங்
கோடும் பூத்த என்னக் கொடியே ரிடையார் குழையுந்
தோடுங் கிடந்த வதனத் தொகையாற் பொலிவ சோலை.

2458. புறமயிரையுடைய பெண்யானைகளிலும், குதிரைகளிலும் ஏறிச் சென்று பெண்கள், தம் தம் கணவர் தம் பெரிய தோள்களை ஏந்த, விசய இலட்சுமி போலத் தழுவி இறங்கினர். சோலையினிடத்தில், பூங்கொத்து அலர்ந்து மகரந்தம் சிந்துதல்போலத் தங்கள் உடலில் அணிந்த கலவைச் சந்தனம் உலர்ந்து சிந்த வனத்தில் வாழும் தெய்வ மகளிரைப் போலக் காட்சியளித்தனர்.

2459. பொன்மலையென்று கூறத்தக்க கொங்கைகளை யுடைய மகளிர், நடக்கும் பதுமை போன்று பூக்கள் நிறைந்த குருக்கத்தி நிழலை அடைந்தனர். சிலர் தேமாவின் நிழலை அடைந்தனர். சிலர் செருந்தியின் நிழலை அடைந்தனர். மதவேளின் படைச்சாலைகள் போல் மலர்ந்த தாழையின் நிழலைச் சிலர் அடைந்தனர்.

2460. வளைந்த பிறை போன்ற ஒள்ளிய நெற்றியை யுடைய மகளிரது கூந்தலை முகில் என்று கருதி ஆடுகின்ற மயில்கள், அவர் கண்களைக் கண்டு அம்பென்று கருதி அஞ்சி ஓடும். கொடி போன்ற அம்மகளிரின் உருவத்தை மாந்தளிர் என்று கருதிக் கோதி உண்ணச் செல்லும் குயில்கள், அவர்பாடும் பண்ணொலியைக் கேட்டு நாணி ஒதுங்கிச் செல்லும்.

2461. நீண்ட அலைகள் ஒலிக்கும் நீரோடைகளே அல்லாமல், இசைபாடும் வண்டுகள் மது உண்ணும் குவளையையும், பசிய தாளை உடைய ஆம்பலையும், தாமரையையும், பூங்கொம்புகளும் பூத்தன போலக் கொடி போன்ற அழகிய இடையை உடைய மகளிரின் குண்டலமும் தோடும் பொருந்திய முகங்களின் தொகுதியால் சோலைகள் பொலிவோடு விளங்கின.

2462. பிடிகள் என்ன நடந்தா ருடன்போய்க் கொழுநர்
பெருந்தண்
கொடிகண் மிடைந்த வில்லில் இயக்கர் போலக்
குறுகிக்
கடிகொள் பனிநீர் தெளித்து வேடை தணித்துங்
கன்றும்
அடிகள் பிடித்துஞ் சேடி யவர்கைக் குதவி யாவார்.

2463. மைவார் தடங்கண் மடவார் வளைப்பார் கொம்பின்
மலரைக்
கொய்வார் குமிழ்போந் துயிர்ப்பார் குழையுஞ் செவியுங்
குழலும்
பெய்வார் மகிழ்ச்சி செய்வார் பேரா மயல்கூர
எய்வார் கணைபோல் தைப்பக் கொழுநர் மார்பத்து
எறிவார்.

2464. முத்தேர் நகையார் வளைப்ப முகைவிண் டலர்பூங்
கொம்பர்ப்
புத்தேள் வண்டும் பெடையும் புலம்பிக் குழலிற் புகுந்து
தெத்தே எனப்பாண் செய்து தீந்தே னருந்துத்
துணையோடு
ஒத்தே ழிசைபா டிக்க ளுண்ணும் பாண ரொத்தே.

வேறு

2465. இம்பர்வீ டளிக்குந் தெய்வ மகளிரே யென்பார் கூற்றம்
வம்பல மெய்யே போலும் வளைக்கையார் வளைப்பத்
தாழ்ந்து
கம்பமுற் றடிப்பூச் சிந்தி மலர்முகங் கண்ணீர் சோரக்
கொம்பரும் பணிந்த தென்றால் உலகியல் கூறற்
பாற்றோ.

2462. ஆடவர்கள், பெண்யானைகள் போன்று நடந்து செல்லும் மகளிருடன் சென்று பெரிய கொடிகள் மிடைந்த இல்லில், இயக்கர்கள் போலக் குறுகிப் பனிநீரைத் தெளித்து வெம்மையை ஆற்றிக் கொண்டனர். நடந்து வந்ததால் கன்றிப் போன அவர்கள் அடிகளைப் பிடித்து தளர்ச்சியைப் போக்கிக் கொண்டு மலர் கொய்யப் புகுந்தனர்.

மலர் கொய்து விளையாடல்

2463. மைதீட்டிய நீண்ட கண்களையுடைய மகளிர் நீண்ட கொம்புகளை வளைத்து அவற்றின் மலர்களைக் கொய்து குமிழம்பூ போன்ற மூக்கில் மோந்து பார்த்து, குழைகளிலும், காதுகளிலும், கூந்தலிலும் அணிந்து தம் தம் கணவர்களுக்கு மகிழ்ச்சியை விளைப்பர். நீங்காத காம மயக்கம் மிக கணை போலப் பாயுமாறு தம் கணவர் மார்பில் எறிவார்கள்.

2464. முத்துப் போன்ற அழகிய பற்களையுடைய மகளிர் கொம்புகளை வளைக்க, அரும்புகள் நெகிழ்ந்து மலர்ந்த அப்பூங்கொம்புகளில் உள்ள வண்டுகளும், பெண் வண்டுகளும் ஒலித்துக் கொண்டு, அவர்கள் கூந்தலில் புகுந்து இசைபாடித் தேனைப் பருகுதல், விறலியோடு சேர்ந்து ஏழிசை பாடிக் கள்ளினை அருந்தும் பாணர் போலிருந்தது.

2465. இவ்வுலகில் வீடு பேறு அளிக்கும் தெய்வம் மகளிரே! என்று சொல்பவரது உரை பொய்யில்லை; மெய்யே ஆகும். வளையல் அணிந்த கையை உடைய அப்பெண்கள் வளைக்க, வணங்கி நடுங்கி அவரடிகளில் மலர்களைச் சிதறி, மலர் முகத்தினின்றும் கண்ணீர் ஒழுக கொம்புகளும் வழிபட்டன என்னின் உலகின் தன்மையை என்னென்று கூறுவது?

2466. மைக்கணாள் ஒருத்தி எட்டா நிமிர்கொம்பை
வளைக்குந் தோறுங்
கைக்குநேர் படாமை வாடுங் கடிமலர்க் கொடிபோ
னிற்பத்
தைக்கும்பூங் கணைவே ளன்னா னொருமகன்
தலைப்பட் டென்னை
எய்க்கின்றாய் தோண்மே லேறிப் பறியென வேந்தி
நின்றான்.

2467. தையலா ளொருத்தி எட்டா மலர்க்கொம்பைத்
தளிர்க்கை நீட்டி
ஐயநுண் மருங்கு னோவ வருந்தலு ஆற்றாக் கேள்வன்
ஒய்யென விதுவு மென்னை யூடிய மகளி ரேயோ
கொய்யென வளைத்து நின்றான் கண்முத்தங் கொழிப்ப
நின்றாள்.

2468. மைக்குழ லொருத்தி காதில் வட்டப்பொன் னோலை
யூடே
திக்கய மனையான் கொய்த செருந்திப்பூச் செருகி
நோக்கி
இக்குழை யழகி தென்றா னிடுமெங்கைக் கிடுதி
யென்னா
அக்குழை யோடும் வீசி யன்பனுக் கலக்கண் செய்தாள்.

2466. மைதீட்டிய கண்ணையுடைய ஒரு பெண் உயர்ந்த கொம்பொன்றை எட்டி வளைக்குந்தொறும் கைக்கு எட்டாமையால் வாடி மணமுள்ள மலர்க்கொடி போன்று சோர்ந்து நிற்க, பாய்ந்து செல்லும் மலர் அம்பு களையுடைய மன்மதன் போன்ற ஓர் அழகிய ஆண்மகன் எதிர்ப்பட்டு "ஏன் வாடுகின்றாய்? எனது தோளின் மீது ஏறி மலர்களைக் கொய்வாயாக" என்று கூறி அவளைத் தாங்கி நின்றான்.

2467. ஒரு பெண் எட்டாத மலர்க்கொம்பு ஒன்றை வளைக்க முடியாமல் வருந்தி நின்றபோது, உண்டோ இல்லையோ என்று ஐயம் கொள்ளும்படி மெல்லியதான அவளது இடையானது மேலும் வருத்தத்தைத் தந்தது. அதனைப் பொறுக்கமாட்டாத அவள் உயிர்க் காதலன் கண்டு விரைந்து வந்து "இதுவும் ஊடிய மகளிரோ? கொய்து கொள்வாய்" என்று கூறி அதனை வளைத்து நின்றான். அப்பெண் கண்களில் இருந்து முத்துப் போலக் கண்ணீர் துளிக்க நின்றாள்.

2468. கரிய கூந்தலையுடைய ஒரு பெண்ணின் காதில் வட்டமாகிய பொன்னால் செய்த ஓலையூடே, யானை போன்ற வலிமை மிக்க ஒருவன் தான் பறித்த செருந்தி மலரைச் செருகி அதனைப் பார்த்து, "இந்தக் குழை அழகாய் உள்ளது", என்றான், ஆனால் அவளோ, "இதனை என் தங்கைக்கு இடுவாய்! இடுவாய்!!" என்று கூறி வெகுண்டு அக்குழையோடு மலரையும் வீசி எறிந்து அந்த அனபனுக்குத் துன்பம் விளைவித்தாள்.

(அவள் தங்கை என்றது அவ்வாடவன் கூடும் பிற மகளிரை)

2469. மயிலிளம் பெடையன் னாளோர் மாதர்மாங் குடம்பை
செல்லுங்
குயிலிளம் பெடைதன் னாவிச் சேவலைக் கூவ நோக்கி
அயிலிளங் களிறன் னானைக் கடைக்கணித்து அளியுந்
தேனும்
பயிலிளஞ் சோலை மாடோர் மாதவிப் பந்தர் சேர்ந்தாள்

2470. பாசிழை யொருத்தி யாற்றாப் புலவியாள் பைந்தா
ரான்முன்
பூசகில் வாசங் காலிற் போக்கியும் புனைபூண் காஞ்சி
ஓசையைச் செவியி லுய்த்துங் கலவியின் உருவந்
தீட்டுந்
தூசினை உடுத்தும் போர்த்துந் தூதுவிட்ட
டவள்போல்நின்றாள்

2471. வாய்ந்தநாண் மலர்கொய் தீவான் மெய்யிலம்
மலர்த்தேம் தாது
சாந்தமான் மதம்போற் சிந்திக் கிடப்பவோர் தையல்
யாரைத்
தோய்ந்தசாந் தென்றாள் உள்ளத் துன்னையுஞ் சுமந்து
கொய்த
ஆய்ந்தசண் பகத்தா தென்றான் நெய்சொரி யழலி
னின்றாள்.

2469. இளமையான பெண் மயில் போன்ற பெண் ஒருத்தி, மாமரத்தில் உள்ள தனது கூட்டின்கண் செல்லும் இளமையுடைய பெண் குயில் தன் உயிர் போன்ற ஆண் குயிலைக் கூவி அழைக்க அதனைக் கண்டு, வேற்படை ஏந்திய இளமையான யானை போன்ற தன் காதலனைக் கண்ணால் நோக்கி, ஆண் வண்டும் பெண் வண்டும் உள்ள ஒரு இளமரக்காவின் மருங்குள்ள ஒரு குருக்கத்திப் பந்தரை அடைந்தனள்.

2470. பசுமையான அணிகலன்களை அணிந்த ஒரு பெண், தாங்க முடியாத காமநோயின் வயப்பட்டவளாய், தன் தலைவன் முன் தான் பூசியுள்ள அகிலின் வாசனையைக் காற்றின் வழியே அனுப்பியும், இடையில் அணியும் காஞ்சி என்னும் அணியை ஒலிக்கச் செய்து அவ்வொலியை அவன் காதில் விழவைத்தும், கலவி நுணுக்கங்கள் தீட்டப்பட்ட ஆடையை உடுத்தும் போர்த்தும் அவனுக்குத் தூதனுப்பியவள் போல் நின்றாள்.

2471. ஒரு பெண்ணானவள் மணம் வாய்ந்த புதிய மலரைப் பறித்துக் கொடுக்கும் தலைவன் உடலில், அத்தேன் நிறைந்த மலரின் மகரந்தம், சந்தனத்தோடு கலந்த கத்தூரி போலச் சிந்திக் கிடக்க அதனைக் கண்டு, "இஃது எந்த மாதரைக் கூடினமையால் அமைந்த சாந்து?" என்றாள். அவன், "உள்ளத்தின் கண் உன்னையும் தாங்கிக் கொய்த ஆராய்ந்த சண்பக மலரின் மகரந்தம்" என்று கூறினான். அதைக் கேட்டவுடன் நெய் சொரியப் பட்ட நெருப்பைப் போன்று சினம் அதிகப்பட நின்றாள்.

(உன்னையும் என்று அவன் சொன்னது நீயும் உடனிருக்க என்பது பொருள். ஆயின் அவள் உன்னையும் என்ற எச்சவும்மையைப் பிற மகளிரேயன்றி உன்னையும் எனப் பொருள் கொண்டு கோபம் கொண்டாள்.)

2472. பிணியவிழ் கோதை யாளோர் பேதைதன் பதிதன்
ஹூடல்
தணியவந் தடியில் வீழத் தன்னிழல் அனையான்
சென்னி
மணியிடைக் கண்டு கங்கை மணாளனை யொப்பீ
ரெம்மைப்
பணிவதென் என்று நக்குப் பரிவுமேற் பரிவு
செய்தாள்

2473. மதுகைவா ளொருவன் அங்கோர் மங்கைதன் வடிவை
நோக்கிப்
பதுமமே அடிகை காந்தள் பயோதரங் கோங்கு காவிப்
புதுமலர் விழிவா ஆம்பற் போதுநும் மூரல் ஒப்போ
ததனைவாய் திறந்து காட்டிப் போமினென் றடுத்து
நின்றான்.

2374. விடைத்தனி யேறன் னானோர் விடலையோர் வேற்க
ணாண்முன்
கிடைத்துநும் மிடத்தென் நெஞ்சங் கெட்டுவந்
தொளித்த தல்குற்
தடத்திடை யொளித்த தேயோ தனத்திடை யொளித்த
தோபூம்
படத்தினைத் திறந்து காட்டிப் போகெனப் பற்றிச்
சென்றான்

2375. மாந்தளிர் அடியார் சாய்ப்ப வளைந்தபூஞ் சினைவண்டு
அன்னார்
கூந்தலிற் கிடந்த செம்மற் கோதைமேல் வீழ்ந்த கற்பின்
ஏந்திழை யவரை நீத்துப் பலர்நுகர்ந் தெச்சி லாக்கும்
பூந்தொடி யவரைத் துய்க்கும் பேதையர் போன்ற
தன்றே.

2472. ஒரு தலைவன், கட்டவிழ்ந்த மலர்மாலையை அணிந்தவளாகிய தன் தலைவியின் ஊடலைத் தணிக்க வேண்டி அவள் கால்களில் வீழ்ந்து வணங்கினான். அப்போது அவன் முடிமணியில் தன் நிழலைக் கண்ட அவள், "நீர் சிவபெருமானைப் போல் முடியிலே ஒருத்தியை ஒளித்து வைத்துள்ளீர். எம்மைப் பணிவது ஏன்?" என்று கூறிச் சிரித்து அவனுக்குத் துன்பத்திற்கு மேல் துன்பம் விளைவித்தாள்.

2473. வாளேந்திய ஆடவன் ஒருவன் ஒரு பெண்ணின் உருவத்தைப் பார்த்து, "உன்னுடைய பாதம் தாமரை மலரே! கைகாந்தள் மலரே! கொங்கை கோங்கின் அரும்பே! கண்கள் நீலோற்பல மலரே! வாய் ஆம்பல் மலரே! நும் பற்கள் எம்மலருக்கு ஒப்புமையோ அறியேன்? அதனை வாய் திறந்து காட்டி விட்டுப் போ", என்று சொல்லி அவளை மிக நெருங்கி நின்றான்.

2474. ஒப்பற்ற காளை போன்ற தோற்றமுடைய ஆண்மகன் ஒருவன், வேல் போன்ற கூர்மையான கண்களையுடைய பெண் ஒருத்தியின் முன் சென்று நின்று, "என் மனம் என்னைவிட்டு நீங்கி உம்மிடம் வந்து ஒளிந்துள்ளது. அது அல்குலிடம் ஒளிந்ததோ? அன்றிக் கொங்கைகளிடத்தில் ஒளிந்ததோ? தெரியவில்லை. எனவே அவற்றை மூடிய அழகிய ஆடையைத் திறந்து காட்டி விட்டுச் செல்" என்று கூறி அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

2475. மாந்தளிர் போன்ற அடிகளையுடைய மகளிர் வளைத்தலால், வளைந்த மலர்க் கொம்பிலிருந்து அப்பெண்களின் கூந்தலில் இருந்த பூமாலையின் மேல் விழுந்த வண்டின் தன்மை, கற்புடைய மனைவியை விட்டு விட்டு, மலரும் நுகர்ந்து எச்சிலாக்கிய பொருள் மகளிரைப் போய்ச் சேர்ந்து இன்பம் துய்க்கும் அறிவிலிகளைப் போலிருந்தது.

வேறு

2476. புல்லி மைந்தர் பொருள்கவர்ந் தாரென
வல்லி யன்ன மடந்தையர் கொய்தலின்
அல்லி நாண்மலர் அற்றபின் கைப்பொருள்
இல்லி யென்ன விளைத்தன காவெலாம்.

2477. மையுண் கண்ணியர் மைந்தரோ டம்மலர்
கொய்யுஞ் செல்வ நுகர்ந்து கொழுங்கணும்
மெய்யுந் தோயிற் கொழுநரின் வேற்றுமை
செய்யும் பொய்கை திளைப்பச்சென் றாரரோ.

2478. அன்ன மன்னவர் ஆடுங் கயந்தலை
நன்னர் நீல நளினங் குமுதமென்று
இன்ன வன்றி யெழின்முல்லை சண்பகம்
பொன்னங் கோங்கமும் பூத்தது போன்றதே.

வேறு

2479. குரவ வோதியர் கயந்தலை குறுகுமுன் கயலும்
அரவு மாலையு அலவனு அன்னமு அகன்ற
பருவ ரால்களும் இரிந்தன பகைஞர்மே விட்டு
வருவ ரேலெதிர் நிற்பரோ வலியிழந் தவரே

2476. ஆடவரின் பொருளை விலை மாதர் தழுவிக் கவர்ந்தது போல, மலர்களை எல்லாம் மகளிர் கொய்ததனால் புதிய மலர்கள் நீங்கப் பெற்ற சோலையின் காட்சி, கைப் பொருள் அற்ற வறியவன் தோற்றம் போல இருந்தது.

பொய்கையில் நீராடச் செல்லல்

2477. மையுண்ட கண்களையுடைய அம்மகளிர் தம் காதலருடன் பூக்கொய்யும் இன்பத்தைத் துய்த்து அவருடன் கலந்ததால், கண்களையும் உடலையும் கொழுநர் வேறு படுத்துவது போன்று வேறுபடுத்தும் பொய்கையின்கண் நீராடச் சென்றனர். (கலவிக் காலத்தில் பெண்களின் கண் சிவத்தல், இதழ் வெளுத்தல், கொங்கை மேல் சந்தனக் கோலம் அழிதல், உடம்பு அலசல் போன்ற வேறுபாடு ஏற்படுவது போன்று, நீராடும் போதும் உண்டாவது அறிந்து பொய்கையில் நீராடினர் என்று உணர்க).

2478. அன்னம் போன்ற அம்மகளிர் நீர் விளையாடும் பொய்கையானது, நீலோற்பலமும், தாமரையும், ஆம்பலும் என்று கூறப்படும் இம்மலர்களையே அன்றி அழகிய முல்லையையும், சண்பகத்தையும், கோங்கினையும் பூத்திருத்தலை ஒத்தது.

2479. குரா மலரை அணிந்த கூந்தலையுடைய மகளிர் பொய்கையை அடையும் முன்பே சேல்மீனும், பாம்பும், ஆமையும், நண்டும், அன்னமும் அஞ்சி அகன்றன. பெரிய வரால் மீன்களும் ஓடின. பகைவர் மேலெழுந்து போருக்கு வருவரேல் வலியற்றவர் எதிர்த்து நிற்பரோ? நில்லார்.

2480. பண்ணெ னுஞ்சொலார் குடைதொறும் பன்மலர் வீழ்ந்த
தண்ணெ னுந்திரை யலைதொறு நிரைநிரை தாக்கல்
கண்ணு நீலமு முகங்களுங் கமலமும் வாயும்
வண்ண ஆம்பலுந் தத்தமின் மலைவன வனைய

2481. கூழை பாசியின் விரிந்திட மகிழ்ந்துநீர் குடையுங்
மாழை யுண்கணார் கொங்கையு முகங்களு மருங்கர்
சூழ ரும்பொடு மலர்ந்தசெந் தாமரைத் தொகுதி
ஆழ்த ரங்கநீ ரிடைக்கிடந்து அலைவன வனைய.

2482. தூய நீர்குடைந் தேறுந்தன் துணைவியை துணைவன்
வாயுங் கண்களும் வேறுற்ற வண்ணங்கண் டென்கண்
ஏய வின்னுயி ரனையவள் எங்குளாள் என்றான்
காயும் வேற்கணாள் முலைகுளிப் பாட்டினாள் கண்ணீர்.

2483. மங்கை நல்லவள் ஒருத்திநீ ராடுவான் மகிழ்நன்
அங்கை பற்றின ளேகுவா ளவன்குடைந் தேறும்
பங்க யக்கணா ளொருத்தியைப் பார்த்தலுஞ் சீசீ
எங்கை யெச்சினீராடலேன் எனக்கரை நின்றாள்.

2480. பண் என்று கூறப்படும் இனிய சொல்லையுடைய மகளிர் நீரில் மூழ்குந்தோறும் பல மலர்கள், மேலெழுந்து விழுந்து குளிர்ந்த அலைகள் அலைக்கும் தொறும் அவ்வலைகள் வரிசை வரிசையாக மோதுதல், கண்களும் நீலோற்பல மலர்களும், முகங்களும், தாமரை மலர்களும், வாய்களும் அழகிய ஆம்பல் மலர்களும் தமக்குள்ளே போர் புரிதலை ஒத்தன.

2481. கூந்தலானது பாசி போன்று பரந்து விரிய மகிழ்ந்து நீராடுகின்ற மையுண்ட கண்களையுடைய மகளிரின் கொங்கைகளும், முகங்களும், ஆழ்ந்த அலைகளையுடைய நீரின் கண் கிடந்து அசைவனவாகிய, மொட்டுக்களோடு மலர்ந்த செந்தாமரைக் கூட்டங்களை ஒத்தன.

2482. தூயநீரில் மூழ்கிக் கரையேறும் தலைவியின் தலைவன், அவள் வாயும், கண்களும் வேறுபட்டிருக்கும் தன்மையைக் கொண்டு அடையாளம் தெரியாமல், "என்னிடத்தில் மிக விருப்பமுடைய என் உயிர் போன்றவள் எங்கே உள்ளாள்?" என்று வினவினான். அதனைக் கேட்ட அவள் சிவந்த கண்ணுடன் கண்ணீர்விட்டு நின்றாள்.

2483. மங்கைப் பருவமுடைய ஒரு பெண் நீராடுவதற்காகத் தன் கணவனுடைய அழகிய கையைப் பிடித்துக் கொண்டு செல்கின்றவள், அவன் அங்கு நீராடிக் கரையேறும் தாமரை போன்ற கண்களையுடைய ஒரு பெண்ணைப் பார்த்த அளவில் "சீச்சீ என் தங்கையின் எச்சிலாகிய நீரில் நான் ஆடேன்" என்று கூறிக் கரையிலே நின்றனள். (அவள் வேறு பெண்ணாய் இருப்பினும், தலைவன் அவளுடன் உறவு கொண்டவன் என்பதைப் புலப்படுத்த தங்கை என்றாள். அவள் ஆடிய நீரிலே ஆடமாட்டேன் என்பதால் அவளுடன் சேரும் தலைவனுடனும் சேர மாட்டேன்' என்ற குறிப்புத் தோன்ற இதனைக் கூறினாள் என்க.)

2484. வனைந்த பைங்கழ லான்புனல் ஆடலின் மார்பின்
நனைந்த குங்குமத் தலையெறி நளினமொட்
டொழுந்தப்
புனைந்த கொங்கையால் வடுப்படப் பொறித்தவள்
யாரென்று
இனைந்தழுகினாள் நெய்சொரி யெரியென வொருத்தி.

2485. வீழ்ந்த காதலன் செய்ததீங் காகிய வேலாற்
போழ்ந்த நெஞ்சினாள் புலவிநோய் பொறாளவன் காண
ஆழ்ந்த நீரிடை யமிழ்ந்துவாள் போன்றயர்ந் தயலே
தாழ்ந்த வன்னத்தை நோக்கிகை தாவென இரந்தாள்.

2486. கரும்பு போன்மொழி யாளொரு காரிகை வதனஞ்
சுரும்பு சூழ்கம லங்களுட் கமலமாய்த் தோன்ற
விரும்பு காதல னையுற்று மெலிந்தனன் மெல்ல
அரும்பு முல்லைகண் டையத்தி னீங்கிச் சென்
றணைந்தான்

2487. களித்த காதலன் மொக்குள்வாய்த் தன்னிழல் கண்டு
தெளித்து வாணகை செய்யமாற் றாளென்று சீறித்
தளிர்க்கை நீட்டினள் கண்டிலள் தடவினள் சலத்துள்
ஒளித்தி யோவெனா உதைத்தனள் பேதைமாது ஒருத்தி.

2484. வீரக்கழலை அணிந்த ஓர் ஆடவன், நீராடுதலால் அவனது மார்பில் நனைந்துள்ள குங்குமக் குழம்பிடு அலைகளால் வீசப்பட்ட தாமரை மொட்டு அழுந்தி வடுப்படுத்த, அதனைக் கண்ட ஒருத்தி, ."முத்து மாலை அணிந்த கொங்கைகளால் வடுபடுமாறு அழுத்தியவள் யார்?" என்று வினவி, வருந்தி நெய் சொரிந்த நெருப்பு போலச் சினம் மிக வருந்தினாள்.

2485. தன்னை விரும்பிய காதலன் தனக்குச் செய்த தீமை என்னும் வேலால் பிளக்கப்பட்ட உள்ளத்தையுடைய ஒரு பெண் ஊடல் நோய் பொறாது காமம் மிகுந்தவளாய், அக்காதலன் தன்னைப் பார்க்கும்படியாக ஆழமான நீரில் மூழ்குபவள் போல் பாவனை காட்டிப் பின் சோர்ந்து, அருகிலே தாமரை மலரில் தங்கிய அன்னப்பறவையை நோக்கி கைகொடு' எனக் குறையிரந்தாள்.

2486. கரும்பு போன்று இனிமையான சொல்லைப் பேசும் பெண் ஒருத்தியின் முகமானது வண்டுகள் சூழ்ந்த தாமரை மலரில் ஒரு தாமரை மலராய்க் காட்சி அளிக்கவும் அவளை விரும்பிய காதலன் முதலில் சந்தேகப்பட்டு, பின்னர் முல்லை அரும்பு போலும் பற்களைக் கண்டு சந்தேகத்தினின்று நீங்கி அவளைப் போய்ச் சேர்ந்து கலந்தான்.

2487. பேதத் தன்மை உடைய ஒரு பெண், நீர்க் குமிழியில் தன் நிழலைப் பார்த்து நகை செய்ய, அந்நிழலையே தன் மாற்றாள் என்று எண்ணிச் சினந்து, தனது தளிர் போன்ற கைகளை நீட்டித் தடவிப் பார்த்துக் காணாது, "நீருக்குள் மறைந்து விட்டாயே?" என்று சொல்லி உதைத்தாள்.

2488. நாறு சுண்ணமென் கலவையு நானமுந் தம்மின்
மாறி வீசிநின் றாடுவார் மாலைதா ழுகலத்து
ஊறு பாடற வந்தரத் தளிகவர்ந் துண்ப
ஆறு செல்பவர் பொருள்வெளவு மாட்டரே போல.

2489. கொய்யு நீலமுங் கமலமுங் கொண்டுகொண் டனங்கன்
எய்யும் வாளியி னெறிவரால் எறிந்திடு மலரைக்
கையி னாற்புடைத் தெறிந்தவர் கதிர்முகம் படக்கண்டு
ஐது வாணகை செய்தக மகிழ்ச்சியு ளாழ்வார்.

2490. வாச மென்பனி நீரொடு சுண்ணமும் வாரி
வீசு வாரிளம் பிடியொடு வேழமா நிரைபோற்
காசு லாந்தொடி வில்லிடக் கைகளால் அள்ளிப்
பூசு சாந்தவை யழிந்திடப் புனிதநீ ரிறைப்பார்.

2491. அப்பெ ரும்புனற் றடங்குடைந் தாடுவா ராயத்து
ஒப்ப ருந்தனி யொருமகள் ஒருவன்றன் முகத்துத்
துப்பை வென்றசெந் துவரிதழ்ச் செய்யவாய்த் தூநீர்
கொப்ப ளித்தனள் ஆம்பலந் தேனெனக் குடித்தான்.

2488. ஆடவரும், மகளிரும் நறுமணம் கமழும் சுண்ணப் பொடியையும், கலவையையும், கத்தூரியையும் எடுத்துத் தம்முள் மாறி மாறி வீசி விளையாடினர். அப்போது இடைவெளியுள் நின்று அந்நறுமணப் பொருள்களை வண்டுகள் பாய்ந்துண்ணுதல், பொருளை இடைவழியே பறித்துக் கொள்ளும் ஆறலை கள்வரைப் போல் இருந்தது.

2489. கொய்த நீலமலரையும் தாமரை மலரையும் கொண்டு மன்மதன் எய்யும் மலர்க்கணை போல் ஒருவர் மேல் ஒருவர் வீசி எறிவர். அவ்வாறு வீசும் மலரைக் கையினால் தாக்கி அதனை எறிந்தவர் மேலேயே படுமாறு செய்து அழகிய ஒள்ளிய நகைபுரிந்து மன மகிழ்ச்சியாகிய கடலில் மூழ்குவார்கள்,

2490. இளமையான பெண் யானைகள் மேலே ஆண் யானைக் கூட்டங்கள் நீரை எடுத்து வீசி விளையாடுவது போல மணமுள்ள மெல்லிய பனி நீருடன் சுண்ணப் பொடியையும் அள்ளி மகளிரும் ஆடவரும் வீசி விளையாடுவர். மணிகள் அழுந்திய வளையல்கள் ஒளி வீச கைகளால் தூய நீரை அள்ளிப் பூசிய சந்தனம் அழியுமாறு வீசுவர்.

2491. அப்பெரிய நீர் நிறைந்த வாவியில் குடைந்து நீராடும் பெண்கள் கூட்டத்தில் ஒப்பற்ற பெண்ணானவள், ஒரு ஆடவன் முகத்தில் தன் வாயில் உள்ள தூய்மையான நீரைக் கொப்பளித்தாள். அவன் அந்நீரை ஆம்பல் மலரில் உள்ள தேன் என்று கருதிக் குடித்தான்.

2492. ஆழ மவ்விடைச் செல்லலை நில்லென அடுத்தோர்
வேழ மன்னவன் விலக்குவான் போலொரு வேற்கண்
ஏழை தன்னைக்கை யால்வளைத் தேந்திவண்
டறைதார்
சூழு மார்பணைத் திரதிதோள் தோய்ந்தவன் ஒத்தான்.

2493. மாசில் நானமுஞ் சூடிய மாலையு மெய்யிற்
பூசு சாந்தமும் ஆரமும் பொய்கைக்குக் கொடுத்து
வாச மெய்யினில் அம்புய வாசமு மயங்க
ஆசை மைந்தரோ டிளையவ ரகன்கரை யடைவார்.

2494. தைய லார்சிலர் நனைந்தநுண் தானையுட் பொதிந்த
மெய்யெ லாம்வெளிப் படக்கரை யேறுவான் வெள்கி
ஐயு தாபொலந் துகிலென வன்பரைக் கூய்க்கண்
செய்ய மாயனைக் கேட்குமாய்ச் சிறுமியர் ஒத்தார்.

2495. உலத்தை வென்றதோள் ஆடவ ருச்சிமேற் பொறித்த
அலத்த கத்தொடு குங்கும மளைந்துசெம் புனலாய்
மலர்த்த டங்குடைந் தவர்க்குநீ ராஞ்சன வட்டக்
கலத்தை யொத்தன சுற்றிநின் றாரொாத்த கடிக்கா.

2492. ஆண் யானை போன்ற ஓர் அழகிய ஆடவன், வேல்போன்ற விழிகளை உடைய ஒரு பெண்ணை, நோக்கி, "அங்கே அதிக ஆழம் செல்லாதே! நில்!" என்று தடுப்பவன் போலச் சென்று, அவளைக் கரங்களால் வளைத்துத் தூக்கி வண்டுகள் ஒலிக்கும் மாலை புரளும் மார்பில் அணைத்து இரதியின் தோளைக் கூடிய மன்மதனைப் போல் காணப் பட்டான்.

2493. குற்றமற்ற மான்மதமும், அணிந்த மாலைகளும், உடலில் பூசிய சந்தனமும் முத்தாரமும் ஆகிய இவற்றை பொய்கைக்குக் கொடுத்து, வாசனை மிகுந்த தம் மேனியில் தாமரை மலரின் மணம் கமழ, இளம் பெண்டிர் ஒவ்வொரு வரும் தங்கள் தங்கள் அன்புள்ள ஆடவருடன் கரையேறினர்.

பெணகள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல்

2494. பெண்களில் சிலர் நனைந்த தம் மெல்லிய ஆடையுள்ளே, மறைக்கப்பட்ட உறுப்புகள் யாவும், வெளித் தோன்றலால், கரையேற வெட்கப்பட்டுத் தங்கள் தங்கள் காதலரைக் கூவி "ஐயனே!, பொன்னாடை அளிப்பாய்" என்று கேட்பது, அவர்கள் கண்ணனைத் துகில் அளிக்குமாறு கேட்கும் இடைச் சிறுமியரை ஒத்தனர்.

2495. மலர்கள் நிறைந்த பொய்கைகள், திரண்ட கல்லை வென்ற தோள்களையுடைய ஆடவர்களின் முடிமீது தீட்டிய செம்பஞ்சுக் குழம்போடு குங்குமம் கமழ்ந்த சிவந்த நீரினையுடையனவாய், நீராடிக் கரையை ஏறியவர்க்கு அமைந்த நீராஞ்சனம் (ஆலத்தி) எடுக்கும் வட்டக் கலத்தினை ஒத்தன. மணமுள்ள சோலைகள் அவற்றைச் சுற்றி நின்ற மகளிரை ஒத்தன.

2496. பட்டும் பன்னிறக் கலிங்கமும் பன்மணிக் கலனுங்
கொட்டுஞ் சாந்தமு நானமுங் குங்குமச் சேறுங்
கட்டுந் தாமமுந் தமதுகட் டழகெலாங் கவர
மட்டுண் கோதையர் ஆடவர் மனமெலாங் கவர்ந்தார்.

வேறு

2497. காவியுங் கமலப் போதுங் கள்ளொழு காம்பற் போதும்
ஆவியுட் பூத்த போல ஆடியுட் பூப்ப நோக்கி
ஏவி ரண் டன்ன கண்ணால் அநங்கனை ஏவல்
கொள்ளும்
பூவிரி பொலங்கொம் பன்னார் புதுமது நுகரப் புக்கார்.

2498. பொன்னினும் வெள்ளி யானும் பளிங்கினும் புலவன்
செய்த
நன்னிறக் கலத்திற் கூர்வாள் நட்டென வாக்கிச் சேடி
மின்னனா ரளித்த தேறற் சிறுதுளி விரலிற் றெள்ளித்
துன்னிவீழ் களிவண் டோச்சித் தொண்டையங்
கனிவாய் வைப்பார்.

2499. வள்ளத்து வாள்போல் வாக்கு மதுக்குடந் தன்பாற்
பெய்த
கொள்ளைத்தேன் மதுவைக் கொள்ளைக் கொளவந்த
வள்ளம் ஈதென்று
உள்ளத்து வெகுண்டு வைவா ளூன்றிமார் பிடப்ப
தொத்த
கள்ளைச்சூழ் காளை வண்டு செருச்செயல் காண்ப
ஒத்த.

2496. பட்டாடைகளும், பலநிறமுள்ள பருத்தி நூலாடைகளும், பல மணிகள் அழுத்திய அணிகளும், நிறையப் பூசிய சந்தனமும், மான்மதமும், குங்குமக் குழம்பும், கட்டிய மாலைகளும் ஆகிய இவைகள், தங்கள் கட்டழகு முழுவதையும் கவர்ந்து கொள்ள, மணம்மிக்க மாலை அணிந்த மகளிர், ஆடவர்களின் உள்ளம் அனைத்தையும் கவர்ந்தனர்.

புதுத்தேன் நுகர்தல்

2497. நீலோற்பல மலரும், தாமரை மலரும், தேன் ஒழுகும் ஆம்பல் மலரும் ஆகிய இவை, தடாகத்தில் மலர்ந்தன போல கண்ணாடியுள்ளும் மலருமாறு பார்த்து, இரண்டு கணைகளை ஒத்தக் கண்களால், மன்மதனையும் ஏவல் கொள்கின்ற பொற்கொம்பு போன்ற அம்மகளிர் புதிய மதுவினைப் பருகப் புகுந்தனர்.

2498. மின்போன்ற தோழிகள் பொன்னாலும், வெள்ளியாலும், பளிங்காலும், செய்யப்பட்ட நல்ல ஒளியையுடைய கலங்களில் புதுத்தேனைக் கூரிய வாளை நட்டாற் போல வார்த்துக் கொடுக்க, அதனை நங்கையர்கள் வாங்கித் தம் விரலாலே தேனை ஒரு துளி எடுத்துத் தெளித்து வண்டுகளை ஓட்டிவிட்டுக் கோவைக்கனி போன்ற வாயில் வைத்து அருந்தினர். (கலத்தில் வீழும் மதுவின் இடையறாத ஒழுக்கு அதில் வாள் நட்டது போன்றிருந்தது.)

2499. கிண்ணத்தில் வாள் நட்டாற் போன்று வார்க்கப்பட்ட மதுக்குடமானது, அத்தோற்றத்தால் தன்னிடத்துப் பெய்து வைத்த மணம் மிக்க கள்ளினைக் கவர வந்த வெள்ளம் இதுவென்று கருதி உள்ளத்தில் சினம் கொண்டு கூரிய வாளை ஊன்றி அதன் மார்பைப் பிளப்பதை ஒக்கும். அம்மதுவினைச் சூழ்ந்த இளமையுடைய வண்டுகள் அப்போர்ச் செயலைக் காண்பது ஒத்தன.

2500. தணியலுண் டுள்ளஞ் சோரு மொருமக டணியல்
உண்பான்
பிணியவிழ் கோதை யாளோர் பெண்மகள் கலத்தில்
வாக்குந்
துணிமதுத் தாரை தன்னை வாளெனத் துணிந்து
பேதாய்
திணிகதிர் வாளால் வள்ளஞ் சிதைத்தியோ வென்று
நக்காள்.

2501. மலர்தொறுஞ் சிறுதே னக்கித் திரிவண்டு மடவார்
தங்கைத்
தலனெடுத் தோச்ச வோடா தழீஇத்தடஞ் சாடி
மொய்ப்ப
இலமெனப் பல்லோர் மாட்டும் இரந்திரந்து அன்மை
நீங்கா
தலமரும் வறியோர் வைத்த நிதிகண்டா லகல்வ ரேயோ.

2502. உண்டவள் ஒருத்தி கள்வா யுதிக்குந்தன் முகமுங்
கண்ணுங்
கண்டுதா மரைகள் வேலை முளைத்ததக் கள்ளை யார
மொண்டுணாப் பேதைத் தும்பி யம்மது முளரி வார்தேன்
நுண்டுளி செறிவ தென்னா நொடித்துக்கை புடைத்து
நக்காள்.

2503. மங்கையா ளொருத்தி தானுண் டெஞ்சிய மதுவுள்
தோன்றுந்
திங்களை நோக்கி யென்னைப் பிரிவின்கட் டீயாச்
சுட்டாய்
இங்குவந் தகப்பட் டாயே யினிவிடேன் கிடத்தி
யென்னா
அங்கொரு வள்ளங் கொண்டு சேமித்தா ளருத்தல்
செய்யாள்.

2500. கள்ளினை உண்டு மதிமயங்கிய ஒரு பெண் மேலும் கள்ளினைப் பருகும்பொருட்டு, முறுக்கவிழ்ந்த மலர் மாலை அணிந்த வேறொரு பெண், பொற் கிண்ணத்தில் வார்க்கின்ற கள்ளின் தாரையை 'வாட்படை' என்று கருதி, "அறிவில்லாதவளே! வாட்படையினால் கிண்ணத்தைச் சிதைக்கின்றாயோ", என்று தோழியைப் பார்த்துக் கூறிச் சிரித்தாள்.

2501. பூக்கள் தோறும் சென்று சிறிய தேனை நக்கித் திரிகின்ற வண்டுகள், மதுவுண்ணும் மகளிர் தமது கையை மேலெடுத்து ஓட்டவும், ஓடாமல் பெரிய மதுச்சாடியைத் தழுவி மொய்த்தன. "வறியம் யாம்", என்று கூறிப் பலரிடத்துப் பல காலம் யாசித்தும் தம்முடைய வறுமை நீங்காமல் மனம் வருந்தி அலையும் வறுமையுடையோர், ஒரு புதையலைக் கண்டால் அதனை விட்டு அகல்வரோ? அகலார். (அதுபோல மதுச் சாடியை வண்டுகள் தழுவி இருந்தன எனக் கூட்டுக).

2502. மதுவைப் பருகியதால் மயக்கம் கொண்ட ஒரு பெண், தன் கைக்கிண்ணத்தில் உள்ள மதுவில் தோன்றும் தன் முகத்தையும் கண்களையும் கண்டு, "தாமரை மதுக் கடலில் முளைத்தது. அம்மதுவை நிறைய அள்ளி உண்ணாத அறிவில்லாத வண்டு அம்மதுக் கடலில் முளைக்கும் தாமரையினின்று ஒழுகும் மதுவின் சிறு துளியைச் சூழ்கின்றதே," என்று சொல்லிக் கைதட்டிச் சிரித்தாள்.

2503. மங்கைப் பருவமுள்ள ஒரு பெண் தான் உண்டு எஞ்சிய மதுவுள், பிரதிபலிக்கும் சந்திரனைப் பார்த்து, "என் தலைவனைப் பிரிந்திருந்த காலத்தில் நெருப்பாய் நின்று என்னைச் சுட்டாய். இங்கு வந்து இப்போது அகப்பட்டுக் கொண்டாய், இனி விடேன். இங்கேயே கிடப்பாய்." என்று கூறி அக்கள்ளைப் பருகாமல், அங்கு அதனை மற்றொரு வள்ளத்தினால் மூடி வைத்தாள்.

2504. வெவ்விய நறவம் உண்ட விளங்கிழை யொருத்தி
கையிற்
கௌவிய ஆடி தன்னிற் கருங்கய னெடுங்கட் சேப்புங்
கொவ்வைவாய் விளர்ப்பு நோக்கி யென்னலங்
கூட்டுண் டேகும்
ஔவிய மனத்தான் யாரென் றயர்கின்றா ளயலா
ரெள்ள.

2505. ஒருத்திகள் ளுண்கின் றாள்தன் னுருவமந் நறவுட்
டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள் காணென உண்ட
தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன் னுருவமு நோக்கிப்
பேதாய்
ஒருத்தியோ விருவ ரென்றாள் எச்சிலென் றுகுத்து
நக்காள்.

2506. சாடியுள் நறவ முண்டா டன்னுரு வேறு பாட்டை
ஆடியு ணோக்கி நானோ அல்லனோ வெனைத்தான்
கைக்கொண்
டோடினர் பிறரு முண்டோ வுயிரன்னான் வந்திங்
கென்னைத்
தேடின்என் செய்கேன் என்னைத் தேடித்தா சேடி
யென்றாள்.

2507. களித்தவ ளொருத்தி நின்ற ஆடியுட் கணவன் றன்பின்
ஒளித்தவ னுருவுந் தானு நேர்பட வுருத்து நோக்கித்
துளித்தகண் ணீர ளாகி யேதிலா டோடோய்ந் தின்பங்
குளித்தனை யிருத்தி யோவென் றுதைத்தனள் கோப
மூண்டாள்.

2504. சிறப்பான அணிகலன்களை அணிந்துள்ள ஒரு பெண் கள்ளை உண்டு மயங்கி, கையில் பற்றிய கண்ணாடியில் கரிய கயல் போன்ற நெடிய கண்களின் சிவப்பையும், கொவ்வைக் கனி போன்ற வாயின் வெளுப்பையும் பார்த்து, "என் இன்ப நலத்தைக் கொள்ளை கொண்டு செல்லும் வஞ்சனையுடையவன் யார்?" என்று கேட்டு அயலவர் நகைக்கச் சோர்ந்து விழுந்தாள்.

2505. கள் உண்ணுகின்ற ஒரு பெண் தன் வடிவம் அக்கள்ளின் உள்ளே தோன்றவும், "ஒருத்தி என்னோடு வந்து உண்ணுகின்றாள் காண்" என்று கூறினாள். உடனே கள்ளுண்ட தோழி ஒருத்தி அங்கே வந்து தன்னுடைய வடிவத்தையும் அந்தக் கள்ளினுள்ளே கண்டு "அறிவில்லாத வளே, ஒருத்தியா? இருவர்," என்றாள். அவள் உடனே இது எச்சில் பட்டதென்று கூற அதனைக் கீழே உகுத்துச் சிரித்தனள்,

2506. மதுவை உண்டு மயங்கிய வேறொரு பெண், தன் வடிவத்தின் வேறுபாட்டினைக் கண்ணாடியுள் கண்டு, "இங்கிருப்பது நான் தானோ? அல்லது வேறு பெண்ணோ? பிறர் என்னைக் கைப்பற்றி ஓடினாரோ? என் உயிர் போன்ற காதலன் இங்கு வந்து என்னைத் தேடினால் நான் என்ன செய்வேன்? தோழியே என்னைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவாயாக!" என்று வேண்டினாள்.

2507. கள்ளுண்டு களித்த ஒரு பெண், தான் நின்று பார்த்த ஒரு கண்ணாடியுள், தன் பின்னே மறைந்து நின்ற கணவன் வடிவமும் தன் வடிவமும் தோன்ற அதனை உருத்து நோக்கி, "அயலாள் தோளைத் தழுவி இன்பக் கடலில் மூழ்கி இருக்கின்றனையோ?" என்று கண்ணீர் வரக் கோபம் கொண்டு கண்ணாடியை உதைத்தாள்.

2508. இளம்புளிந் தயிர்வி ராய வின்சுவை பொதிந்த சோறு
வளம்பட விருத்தி னோடு மருந்துவார் வசந்த வீணை
களம்பட மெழாலி னோடு கைவிர னடாத்திக் காமன்
உளம்புகுந் தலைப்ப வெண்ணெய்ப் பாவைபோல்
உருகிச் சோர்வார்.

2509. இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவி
யோடும்
செவ்விய செங்கோல் நேமிச் செண்பக மாற னோர்நாள்
கைவினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக்
குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி.

2510. மாந்தளி ரீன்று கோங்கு வண்டள வரும்பித் தண்டேங்
காந்தள்செங் கமலம் ஆம்பல் சண்பகங் கழுநீர் பூத்துச்
சாய்ந்தமென் கொடியுந் தானுந் தனியிடத் திருப்பான்
நேரே
வாய்ந்ததோர் நாற்றந் தோன்ற அசைந்தது வசந்தத்
தென்றல்

2511. வெவ்விய வேலான் வீசும் வாசமோந் தீதுவேறு
திவ்விய வாச மாக விருந்தது தென்றல் காவில்
வெளவிய வாச மன்று காலுக்கும் வாசம் இல்லை
எவ்வியல் வாச மேயோ இதுவென வெண்ணங்
கொள்வான்.

2508. ஆடவரும் பெண்டிரும், இளம் புளிப்பினை யுடைய தயிர் கலந்த இனிய சுவைமிக்க சோற்றை விருந்தினரோடும் உண்பார்கள். வசந்த காலத்திற்குரிய ஓசை அமைந்த பண்ணுடன், தன் குரலும் பொருந்த யாழை வாசித்துக் காமவேட்கை உள்ளத்தில் சென்று வருத்துதலால் வெண்ணையால் செய்த பதுமையைப் போல உருகித் தளர்வர்.

2509. இந்த இளவேனில் காலத்தில் ஒருநாள், சிற்ப நூல் வல்லோன் செய்த ஒளிவீசுகின்ற சந்திரகாந்தக் கல்லால் ஆகிய செய்குன்றின்கண் கொடுமையான வெப்பத்தை நீக்கும் பொருட்டுச் சிறப்பான செங் கோலையும், ஆணைச் சக்கரத்தையும் உடைய சண்பக மாறன் தன் இனிய உயிர் போலும் மனைவியோடு வேறாகத் தங்கி இருந்தான்.

சண்பகமாறன் தன் தேவியோடு தனி இடத்தில் இருத்தல்

2510. மாந்தளிர் தளிர்த்து, கோங்கு மொட்டும், முல்லை அரும்பும் விரும்பி, குளிர்ந்த தேன் நிறைந்த காந்தள் மலரும், செந்தாமரை மலரும், குமுத மலரும், சண்பக மலரும், குவளை மலரும், மலர்ந்து ஒல்லிய மெல்லிய, கொடி போன்ற தேவியும், தானுமாகத் தனி இடத்தில் இருந்தான். அச்செண்பக மாறனுக்கு நேரே புதுமை மிக்க ஒரு நறுமணம் தோன்றுமாறு வசந்த காலத்திற்குரிய தென்றல் வீசியது.

புதிய மணத்தைச் செண்பகமாறன் நுகர்தல்

2511. கொடிய வேல்படையை உடைய சண்பக மாறன் அவ்வாறு வீசிய மணத்தை மோந்து "இது தெய்வத் தன்மை பொருந்திய வாசனையாக இருக்கிறது. தென்றல் சோலையில் கலந்த வாசனை அன்று. காற்றுக்கும் இயல்பாக மணம் இல்லை. இம்மணம் எதனிடத்திலிருந்து வந்த மணமோ?" என்று எண்ணினான்.

2512. திரும்பித்தன் றேவி தன்னை நோக்கினான் றேவி
ஐயம்பால்
இரும்பித்தை வாச மாகி யிருந்தது கண்டில் வாசஞ்
சுரும்பிற்குந் தெரியா தென்னாச் சூழ்ந்திரும் பூது
கொண்டீ
தரும்பித்தைக் கியல்போ செய்கை யோவென ஐயங்
கொண்டான்.

2513. ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே யின்ன வாயிரஞ் செம்பொன்
என்றக்
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுணர் புலவர் முன்னாத் தூக்கினார் வினைசெய்
மாக்கள்.

2514. வங்கத்தார் பொருள்போல் வேறு வகையமை கேள்வி
நோக்கிச்
சங்கத்தார் எல்லாந் தம்மில் தனித்தனி தேர்ந்து
தேர்ந்து
துங்கத்தார் வேப்ப னுள்ளஞ் சூழ்பொருள் துழாவி யுற்ற
பங்கத்தா ராகி யெய்த்துப் படருறு மனத்த ரானார்.

வேறு

2515. அந்த வேலையில் ஆதி சைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முந்தை யாச்சிம முயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் தருமி யென்றுளான்.

2512. உடனே திரும்பி தன் மனைவியைப் பார்த்தான். அந்த வாசனை, ஐந்து பகுப்பாக முடிக்கப்பட்டிருக்கும் தேவியின் பெருமை பொருந்திய கூந்தலின் மணமாய் இருத்தலைக் கண்டு, இம்மணம் வண்டிற்கும் தெரியாது என்று எண்ணி வியப்படைந்து, "இம்மணம் அரிய கூந்தலுக்கு இயற்கையோ? அன்றிச் செயற்கையோ?" என்று ஐயுற்றான்.

மாறன் பொற்கிழியைச் சங்க மண்டபத்தில் கட்டுதல்

2513. "நான் ஐயுற்ற கருத்தை உணர்ந்து பாடல் செய்பவர் யாராய் இருந்தாலும் அவருக்கே இந்த ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு உரியது" என்று கூறி, வேற்படை ஏந்தியவனாகிய சண்பகமாறன் கொடுத்த பொன்முடிப்பை ஏவலாளர் பெற்றுச் சென்று உண்மையை உணர்ந்த சங்கப் புலவர் இருக்கை முன்னே கட்டித் தொங்க விட்டனர்.

2514. சங்கப் புலவர் அனைவரும், மரக்கலத்தில் நிறைந்த பொருளின் வகைபோல வேறு வேறாக அமைந்த நூல்களால், தம்முள் ஒன்று பட்டு ஆராய்ந்தும், ஒவ்வொரு வரும் தனித்தனியாக ஆராய்ந்தும், வேப்பம்பூ மாலையை அணிந்த சண்பக மாற பாண்டியன் உள்ளத்தில் எண்ணிய பொருளைத் தேடிக் காணாமல், சிறுமை உற்றவராய், இளைத்து மனம் வருந்தினர்.

தருமி இறைவனிடம் முறையிடல்

2515. அப்போது ஆதி சைவரில் வந்த மாணவனும் தந்தையும் தாயும் இல்லாதவனும், பிரமசரியனாய் ஒழுகும் தன்மை உடையவனும் ஆகிய தருமி என்ற பெயருள்ள ஒருவன் திருமணம் செய்து கொள்வதில் பெரு விருப்புடையவனாய் இருந்தான்.

2516. ஒருவ னான்முகத் தொருவன் மார்புறை
திருவன் நாடருந் தேவ னாலுரு
அருவ நாலகன் றானைத் தன்கலி
வெருவ நாடிமுன் வீழ்ந்து வேண்டுவான்.

2517. தந்தை தாயிலேன் தனிய னாகிய
மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்
சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற்
கெந்தை யேயிது பதமென்று ஏத்தியே.

2518. நெடிய வேதநூ னிறைய வாகமம்
முடிய வோதிய முறையில் நிற்கெனும்
வடுவில் இல்லற வாழ்க்கை யின்றிநின்
அடிய ருச்சனைக் கருக னாவனோ.

2519. ஐய யாவையும் அறிதி யேகொலாம்
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்
துய்ய வோர்கவி யுரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டுமென் றிரந்து செப்பினான்.

2520. தென்ன வன்குல தெய்வ மாகிய
மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினார்
இன்ன றீர்ந்தவன் இறைஞ்சி வாங்கினான்.

2516. நான்கு முகங்களையுடைய பிரமனாலும், திருமகள் விளங்கும் மார்பினை உடைய திருமாலாலும் தேடிக் காண்பதற்கு அரிய தேவனும், ஒப்பற்றவனும், உருவம், அருவம், அருவுருவம் என்னும் இவற்றைக் கடந்த வனுமாகிய சோமசுந்தரக் கடவுளைத் தன் துன்பம் நீங்க வேண்டி அத்தருமி, வணங்கி வேண்டுவானாயினான்:

2517. "எம் தந்தையே! தந்தை தாய் அற்றவனாய், ஒரு பற்றுக் கோடும் இல்லாத சிறியவனாய், திருமணம் செய்து கொள்ளும் விருப்பம் உடையவனாய் உள்ளேன். அத்திருமணம் முடித்தற்குப் பொருள் சிறிதும் இல்லை" என்று கூறித் துடித்தான்.

2518. மேலும், "உயர்ந்த மறை நூல்கள் முற்றவும் ஆகமங்கள் முற்றவும் ஓதி அறிந்த முறையில் நிற்பேன். எனினும், குற்றமற்ற இல்வாழ்க்கையின்றித் தேவரீர் திருவடியை அர்ச்சனை செய்வதற்கு உரிமையுடையவனா வேனோ? ஆகேன்.

2519. "எல்லாவற்றையும் அறிந்த ஐயனே! வையை ஆற்றையுடைய பாண்டிய மன்னனின் உள்ளக் கருத்தை அறிந்து ஒரு கவிபாடி நான் உயர்வு பெற அடியேனுக்கு அருள் புரியவேண்டும்" என்று வேண்டினான்.

இறைவன் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்று தொடங்கும் பாடலை அளித்தல்

2520. பாண்டியர் குலதெய்வமாகிய சுந்தரபாண்டியர், 'கொங்குதேர் வாழ்க்கை' — என்னும் தொடக்கத்தையுடைய இனிமையான தமிழ்ப் பாடல் ஒன்றைச் சொல்லழகுடன் பாடித் தந்தருளினார். அத்தருமி தன் துன்பம் நீங்கப் பெற்றவனாய் அதனைப் பெற்றுக் கொண்டு வணங்கினான்.

2521. பொற்ற ணிச்சடைப் புவன நாயகன்
சொற்ற பாடல்கைக் கொண்டு தொன்னிதி
பெற்றெ டுத்தவன் போன்று பீடுறக்
கற்ற நாவலர் கழகம் நண்ணினான்.

2522. கல்வி யாளர்தங் கையில் நீட்டினான்
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே
நல்ல நல்லவென் றுவகை நண்ணினார்.

2523. அளக்கில் கேள்வியார் அரசன் முன்புபோய்
விளக்கி யக்கவி விளம்பி னார்கடன்
உளக்க ருத்துதே ரொத்த லாற்சிரந்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினான்.

2524. உணர்ந்த கேள்வியார் இவரொ டொல்லைபோய்ப்
புணர்ந்த வாயிரம் பொன்னும் இன்றமிழ்
கொணர்ந்த வேதியன் கொள்க இன்றென
மணந்த தாரினான் மகிழ்ந்து நல்கினான்.

2525. வேந்தன் ஏவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி யறுக்கு நம்பியை
நேர்ந்து கீரன்நில் எனவி லக்கினான்.

2521. பொன்போன்ற சடையுடைய ஒப்பற்ற உலக நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள் திருவாய் மலர்ந்தருளிய திருப் பாசுரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, புதையலைப் பெற்றவன் போல மகிழ்வோடு, கற்றறிந்த புலவர்கள் நிறைந்த புலவர் சங்கத்தை அடைந்தான்.

2522. புலவர் கையில் அப்பாடலைக் கொடுத்தான். விரைந்து வாங்கி அனைவரும் அதனைப் படித்து, சொல் வளத்தையும் பொருள் வளத்தையும் சீர்தூக்கிப் பார்த்து "நல்ல! நல்ல!' என்றும், அது மிகவும் சிறப்புடைய பாடல் என்றும் மகிழ்ச்சியுற்றனர்.

2523. அளவில்லாத நூற்கேள்வியுடைய சங்கப் புலவர்கள், பாண்டிய அரசன் முன் சென்று அக்கவியினைக் கூறிப் பொருள் விளக்கினார்கள். அதனைக் கேட்ட பாண்டியன் தன் உள்ளக் கருத்துடன் அது முற்றும் ஒத்திருத்தலால் முடியசைத்து களிகூர்ந்தான்.

பொற்கிழியை அறுக்கப் பாண்டியன் அனுமதி அளித்தல்

2524. "உண்மை உணர்ந்த கேள்வி வல்லவராகிய இப் புலவரோடு விரைந்து சென்று, ஆயிரம் பொன்னையும் இனிய பாடலைக் கொணர்ந்த வேதியன் இப்பொழுதே பெற்றுக் கொள்ளக் கடவன்", என்று மணம் வீசும் மாலையை அணிந்த பாண்டியன் மகிழ்ந்து அளித்தான்.

நக்கீரன் தடுத்தல்

2525. பாண்டியன் ஏவலினால், புலவரோடு திரும்பிச் சென்று கழகத்தின் வெளியில் தொங்கிய சிறந்த பொன் முடிச்சை அறுக்கும் அத்தருமியை 'நக்கீரன்' எதிர்த்து "அறுக்காதே நில்!", என்று தடுத்தான்.

2526. குற்றம் இக்கவிக் கென்று கூறலுங்
கற்றி லானெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மெல்லைகைப்
பற்ற வாடினான் பண்பு பற்றினான்.

2527. உலர்ந்த நெஞ்சுகொண்டு ஒதுங்கி நாயகன்
நலந்த ருங்கழல் நண்ணி னானவன்
மலர்ந்த பாடல்கொண் டறிஞர் வைகிடத்து
அலர்ந்த சிந்தைகொண் டடைந்த மைந்தனே.

2528. செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவன் என்னைநீ
மையுள் கண்டவிவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினாய் கதியி லேற்கெனா.

வேறு

2529. வறுமைநோய் பிணிப்பப் பன்னாள் வழிபடு மடியேன் நின்பாற்
பெறுபொரு ளிழந்தேன் என்று பேசிலேன் யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றோய் நின்றன் கவிக்குற்றஞ் சில் வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால் ஆருனை மதிக்க வல்லார்.

2526. "இந்தப் பாடலுக்குக் குற்றம் உண்டு", என்று நக்கீரன் கூறலும், தமிழ்ப் புலமை இல்லானாகிய அவ்வேதியன், நீண்ட காலமாய்க் கொடிய பசி உற்றவனாய்க் கலத்தின்கண் உணவு பெற்று உண்ணுங்கால் உண்ணாதே என்று ஒருவன் தடுத்ததுபோல் வாடி வதங்கினான்.

2527. வாடிய மனத்துடன் நடந்து இறைவனது நன்மை தரும் திருவடியை அடைந்தான். அவ்விறைவன் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாசுரத்தைப் பெற்றுக் கொண்டு சங்கப்புலவர் இருக்கும் இடத்திற்கு முன்பு மகிழ்வோடு சென்ற அப்புலவன் தற்போது வாடிய மனத்துடன் இறைவன் திருக்கோயிலை அடைந்தான்.

தருமி இறைவனிடம் முறையிடல்

2528. உள்ளத்தில் பெரும் கவலை கொண்ட அம்மறையோன், இறைவன் திருமுன் அப்பாசுரத்தைக் கொண்டு போய் வைத்து, "கருமை பொருந்திய திருமிடற்றையுடைய அண்ணலே! ஒரு பற்றுமற்ற எனக்கு நீ குற்றமுள்ள பாடலைக் கொடுத்து விட்டாயே! அது எதற்காக?" என்று கூறினான்.

2529. "வறுமைப் பிணியினால் வருந்திப் பலநாள் உன்னை வழி பாடுசெய்து வரும் அடியேன் இப்பொழுது நின்னிடம் பெறுகின்ற பொருளை இழந்தேன், என்று கூறிற்றிலேன். எவர்க்கும் மேலாகிய இறைவனே! நீர் பாடியருளிய பாடலுக்கு, குறைந்த வாழ்நாளும் சிற்றறிவும் உடைய புலவர் குற்றம் கூறினால் நின்னை மதிக்க வல்லார் யாவர்? எந்தையே!" என்றான்.

2530. எந்தையிவ் விகழ்ச்சி நின்ன தல்லதை யெனக்கியா
தென்னாச்
சிந்தைநோ யுழந்து சைவச் சிறுவனின் றிரங்க
யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனும் ஆன
சுந்தர விடங்கன் அங்கோர் புலவனாய்த் தோற்றஞ்
செய்தான்.

2531. கண்டிகை மதாணி யாழி கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலங் குடிகொண் டாகத் தழகெலாங் கொள்ளை
கொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன் றானெனக் குறியிட்
டாங்கே
புண்டர நுதலிற் பூத்துப் பொய்யிருள் கிழித்துத் தள்ள.

2532. விரிகதிர்ப் படாத்திற் போர்த்த மெய்ப்பையுள் அடங்கிப்
பக்கத்
தெரிமணிக் கடகத் திண்டோ ளிளையவ ரடைப்பை
யோடுங்
குருமணிக் களாஞ்சி யும்பொற் கோடிகந் தாங்க
முத்தாற்
புரிமதிக் குடைக்கீழ்ப் பொற்காற் கவரிபால் புரண்டு
துள்ள.

2533. சொல்வரம் பிகந்த பாதம் என்பது தோன்ற வேத
நல்லபா துகையாய்ச் சூட நவின்றன கற்றுப் பாட
வல்லவர் மறையி னாறு மநுமுதற் கலைபோற் பின்பு
செல்லநூ லாய்ந்தோர் வைகுந் திருந்தவைக் களத்தைச்
சேர்ந்தான்.

2530. அத்துடன், "இறைவனே! இந்நிகழ்ச்சி நின்னைச் சார்ந்ததல்லது, எனக்கு யாதுளது?" என்று கூறி மனக் கவலையால் வருந்தி நின்று இரங்கினான். அப்போது யாவர்க்கும் பந்தமும் வீடும் அளிக்கும் சோமசுந்தரக் கடவுள், மறைநூலும் அதன் பயனுமாகியது போல் ஓர் புலவனாய்த் தோன்றினார்.

இறைவர் புலவர் வடிவாக வருதல்

2531. அவர் மகரக் கண்டிகை, பதக்கம், மோதிரம் ஒளி பொருந்திய முடி, வயிரம் பதித்த குண்டலம் போன்ற அணிகலன்களை அணிந்த தோற்றமானது திருமேனியின் அழகையெல்லாம் விஞ்சும்படிக் காணப்படவும், குளிர்ந்த மூன்று தமிழிலும் வல்லவனானவன் தானே என்று குறிப்பிடுவது போல் திரிபுண்டரம், நெற்றியில் இடம்பெற நிலை இல்லாத அஞ்ஞான இருளைக் கிழித்து ஓட்டவும்,

2532. விரிந்த ஒளியையுடைய ஆடையால் போர்க்கப் பெற்ற, நிலை அங்கியினுள் உடலை மறைத்து, இருபக்கங் களிலும், சிவந்த மணிகளை அழுத்திச் செய்யப்பட்ட கடகங்கள் அணிந்த திண்ணிய தோள்களையுடைய இளைஞர் அடைப்பையையும், களாஞ்சியையும், பொன்னாலாகிய பூந்தட்டினையும் தாங்கி வரவும், முத்தாலாகிய சந்திர வட்டக் குடையின் கீழ் இரண்டு பக்கமும் பொற்காம்பினையுடைய சாமரை புரண்டு துள்ளவும்.

2533. சொல்லின் எல்லையைக் கடந்த திருவடி என்பது புலப்பட, மறை நல்ல பாதுகை வடிவமாகி அதனைத் தன் முடியில் சூடவும், கூறியருளிய பாசுரங்களைக் கற்றுப் பாட வல்லவர்கள் பின் செல்லவும் நூலாய்ந்த புலவர்கள் இருக்கும் திருத்தமான சங்க மண்டபத்தை அடைந்தார்.

2534. ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி
யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பினார் என்னா முன்னங்
கீரனஞ் சாது நானே கிளத்தினென் என்றா னின்ற
சீரணி புலவன் குற்றம் யாதெனத் தேராக் கீரன்.

2535. சொற்குற்ற மின்று வேறு பொருட்குற்றம் என்றான் தூய
பொற்குற்ற வேணி யண்ணல் பொருட்குற்ற மென்னை யென்றான்
தற்குற்றம் வருவ தோரான் புனைமலர்ச் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே யென்றா னையன்.

2536. பங்கய முகமென் கொங்கைப் பதுமினி குழலோ வென்ன
அங்கதும் அனைத்தே யென்றான் ஆலவா யுடையான் தெய்வ
மங்கையர் குழலோ வென்ன வன்னது மந்தா ரத்தின்
கொங்கல ரளைந்து நாறுங் கொள்கையாற் செய்கைத் தென்றான்.

2537. பரவிநீ வழிபட் டேத்தும் பரஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை
இரவினீர்ங் குழலும் அற்றோ வெனவஃது மற்றே யென்னா
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்.

புலவர் – நக்கீரன் உரையாடல்

2534. புலவர் நிறைந்த அவையினை அடைந்து அங்கிருந்தவரை நோக்கி "நம் கவிக்குக் குற்றம் கூறியவர் யார்?" என்றார். உடனே நக்கீரன் சிறிதும் அஞ்சாது "நானே குற்றம் கூறினேன்" என்றான். அதனைக் கேட்டுப் புகழ் வாய்ந்த புலவரான இறைவர் "குற்றம் யாது?" என்று கேட்க, தனக்குக் குற்றம் உண்டாவதை அறியாத நக்கீரன் கூறத் தொடங்கினான்

2535. "சொல்லில் குற்றமில்லை; பொருளில் குற்றம்" என்றான். தூய பொன்நிறமான சடையையுடைய இறைவர், "பொருள் குற்றம் யாது?" என்று கேட்டார். தான் இறைவனிடம் எதிர் வாதிடுவது குற்றம் என்று உணராத நக்கீரன், "அலர்ந்த மலர்களை அணிவதால் அல்லாமல் கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லை" என்று கூறினான்.

2536. தாமரை மலர் போன்ற முகத்தையும், மெல்லிய கொங்கைகளையும் உடைய "பதுமினி கூந்தலோ?" என்று இறைவன் கேட்கவும், நக்கீரன் உடனே, "அக்கூந்தலும் அத்தன்மைத்தே" என்று கூறினான். ஆலவாயையுடைய இறைவன், "தேவமகளிரின் கூந்தலோ" என்று வினவ, "அக்கூந்தலும் மந்தாரத்தின் மணமுடைய் மலர்களைக் கலந்து மணம் கமழும் தன்மையினால் செயற்கை மணமுடையதே" என்று கூறினான்.

2537. "நீ துதித்து வழிபட்டு வணங்கும் பரஞ்சோதி யாகிய திருக்காளத்தியில் கோயில் கொண்டருளிய பாம்பையும் கங்கையையும் அணிந்த சடையையுடைய இறைவரது, இடப்பாகத்தில் எழுந்தருளிய ஞானப் பூங்கோதையின் கூந்தலும் அத்தன்மைத்தோ" என்று வினவ, "அக்கூந்தலும் அத்தன்மையுடையதே" என்று சிறிதும் அஞ்சாது மேலே வர இருக்கும் துன்பத்தையும் கருதாது வைராக்கியத்துடன் கூறினான்.

2538. கற்றைவார் சடையா னெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னும் அஞ்சான் உம்பரார் பதிபோ லாகம்
முற்றுநீர் கண்ணா னாலு மொழிந்தநும் பாடல் குற்றங்
குற்றமே யென்றான் றன்பா லாகிய குற்றந் தேரான்.

வேறு

2539. தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொறாதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக்
காய்ந்த நாவல னிம்மெனத் திருவுருக் கரந்தான்.

தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் முற்றிற்று.

53. கீரனைக் கரையேற்றிய படலம்

2540. மார னைப்பொடி கண்டவர் அந்தண மைந்தனுக்
கார நற்கன கக்கிழி யீந்தது அறைந்தனம்
ஏர னத்திரள் சூழ்மல ரோடை யிடத்தினுங்
கீர னைக்கரை யேற்றிய வாறு கிளத்துவாம்.

2538. திரண்ட நீண்ட சடையை உடைய இறைவன், நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்ட, அதற்கும் அஞ்சாதவனாய், "தேவேந்திரன் போல் உடல் முற்றும் நீர் கண்ணை உடையீர் ஆனாலும் நீர் இயற்றிய பாடல் குற்றமுடையதே", என்று கூறினான் நக்கீரன்.

இறைவர் மறைந்தருளல்

2539. குறைந்த பிறைமதியாகிய கண்ணியை உடைய இறைவனது நெற்றிக் கண்ணின் செந்தழல் பற்றிய வெப்பத்தினால் பொறுக்கலாற்றாது, பொற்றாமரைக் குளத்தில் சென்று, நூல்களை ஆராய்ந்து அறிந்த நாவல்ல வனாகிய நக்கீரன் சென்று விழுந்து அழுந்தினான். அவனைச் சினந்து தண்டித்த கடவுளாகிய சோமசுந்தரக் கடவுள் தனது திருவுருவை மறைத்துக் கொண்டார்.

தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் முற்றிற்று.

53. கீரனைக் கரையேற்றிய படலம்

2540. மன்மதனைப் பொடியாக்கிய இறைவன், தருமிக்கு மனம் மகிழ நல்ல பொற்கிழி அளித்தருளிய திருவிளையாடலைக் கூறினோம். அன்னப் பறவைகளின் கூட்டம் சூழ்ந்துள்ள பொற்றாமரைக் குளத்தினின்று கீரனைக் கரையேற்றிய திருவிளையாடலை இனிக் கூறுவோம்.

2541. தாழ்ந்த வேணியன் நெற்றி முளைத்த தழற்கணாற்
போழ்ந்த நாவல னாடக பங்கயப் பொய்கைவாய்
வீழ்ந்த ரும்படர் வேலையில் வீழ்ந்தனன் விம்முறச்
சூழ்ந்த நாவலர் கண்டு பொறாது துளங்குவார்.

2542. ஏன்ற வேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்றஞான மிலாதவர் கல்வியும் ஆனதே
சான்ற கீரனிலாதவை கூடிய சங்கமே.

2543. ஐய சொற்பொருள் தன்வடி வானவர் ஆலவாய்
மைத ழைத்த மிடற்றினர் தம்மொடும் வாதுதான்
செய்த விப்பிழை யோபெரி தெப்படித் தீருமோ
உய்வ தற்புத மேயென யாவரு முன்னினார்.

2544. எய்தி வெள்ளி மலைபெயர்த் தானு மிறுத்ததன்
கையில் வீணைதொட் டின்னிசை பாடக் கனிந்தவன்
செய்த தீங்கு பொறுத்தது மன்றித்திண் டேரொடும்
மொய்கொள் வாளுங் கொடுத்தனன் புண்ணிய
மூர்த்தியே.

புலவர்கள் கலக்கம் அடைதல்

2541. நீண்ட சடையையுடைய சோமசுந்தரக் கடவுளின் நெற்றியில் உள்ள அனல் கண்ணால் தாக்கப் பட்ட கீரன் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து, பெரிய துன்பத்திற்கு ஆட்பட்டு வருத்தமடைவதைச் சுற்றி இருந்த புலவர்கள் எல்லோரும் கண்டு வருந்தத் தொடங்கினர்.

2542. புலமை மிக்க நக்கீரன் இல்லாது பிற புலவர்கள் கூடிய இச்சங்கமானது, மன்னன் இல்லாத குடிமக்களின் தன்மை போன்றும், ஒளிவீசும் நடுநாயகமாகிய பெரிய மணியை இழந்த கண்டிகையைப் போன்றும், மெய்யுணர் வில்லாதவர் கல்வியைப் போன்றும் விளங்கும் தன்மை யுடையதாய் இருந்தது.

2543. "சொல்லும் பொருளும் தனது வடிவாய் உள்ளவரும், திருவாலவாயில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளும் ஆன இறைவருடன், வாதம் செய்த இப்பிழையோ பெரியது. இது எங்ஙனம் நீங்குமோ? இனி பிழைத்தல் அரிதே", என்று யாவரும் கருதினர்.

2544. பிறகு புலவர்கள், "சிவபெருமான், தமது வெள்ளி மலைக்குச் சென்று அதனைப் பெயர்த்த இராவணனும் தமது கையில் வீணையைத் தழுவி, இனிமையான இசையைப் பாடத் திருவுளம் கனிந்து, அவன் செய்த பிழையைப் பொருத்தருளியதுமல்லாமல் அவனுக்குத் திண்ணிய தேரும் வலிய வாளும் கொடுத்தருளினார் அன்றோ" என்றனர்.

2545. யாவ ராலு மகற்றரி திப்பிழை யாவர்க்குந்
தேவ ராமவ ரேதிரு வுள்ளந் திரும்பினாற்
போவ தேயிது வேதுணி பென்று புகன்றுபோய்ப்
பாவ லோர்பரன் தாள்நிழ லிற்பணிந் தேத்துவார்.

2546. திருத்த னேசர ணஞ்சர ணம்மறைச் சென்னிமேல்
நிருத்த னேசர ணஞ்சர ணந்நிறை வேதநூல்
அருத்த னேசர ணஞ்சர ணந்திரு வாலவாய்
ஒருத்த னேசர ணஞ்சர ணங்கள் உனக்குநாம்.

2547. பாயு மால்விடை மேல்வரு வோய்பல் லுயிர்க்கெலாந்
தாயுந் தந்தையும் ஆகுநின் றண்ணளி தாமரைக்
கேயு மாதவன் போனல்ல தீய இயற்றினார்க்
காயு மின்பமுந் துன்பமு மாக்குவ தாதலால்.

2548. அத்த கற்ற செருக்கின் அறிவழி கீரனின்
வித்த கக்கவி யைப்பழு தென்ற விதண்டையான்
மத்த கக்கண் விழித்து வெதுப்பின் மலர்ந்தபொன்
முத்த கக்கம லத்திடை வீழ முடுக்கினாய்.

2545. "இந்தப் பெரும் பிழையை யாராலும் நீக்க முடியாது. எல்லோருக்கும் இறைவனான அப்பெருமானே திருவுள்ளம் இரங்குவாராயின் இப்பிழை நீங்குவது உறுதி" என்று கூறிப் புலவர்கள் சென்று சோம சுந்தரக் கடவுளின் திருவடி நிழலில் வீழ்ந்து வணங்கித் துதிப்பாராயினர்.

புலவர்கள் இறைவனைத் துதித்தல்

2546. "தூய்மையான இறைவனே! நாங்கள் உமக்கு அடைக்கலம்! திருமறையின் மேல் நடமிடும் இறைவனே உமக்கு அடைக்கலம்! நிறைந்த மறைகளின் பொருளாய் உள்ளவனே உமக்கு அடைக்கலம்! திருவாலவாயின்கண் எழுந்தருளியுள்ள ஒப்பற்றவனே! உனக்கு அடைக்கலம்!

2547. "பாய்ந்து செல்லும் திருமாலாகிய இடப ஊர்தியில் ஏறி வருபவனே! உயிர்கள் யாவற்றிற்கும் தாயும் தந்தையுமாகும், நினது திண்ணிய அருளே, தாமரை மலருக்குச் சூரியன், மலர்தலையும் வாடுதலையும் செயல் போல நன்மைகளையும், தீமையையும் செய்தார்க்கு இன்பத்தையும் துன்பத்தையும் கொடுப்பதாகும்.

2548. "ஆகையால் கற்றுணர்ந்த நக்கீரன் தன் கல்விச் செருக்கினால் அறிவிழந்து, உமது பாடலைப் பிழை என்று பேசிய விதண்டையினாலே நீர் நெற்றிக் கண்ணைத் திறந்து அதன் வெம்மையால், முத்துக்களைத் தன்னிடத்தில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் விழுமாறு செய்தாய்.

2549. இருணி றைந்த மிடற்றடி கேளினி யிப்பிழை
கருணை செய்து பொறுத்தருள் என்று கபிலனும்
பரண னும்முத லாகிய பாவலர் யாவருஞ்
சரண மென்று விழுந்திரந் தாரடி சாரவே.

வேறு

2550. அக்கீர வேலை ஆல மயின்றவெங் கருணை வள்ளல்
இக்கீர மழலைத் தீஞ்சொ லிறைவியோ டெழுந்து
போந்து
நக்கீரன் கிடந்த செம்பொ னளினப்பூந் தடத்து
ஞாங்கர்ப்
புக்கீர மதுரத் தீஞ்சொற் புலவர்தங் குழாத்துள்
நின்றான்.

2551. அனற்கணால் நோக்கி னான்பின் னருட்கணா னோக்க
வாழ்ந்த
புனற்கனே கிடந்த கீரன் பொறிபுலன் கரண மெல்லாங்
கனற்கணார் தமவே யாகக் கருணைமா கடலி லாழ்ந்து
வினைக்கணே யெடுத்த யாக்கை வேறிலன் புருவ
மானான்.

2552. போதையார் உலக மீன்ற புனிதையார் பரஞா னப்பூங்
கோதையார் குழற்குத் தங்கு கூறிய கொடிய நாவின்
றீதையார் பொறுப்ப ரேயோ அவரன்றித் திருக்கா
ளத்திக்
காதையார் குழையி னாரைக் காளத்தி கயிலை
யென்னா.

2549. "இருள் நிறைந்த திருமிடற்றினையுடைய இறைவனே! இனிக் கருணை செய்து இக்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று கபிலர், பரணர் முதலான புலவர் அனைவரும் திருவடியில் வீழ்ந்து அடைக்கல மென்று குறையிரந்து வேண்டினர்.

2550. பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அருளிய கருணை வள்ளலாகிய இறைவர், கரும்பின் சுவை போன்ற அழகிய மழலைச் சொல்லை இனிமையுடன் மொழியும் மீனாட்சி அம்மையாரோடு எழுந்தருளி, நக்கீரன் அழுந்திக் கிடந்த பொற்றாமரைப் பொய்கையின் அருகில் வந்து புலவர் கூட்டத்துடன் நின்றார்.

2551. முன்னர் அழல் கண்ணால் நோக்கிய இறைவர் தற்போது அருள் கண்ணால் நோக்கினார். ஆழமாகிய நீரில் கிடந்த நக்கீரன், தன்னுடைய பொறி, புலன், கரணம் எல்லாம் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானுடையன வேயாக அவருடைய பெரிய கருணைக் கடலில் ஆழ்ந்து அழிவில்லாத அன்பு வடிவமானான். (மீண்டும் எழுந்தான்.)

2552. "ஞான வடிவினரும் உலகைப் பெற்ற தூய்மை யுடையவருமாகிய ஞானப்பூங்கோதையம்மையாரின் கூந்த லுக்குப் பழுது சொன்ன கொடிய நாவின் குற்றத்தை அவ்விறைவர் பொறுப்பரே அல்லாமல் வேறு யாவர் பொறுப்பர்!" என்று திருக்காளத்தியில் எழுந்தருளிய காதில் குழையை உடைய காளத்தியப்பரை, காளத்தி கயிலை என்று,

2553. எடுத்தசொன் மாறி மாறி யிசையநே ரிசைவெண்
பாவாற்
றொடுத்தவந் தாதி சாத்தத் துணைச்செவி மடுத்து
நேர்வந்
தடுத்தவன் கையைப் பற்றி யகன்கரை யேற்றி
னார்தாள்
கொடுத்தெழு பிறவி வேலைக் கொடுங்கரை யேற்ற
வல்லார்.

2554. கைதந்து கரையே றிட்ட கருணையங் கடலைத்
தாழ்ந்து
மைதந்த கயற்க ணாளை வந்தித்துத் தீங்கு நன்கு
செய்தந்தோர்க் கிகலு மன்புஞ் செய்தமை பொருளாச்
செய்யுட்
பெய்தந்து பாடுகின்றான் பிரானருள் நாடுகின்றான்.

2555. அறனிலான் இழைத்த வேள்வி யழித்தபே ராண்மை
போற்றி
மறனிலாச் சண்டிக் கீந்த மாண்பெருங் கருணை
போற்றி
கறுவிவீழ் கூற்றைக் காய்ந்த கனைகழற் கமலம்
போற்றி
சிறுவனுக் கழியா வாழ்நா ளளித்தருள் செய்தி போற்றி.

2556. சலந்தர னுடலங் கீண்ட சக்கரப் படையாய் போற்றி
வலந்தரு மதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய்
போற்றி
அலர்ந்தசெங் கமலப் புத்தேள் நடுச்சிர மரிந்தாய்
போற்றி
சிலந்தியை மகுடஞ் சூட்டி யரசருள் செல்வம் போற்றி.

இறைவர், நக்கீரன் கையைப் பற்றிக் கரையேற்றுதல்

2553. எடுத்த சொல் மாறி மாறி வந்து பொருந்தும் படியாக நேரிசை வெண்பாவால் தொடுத்த (கைலை பாதி காளத்தி பாதி) அந்தாதி மாலையைச் சாத்தினார். அடியார் திருவடியாகிய புணையை அருளி எழு வகைப் பிறவியாகிய கொடிய கடலினின்றும் வீடு என்னும் கரையில் ஏற்றவல்ல அவ்விறைவன், அந்த அந்தாதியைத் திருச்செவி மடுத்து, நேர்வந்து அணுகி அந்நக்கீரனுடைய கையைப் பிடித்துக் கரையேற்றியருளினார்.

நக்கீரன் பிரபந்தம் பாடி வணங்குதல்

2554. நக்கீரன், கைதந்து கரையேற்றிய கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி, கயல் போலும் கண்களையுடைய அங்கயற்கண்ணம்மையையும் வணங்கி, தீமை செய்தார்க்குக் கோபமும், நன்மை செய்தார்க்கு அருளும் செய்தமையைப் பொருளாகச் செய்யுளில் அமைத்துப் பாடுவானாயினான்.

2555. "அறம் சற்றும் இல்லாத தக்கன் செய்த வேள்வியை அழித்த பெரிய ஆண்மை காக்க! குற்றமற்ற சண்டீசருக்கு அருளிய பெருமைமிக்க கருணை காக்க! மார்க்கண்டேயன் மேல் சினந்து வீழ்ந்த எமனை உதைத்த வீரக் கழல் அணிந்த தாமரை மலர் போன்ற திருவடி காக்க! அம்மார்க்கண்டேயனுக்கு அழிவில்லாத ஆயுளை அளித்தவை காக்க!

2556. சலந்தராசுரன் உடலைப் பிளந்த திகிரிப் படையை உடையவனே காக்க! வெற்றிமிக்க அப்படையினை வணங்கிய திருமாலுக்குக் கொடுத்தவனே, காக்க! செந்தாமரையில் உள்ள பிரமதேவனின் நடுத்தலையை அரிந்தவனே காக்க! சிலந்திக்கு முடிசூட்டி அரசு அருளிய இறைவனே காக்க!

2557. திரிபுரம் பொரிய நக்க சேவகம் போற்றி மூவர்க்
கருளிய தலைமை போற்றி யநங்கனை ஆகந் தீய
எரியிடு நயனம் போற்றி யிரதிவந் திரப்ப மீளக்
கரியவன் மகனுக் காவி யுதவிய கருணை போற்றி.

2558. நகைத்துஅட வந்த வந்த நகுசிரந் திருகி வாங்கிச்
சிகைத்திரு முடிமேல் வைத்த திண்டிறல் போற்றி கோயில்
அகத்தவி சுடரைத் தூண்டும் எலிக்கர சாள மூன்று
சகத்தையும் அளித்த தேவர் தம்பிரான் சரணம் போற்றி.

2559. பொருப்பகழ்ந் தெடுத்தோன் சென்னி புயமிற மிதித்தாய் போற்றி
இருக்கிசைத் தவனே பாட இரங்கிவாள் கொடுத்தாய் போற்றி
தருக்கொடும் இருவர் தேடத் தழற்பிழம் பானாய் போற்றி
செருக்குவிட் டவரே பூசை செய்யநேர் நின்றாய் போற்றி.

2560. பருங்கைமால் யானை யேனம் பாய்புலி யரிமான் மீனம்
இருங்குறள் யாமை கொண்ட விகல்வலி கடந்தாய் போற்றி
குரங்குபாம் பெறும்பு நாரை கோழியாண் அவலன் றேரை
கருங்குரீஇ கழுகின் அன்புக் கிரங்கிய கருணை போற்றி.

2557. திரிபுரம் எரியுமாறு சிரித்து அருளிய வீரம் காக்க! அத்திரிபுரத்தில் உள்ள மூவர்க்கு அருள் செய்த தலைமை காக்க! இரதி வந்து வேண்ட திருமாலின் புதல்வனான அம்மன்மதனுக்கு உயிர் அளித்தருளிய கருணை காக்க!

2558. சிரித்துக் கொல்லுதற்கு வந்த வெண்டலையை, திருகி எடுத்து, சடையையுடைய முடியின் மீது வைத்த மிக்க திறல் காக்க! திருக்கோயிலில் உள்ள அவிகின்ற விளக்கைத் தூண்டிய எலிக்கு ஆட்சி புரிய மூன்று உலகத்தையும் அளித்து அருளிய தேவ தேவனது திருவடி காக்க!

2559. திருக்கயிலையைப் பெயர்த்து எடுத்த இராவணனது தலைகளும், தோள்களும் முறிய மிதித்து அருளியவனே காக்க! அந்த இராவணனே வேதத்தை இசையுடன் பாடக் கருணை கொண்டு அவனுக்கு வாள் அருளியவனே காக்க! செருக்குடன் திருமாலும் பிரமனும் தேட அனற்பிழம்பானவனே காக்க! அவ்விருவரும் செருக்கழிந்து வழிபட நேர் நின்றவனே காக்க!

2560. பருத்த துதிக்கையுடைய யானையும், பன்றியும், புலியும், சிங்கமும், மீனமும், குறளும், ஆமையும் கொண்ட மிகுந்த வலிமையை அடக்கியவனே காக்க! குரங்கு, பாம்பு, எறும்பு, நாரை, கோழி, ஆண் நண்டு, தவளை, கரிக்குருவி, கழுகு, ஆகிய இவற்றின் அன்புக்கு இரங்கிய கருணையே காக்க!

2561. சாலநான் இழைத்த தீங்குக் கென்னையுந் தண்டஞ் செய்த
கோலமே போற்றி பொல்லாக் கொடியனேன் தொடுத்த புன்சொன்
மாலைகேட் டென்னை யாண்ட மலைமகள் மணாள போற்றி
ஆலவா யடிகள் போற்றி யம்மைநின் னடிகள் போற்றி.

வேறு

2562. ஆவ லந்தனே னடியனேற் கருளருள் என்னாக்
கோவ மும்பிர சாதமுங் குறித்துரை பனுவற்
பாவ லங்கலாற் பரனையும் பங்கிலங் கயற்கட்
பூவை தன்னையு முறைமுறை போற்றியென் றேத்தா.

2563. தேவ தேவனைப் பின்பெருந் தேவபா ணியொடுந்
தாவில் ஏழிசை யேழுகூற் றிருக்கையுஞ் சாத்திப்
பூவர் சேவடி சென்னிமேற் பூப்பவீழ்ந் தெழுந்தான்
பாவ லோர்களுந் தனித்தனி துதித்தனர் பணிந்தார்.

2564. துதித்த கீரனுக் கின்னருள் சுரந்துநீ முன்போன்
மதித்த நாவலர் குழாத்திட வதியென மறைநூல்
உதித்த நாவினார் கருணைசெய் துருக்கரந் தயன்சேய்
விதித்த கோயில்புக் கமர்ந்தனர் விளங்கிழை யோடும்.

2561. நான் செய்த குற்றத்திற்கு அடியேனைத் தண்டித்த திருவுருவே காக்க! பொல்லாத கொடியவனாகிய நான் பாடிய சொல் மாலையை (பாடலைக்) கேட்டு என்னை ஆண்டு அருளிய மலைமகளின் மணாளனே காக்க! திருவாலவாயில் எழுந்தருளிய பெருமானே காக்க! பிராட்டியின் ,திருவடிகள் காக்க!

2562. "ஐயோ! வருந்தினேன். அடியேனுக்கு அருள் புரிக" என்று வேண்டி, இறைவனுடைய கோபத்தையும், அருளையும் குறித்துக் கூறும் நூலாகிய பாமாலையால் சோமசுந்தரக் கடவுளையும், அவன் பாகத்தில் அமர்ந்த அங்கயற்கண்ணம்மையையும் முறையாகப் "போற்றி" என்று துதித்தான்.

2563. பின், தேவ தேவனாகிய அவ்விறைவனுக்குப் 'பெருந் தேவ பாணி'யுடன் கெடுதல் இல்லாத ஏழிசை யமைந்த 'திருவெழு கூற்றிருக்கை'யும் சாத்தி மலர் போன்ற சிவந்த திருவடிகள் தனது முடியின் மேல் படுமாறு விழுந்து வணங்கி எழுந்தான். ஏனைய புலவர்களும் தனித்தனியே துதித்து வணங்கினர்.

2564. வேதத்தைத் தோற்றுவித்த நாவினையுடைய இறையவர், இவ்வாறு துதித்த நக்கீரனுக்கு இனிய அருள் சுரந்து. "நீ முன் போலவே உன்னை மதித்த புலவர் கூட்டத்திற்கு நடுவிலே தங்குவாயாக," என்று கூறியருளித் தன் திருவுருவை மறைத்து, தேவதச்சன் அமைத்த திருக்கோயிலினுள் புகுந்து அழகிய அணிகளை அணிந்த உமையம்மையோடு வீற்றிருந்தார்.

2565. கற்ற கீரனுங் கலைஞருங் கழகமண் டபத்தில்
உற்ற ஆடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்து
அற்ற நீங்கிய கல்வியின் செல்வராய் அமர்ந்தார்.

வேறு

2566. சம்பக மாற னென்னுந் தமிழ்நர்தம் பெருமான் கூடல்
அம்பக நுதலி னானை யங்கற் கண்ணி னாளை
வம்பக நிறைந்த செந்தா மரையடி வந்து தாழ்ந்து
நம்பக நிறைந்த அன்பாற் பல்பணி நடாத்தி வைகும்.

கீரனைக் கரையேற்றிய படலம் முற்றிற்று.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

2567. கொன்றையந் தெரியல் வேய்ந்த கூடலெம் பெருமான்
செம்பொன்
மன்றலங் கமலத் தாழ்ந்து வழிபடு நாவ லோனை
அன்றகன் கரையே றிட்ட வருளுரை செய்தேம் இப்பாற்
தென்றமி ழனையான் தேறத் தெருட்டிய திறனுஞ்
சொல்வாம்.

நக்கீரன் தருமிக்குப் பொற்கிழியை அறுத்து அளித்தல்

2565. கற்றறிந்த நக்கீரனும், புலவர்களும் சங்க மண்டபத்தில் தொங்கிய, பொன்முடிப்பை அறுத்துத் தருமி என்னும் மறையவனுக்குக் கொடுத்தனர். அத்துடன் சண்பக மாறப் பாண்டியனைக் கொண்டும் சில பரிசுகள் அத்தருமிக்குக் கொடுக்குமாறு செய்தனர். பின்னர் குற்றமற்ற கல்விச் செல்வர்களாய் அவையில் வீற்றிருந்தனர்.

சண்பகப் பாண்டியன் திருப்பணி செய்தல்

2566. சண்பகமாறன் என்னும் தமிழர் வேந்தன் நாள்தோறும் திருவாலவாயின் கண் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய சோமசுந்தரக் கடவுளையும், அங்கயற் கண்ணம்மையையும் சென்று தரிசித்து மணம் நிறைந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் விழுந்து வணங்கி, 'சிவமே பொருள்' எனத் துணிந்த உள்ளன்பினோடு பல திருப்பணிகளைச் செய்து கொண்டு இனிமையாக வாழ்ந்து வந்தான்.

கீரனைக் கரையேற்றிய படலம் முற்றிற்று

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

2567. அழகிய கொன்றை மாலையை அணிந்த, கூடல் நகரின் சோமசுந்தரக் கடவுள், வாசனை வீதம் பொற்றாமரைக் குளத்தில் விழுந்து அழுந்தி, பின் துதித்த வனாகிய நக்கீரனைக் கரையேற்றிய திருவிளையாடலை உரைத்தோம். இனி இனிமைமிக்க தமிழ் இலக்கணத்தை அக்கீரனுக்குத் தெளிவு உண்டாகும்படி உபதேசித்த திருவிளையாடலைக் கூறுவோம்.

2568. முன்புநாள் மாடக் கூடன் முழுமுத லாணை யாற்போய்
இன்புற வறிஞ ரீட்டத் தெய்தியாங்கு உறையுங் கீரன்
வன்புறு கோட்டந் தீர்ந்து மதுரையெம் பெருமான்
தாளில்
அன்புறு மனத்தன் ஆகி ஆய்ந்துமற் றிதனைச்
செய்வான்.

2569. கட்டவிழ் கடுக்கை யண்ணல் கண்ணினா லவிந்த
காளை
மட்டவிழ் மலரோ னாலு மாயவ னாலுங் காக்கப்
பட்டவன் அல்லன் அன்னா னுதல்விழிப் படுதீ நம்மைச்
சுட்டபோ துருப்பந் தீர்த்துக் காத்ததிச் சுவண கஞ்சம்.

2570. இப்பெருந் தடமே எம்மை எம்மையுங் காப்ப
தென்னாக்
கப்பிலா மனத்தான் மூன்று காலமு மூழ்கி மூழ்கி
அப்பனை யால வாயெம் மடிகளை யடியார் சேம
வைப்பினை யிறைஞ்சி நித்தம் வழிபடு நியமம்
பூண்டான்.

2571. மையறு மனத்தான் வந்து வழிபடு நியம நோக்கிப்
பையர வாரம் பூண்ட பரஞ்சுடர் மாடக் கூடல்
ஐயனும் அணிய னாகி யகமகிழ்ந் தவனுக் கொன்று
செய்யநன் கருணை பூத்துத் திருவுளத் திதனைத்
தேர்வான்.

நக்கீரன் வழிபாடு புரிதல்

2568. நான் மாடக்கூடலின்கண் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின் கட்டளையால் மகிழ்வுடன் புலவர் கூட்டத்தை அடைந்து அவர்களோடு அமர்ந்துள்ள நக்கீரன் தன்னுடைய அழுக்காறு நீங்கி, மதுரையில் அமர்ந்துள்ள ஆலவாய் அண்ணல் திருவடியில் அன்பு பூண்ட மனத்தினனாய் ஆராய்ந்து இதனைச் செய்வானா யினான்.

2569. "கொன்றை மலர் மாலையை அணிந்த இறைவனது நெற்றிக் கண்ணால் எரிந்த மன்மதன், மலர்ந்த தாமரையில் இருக்கும் பிரமனாலும், திருமாலாலும் காக்கப் பட்டவன் அல்லன். அவ்விறைவனின் நெற்றிக்கண்ணில் உண்டாகிய தீ நம்மைச் சுட்ட போது, அவ்வெப்பத்தை தீர்த்து இப்பொற்றாமரைப் பொய்கையே காப்பாற்றியது.

2570. எனவே இப்பெருமை வாய்ந்த தீர்த்தமே என்னை எப்பிறவியிலும் காப்பதாகும் என்று ஒன்றுபட்ட மனத்தினால் கருதி, மூன்று காலங்களிலும் அதில் நீராடி எல்லா உயிர்களுக்கும் தந்தையாய் உள்ள எம் இறைவன் அடியார்கட்குத் துன்பம் நீக்கும் சோமசுந்தரக் கடவுளை தினம்தினம் வணங்கி வழிபடும் நியமம் பூண்டு வந்தான்.

2571. குற்றம் நீங்கிய மனத்தையுடைய நக்கீரன், தினம் தினம் வந்து வழிபடும் நியமத்தை நோக்கி, பாம்பை அணி யாக உடைய நான்மாடக்கூடலில் இறையவனும், மிகவும் மகிழ்வடைந்து அந்த நக்கீரனுக்கு அருள் புரிய எண்ணி மனத்தில் இதனைக் கருதுவானாயினான்.

2572. இலக்கணம் இவனுக் கின்னுந் தெளிகில இதனா
லாய்ந்த
நலத்தசொல் வழூஉச்சொ லென்ப தறிகில னவைதீர்
கேள்விப்
புலத்தவர் யாரைக் கொண்டு போதித்தும் இவனுக்
கென்னா
மலைத்தனு வளைத்த முக்கண் மன்னவன் உன்னு
மெல்லை.

2573. பங்கயச் செங்கை கூப்பிப் பாலினோர் மொழியாள்
சொல்வாள்
அங்கணா வங்கை நெல்லிக் கனியென வனைத்துங்
கண்ட
புங்கவா நினது சங்கைக் குத்தரம் புகல வல்லார்
எங்குளா ரேனு மென்னெஞ்சு உதிப்பதொன்
றிசைப்பேன் ஐயா.

2574. பண்டொரு வைகல் வெள்ளிப் பனிவரை யிடத்துன்
பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான் பூமகன் மாயப் புத்தேள்
அண்டருஞ் சனக னாதி யருந்தவர் பிறரும் ஈண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக் குவலயம் பொறாது
மாதோ.

2575. தாழ்ந்தது வடகீ ழெல்லை யுயர்ந்தது தென்மேற்
கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுதுனைப் பரவி யைய
ஊழ்ந்திடு மரவம் பூண்டோ யொருவனின் னொப்பான்
அங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த வையநேர் நிற்கு மென்றார்.

இறைவன் நக்கீரனுக்கு அருள்புரியச் சிந்தித்தல்

2572. "இவனுக்கு இன்னும் இலக்கணம் விளங்க வில்லை. இதனாலே ஆராய்ந்த நன்மையுடைய சொல்லும் குற்றமுடைய சொல்லும், இவையிவை என்று அறியாத வனாய் இருக்கிறான். இவனுக்கு இலக்கணம், குற்றமற்ற நூற்கேள்வியின் புலமை பொருந்திய யாரைக் கொண்டு போதிக்கலாம்?" என்று மலையை வில்லாக வளைத்த மூன்று கண்ணையுடைய இறைவர் சிந்திக்கலானார்.

உமாதேவியார் அகத்தியர் பற்றி இறைவரிடம் கூறுதல்

2573. அப்பொழுது பால்போலும் மொழியினை யுடைய உமாதேவியார், தாமரை மலர் போன்ற தன் சிவந்த கரங்களைக் குவித்து வணங்கி நின்று, "எம்பெருமானே உள்ளங்கை நெல்லிக்கனி போல யாவற்றையும் உணர்ந்த புங்கவனே! உங்கள் நினைவுக்கு தக்கவிடை கூற வல்லார் யாரே உள்ளார்? எனினும் என் உள்ளத்தில் தோன்றிய தொன்றைக் கூறுகின்றேன், ஐயனே!

2574. "முன்னொரு காலத்தில் கயிலாய மலையின் கண் தங்களின் திருமுன், வச்சிரப்படையை உடைய இந்திரனும், பிரமனும், திருமாலும், பிற தேவர்களும், சனகன் முதலிய அரிய முனிவர்களும், பிறரும் கூடி இருந்தனர். அதனால் பூமியானது பொறுக்கலாற்றாது வருந்தியது.

2575. "வடகிழக்கெல்லை தாழ்ந்தது. தென்மேற்கு எல்லை உயர்ந்தது. அதனைப் பார்த்துத் தேவர்கள் உன்னைச் சூழ்ந்து நின்று, வணங்கித் துதித்து, 'ஐயனே! பாம்பினை அணிந்த பெருமானே! தங்களைப் போன்ற ஒருவரை தென்மேற்கு எல்லையில் இருக்க விடுத்தால் இந்நிலவுலகம் சமமாய் நிற்கும் என்று வேண்டினர்.

2576. பைத்தலை புரட்டு முந்நீர்ப் பௌவமுண் டவனே
யெம்மை
ஒத்தவன் அனையான் வாழ்க்கைக் குரியளா கியவு
லோபா
முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப்
பாளென்
றத்திரு முனியை நோக்கி ஆயிடை விடுத்தா யன்றே.

2577. விடைகொடு போவா னொன்றை வேண்டினான் ஏகுந்
தேயந்
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த
நாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லா இன்றமி ழாய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல்
வேண்டும்.

2578. சித்தமா சகல வந்தச் செந்தமி ழியல்நூல் தன்னை
அத்தனே யருளிச் செய்தி யென்றனன் அனையான்
தேற
வைத்தனை முதனூ றன்னை மற்றது தெளிந்த பின்னும்
நித்தனே யடியே னென்று நின்னடி காண்பே
னென்றான்.

2579. கடம்பமா வனத்தில் எம்மைக் கண்டனை யிறைஞ்சி
யுள்ளத்
திடம்பெற யாது வேட்டா யவையெலா மெம்பாற்
பெற்றுத்
திடம்பெற மலயத் தெய்தி இருக்கென விடுத்தாய்
சென்று
குடம்பெறு முனியு மங்கே யிருக்கின்றான் கொடியி
னோடும்.

2576. "பரந்த அலைவீசும் மூன்று நீரினையுடைய கடல்களைக் குடித்த அகத்திய முனிவனே எம்மை ஒத்தவன்! அம்முனிவனின் இல்வாழ்க்கைக்கு உரியவளாகிய. உலோபா முத்திரை என்பவளே, இமவான் பெற்ற கொடி போன்ற உமைதேவியை ஒத்தவள்!" என்று கூறி, அம்முனிவனைப் பார்த்து அங்கு போகுமாறு பணித்தருளினீர்.

2577. "விடை பெற்றுப் போகும் அம்முனிவன் அவ்வாறு போகும்போது ஒன்றை வேண்டினான். 'நான் செல்லும் நாடு செய்யுளால் தொடுத்தலைப் பெற்றுள்ள தமிழ்நாடு என்று கூறுவர். அந்நாட்டு மக்கள் அனைவரும், இனிய தமிழை ஆராய்ந்து அந்நூற் கேள்வி மிக்கவரென்று கூறுவர். அங்கே தமிழ் நூலில் வினாவினார்க்குத் தக்க விடையளித்தல் வேண்டும்.

2578. மனதிலுள்ள அறியாமை என்ற குற்றம் நீங்க, அச்செந்தமிழின் இலக்கண நூலை இறைவனே அருளிச் செய்வாயாக!' என்று வேண்டினான். அவ்வாறு தாங்கள் அம்முனிவன் தெளிவடையும்படி முதல் நூலை அருளினீர். அம்முனிவனோ அம்முதல்நூலைத் தேர்ந்துணர்ந்த பின்னும் நித்தனே, அடியனேன் நின் திருவடியை எப்போது தரிசிப்பேன்? என்றான்.

2579. "பெரிய கடம்ப வனத்தில் என்னைக் கண்டு வணங்கி, உன்மனம் விரும்பியவற்றையெல்லாம் பெற்றுக் கொண்டு, மனம் சலிப்படையாது பொதியமலையில் சென்று இருக்கக் கடவை!' என்று கட்டளை இட்டீர். கும்ப முனியாகிய அவனும் அங்குச் சென்று உலோப முத்திரையோடும் இருக்கிறான்.

2580. இனையதுன் றிருவுள் ளத்துக் கிசைந்ததே லிவற்குக்
கேள்வி
அனையமா தவனைக் கூவி உணர்த்தென அணங்கு
கூற
இனையநா ணிகழ்ச்சி யெல்லா மறந்திடா தின்று
சொன்னாய்
அனையதே செய்து மென்னா வறிவனை நினைந்தான்
ஐயன்.

வேறு

2581. உடைய நாயகன் றிருவுள முணர்ந்தனன் முடிமேல்
அடைய வஞ்சலி முகிழ்த்தன னருந்தவ விமானத்
திடைபு குந்தனன் பன்னியோ டெழுந்தனன்
அகல்வான்
நடைய னாகிவந் தடைந்தனன் நற்றமிழ் முனிவன்.

2582. இயங்குமாதவத் தேரினும் பன்னியோ டிழிந்து
புயங்க னாலயம் புகுந்துநாற் புயம்படை கிளைத்துத்
தயங்கு செம்பவ ளாசலந் தன்னையு மதன்பால்
வயங்கும் இந்திர நீலமால் வரையையும் பணியா.

2583. பெருகும் அன்புளந் துளும்பமெய் யானந்தம் பெருக
அருகி ருந்தன னாவயிற் கீரனு மம்பொன்
முருக விழ்ந்ததா மரைபடிந் திறைவனை முன்போல்
உருகு மன்பினா லிறைஞ்சுவா னொல்லைவந்
தடைந்தான்.

2580. "இச்செயல் தங்கள் திருவுள்ளத்திற்குப் பொருந்துவதாயின், அவ்வகத்திய முனிவனை அழைத்து இந்நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணத்தை உணர்த்துவித்து அருளும்" என்று இறைவி விண்ணப்பம் செய்தார். சிவபெருமான் இதனைக் கேட்டு மகிழ்ந்து, "நீ இத்துணை நாள் செய்திகள் அனைத்தும் மறந்திடாது, இன்று கூறினை. அதனையே செய்வோம்." என்று கூறி அம்முனிவனை நினைந்தருளினார்.

அகத்தியர் மதுரை வருதல்

2581. எல்லாம் வல்ல இறைவனது திருவுள்ளக் குறிப்பினை அறிந்து, முடிமீது கைகளைக் குவித்து அரிய தவமாகிய மனைவியோடு விமானத்தில் ஏறி மேலே எழுந்து, அகன்ற வானத்தில் ஊர்ந்து, நல்ல தவமுனிவனாகிய அகத்தியன் மதுரையை அடைந்தார்.

2582. பெரிய தவமாகிய விமானத்தினின்று மனைவியோடு மதுரையில் இறங்கி, "சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலினுள் புகுந்து செம்பவளம் போன்ற சோமசுந்தரக் கடவுளையும், இந்திர நீலமலை போன்ற மீனாட்சி அம்மையாரையும் வணங்கினார்.

2583. உள்ளத்தில் சுரந்து பெருகும் அன்பானது நிறைந்து ததும்ப அருகில் இருந்தனர். நக்கீரன், அழகிய பொற்றாமரையில் நீராடி, முன்போலவே உருகும் அன்போடு இறைவனை வணங்குவதற்காக அங்கே விரைந்து வந்து சேர்ந்தான்.

2584. இருந்த மாதவச் செல்வனை யெதிர்வர நோக்கி
அருந்த வாஇவற் கியற்றமிழ் அமைந்தில எம்பாற்
றெரிந்த நீயதை யரிறபத் தெருட்டெனப் பிணியும்
மருந்து மாகிய பெருந்தகை செய்பவாய் மலர்ந்தான்.

2585. வெள்ளை மாமதிப் பிளவணி வேணியங் கருணை
வள்ள லார்பணி சிரத்தினு மனத்தினுந் தாங்கிப்
பள்ள மேழையும் பருகினோன் பணியுநக் கீரன்
உள்ள மாசற வியாகர ணத்தினை யுரைக்கும்.

2586. இருவ கைப்புற வுரைதழீஇ யெழுமத மொடுநாற்
பொருளொடும் புணர்ந் தையிரு குற்றமும் போக்கி
ஒருவி லையிரண் டழகொடும் உத்தியென் ணான்கும்
மருவு மாதிநா லினைத்தொகை வகைவிரி முறையால்.

2587. கருத்துக் கண்ணழிவு ஆதிய காண்டிகை யானும்
விருத்தி யானும்நூற் கிடைப்பொருள் துளக்கற
விளக்கித்
தெரித்து ரைத்தனன் உரைத்திடு திறங்கண்டு நூலின்
அருத்த மேவடி வாகிய ஆதியா சிரியன்.

2584. பிணியாகவும், அப்பிணிக்கு மருந்துமாகிய சோமசுந்தரக் கடவுள், அருகில் இருந்த அகத்திய முனிவரைத் தன் திருமுன்வருமாறு கடைக்கண்ணால் அருளி, "அரிய தவச் செல்வனே! இந்தக் கீரனுக்குத் தமிழ் இலக்கணம் நிரம்பிற்றிலது. நீ எம்மிடத்தில் கேட்டுத் தெரிந்தவாறே அவ்விலக்கணத்தைக் குற்றமற்ற இவனுக்குக் கற்பிக்கக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அகத்தியர் நக்கீரனுக்கு இலக்கணம் கற்பித்தல்

2585. வெண்மையான, பெருமைமிக்க பிறையை அணிந்த சடையையுடைய அழகிய அருள் வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுளையே முடியிலும், மனத்திலும் தாங்கி கடல் ஏழையும் குடித்த குறுமுனிவன் தன்னை வணங்கிய நக்கீரனது உள்ளத்தில் உள்ள மனமயக்கம் நீங்க இலக்கணத்தை அறிவுறுத்தினார்.

2586. பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம், உடன் படல் முதலிய ஏழுவகை மதங்கள், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பயன்கள், குன்றக்கூறல் முதலிய பத்துவகைக் குற்றங்கள், சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகுகள் நுதலிப் புகுதல் முதலிய முப்பத்திரண்டு உத்திகள் போன்றவற்றையும் முதல் நூலினைத் தொகை, வகை, விரி, என்னும் முறையினால்.

2587. கருத்துரையும், பதவுரையும் ஆகிய காண்டிகை உரையையும், விருத்தியுரையையும் அம்முதல் நூலின் உட்கிடைப் பொருளையும் ஐயமற விளக்கிக் கூறினார். அவர் கூறிய வன்மையைப் பார்த்து அந்நூலின் பொருளே திருவுருவமாகிய முதற் குரவனாகிய சோமசுந்தரக் கடவுள்.

2588. தருக்கு மின்பமுங் கருணையுந் தழையமா தவனைத்
திருக்க ரங்களான் மகிழ்ச்சியுட் டிளைத்திடத் தடவிப்
பெருக்க வேண்டிய பேறெலாம் பீடுற நல்கி
இருக்கை யிற்செல விடுத்தனன் ஆலவா யிறைவன்.

2589. பொன்ன னாளொடுங் குறுமுனி விடைகொடு போன
பின்னை யாருயிர்க் கிழத்திதன் பிரானைநேர் நோக்கி
என்னை நீயிவற் குணர்த்திடாது இத்தவப் பொதியின்
மன்ன னாலுணர்த் தியதென மதுரைநா யகனும்.

2590. தன்னை நித்தலும் வழிபடுந் தகுதியோர் சாலப்
பொன்ன ளிப்பவர் தொடுத்தமற் சரமிலாப் புனிதர்
சொன்ன சொற்கட வாதவர் துகள்தவிர் நெஞ்சத்து
இன்ன வ்ர்க்குநூல் கொளுத்துவ தறனென விசைப்ப.

2591. இவனெ டுத்தமற் சரத்தினால் யாமுணர்த் தாதத்
தவனை விட்டுணர்த் தினமெனச் சாற்றினான் கேட்டுக்
கவலை விட்டக மகிழ்ச்சிகொண்டு இருந்தனள்
கதிர்கால்
நவம ணிக்கலம் பூத்ததோர் கொடிபுரை நங்கை.

2588. களிப்பும், இன்பமும், கருணையும் பெருக, தவத்தில சிறந்த அவ்வகத்திய முனிவரை, தன் திருக்கரங்களால் அவர் மகிழ்வடையும்படித் தடவி, அவர் பெற வேண்டிய பயன் அனைத்தையும் பெற நிரம்பக் கொடுத்தருளி அவர் இருப்பிடம் செல்ல விடுத்தார்.

இறைவியின் ஐயப்பாடு

2589. பொன்னை ஒத்த உலோப முத்திரையோடு குறு முனிவன் விடை பெற்றுச் சென்றார். பின்னர் அரிய உயிர் போன்ற உமாதேவியார், தன் தலைவனாகிய சோம சுந்தரக் கடவுளை நோக்கி, 'இந்நக்கீரனுக்குத் தாங்கள் இலக்கணம் கற்பித்து அருளாது இவ்வகத்திய முனிவரைக் கொண்டு கற்பித்து அருளிய காரணம் என்ன? என்று கேட்டார். உடனே மதுரைப் பெருமானும்,

(கீரனுக்கு அகத்தியரே உபதேசிக்க வேண்டுமென்று இப்படலம் 7-ம் பாடல் முதல் 14-ம் பாடல் வரை) உமா தேவியாரே கூறினார். பின்னர் அவரே தாங்களே உபதேசித்து இருக்கலாம் என்று கூறுவது பொருத்தமாய் இல்லை. பாடலில் பிழை நேர்ந்திருக்கலாம்.)

2590. "தம்மை நாள்தோறும் வழிபடுவோரும், தமக்கு நிறையப் பொருள் கொடுப்போரும், தம்மிடத்தே பொறாமை இல்லாத மனத்தை உடையோரும், தம் சொல்லைக் கடவாதவருமாகிய குற்றமற்ற உள்ளத்தினர்க்கே நூல் கற்பித்தல் தருமம்' என்று அறிவுடையோர் கூறுவர்.

2591. "இவன் கொண்ட அழுக்காற்றினால் நாம் அறிவுறுத்தாமல் அம்முனிவனை விட்டு உணர்த்தினோம்" என்று கூறினார். அதனைக் கேட்டு, சந்தேகம் நீங்கி, நவமணிகள் பதித்த அணிகளை அணிந்த கொடி போன்ற பிராட்டியார் மன மகிழ்வு கொண்டார்.

2592. கற்ற கீரனும் பின்புதான் முன்செய்த கவிகள்
முற்று மாய்ந்துசொல் வழுக்களும் வழாநிலை முடியும்
உற்று நோக்கினான் அறிவின்றி முழுதொருங் குணர்ந் தோன்
சொற்ற பாடலிற் பொருள்வழுச் சொல்லினேன் என்னா.

2593. மறையி னந்தமுந் தொடாததா ளிலந்தொட வந்த
நிறைப ரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்
சிறிய கேள்வியோர் கழியவுஞ் செருக்கடை வோரென்று
அறிஞர் கூறிய பழஞ்சொலென் னளவிற்றே யம்ம.

2594. அட்ட மூர்த்திதன் றிருவடிக் கடியனேன் பிழைக்கப்
பட்ட தீங்கினால் எனையவன் நுதல்விழிப் படுதீச்
சுட்ட தன்றியென் னெஞ்சமுஞ் சுடுவதே யென்றென்று
உள்த தும்பிய விழுமநோ யுவரியு ளாழ்ந்தான்.

2595. மகவை யீன்றதாய் கைத்திடு மருந்துவாய் மடுத்துப்
பகைப டும்பிணி யகற்றிடும் பான்மைபோல் என்னை
இகலி ழைத்தறி வுறுத்தினாற் கேழையேன் செய்யத்
தகுவ தியாதென வரம்பிலா மகிழ்ச்சியுள் தாழ்ந்தான்.

நக்கீரன், குற்றம் சொன்னமைக்காக வருத்தம் அடைதல்

2592. அகத்தியரிடம் இலக்கணம் கற்ற நக்கீரனும், பின்னர், தன்னால் முன்னர் செய்யப்பட்ட கவிகள் அனைத்தையும் ஆராய்ந்து வழூஉச் சொல்லும், வாழாநிலை முடிபும் உற்று நோக்கி, "முழுமையும் உணர்ந்த இறைவனின் பாடலில் பொருள் குற்றம் சொன்னேனே!

2593. "மறை முடியும் தீண்டுதற்கரிய திருவடிகளை நிலமகள் தீண்டுமாறு எழுந்தருளி வந்த, எங்கும் நிறைந்த பரம சோதியாகிய பாசமற்ற கூத்தப்பிரானுக்குப் பிழை செய்தேனே! அற்ப வித்தையை உடையோர் அதிகம் இறுமாப்புடையோர் என்னும் பழமொழி என் அளவினதாயிற்றே!

2594. "அட்டமூர்த்தியாகிய இறைவன் திருவடிகளுக்கு அடியேன் பிழை செய்ய நேர்ந்த தீங்கினால் என்னை அவ்விறைவனது நெற்றிக் கண்ணில் உண்டாகிய தீ சுட்டதன்றித் தற்போது அடியேனுடைய நெஞ்சமும் சுடுகின்றதே!" என்று எண்ணி உள்ளே நிரம்பித் ததும்பும் துன்ப நோய் என்னும் கடலுள் ஆழ்ந்தான்.

2595. "குழந்தையைப் பெற்ற தாய் கசக்கும் மருந்தினை அதன் வாயிலே ஊட்டித் தீய பிணியைத் தீர்க்கும் தன்மை போல அடியேன் மேல் கோபம் கொண்டு தண்டித்து அறிவுறுத்திய அப்பெரும் கருணைப் பெருமானுக்கு ஏழையேன் செய்யத் தக்கது யாது?" என்று எல்லையற்ற மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தான்.

2596. மாத வன்றனக் காலவாய் மன்னவன் அருளாற்
போத கஞ்செய்த நூலினைப் புலவரே னோர்க்கும்
ஆத ரஞ்செயக் கொளுத்தியிட் டிருந்தனன் அமலன்
பாத பங்கய மூழ்கிய பத்திமைக் கீரன்.

கீரனுக்கிலக்கணம் உபதேசித்த படலம் முற்றிற்று.

55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்

2597. காமனைப் பொடியாக் கண்ட கண்ணுத றென்னூல் கீர
நாமநற் புலவற் கீந்த நலமிது பொலம்பூங் கொன்றைத்
தாமனச் சங்கத் துள்ளார் தலைதடு மாற்றந் தேற
ஊமனைக் கொண்டு பாடல் உணர்த்திய வொழுக்கஞ்
சொல்வாம்.

2598. அந்தமில் கேள்வி யோரெண் ணறுவரும் வேறு வேறு
செந்தமிழ் செய்து தம்மிற் செருக்குறு பெருமை கூறித்
தந்தமின் மாறாய்த் தத்தந் தராதரம் அளக்க வல்ல
முந்தைநூன் மொழிந்த ஆசான் முன்னர்வந் தெய்தி
னாரே.

மற்றைய புலவர்கட்குப் போதித்தல்

2596. பின்னர், நின்மலனாகிய சோமசுந்தரக் கடவுளின் திருவடித் தாமரையில் மிகுந்த அன்புடைய நக்கீரன், அகத்திய முனிவர் இறைவன் அருளால் போதித்து அருளிய இலக்கண நூலை மற்றைப் புலவர்களுக்கும் அன்பு மிகப் போதித்து அவ்வவையில் இருந்தான்.

கீரனுக்கிலக்கணம் உபதேசித்த படலம் முற்றிற்று.

55. சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்

2597. மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணையுடைய இறைவன், தமிழ் இலக்கணத்தைக் கீரன் என்னும் பெயருடைய நல்ல புலவனுக்கு உபதேசித்த திருவிளை யாடல் இது. பொன்போன்ற கொன்றை மாலையை அணிந்த அப்பெருமான், அச்சங்கப் புலவர்களின் மயக்கம் நீங்க, ஊமை ஒருவனால் பாடல்களின் பெருமை, சிறுமையை அவர்களுக்கு அறிவித்தருளிய திருவிளை யாடலை இனிக் கூறுவோம்.

சங்கப்புலவர் இறைவனிடம் ஐயம் தீர்க்க வேண்டுதல்

2598. அளவிறந்த புலமை படைத்த கடைச்சங்கப் புலவர்கள் நாற்பத் தெண்மரும், தனித்தனியாகச் சிறப்பு மிக்க செந்தமிழ்ப் பாக்கள் செய்து தம்மில் செருக்குற்றுத் தங்களைத் தாங்களே நன்கு மதித்துத் தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் மாறுபட்டனர். பின்னர் தத்தம் பெருமை சிறுமைகளை அளக்கவல்ல முதல்நூல் ஆசிரிய ராகிய சோமசுந்தரக் கடவுளின் முன்னர் வந்து சேர்ந்தனர்.

2599. தொழுதனர் அடிகள் யாங்கள் தொடுத்தவிப் பாடல் தம்முள்
விழுமிதுந் தீதுந் தூக்கி வேறுபா டளந்து காட்டிப்
பழுதறுத் தையந் தீரப் பணிக்கெனப் பணிந்தார் கேட்டு
முழுதொருங் குணர்ந்த வேத முதல்வனாம் முக்கண் மூர்த்தி.

2600. இருவருந் துருவ நீண்ட வெரியழற் றூணிற் றோன்றும்
உருவென அறிவா னந்த வுண்மையா யுலகுக் கெல்லாங்
கருவென முளைத்த மூல இலிங்கத்துள் நின்றுங் காண்டற்
கரியதோர் புலவ னாகித் தோன்றியொன் றருளிச் செய்வான்.

வேறு

2601. இம்மாநகர் உள்ளானொரு வணிகன்றன் பதியென்
றம்மாநிதிக் கிழவோன்மனை குணசாலினி யனையார்
தம்மாதவப் பொருட்டால்வெளிற் றறிவாளரைத் தழுவும்
பொய்ம்மாசற வினன்போலவ தரித்தானொரு புத்தேள்.

2602. ஓயாவிறன் மதனுக்கிணை யொப்பானவ னூமச்
சேயாமவன் இடைநீருரை செய்யுட்கவி யெல்லாம்
போயாடுமி னனையானது புந்திக்கிசைந் தானன்
றாயாவரு மதிக்குந்தமி ழதுவேயென அறைந்தான்.

2599. அவர்கள் அவ்விறைவனை வணங்கி, "இறைவ! நாங்கள் பாடிய இப்பாடல்களுள் குற்றமற்றவைகளையும், குற்றமுள்ளவைகளையும் சீர்தூக்கி, அவற்றின் பெருமை சிறுமைகளை எடுத்துக்காட்டி எம்முள் எழுந்த இறுமாப்பினைப் போக்கி எம் ஐயங்களை நீக்க வேண்டும்" என்று கூறி மீண்டும் வணங்கினார். அனைத்தையும் ஒரு சேர உணர்த்தியருளிய மறை முதல்வனாகிய அம்முக்கட் பெருமான் அதனைக் கேட்டார்.

இறைவர் புலவராய் வருதல்

2600. திருமாலும் பிரமதேவனும் தேட நீண்டு வளர்ந்த தீப்பிழம்பினின்றும் தோன்றியருளிய திருவுருவம் போலச் சச்சிதானந்த வடிவாய், உலகத்தில் உள்ள இலிங்கங்களுக்கெல்லாம் காரணமாய் முளைத்த மூல லிங்கத்துள் நின்றும் ஒரு புலவராய்த் தோன்றி வெளிப்பட்டு ஒரு செய்தியைக் கூறி அருளுவார்.

2601. "புலவர்கள் இப்பெரிய நகரிலே 'தனபதி' என்னும் பெயருடைய ஒரு வணிகன் இருக்கிறான். அப்பெரிய நிதிக்கிழவனின் மனைவியின் பெயர் 'குணசாலினி' என்பதாம். அவர்கள் செய்த பெரிய தவத்தின் காரணமாக வெள்ளை அறிவினைத் தழுவிய அறியாமையாகிய இருளை அகற்றும் ஞாயிறு போல ஒரு முருகக்கடவுள் தோன்றியுள்ளான்.

2602. "அவன் இடையீடு இல்லாத மன்மதனுக்கு ஒப்பானவன். ஆனால் ஊமையன். அவனிடத்தில் சென்று நீங்கள், நீங்கள் பாடிய கவிகள் அனைத்தையும் கூறுங்கள்' அவன் புத்திக்கு இசைந்த பாடல் எதுவோ, அதுவே யாவராலும் நன்கு மதிக்கப்படும் பாடல்" என்று கூறி அருளினார்.

2603. வன்றாள்மழ விடையாயவன் மணிவாணிகன் ஊமன்
என்றாலவன் கேட்டெங்ஙன மிப்பாடலிற் கிடக்கும
நன்றானவுந் தீதானவு நயந்தாய்ந்தன் றன்மை
குன்றாவகை அறைவானென மன்றாடிய கூத்தன்.

2604. மல்லார்தடம் புயவாணிக மைந்தன்றனக் கிசையக்
சொல்லாழமும் பொருளாழமுங் கண்டான்முடி துளக்காக்
கல்லார்புயம் புளகித்துளங் களிதூங்குவன் கலகம்
எல்லாமகன் றிடுமுங்களுக் கென்றாலயஞ் சென்றான்.

2605. பின்பாவலர் எல்லாம்பெரு வணிகக்குல மணியை
அன்பாலழைத் தேகித்தம தவையத்திடை யிருத்தா
நான்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர்
நயந்தே
முன்பாலிருந் தருந்தீந்தமிழ் மொழிந்தாரவை கேளா.

2606. மகிழ்ந்தான்சிலர் சொல்லாழ்ச்சியை மகிழ்ந்தான்சிலர்
பொருளை
இகழ்ந்தான்சிலர் சொல்வைப்பினை யிகழ்ந்தான்சிலர்
பொருளைப்
புகழ்ந்தான்சிலர் சொல்லின்பமும் பொருளின்பமும்
ஒருங்கே
திகழ்ந்தான்சிலர் சொல்திண்மையும் பொருள்இண்மையுந்
தேர்ந்தே.

2603. "வலிய கால்களையுடைய ஊர்தியை உடையாய், அவன் மணிகளின் குண குற்றங்களை ஆராயும் வணிகர் மரபினன். ஊமையன் ஆகிய அவன் இப் பாடலை விரும்பிக் கேட்டு இதில் கிடந்த நன்மையும் தீமையும் ஆராய்ந்து அதன் தன்மை குறைவுபடாத வகையில் எவ்வாறு கூறுவான்?" என்று கேட்டனர். உடனே வெள்ளியம்பலத்துள் திருநடனம் புரிந்த பெருமான்,

2604. "வலிமையுடைய பெரிய தோள்களையுடைய அவ்வணிக மைந்தன், பொருத்தமான சொல்லழகையும், பொருள் ஆழத்தையும் கண்டால் முடியை அசைத்து, தோள் புளகித்து உள்ளத்தில் பெருமகிழ்ச்சியை அடைவான். உங்களுக்குள் நேர்ந்த கலகம் அனைத்தும் நீங்கும்" என்று கூறியருளித் திருக்கோயிலினுள் சென்று மறைந்தார்.

2605. புலவர் அனைவரும் பெருவணிகக் குல மணியை அன்போடு அழைத்துச் சென்று தங்கள் கழகத்தினிடத்தில் அமர்த்தினர். நல்ல வெண் மலராலும் வாசனை மிக்க சந்தனத்தாலும் அர்ச்சனை செய்தனர். அவர் திருமுன்னர் இருந்து அரிய இனிய தமிழ்க்கவிகளை மொழிந்தனர். அவன் அவற்றைக் கேட்டான்.

2606. சிலர் சொல்லாழத்தை மகிழ்ந்தான். சிலர் பொருள் ஆழத்தை மகிழ்ந்தான். சிலர் சொல்லமைதியை இகழ்ந்தான். சிலருடைய பொருள் அமைதியை இகழ்ந்தான். சிலருடைய சொல்லின்பத்தையும் பொருள் இன்பத்தையும் ஒரு சேரப் புகழ்ந்தான். சிலருடைய சொல்வலியையும் பொருள் வலியையும் ஆராய்ந்து அறிந்து மகிழ்வுடன் இருந்தான்.

2607. இத்தன்மைய னாகிக்கலை வல்லோர்தமிழ் எல்லாஞ்
சித்தங்கொடு தெருட்டுஞ்சிறு வணிகன்தெருள் கீரன்
முத்தண்டமிழ் கபிலன்றமிழ் பரணன்றமிழ் மூன்றும்
அத்தன்மைய னறியுந்தொறு மறியுந்தொறு மெல்லாம்.

2608. நுழைந்தான்பொருள் தொறுஞ்சொற்றொறு
நுண்டீஞ்சுவை யுண்டே
தழைந்தா னுடல் புலனைந்தினுந் தணித்தான்சிரம்
பனித்தான்
குழைந்தான்விழி வழிவேலையுட் குளித்தான்றனை
யளித்தான்
விழைந்தான்புரி தவப்பேற்றினை விளைத்தான்களி
திளைத்தான்.

2609. பல்காசொடு கடலிற்படு பவளஞ்சுடர் தரளம்
எல்லாநிறுத் தளப்பானென வியல்வாணிகக் குமரன்
சொல்லாழமும் பொருளாழமுந் துலைநாவெனத் தூக்க
நல்லாறறி புலவோர்களு நட்டாரிகல் விட்டார்.

வேறு

2610. உலகினுட் பெருகி யந்த வொண்டமிழ் மூன்றும் பாடற்
றிலகமாய்ச் சிறந்த வாய்ந்த தெய்வநா வலருந் தங்கள்
கலகமா நவையிற் றீர்ந்து காசறு பனுவல் ஆய்ந்து
புலமிகு கோட்டி செய்து பொலிந்தனர் இருந்தார்
போலும்.

சங்கத்தார் கலகம் தீர்த்த படலம் முற்றிற்று.

வணிக மைந்தன் மூவர் பாடலுக்குத் தலையசைத்தல்

2607. கலையில் வல்ல அப்புலவர்களின் கவிகள் அனைத்தையும் உள்ளத்தில் கொண்டு, அவற்றின் இயல்பு களைத் தம் மெய்ப்பாட்டினாலே வெளிப்படுத்திய சிறு வணிகன் தெளிந்த நக்கீரனது மூன்றுவகைப்பட்ட தமிழும், கபிலனது தமிழும், பரணனது தமிழுமாகிய மூன்றினையும் உள்ளம் கொண்டு, உணரும் தோறும் உணரும் தோறும்,

2608. நுண்ணிய பொருள் தோறும் சொல்தோறும் நுழைந்து அவற்றின் இனிய சுவையினை அறிந்து உடல் பூரித்து ஐம்புலன்களினின்றும் தனித்து அச்சுவையுமாயி னான். தன்னைப் பெற்ற தந்தை, செய்த தவத்தின் பயனைப் புலப்படுத்திய வணிக மைந்தன்—சிரம் பணிந்தான். மனம் குழைந்து கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கி மகிழ்ச்சி அடைந்தான்.

அனைவரும் நட்புப் பூணுதல்

2609. பல மணிகளும், கடலில் தோன்றும் பவளங் களும், ஒளிவிடும் முத்தும் ஆகிய அனைத்தையும் நிறுத்தி அறுதியிடுவான்போல அழகிய வணிக மைந்தன் சொல் லாழத்தையும் பொருளாழத்தையும் நாவினையே தராசாகக் கொண்டு நிறுத்துக் காட்ட, நன்னெறியினை அறிந்த புலவர்கள் அனைவரும் தமக்குள் உண்டான கலகத்தை விட்டு நட்புப் பூண்டனர்.

2610. அவ்வணிக மைந்தனால் முற்றும் பாராட்டப் பட்ட நக்கீரன், கபிலன், பரணன் என்னும் மூவருடைய பாடல்கள் உலகத்தில் பரவி பாக்களுக்குத் திலகமாய்ச் சிறந்தோங்கின. கலைகளை ஆய்ந்த தெய்வப் புலவர்களும் தங்கள் கலகமாகிய குற்றத்தினின்றும் நீங்கி, குற்றமற்ற நூல்களை ஆராய்ந்து அறிவோடு மிக்க அளவளாவுதலைச் செய்து சிறப்புடன் விளங்கினர்.

சங்கத்தார் கலகம்தீர்த்த படலம் முற்றிற்று.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

2611. குடைக்காள்தன் பசிக்கன்னக் குழியருத்தி
வேட்கையறக் கொடுத்த கங்கைச்
சடைக்காடன் புலவரிகல் தணிவித்த முறையிதுமேற்
றன்னைப் பாடுந்
தொடைக்காடன் பகன்றிகழ்ந்த தென்னவனை
முனிந்துதன்னைத் தொழுது போன
இடைக்காடன் உடன்போய்ப்பின் பெழுந்தருளிப்
பிணக்கறுத்த வியல்பு சொல்வாம்.

2612. இந்திரன்றன் பழிதுரத்தி யரசளித்துப் பின்புகதி யின்பம்
ஈந்த
சுந்தரன்பொன் னடிக்கன்பு தொடுத்துநறுஞ்
சண்பகத்தார் தொடுத்துச் சாத்தி
வந்தனைசெய் திருத்தொண்டின் வழிக்கேற்பச்
சண்பகப்பூ மாற வேந்தன்
அந்தரசூ டாமணியாஞ் சிவபுரத்துள் நிறைசெல்வ
மடைந்தா னிப்பால்.

2613. ஆற்றன்மிகு பிரதாப சூரியன்வங் கிசத்துவசன் அளவில்
சீர்த்தி
சாற்றரிய இரிபுமருத் தனன்சோழ வங்கிசாந்
தகன்றான் வென்றி
மாற்றரிய புகழ்ச்சேர வங்கிசாந் தகன்பாண்டி வங்கி
சேசன்
தோற்றமுறு பரித்தேர்வங் கிசசிரோ மணிபாண்டீச்
சுரன்தான் மன்னோ.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

2611. குடைபிடிப்பதற்கு ஆளாகிய குண்டோதரனை அழைத்து அவனது பசியை நீக்குவதற்காக அன்னக்குழியை வருவித்து ஊட்டி, அவனுடைய நீர் வேட்கை நீங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட கங்கையை அணிந்த சடையை உடைய சோமசுந்தரக் கடவுள், புலவர்களின் கலகத்தைத் தீர்த்தருளிய திருவிளையாடல் இது. தன்னைப் பாடிய செய்யுளுக்குச் செய்யும் அன்பு நீங்கி அவமதித்த பாண்டியனை வெறுத்து, தன்னை வணங்கிப் பிணங்கிச் சென்ற இடைக்காடன் உடன் போய்ப்பின் எழுந்தருளி அவனது பிணக்குத் தீர்த்த திருவிளையாடலைக் கூறுவோம்.

குலேச பாண்டியன் தோன்றுதல்

2612. இந்திரன் பழியைத் தீர்த்து அவனுக்கு அரசுரிமையைத் தந்து பின் வீட்டின்பத்தையும் தந்த சோமசுந்தரக் கடவுளின் திருவடிகட்கு அன்பு கூர்ந்து நறும் செண்பக மாலை தொடுத்து, சாத்தி வழிபாடு செய்து வந்த செண்பக மாற பாண்டியன், முடிவாயுள்ள சூளாமணி போலும் சிவபதம் அடைந்து, பின்பு நிறைந்த செல்வத்தைப் பெற்றான்.

2613. பின்பு வலிமை மிக்க பிரதாப சூரியனும், வங்கி சத்துவனும், அளவற்ற புகழ் அமைந்த இரிபுமருத்தனும், சோழ வங்கி சாந்தகனும், வெற்றியும் புகழும் வாய்ந்த சேர வங்கி சாதகனும், பாண்டி வங்கி கேசனும், பொலிவுடைய குதிரை பூட்டிய தேரையுடைய வங்கிசச் சிரோமணியும் பாண்டீச்சரனும்.

2614. துணிவுடைய குலத்துவசன் வங்கிசபூ சணமாறன்
சோம சூடா
மணிகுலசூ டாமணியே யிராசசூ டாமணியே மாற்றார்
போற்றிப்
பணியவரும் பூபசூ டாமணியே குலேசபாண் டியனே
என்னக்
கணிதமுறு பதினைவர் வழிவழிவந் துதித்துநிலங்
காவல் பூண்டார்.

2615. அத்தகைய பாண்டியருட் குலேசபாண்
டியனென்னும் அரசன் தோண்மேல்
வைத்தவனித் தலம்புரப்போ னிலக்கணமு
மிலக்கியமும் வரம்பு கண்டோன்
எத்தகைய பெருநூலு மெல்லைகண்டோ னாதலினா
லிவனுக் கேற
முத்தமிழோர் பயில்சங்க மிடங்கொடுத்த தனையமணி
முழவுத் தோளான்.

2616. கழிந்தபெருங் கேள்வியினான் எனக்கேட்டு
முழுதுணர்ந்த கபிலன் தன்பாற்
பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினா
னிடைக்காட்டுப் புலவன் றென்சொன்
மொழிந்தரசன் றனைக்காண்டு மெனத்தொடுத்த
பனுவலொடு மூரித் தீந்தேன்
வழிந்தொழுகு தாரனைக் கண்டுதொடுத்
துரைப்பனுவல் வாசித் தானால்.

2617. வழுக்காத சொற்சுவையும் பொருட்சுவையும்
பகிர்ந்தருந்த வல்லோன் உள்ளத்
தழுக்காற்றாற் சிரந்துளக்கா னகமகிழ்ச்சி
சிறிதுமுகத் தலர்ந்து காட்டான்
எழுக்காயுந் திணிதோளா னொன்றுமுரை
யான்வாளா விருந்தா னாய்ந்த
குழுக்காதல் நண்புடையான் றனைமானம்
புறந்தள்ளக் கோயில்புக்கான்.

2614. போர்த்துணிவு மிக்க குலத்துவசனும், வங்கிச பூடண மாறனும், சோமசூடாமணியும், குலசூடாமணியும், இராச சூடாமணியும், மாற்றார் போற்றிப் பணிய வரும் பூப சூடாமணியும், குலேசபாண்டியனும், இவ்வாறு எண்ணத் தகுந்த பதினைந்து பாண்டியர்களும் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றி நிலவுலகத்தைக் காத்தனர்.

2615. அத்தன்மையுடைய பாண்டியர்களுள் குலேச பாண்டியன் என்னும் அரசன், நிலவுலகத்தைத் தன் தோளில் வைத்துச் சிறப்புடன் காத்து வந்தான். இலக்கணம் இலக்கியம் இவற்றின் வரம்பு கண்டவன். எத்தகைய பெரு நூலும் எல்லை கண்டோன். ஆதலால் இப்பாண்டியனுக்கு மூன்று தமிழையும் உடைய புலவர் இருக்கும் சங்கப் பலகை ஏறுதற்கு இடம் கொடுத்தது, அத்தகைய அழகிய குலேச பாண்டியன்.

2616. மிக்க பெரிய நூல் வல்லோன் என்று கற்றோர் போற்றக் கேட்டு, கலைகள் முற்றும் உணர்ந்த கபிலனிடத்தில் பேரன்பு கொண்ட இடைக்காட்டுப் புலவன், "ஒரு தமிழ்ப் பிரபந்தம் பாடிச் சென்று அரசனைக் காண்போம்" என்று கருதி, நூலொன்று இயற்றினான். தான் இயற்றிய அந்நூலுடன், இனிமையான மது துளிக்கும் வேப்ப மாலையை அணிந்த அப்பாண்டியனைக் கண்டான். தான் இயற்றிய உரையமைத்த அப்பனுவலை அவன் திருமுன்னர் படித்தான்.

குலேச பாண்டியன் தன்மை

2617. குற்றமற்ற சொல்லின் சுவையையும், பொருளின் சுவையையும் பாகுபடுத்தி அறியவல்ல அப்பாண்டியன், மனத்தின் கண் உள்ள பொறாமைக் குணத்தினால், முடியை அசைக்காமலும், அகமகிழ்ச்சியை முகத்தின்கண் சிறிதும் மலர்ந்து காட்டாமலும், யாதொன்றும் உரையாமலும் வாளாவிருந்தான். ஆராய்ந்த புலவர் கூட்டத்தில் விரும்பப் பட்ட நட்பினையுடைய இடைக்காட்டுப் புலவன், தன்னை மானமானது வெளியில் தள்ளச் சென்று இறைவனின் திருக்கோயிலை அடைந்தான்.

2618. சந்நிதியில் வீழ்ந்தெழுந்து தமிழறியும் பெருமானே
தன்னைச் சார்ந்தோர்
நன்னிதியே திருவால வாயுடைய நாயகனே
நகுதார் வேம்பன்
பொன்னிதிபோல் அளவிறந்த கல்வியுமிக்
குளனென்று புகலக் கேட்டுச்
சொன்னிறையுங் கவிதொடுத்தே னவமதித்தான்
சிறிதுமுடி துளக்கா னாகி.

2619. பரிவாயின் மொழிதொடுத்து வருணித்தோர்க்
ககமகிழ்ந்தோர் பயனு நல்கா
விரிவாய தடங்கடலே நெடுங்கழியே யடுங்கான
விலங்கே புள்ளே
பொரிவாய பராரைமர நிரையேவான் றொடுகுடுமிப்
பொருப்பே வெம்பும்
எரிவாய கொடுஞ்சுரமே யெனவிவற்றோ
ரஃறிணையொத் திருந்தான் எந்தாய்.

2620. என்னையிகழ்ந் தன்னோசொல் வடிவாய்நின்
னிடம்பிரியா விமையப் பாவை
தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே
யிகழ்ந்தனனென் றனக்கியா தென்னா
முன்னைமொழிந் திடைக்காடன் றணியாத
முனிவீர்ப்ப முந்திச் சென்றான்
அன்னவுரை திருச்செவியி னூறுபா டெனவுறைப்ப
வருளின் மூர்த்தி.

புலவன் இறைவனிடம் சென்று முறையிடல்

2618. இறைவன் திருமுன் விழுந்து வணங்கி, "தமிழை அறியும் பெருமானே! திருவாலவாயையுடைய இறைவனே! தன்னைச் சார்ந்தவர்களுக்கு நல்ல நிதி போன்ற பெருமானே! சிறந்த வேப்பம் பூமாலையை அணிந்த பாண்டியன், பொருள் செல்வம் மிக்கு உள்ளவர் போல அளவற்ற கல்விச் செல்வமும் மிக்கு உடையவன் என்று கற்றோர் கூறக்கேட்டு, சொற் சுவை நிரம்பிய கவிபாடி அவனிடத்தில் சென்றேன். சிறிதும் தலை அசைக்காமல் அவமதித்தான்.

2619. "எம் தந்தையே! அன்புடன் இனிய கவி தொடுத்து வருணித்த புலவர்களுக்கு மனம் மகிழ்ந்து ஒரு பயனும் அளிக்காத பெரிய கடலும், நெடிய உப்பங் கழியும், காட்டில் உள்ள விலங்கும், பறவையும், மரங்களும், வானை முட்டும் மலையும், அனலையுடைய கொடிய பாலை நிலமும் ஆகிய அஃறிணைப் பொருள்களுள் ஒன்று போல வாளாவிருந்தான்.

2620. "அவன் என்னையா இகழ்ந்தான்? இல்லை. சொல்லின் வடிவமாகிய உமா தேவியாரை இடப்பாகத்தி னின்றும் பிரியாத உன்னையும், அவ்வன்னையையுமே இகழ்ந்தான். அதனால் எனக்கு வந்த குறை ஏதும் இல்லை" என்று இறைவன் திருமுன் கூறி, இடைக்காடன் பெரிய சினத்துடன் வடதிசை நோக்கிச் சென்றான். அந்தச் சொல் இறைவனின் திருச்செவிகளில் வேற்படை போன்று தைக்க கருணை வடிவினனாகிய அச்சோமசுந்தரக் கடவுள்.

2621. போனவிடைக் காடனுக்குங் கபிலனுக்கு
மகத்துவகை பொலியு மாற் றான்
ஞானமய மாகியதன் னிலிங்கவுரு மறைத்துமையாம்
நங்கை யோடும்
வானவர்தம் பிரானெழுந்து புறம்போய்த்தன்
கோயிலினோர் வடபால் வையை
ஆனநதித் தென்பாலோர் ஆலயங்கண் டங்கணினி
தமர்ந்தான் மன்னோ.

2622. சங்கவான் றமிழ்த்தெய்வப் புலவோரும்
உடனெழுந்து சைல வேந்தன்
மங்கை நாயகன்போன வழிபோயங் கிருந்தாரவ்
வழிநாள் வைகற்
கங்குல்வாய் புலரவரும் வைகறையிற் பள்ளியுணர்
காலத் தெய்தி
அங்கணா யகனடியார் சே விப்பா ரிலிங்கவுரு
அங்குக் காணார்.

2623. என்னவதி சயமோவீ தென்றயிர்த்தா ரிரங்கினார்
இதனை யோடி
மன்னவனுக் கறிவிப்பான் வேண்டுமெனப் புறப்பட்டு
வருவா ராவி
அன்னவரைப் பிரிந்துறையு மணங்கணையா
ரெனவுமல ரணங்கு நீத்த
பொன்னவிர்தா மரையெனவும் புலம்படைந்து
பொலிவழிந்த புரமுங் கண்டார்.

சிவபெருமான் இடைக்காடன் பின்போதல்

2621. அங்ஙனம் கூறிக் கோபத்துடன் சென்ற இடைக்காடனுக்கும், அவன் உயிர் நண்பனாகிய கபிலனுக்கும், மன மகிழ்ச்சி உண்டாகும் பொருட்டு, (தேவர்கள் தேவனாகிய அவ்விறைவன்) ஞான மயமாகிய தம் இலிங்க உருவத்தை மறைத்து உமாதேவியாருடன் எழுந்து புறம்போந்து, தனது திருக்கோயிலுக்கு வடக்கே வையை யாற்றின் தென்பாகத்தே ஒரு திருக்கோயிலை உண்டாக்கி அதன் கண் இனிதாக அமர்ந்தருளினார்.

2622. சிறந்த தமிழ்ச் சங்கத்துத் தெய்வத்தன்மை பொருந்திய புலவர்களும் உடன் எழுந்து மலை மன்னனின் புதல்வியாகிய உமையம்மையின் கணவன் சென்ற வழியே சென்று அங்குத் தங்கினர். அந்நாளின் பின்னாள் இராப் பொழுது, புலர வரும் வைகறையிலே, இறைவனது திருப்பள்ளி எழுச்சிக் காலத்திற் சென்று இறைவனைச் சேவிக்க வந்த சிவனடியார்கள், அத்திருக்கோயிலிலே சிவலிங்கத் திருவுருவத்தைக் காணாதவரானார்கள்.

மன்னனிடம் சென்று கூறுதல்

2623. 'இஃது என்ன அதிசயம்?' என்று ஐயுற்று வருந்தினர். இச்செய்தியை விரைந்து சென்று அரசனுக்கு அறிவிக்க வேண்டும் என்று கருதிப் புறப்பட்டு வரும் பொழுது அவ்வடியார்கள், 'உயிர்க் காதலரைப் பிரிந்து வாழும் பெண்கள் போலவும், இலக்குமியை நீத்த தாமரை மலர் போலவும் பொலிவிழந்து நிற்கும் மதுரை நகரைக் கண்டனர்.

2624. அரசனிடை புகுந்துள்ள நடுநடுங்கி நாவுணங்கி
யரசே யாமொன்
றுரைசெயவஞ் சுதுமுங்க ணாயகனைத் திருப்பள்ளி
யுணர்ச்சி நோக்கி
மரைமலர்ச்சே வடிபணியப் புகுந்தனமின்
றாங்கவன்றன் வடிவங் காணோம்
புரமுநனி புலம்படைத்த தென்றழல்வேல் எனச்
செவியிற் புகுத்த லோடும்.

2625. வழுதியரி யணையிலிருந் தடியிறவீழ்
பழுமரம்போன் மண்மேல் யாக்கை
பழுதுறவீழ்ந் துயிரொடுங்க வறிவொடுங்கி
மட்பாவை படித்தாங் கொல்லைப்
பொழுதுகிடந் தறிவுசிறி தியங்கவெழுந்
தஞ்சலிக்கைப் போது கூப்பி
அழுதிருகண் ணீர்வெள்ளத் தாழ்ந்தடியே
னென்பிழைத்தேன் அண்ணா லண்ணால்.

2626. கொலையினையோர் அவுணர்புர நொடிவரையிற்
பொடியாகக் குனித்த மேருச்
சிலையினையோ பழையசிவ புரத்தினையோ
அருவிமணி தெறிக்கும் வெள்ளி
மலையினையோ தம்மைமறந் துனைநினைப்பார்
மனத்தினையோ வாழ்த்தும் வேதத்
தலையினையோ வெங்குற்றா யெங்குற்றா
என்றென்று தளரு மெல்லை.

2624. அரசனிடத்தில் சென்று மனம் பதை பதைத்து, நாவுலர்ந்து "அரசே! நாங்கள் ஒரு செய்தியைச் சொல்ல இங்கு அஞ்சுகின்றோம். தங்கள் கடவுளாகிய சோம சுந்தரக் கடவுளை, திருப்பள்ளி எழுச்சியில் நோக்கி, தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளைச் சேவிக்கச் சென்றோம். இன்று அங்கு அப்பெருமானது திருவடிவத்தைக் கண்டிலோம். மதுரை மாநகரமும் பொலிவிழந்து காட்சி யளிக்கின்றது." என்று அவன் செவியில் நெருப்பிலிட்ட வேல் பாய்ச்சியனாற் போன்று சொன்னார்கள்.

பாண்டியன் புலம்பி வருந்துதல்

2625. வேர் அற்ற ஆலமரம் வீழ்தல் போன்று அச்செய்தியைக் கேட்ட மன்னன் சிங்காதனத்தில் இருந்து மண்ணின் மேல் உடலில் காயம்படும்படிக் கீழே விழுந்தான். உயிர் ஒடுங்க, அறிவு ஒடுங்கி மண்ணால் செய்யப்பட்ட பாவை கிடப்பதுபோல் சிறிது நேரம் அசைவற்றுக் கிடந்த பின் சிறிது உணர்ச்சி உண்டாக எழுந்தான். அஞ்சலியாகக் கைகளைத் தலை மேல் குவித்து வணங்கி, அழுது, இரண்டு கண்களிலிருந்தும் பொழியும் நீர்ப்பெருக்கில் மூழ்கி, "எம்பெருமானே! எம்பெருமானே! அடியேன் என்ன தவறு செய்தேன்?

2626. "கொலை புரியும் நெறியை ஆராய்ந்தறியும் அவுணர்களின் திரிபுரம் நொடிப் பொழுதிலே பொடியாகு மாறு வளைந்த மேருவாகிய வில்லை உடையாய்! நீ பழைய சிவலோகத்தில் உள்ளாயோ? அருவி மணிகளை எறியும் திருக்கைலாய மலையில் உள்ளாயோ? தன்னை மறந்து உள்ளாயோ? உன்னை இடைவிடாது துதிக்கின்ற மறைமுடி யின் கண் உள்ளாயோ? இவற்றுள் எங்குச் சென்றாய்? எங்குச் சென்றாய்?" என்று சொல்லிச் சொல்லித் தளர்வுற்றான்.

2627. சிலர்வந்து மன்னாவோர் அதிசயங்கண்
டனம்வைகைத் தென்சா ராக
அலர்வந்தோன் படைத்தநாண் முதலொருகா
லமுங்கண்ட தன்று கேள்வித்
தலைவந்த புலவரொடு மாலவா யுடையபிரான்
றானே செம்பொன்
மலைவந்த வல்லியொடும் வந்திறைகொண்
டுறைகின்றான் மாதோ வென்றார்.

2628. அவ்வுரைதன் செவிநுழைந்து புகுந்தீர்ப்ப
வெழுந்தரசன் அச்சத் தாழ்ந்து
தெவ்வர்முடித் தொகையிடறுங் கழற்காலா
னடந்தேகிச் செழுநீர் வைகை
கௌவைநெடுந் திரைக்கரத்தாற் கடிமலர்தூயஉய்ப்
பணியத்தென் கரைமேல் வந்து
மௌவலிள முகைமூரன் மாதினொடு மிருக்கின்ற
மணியைக் கண்டான்.

2629. படர்ந்துபணிந் தன்புகுக்குங் கண்ணீர்சோர்ந்
தானந்தப் பௌவத் தாழ்ந்து
கிடந்தெழுந்து நாக்குழறித் தடுமாறி நின்றிதனைக்
கிளக்கும் வேதந்
தொடர்ந்தறியா அடிசிவப்ப நகர்ப்புலம்ப வுலகீன்ற
தோகை யோடிங்
கடைந்தருளுங் காரணமென் அடியேனாற்
பிழையுளதோ வையா வையா.

2627. அப்போது சிலர் பாண்டியனிடம் ஓடி வந்து "அரசே! நாங்கள் ஒரு அதிசயத்தினைக் கண்டோம். அது என்னவென்றால் வையை ஆற்றின் தென் பக்கமாக, நான் முகன் இவ்வுலகைப் படைத்தது முதல் ஒரு காலத்திலேனும் காணாத காட்சி! நூலாராய்ச்சியிற் சிறந்த சங்கப் புலவர்களோடும், திருவாலவாயினையுடைய சோமசுந்தரக் கடவுள் சிறந்த பொன்னைப் போன்ற உமாதேவியோடும் வந்து நிலை பெற்று அமர்ந்துள்ளார்" என்று கூறினார்.

பாண்டியன் வையைத் தென்கரையில் இறைவனைத் தரிசித்தல்

2628. அச்சொல்லானது தன் செவி வழியே புகுந்து நிலை பெற்று இழுக்க, அரசன் எழுந்து பயத்துடன் பகை வரின் முடிகளை இடறிய வீரக்கழல் அணிந்த கால்களால் நடந்து சென்று, தெள்ளிய நீரையுடைய வையையாறானது, ஒலியினையுடைய நீண்ட அலைக்கரத்தால் மணம்மிக்க மலர்களைத் தூவி வணங்க, அதன் தென் கரை மேல் இளமையான தனங்களோடு, அரும்பு போன்ற பற்களை யுடைய பிராட்டியாரோடு வந்து எழுந்தருளி இருக்கும் சொக்கநாதப் பெருமானைக் கண்டான்.

2629. அவ்வாறு சென்று கண்டு வணங்கி, அன்புமிக்க கண்ணீரைச் சொரிந்து, இன்பக்கடலுள் அழுந்திக் கிடந்து பின் எழுந்து, நாவானது குழறுற்றுத் தடுமாறி நின்று "ஐயனே! ஐயனே! மறைகளும் தொடர்ந்தறியாத திருவடி சிவக்கவும், நகரிலுள்ளோர் வருந்தவும், உலகினைப் பெற்ற அம்மையாரோடு இங்கு வந்து தங்கியுள்ளமைக்குக் காரணம் யாது? அடியேனால் ஏதேனும் தவறு ஏற்பட்டதோ?

2630. அல்லதையென் றமராலென் பகைஞராற் கள்வரால்
அரிய கானத்
தொல்லைவிலங் காதிகளா லிடையூறின் றமிழ்நாட்டி
லெய்திற் றாலோ
தொல்லைமறை யவரொழுக்கங் குன்றினரோ
தவந்தருமஞ் சுருங்கிற் றாலோ
இல்லறனுந் துறவறனும் பிழைத்தனவோ யானறியே
னெந்தா யெந்தாய்.

2631. கள்ளேறு கடுக்கைநறுஞ் சடையனே
போற்றிபெருங் கருணை போற்றி
வெள்ளேறு கொடியுயர்த்த விடையானே
போற்றியருள் விகிர்தா போற்றி
புள்ளேறு கொடியுயர்த்த புனிதனயன் தேறாத
புனிதா போற்றி
வள்ளேறு சிறுகுழவி மதிநுதலங் கயற்கண்ணி
மணாள போற்றி.

2632. பாதமல ரிணைபோற்றி பன்னிரண்டு கையானைப்
பயந்தாய் போற்றி
வேதமுடி கடந்தபர ஞானத்தில் ஆனந்த விளைவே
போற்றி
போதவடி வாய்நால்வர்க் கசைவிறந்து நிறைந்தபரம்
பொருளே போற்றி
மாதவள நீறணிந்த மன்னாஅங் கயற்கண்ணி மணாள
போற்றி.

2633. பொக்கமுடை யார்செய்யும் பூசைதவங் கண்டுநகும்
புராண போற்றி
தக்கன்மகம் பொடியாகத் திருப்புருவ
நெரித்தகொடுந் தழலே போற்றி
செக்கமலக் கண்ணிடந்த கண்ணனுக்குத் திகிரியருள்
செல்வா போற்றி
மைக்குவளை யனையமணி கண்டாவங் கயற்கண்ணி
மணாள போற்றி.

2630. "அல்லது என்னுடைய பரிசனங்களாலானும், பகைவராலாயினும், கள்வராலாயினும், செல்லுதற்கரிய விலங்கு முதலியவைகளாலாயினும் இனிய தமிழ்நாட்டின் கண் இடையூறு நேர்ந்ததோ? வேதியர் தம் ஒழுக்கம் குறைந்தார்களோ? தவமும் தருமமும் குறைந்தனவோ? இல்லறமும், துறவறமும், தம் தம் நெறியினின்றும் தவறினவோ? எந்தாய்! எந்தாய்! நிகழ்ந்தது யாதென்று அடியேன் அறியவில்லை?

2631. "தேன் நிறைந்த நறிய கொன்றை மாலையை அணிந்த சடையை உடையானே வணக்கம்! இடபத்தைக் கொடியில் உயர்த்திய இடப ஊர்தி உடையானே வணக்கம்! கருணை உடையானே வணக்கம்! கருடனைக் கொடியில் உயர்த்திய தூயோனாகிய திருமால் பிரமன் அறியாத தூய்மையானவனே வணக்கம்! கூர்மையான நுனியினையுடைய சிறிய பிறை போன்ற நெற்றியையுடைய அங்கயற் கண்ணம்மையின் மணாளனே வணக்கம்!

2632. 'இரண்டு தாமரை மலர் போன்ற திருவடிகட்கு வணக்கம்! பன்னிரண்டு கரங்களையுடைய முருகப் பெருமானை அளித்தவனே வணக்கம்! மறைமுடியைக் கடந்த பரஞானத்தில் விளையும் இன்ப விளைவே வணக்கம்! உபதேச வடிவமாக சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கு அசைவின்றி நிறைந்தருளிய, மேலான பொருளே வணக்கம்! பெருமை மிக்க திருநீற்றை அணிந்தருளிய இறைவனே! அங்கயற் கண்ணம்மையின் கணவனே வணக்கம்!

2633. "பொய்ம்மை உடையோர் செய்கின்ற பூசையையும், தவத்தையும் கண்டு சிரிக்கின்ற பழமையான பொருளே வணக்கம்! தக்கன் செய்த வேள்வி நீறாகுமாறு, திருப்புருவத்தினை நெரித்தருளிய கொடிய நெருப்பே வணக்கம்! செந்தாமரை மலர் போன்ற கண்ணை இடந்து அருச்சித்த திருமாலுக்குச் சக்கரப் படை அருளிய செல்வனே வணக்கம்! கரிய குவளை மலர் போன்ற நீலகண்டனே, அங்கயற்கண்ணம்மையின் கணவனே வணக்கம்!"

வேறு

2634. தென்னவ னின்ன வண்ணம் ஏத்தினான் செம்பொற் கூடல்
மன்னவன் கேட்டா காய வாணியால் வைகைநாட
உன்னது சோத்த நாங்கேட் டுவந்தன மினிய தாயிற்று
இன்னமொன் றுளது கேட்டி யென்றன னருளிச் செய்வான்.

2635. இயம்பரும் பதிகடம்மு ளாலவர் யேற்ற மீங்குச்
சயம்புவா யனந்த முள்ள தானவர் இயக்கர் சித்தர்
வயம்புரி யரக்கர் வானோர் முனிவரர் மனித ருள்ளார்
நயம்பெற விதியாற் கண்ட நங்குறி அனந்த முண்டால்.

2636. அக்குறி களின்மேம் பட்ட குறியறு பத்து நான்காம்
இக்குறி களின்மேம் பட்ட குறிகளெட் டினைய வெட்டுத்
திக்குறை வானோர் பூசை செய்தன விவற்றியாம் வந்து
புக்குறை குறிநந் தோழன் பூசித்த குறிய தாகும்.

2637. அறைந்தவித் தெய்வத் தான மனைத்துமோ ரூழிக் காலத்
திறந்தநந் தோழன் கண்ட விலிங்கமாம் அதனா லிங்கே
உறைந்தன முறைத லாலே யுத்தர வால வாயாய்ச்
சிறந்திடத் தகுவ தின்று முதலிந்தத் தெய்வத் தானம்.

இறைவன் அசரீரியாக மொழிதல்

2634. குலேச பாண்டியன் இவ்வாறெல்லாம் துதித் தானாகச் செம்பொன் நிறைந்த ஆலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் அதனைக் கேட்டு, அசரீரியாய், "வையை நாடனே! உனது துதியினை நாம் கேட்டு மகிழ்ந்தோம். அது எமக்கு இனிமை உடையதாயிற்று. உனக்குக் கூற வேண்டியது இன்னும் ஒன்று உண்டு. அதனைக் கேட்பாயாக" என்று கூறி அருளினார்.

2635. "சொல்லுதற்கரிய திருத்தலங்கள் பலவற்றுள் திருவாலவாய் சிறப்புடையது! இங்குத் தாமே தோன்றி அருள் நிறைந்த சுயம்புலிங்கங்கள் பல உள்ளன. அசுரர்களும், இயக்கர்களும், சித்தர்களும், தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும் தாங்கள் விரும்பிய நலனைப் பெறுதல் பொருட்டு ஸ்தாபித்து வணங்கிய இலிங்கங்கள் பல உள்ளன.

2636. "அவ்விலிங்கங்களுக்குள்ளே அறுபத்து நான்கு உயர்ந்தன. இவ்வறுபத்து நான்கு இலிங்கங்களுள் எட்டு மிகச் சிறந்தவை. இவ்வெட்டு இலிங்கங்களும் எட்டு திசைகளில் இருக்கும் இந்திரன் முதலிய அட்டதிக்கு பாலர் களால் பூசிக்கப்பட்டவை. இவ்வெட்டினுள் நாம் வந்து எழுந்தருளி இருக்கும் இலிங்கம் நமது தோழனாகிய குபேரன் பூசித்த இலிங்கமாகும்.

2637. "மேற்சொன்ன இந்த இலிங்கங்கள் உள்ள இடம் அனைத்தும் ஓர் ஊழிக் காலத்தில் மறைந்தன. இது நம் தோழன் கண்டு வழிபட்ட இலிங்க மாதலால் நாம் இங்கே உறைந்து அருளினோம். இங்ஙனம் உறைதலால் இத் தெய்வத்தானம் இன்று முதல், 'வடத் திருவாலவாய்' என்ற சிறப்பு பெறும்.

2638. ஓங்குதண் பணைசூழ் நீப வனத்தைநீத் தொருபோ
தேனும்
நீங்குவ மல்லேங் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்குளை யல்லை காடன் செய்புளை யிகழ்த லாலே
ஆங்கவ ணிடத்தியாம் வைத்த வருளினால் வந்தே
மென்னா.

2639. பெண்ணினைப் பாகங் கொண்ட பொருந்தகைப் பரம
யோகி
விண்ணிடை மொழிந்த மாற்ற மீனவன் கேட்டு
வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை
யன்றோ
எண்ணிய பெரியோர்க் கென்னா வேத்தினான்
இறைஞ்சி னானே.

2640. அடிபணிந் தேத்தி னானை யருள்கரந் தசையு மின்னுக்
கொடியணி மனையிற் போக்கிக் கோமள வல்லி
யோடும்
உடனுறை புலவ ரோடு மொல்லைதன் கோயில்
புக்கான்
வடதிரு வால வாயில் வந்துவீற் றிருந்த வள்ளல்.

2641. மின்மதிச் சடையினான்பி னடைந்துபோய்
விடைகொண் டேகும்
மன்னவன் றன்னைப் பாடி வந்தவன் றன்னை மாட்சித்
தன்மைசால் சங்க வாணர் தம்மொடுங் கொடுபோய்
என்றும்
பொன்மகள் காணி கொண்ட புரிசைசூழ் கோயில்
புக்கான்.

2638. "சிறந்த தண்ணிய வயல்கள் சூழ்ந்த கடம்ப வனத்தை விட்டு ஒரு பொழுதேனும் நீங்கி இருக்க மாட்டோம். ஆனாலும் நீயும் தீங்குடையவன் அல்லன். இடைக்காடன் செய்யுளை அவமதித்தாய் ஆதலால் அப்பொழுதே அவன் மேல் கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்."

2639. உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட பெரிய மேலான தகுதி வாய்ந்த யோகியாகிய இறைவன் அசரீரியாகக் கூறிய இவ்வார்த்தையைப் பாண்டியன் கேட்டு, "தேவர்களின் புண்ணியனே! யாவராலும் நன்கு மதிக்கப் பெறும் பெருமை உடையவர்க்குச் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்வது பெருமை அன்றோ?" என்று துதித்து வணங்கினான்.

2640. வட திருவாலவாயின்கண் இடைக்காடன் பொருட்டு வந்து தங்கிய வள்ளலாகிய சோமசுந்தரக் கடவுள் அடிவணங்கித் துதித்த அக்குலேச பாண்டியனை, கருணை கூர்ந்து, அசைகின்ற மீன் கொடி கட்டிய மாளிகைக்குப் போக விடுத்து, பசுமையான கொடி போன்ற பிராட்டியாரோடும், உடன் உறைந்த சங்கப் புலவர் களோடும் தனது திருக்கோயிலினுள் சென்று புகுந்த ருளினார்.

பாண்டியன் இடைக்காடன் பாடலுக்குச் சிறப்பளித்தல்

2641. மின்னலை ஒத்த சந்திரனை அணிந்த சடையை யுடைய சோமசுந்தரக் கடவுளின் பின், திருக்கோயிலுக்கு நடந்து சென்று, விடை பெற்று மீளும் பாண்டியன் தன்னைப் பாடி வந்த இடைக்காடனை, மாண்புடைய சங்கப் புலவரோடு அழைத்துக் கொண்டு வந்து, எப்போதும் திருமகள் தனக்கு ஆட்சிப் பீடமாகக் கொண்ட மதில் சூழ்ந்த மாளிகையில் புகுந்தான்.

2642. விதிமுறை கதலி பூகங் கவரிவால் விதானந் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த
மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் றன்னை மங்கல வணிசெய் தேற்றி.

2643. சிங்கமான் சுமந்த பொன்னஞ் சேக்கைமேல் இருந்து
வெள்ளைக்
கொங்கவிழ் தாமந் தூசு குளிர்மணி யாரந் தாங்கி
மங்கல முழவம் ஆர்ப்ப மறையவ ராக்கங் கூற
நங்கையர் பல்லாண் டேத்த நன்மொழிப் பனுவல்
கேட்டு.

2644. அறிவுடைக் காட னுக்கு அருமைமாண் புலமை
யோர்க்கும்
முறைமையால் ஆரந் தூசு முகிழ்முலைக் கொடியின்
அன்னார்
நிறைநிதி வேழம் பாய்மான் விளைநில நிரம்ப நல்கி
அறைகழற் காலிற் பின்னே ழுடிநடந் திதனை
வேண்டும்.

2645. புண்ணியப் புலவீர் யானிப் போழ்திடைக் காட
னார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்கெனப் பரவித்
தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரு மன்னநீ நுவன்ற சொல்லாந்
தண்ணிய வமுதா லெங்கள் கோபத்தீத் தணிந்த
தென்னா.

2642. வாழையும், கமுகும், சாமரையும், மேல் விதானமும், விளக்கும், அன்றலர்ந்த மலரால் தொடுத்த மாலையும், பூரண கும்பமும், கொடியும் ஆகிய இவைகளால் அலங்கரித்த விழா நிறைந்த மணிகள் பொருத்தப்பட்ட மாளிகையில் அழகிய பொன்னா சனத்தில் புலவர்கள் சூழ்ந்திருக்க, அறிவையே அணிகல மாய்ப் பூண்ட இடைக்காடனை மங்கலமாக அலங்கரித்து அமர்த்தினான்.

2643. சிங்கம் தாங்கிய பொன்னாலாகிய அழகிய ஆசனத்தில் தானும் இருந்து, மகரந்தமுடைய வெண்மலர் மாலையும், வெள்ளாடையும், முத்துமாலையும் ஆகிய இவற்றை அணிந்து மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும், மறையவர்கள் வாழ்த்துக்களைக் கூறவும் பாவையர் பல்லாண்டு பாடவும் நல்ல சொற்களால் புனையப்பட்ட செய்யுளைக் கேட்டனன்.

2544. அறிவுடைய இடைக்காடனுக்கும், மாட்சிமை மிக்க புலவர்களுக்கும் முத்தாரங்களையும், ஆடைகளையும் ஏவல் மகளிர்களையும் நிறைந்த பொருளையும், யானை களையும், விளை நிலங்களையும், வரிசையாக முறைப்படி நிறையக் கொடுத்தான். பின் ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த காலினால் ஏழடி தூரம் அவர்கள் பின் நடந்து சென்று இதனை வேண்டுவனாயினான்.

2645. "புண்ணிய வடிவாய் உள்ள புலவர்களே! இப்பொழுது இடைக்காடருக்கு நான் செய்த குற்றங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று துதித்து வணங்கினான். நுட்பமான நூற் கேள்வி உள்ள புலவர் களும்! "நீர் கூறிய குளிர்ந்த அமிழ்தம் போன்ற சொல்லால் எங்கள் சினமாகிய நெருப்பு அவிந்தது" என்று கூறினர்.

2646. இன்னமு மால வாயெம் மிறையவன் கருணை
நோக்காற்
பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கிய முனக்குண் டாக
என்னநல் லாக்கங் கூறி யேகினா ராக வந்தத்
தென்னவன் குலேசன் செய்த தவமுருத் திரிந்தா
லென்னா.

2647. எரிமருத் தவனி முன்னா மெண்வகை மூர்த்தியன்பு
புரிமருத் துவனைச் சூழ்ந்த பொருபழி துடைத்தோன்
சோதி
விரிமருத் துடல்வான் றிங்கண் மிலைந்தவன் அருளின்
வந்தான்
அரிமருத் தன்னாந் தென்ன னடலரிக் குருளை
யன்னான்.

வேறு

2648. பரிசிலைப் புலவருக்கு அருள்குலே சன்பல
பகல்கழிஇத்
திரிமருப் பிரலைவெம் மழுவெடுத் தவன்மதிச்
சென்னிமேல்
வரிசிலைப் படைபொறித் தவனெனப் பெறுவர
மைந்தனாம்
அரிமருத் தன்னிடத் தவனிவைத் தரனடி யெய்தினான்.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் முற்றிற்று.

நான்காம் தொகுதி முற்றும்.

2646. அத்துடன் "ஆலவாயிலுறையும் எம்பெருமானது அருள் பார்வையினால் புகழ் குன்றாத பெரும் செல்வம் இன்னும் உனக்கு உண்டாக வேண்டும்" என்று நல்ல ஆக்க மொழி கூறிச் சென்றார்கள். அக்குலேச பாண்டியன் செய்த தவம், உருவம் மாறி வந்தது போல.

2647. தீ, காற்று, நிலம் முதலிய எண் வகை வடிவம் உள்ளவனும், அன்பினால் வழிபடும் இந்திரனைச் சூழ்ந்து வருத்தும் பழியினைப் போக்கினவனும் ஒளி விரிந்த அமிழ்தமாகிய வான்மதியைச் சூடியவனுமாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவருளால், சிங்கக்குட்டி போன்ற 'அரிமர்த்தனன் என்னும் பாண்டியன்' மகனாக வந்து தோன்றினான்.

அரிமர்த்தனன் முடிசூடல்

2648. புலவர்களுக்குப் பரிசில் அளித்த குலேச பாண்டியன் பலகாலம் சென்றபின், திரிந்த கொம்பினை யுடைய மானையும், கொடிய மழுவையும் ஏந்திய இறைவனது பிறைமுடியின் மேல், கட்டமைந்த வில்லால் அடித்த அருச்சுனன் போல் வரம் பெறும் புதல்வனாகிய அரிமருத்தனிடத்தில் நிலவுலக ஆட்சியை ஒப்படைத்து விட்டு இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் முற்றிற்று.

நான்காம் தொகுதி முற்றும்

பாட்டு முதற் குறிப்பகராதி

எண் : தொடர் எண்

□ □ □